விருட்சம்

வணிக மாணவர் மன்றம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசினரின் அங்கீகாரம் பெற்ற முன்னனி நிறுவனம்

ISLAND INSTITUTE

(விகாரைக்கு முன்பாக)

58, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

1983, 84 கலை, வர்த்தக வகுப்புகள்

பொருளியல்	—	வரதராஜன்
கணக்கியல்	—	யோகன்
அளவையியல்	—	S. S. மனோகரன்
வர்த்தகம்	—	குமார்
தமிழ் இந்து நாகரீகம்	—	குமரன்
அரசியல் வரலாறு	—	தவகுலசிங்கம்
புவியியல்	—	சண்

பகல் நேர, வார இறுதி வகுப்புகள்
நடைபெறுகின்றன.

SPOKEN ENGLISH:- MARY ANANDAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருட்சம்

(சஞ்சிகை)

வெளியீடு:

வணிக மாணவர் மன்றம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

1981 / 82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணடிமைச் சித்தாந்தம்

நவீன உருவில் பெண் அடிமைச் சித்தாந்தம் :

யாழ்ப்பாண, ஹிந்து, வேளாள குடும்பத்தைச் சேர்ந்த, கணக்காளர் சீதனத்துடன் 25 வயதுக்குள் மணமகள் தேடுகிறார், ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும்.

கரவா இனத்தைச் சேர்ந்த கத்தோலிக்க தாயார், குடும்பக் கலைகளில் முற்றாகத் தேர்ந்த தனது மகளுக்கு மணமகன் தேடுகிறார். 50,000 ரூபா நகைகளும், ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களும் ரொக்கமும் சீதனமாக வழங்கப்படும். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும்.

❖ ❖ ❖

ஓ பெண்ணே! இன்பப் பெண்ணே!
ஆணுக்கு உணர்ச்சி தரவே
இயற்கை உன்னைப் படைத்தது.
நீ இன்றி நாங்கள் விலங்குகளே.
உன்னைப் போன்று தோற்றம் தரவே
தேவதைகள் வண்ணம் பூசப்பட்டனரே.
அளப்பரிய பிரகாசம், தூய்மை, உண்மை
நித்தியானந்தம், அமரணீயக் காதல் சொர்க்கம் பற்றிய எம் நம்பிக்கை எல்லாம் உன்னிலேயே உண்டு.

— ரி. ஓட்வே

❖ ❖ ❖

கணவன் எப்படி, மனைவி அப்படி; நீ ஒரு கோமாளியுடன் இணைந்துள்ளீர்.
அவனது குணங்களின் சேர்க்கை உம்மை கீழே இழுத்து வீழ்த்தும்.
அவனது காதலுணர்வின் புதிய விசை முடிந்த பின்னர் உன்னை அவன் நாயிலும் சற்று சிறப்பாயும் குதிரையிலும் சற்றுக் கூடுதல் அன்பாயும் நடத்துவான்.

— டெனிஸன்

காப்பாளர்:
பேராசிரியர். N. பாலகிருஷ்ணன்

பெரும் பொருளாளர்:
கலாநிதி வி. நித்தியானந்தன்

தலைவர்:
இ. செல்வநாயகம்

துணைத்தலைவர்:
செல்வி. P. வசிகரி

செயலாளர்:
ந. நிரஞ்சன் நடராஜா

துணைச்செயலாளர்:
K. S. இரவீந்திரன்

இளம்பொருளாளர்:
K. கலைச்செல்வன்

பத்திராதிபர்:
S. சிவனேஸ்வரன்

செயற்குழு உறுப்பினர்கள்:
க. கஜேந்திரா
T. கீதா
G. சுரேந்திரன்
K. ஜெயவாணி
S. ஜீவநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்



மறைந்த பேராசிரியர் க. கைலாசபதி

அவர்கட்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை வேந்தர்
பேராசிரியர்,
கலாநிதி சு. வித்தியானந்தன்
அவர்களின்

ஆசிச் செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகத்துறை மாணவர்கள் கன்னி முயற்சியாக விருட்சம் என்னும் ஏட்டை வெளியிடுகின்றனர். பல்கலைக் கழகத்தில் வணிகத்துறை மாணவர் தொகை மிகக்குறைந்தது. எனினும் அவர்களது விடாமுயற்சியினால் விருட்சம் எம்கையில் தவழ இருக்கின்றது. இவ்வேடு பல்கலைக் கழக விரிவுரையாளர்களதும் மாணவர்களதும் படைப்புக்களைக் கொண்டதாகக் காட்சியளிக்கின்றது.

பல்கலைக்கழக மன்றங்கள் பல, மன்ற வெளியீடுகளாகச் சஞ்சிகைகளை வெளியிட்டு வருகின்றன. அந்த வகையில் வணிக மன்றத்தினர் வெளியிடும் விருட்சம் தரமான ஒரு சஞ்சிகையாக அமையுமென எதிர்பார்க்கின்றேம். சஞ்சிகையை வெளியிடும் முயற்சியின் கால்கோள் விழாக் கொண்டாடும் வணிக மன்றத்தினர் தொடர்ந்து ஆண்டு தோறும் விருட்சத்தைப் பயனளிக்கச் செய்வதற்கு அருள் வேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

14-12-1982

சு. வித்தியானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் முயற்சி சிரமங்கள் மத்தியில் பயன்பெற வாழ்த்துகிறேர் !

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வணிக மன்றத் தினரின் முதலாவது முயற்சியாக "விருட்சம்" வெளி வருகின்றது. வணிகவியல், பொருளியல் தொடர்பான கட்டுரைகளை உள்ளடக்கியதாக இச் சஞ்சிகை அமை கின்றது.

பல்கலைக் கழக மட்டத்தில் மாணவர்களுக்குப் பயன்தரக்கூடிய சஞ்சிகைகள் மிகஅரிது. இன்றைய கட்டத்தில் இத்தகைய சஞ்சிகைகள் வெளியிடுவது எளிதான காரியமுமல்ல.

இப்பின்னணியில் "விருட்சம்" வெளியீடு மகிழ்ச் சிக்கும் பாராட்டுக்கும் உரிய முயற்சியாகின்றது.

"விருட்சம் நிலைத்து நிற்க நல்லாசிகள்.

15-12-82

என். பாலகிருஷ்ணன்
பொருளியல் துறைத் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

வணிக மாணவர் மன்றத் தலைவர் என்ற முறையில் ''விருட்சம்'' மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

1980ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வணிக மாணவர் மன்றம் உதித்து இரண்டு வயதை அடைந்தாலும் மன்றம் கடந்து வந்த பாதையில் சாதனைமிக்க செயல்கள் பல புரிந்தது பெருமைக்குரியது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிர்வாகம் பல செயல் முறைகளிலும் முன்னுணரும் செயலை பாதுகாக்கத் தவறியுள்ளது. இந் நிலைமைகளே எமது செயல் முறைகளை தங்கள் முன் பெரிது படுத்த மறுத்துள்ளது.

வருடா வருடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படும் வணிக மாணவர்களுடைய தொகை குறிப்பிடத்தக்களவு அதிகரித்து வருவதுடன், இவ்வருடம் முதல் முகாமைத்துவக் கற்கை நெறிக்கும் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய சந்தர்ப்பத்தில் வணிக மாணவர் மன்றத்தின் செயல்பாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

வணிக மாணவ மன்றம் வெறும் செயல்களில் மட்டும் நின்று விடாது விரயமாக்கப்படும் பலரின் ஆற்றலை வெளிக்காட்டும் வகையில் ''விருட்சம்'' என்ற மலரை இன்று மலர வைத்துள்ளது. பல்கலைக்கழக நிர்வாக முறை மாணவருக்குத் தந்த கல்வியில் இருந்து தகுதியை மதிப்பிட்டு அவர்களைக் கொண்டே வருங்கால மாணவர்களுக்கு போதனை செய்தல் என்பதில் அதிக நம்பிக்கை கொண்டு தோல்வி கண்டதை எமது பல்கலைக் கழகச் செயல்கள் பெரிதுபடுத்துவதாக மாணவர் சமுதாயத்தின் கருத்து வலியமையடைகின்றது.

பல்கலைக்கழக மட்டத்திலும் பார்க்க அதற்கான புகுமுக வகுப்பில் அபிவிருத்தி அடையும் வர்த்தகப்பாட நெறிக்கு இம் மலரின் பங்களிப்பு முதன்மையானதாக இருந்தாலும் போதுமானதாக இருக்க மாட்டாது. எனினும் எம் மன்றத்தால் மட்டுமே இந் நடவடிக்கை தேசிய ரீதியான செயல் முறைக்கு ஆக்கம் அளிக்க மேற்கொள்ளப்படுகின்றது. இதனாலே இம் மலர் பல வழிகளில் நன்மைகளை வென்றெடுக்கும் எனக்கூறவேண்டியுள்ளது.

முதல் மலரான ''விருட்சம்'' உண்மையில் ஒரு குழந்தைப் பருவத்திலே உங்கள் முன் விசாலிக்கின்றது. இருந்தாலும் எதிர் காலத்தில் வளர்ந்து வணிக சமுதாயத்திற்கு பயன்களை தரும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையுடனை தொடர்ந்து வரும் காலத்தில் இம்மன்றமும், மலரும் சிறப்புற வளர்ச்சியடைய மாணவர்களுடைய ஒத்துழைப்பு அவசியம். எமது சக மாணவர்களின் வளர்ச்சியில் நானைய பல்கலைக்கழகப் புகுமுக மாணவர் இருப்பதால் எதிர்கால மாற்றத்திற்கு ஏற்ப அவர்களின் பங்களிப்பு பலமானதாக இருக்கும் என்பது எனது அசையாத நம்பிக்கை.

வணிக மாணவர் மன்றம் சிறப்புற வளரவும் 'விருட்சம்' மலர் தொடர்ந்து வெளி வரவும் என் நல்லாசிகள் பல. என் ஆசைகளுள் இவையும் சில.

இ. செல்வநாயகம்
தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளர் இதயத்தில் இருந்து

யாழ் பல்கலைக்கழகத்தின் வணிக முகாமை முன்ற வளர்ச்சியில் இரண்டாவது கால கட்டம் எம்முடையதாக இருந்தது. முன்றத்தின் இரண்டாவது செயற்குழுவாக அமைந்த எமக்குக் கிடைத்த காலம் மிகவும் குறுகியதே. கல்வியாண்டு தொடங்கி ஏறக்குறைய நாலு மாதங்களின் பின்னரே எமது செயற்குழு தெரிவு செய்யப்பட்டது. எம்மைப் பொறுத்தவரை மிகவும் வேதனைக் குரியதாகும். இதற்கு நாம் எவரையும் குற்றம் கூறமுடியாது - கூறப்போவதுமில்லை.

சுயநலம் பொது நலம் பற்றி இங்கு நான் படித்துக் கொண்ட அனுபவம் பல் அனுபவங்களுக்குப் பின்புதான் உண்மை பலருக்குப் புரிகிறது. நான் மட்டும் என்ன விதிவிலக்கா? இன்று மிகுந்த அனுபவத்துடனும் நிறைந்த கவலையுடனும் விடை பெறக் காத்திருக்கின்றேன்! எவ்வாருயினும் இத்தகைய ஒரு அனுபவத்தை இப் பல் கலைக்கழகத்தை விட வேறு எங்கும் பெற்றிருக்க முடியாது.

எம் செயற்குழுவில் உள்ள ஒவ்வொரு அங்கத்தவரும் இலங்கையின் ஒரே தமிழ்ப் பல்கலைக்கழகமான எமது பல்கலைக் கழகத்தில் இருந்து உருவாகும் வணிகமாணிப் பட்ட தாரிகளுக்குத் தம்மால் இயன்ற அளவு பணியைச் செய்ய வேண்டும் என்ற அவா வினைக் கொண்டிருப்பதனை நான் மனப்பூர்வமாக உணர்ந்திருக்கின்றேன். எனினும் இரண்டாம் மூன்றும் தவணைகளில் நடைபெற்ற பல்வேறு பகிஸ்கரிப்புப் போராட்டங்கள், உண்ணாவிரதம் சத்தியாக்கிரகம் போன்ற நிகழ்வுகள் ஏற்கனவே ஒழுங்கு செய்திருத்த பல கருத்தரங்குகளை ரத்துச் செய்ய வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு எம்மை இட்டுச் சென்றது. இதனைவிட மூன்றும் தவணையில் பரீட்சைக்கு ஆயத்தப் படுத்திக்கொண்டிருந்த எமது நண்பர்கள் இவ்வாருன கருத்தரங்குகளை விட தூரன் நிலையத்தை அதிகளவு விரும்பியமை எமது உற்சாகத்தைப் பலவீனமடையச் செய்தது.

எமது மன்றத்தால் வணிக முகாமைத் துறை ஒன்றை அமைத்து அதனூடாக வணிக முகாமைப்பீடம் ஒன்றை அமைக்கவும் பூர்வாங்க நடவடிக்கைகளைச் செய்துள்ளோம். இதனை விட விரிவுரையாளர்கள், பகுதி நேர விரிவுரையாளர்கள் என்போரை நியமிப்பதிலும் மன்றம் மாணவரின் கருத்துக்களைச் செவிமடுத்து ஆவன செய்து வருகின்றது. எல்லா வற்றையும் விட B. Sc. பட்டம் தொடர்பாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாணவர்களுக்கு எழுந்த பிரச்சனையில் நாம் ஆற்றிய பணி அளப்பரியது. இதனை எமது மாணவர்கள் அனைவரும் நன்கு அறிந்திருப்பர்.

இத்தனை செயற்பாடுகளுக்கும் முத்திரை வைத்தாற்போல இம்முறை முதன் முறையாக ''விருட்சம்'' என்ற பெயரில் எமது மன்றம் சஞ்சிகை ஒன்று வெளியிடப்படுவது என்போன்ற சகல பல்கலைக்கழக மாணவர்களுக்கும் குறிப்பாக வணிக மாணவர் அனைவர்க்கும் பெருமைதரக்கூடிய ஒன்றாகும்.

இத்தகைய செயற்பாடுகளை எமது மன்றம் செய்ய உதவியாக இருந்த சகல கல்விப் பீட மாணவர்க்கும் குறிப்பாக வணிக மாணவர்க்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிப்பதோடு, இதற்கு மேலும் உங்கள் உதவி வணிக மாணவர் மன்றத்துக்கு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு எமக்கு வேண்டிய உதவியை அவ்வப்போது செய்த உபவேந்தர், மன்றக் காப்பாளர், பெரும் பொருளாளர் ஆகியோருக்கும் நன்றி கூறி விடை பெறுகின்றேன்.

நிரஞ்சன் நந்தகுமார், நடராஜர்
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் இதயத்திலிருந்து

இன்று தமிழ்ச் சமுதாயம் அரசியல், பொருளாதார சமூக இடர்ப்பாடுகளுள் சிக்கித் தவிப்பதைக் கொண்டிருக்கின்ற இருள் சூழ்ந்த இக் கால கட்டத்தில் இச் சமுதாயத்தின் ஓர் அங்கம் என்கின்ற உரிமையில் சிலவற்றைக் கூற முற்படுகின்றேன். இன்றைய எமது அரசியல், பொருளாதார சமூக இடர்பாடுகளைக் களைந்தெறியக் கூடிய வழிகளைக் கூறும் ஆற்றல் எனக்கு இல்லாவிடினும் பொதுவான ஒரு கண்ணோட்டத்தில் சில வற்றைக் கூறும் உரிமை உண்டு என்ற முறையில் கூறுகின்றேன்.

இன்றைய கால கட்டம் இளைஞர்களாகிய எங்களைப் பொறுத்தவரை அரசியலி லும் சரி, கல்வியிலும் சரி ஓர் தடுமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது எனலாம். எது சரி எது பிழை என்பதைச் சரியாகத் தெரிந்து கொள்ள முடியாது தடுமாறுகின்றோம். இதற்கு அரசியல் பொருளாதார அடிப்படையா? அல்லது தலைமைத்துவ வழிகாட் டலின் தவறு காரணம் என்பதை நான் கூறமுடியாது? காரணம் நான்றும் தடுமாறும் இளைஞர் கூட்டத்தின் ஓர் அங்கம்தானே.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை அரசியலும் சரி, கல்வியிலும் சரி, பொருளிய லும் சரி தூரதிஷ்டியுடன் செயல்பட எமது தலைவர்களும் பேராசிரியர்களும் தவறி விட்டனர் என்பதாகும். இதனை அவர்களே உணருகின்ற நிலைமை இன்று தோன்றி யுள்ளதெனலாம். ஏனெனில் அவர்களால் உருவாக்கப்பட்ட இளைஞர்களுக்கும் பட்ட தாரிகளுக்கும் தொடர்ந்து வழிகாட்ட அவர்களாலேயே முடியவில்லையே.

இன்று மட்டுமென்ன? இளைஞர்கள், பட்டதாரிகள் பிரச்சனைகளைத் தீர்த்துவைக்க புதிய முயற்சிகள் எடுக்கப்படுகின்றனவா என்றால் அதுவும் இல்லை. அரைத்த மாவையே இரும்பவும் அரைக்க முற்படுகின்றனர். இந்நிலை தொடருமானால் எதிர் காலம் மிகப் பயங்கரமானதாக அமையும் என்பதை தற்போதைய நிகழ்ச்சிகள் எமக்கு மிகுதிக் மிகுதி புலப்படுத்துகின்றன.

இந்த நிலையில் சமூகவியலிலும் சரி, பொருளியலிலும் சரி, அரசியலிலும் சரி இளைஞர்கள் தமக்குச் சரி எனப்பட்டதை செய்யத் தலைப்படுகின்றனர். ஈற்றில் போக வழிதெரியாது தமக்குள்ளேயே குழி பறிக்க முற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்நிலை தொடரின் நாம் மட்டுமல்ல இனமே அழிந்து தொழியக் கூடிய நிலைக்கு சென்று விடக் கூடும்.

எனவே இன்று கூட காலம் கடந்து விடவில்லை. சரியான பாதையினை இளைஞர் களாகிய நாம் ஏற்றுக் கொள்ளக் கூடிய பாதையில் தலைவர்கள் வழிகாட்ட முற்பட டால் எம் இளைஞர்களையும் இனத்தையும் காப்பாற்ற முடியும். இதனை இந்நேரத்திலா வது பெரியவர்கள் பொறுப்புடன் சிந்தித்து செயல்பட முன்வருவார்களா?

அடுத்து இவ்விருட்சத்தின் முதலாவது விழுதினை ஊன்றி விடுகின்றோம். இவ் விருட்சத்தின் விழுதுகள் வீரியமானவையாக்குவது உங்கள் பொறுப்பு. விருட்சத்தின் வித்திலிருந்து முதல் விழுது விடும் வரை அடைந்த சிரமங்கள் இன்னும் என்னும் இதனை நிழலில் இளைப்பாறும் போதுதான் பசுமையாக நிலவ முடியும்.

அடுத்து பறவைகளைப்போல் பாடித்திரிந்து பழகிக் களித்த எம் பல்கலைக் கழக வாழ்வின் பசுமையான, இனிமையான நினைவுகளுடன் பறந்து செல்லப் போகும் இவ் வேளையில் இவ் விருட்சத்தின் உங்களுக்காக நாட்டி வளர்த்து விட்டுப் போகின்றேன் என்ற மகிழ்ச்சியுடன் உங்கள் வாழ்வும் விருட்சம் போல் செழித்தோங்க வாழ்த்துக் கூறி விடை பெறுகின்றேன்.

தி. திருனேஸ்வரன் (ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே உங்கள் அறிவிறகு

கணக்கியல் :

கணக்கியல் தத்துவங்கள் –
இன்றைய சில கருத்துக்களும், அணுகுமுறையும்

கணக்காய்வு :

கணக்காய்வு பற்றிய ஒரு நோக்கு.

சந்தைப்படுத்தல் முகாமை :

- சந்தைப்படுத்துதல்
- தனியார் துறையில் விற்பனை மேம்படுத்தல்

முகாமை :

முகாமைத்துவ விஞ்ஞானம்

உற்பத்தி முகாமை :

உற்பத்தி முறையில் தரக்கட்டுப்பாட்டு முறையின்
முக்கியத்துவம் பற்றிய ஒரு நோக்கு.

சட்டம் :

கைத்தொழில் உறவுகளும் பிணக்குகளும்

அரசியல் :

இலங்கையில் தேசிய முரண்பாடுகளும்
தீர்வுக்கான அடிப்படையும்

பொருளியல் :

- வெளிநாட்டு உதவியும் முன்னும் மண்டல நாடுகளும்
- தாராள வர்த்தகக் கொள்கையும்,
இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகமும்

வர்த்தகம் :

இலங்கையின் வர்த்தக வளர்ச்சிக்கு
அரச கூட்டுத்தாபனங்களின் அவசியம்

சிறுகதை :

மௌன இரவுகள் விடிவதில்லை

கவிதைகள் :

- புரியாதது
- தரிசனம்
- புரிந்தது
- நீண்ட பயணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Commerce Students' Union 1981 - 82




(Standing Lto R) : Miss. T. T. Keetha, Mr. P. E. G. Surendran, Mr. J J. Jeevananathan (Asst. Secretary) Mr. K. S. Raveendran. Mr. K Kajendra, Miss. K. Jeyavani, Miss. P. Vaseekarai (Vice President)

(Seated Lto R) : Dr. V. Niththiyananthan (Senior - Treasurer), Mr. K. Kalaichelvan (Junior Treosurer), Mr. E. Selvanayagam (President) Prof. S. Viththiyananthan (Vice Chancellor), Mr. N. N. Nadarajah (Secretary) Mr. S. Sivaneswaran (Editor), Prof. N. Balakrishnan (Patron)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Commerce Students' Union 1980 - 81



(Standing Lto R) Miss. S. Sarojini , Mr V. Geevanathan (Editor) , Mr. J. Anton Rajkumar (Asst. Secretary) , Mr. M. S. M. Fuward, Mr. Ragulan, Mr. B. Balachandran (Junior - Treasurer), Mr. S Baleswaran (Vice - President) .

(Seated Lto R) Miss. K. Kamalambikai, Mr. M. Srikrishnan (President) Prof : N Balakrishnan (Patron) Prof. S. Viththiyananthan (Vice - Chancellor) Dr. V. Niththiyananthan (Senior - Treasurer) Mr. S. Karunanithi (Secretary) , Miss. N. Ruthura.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கியல் :

கணக்கியல் தத்துவங்கள் - இன்றைய சில கருத்துக்களும் அணுகு முறையும்

சோமசுந்தரம் வன்னியசிங்கம்
பகுதிநேர விரிவுரையாளர்
யாழ். பல்கலைக்கழகம்

கணக்கியல் என்று கருதப்படுவது ஒரு செயல் முறைக் கலை ஆகும். ஆங்கிலத்தில் Practical Discipline என்பர். ஆரம்பத்தில் கிரேக்க நாட்டில் ஒரு பொதுப்பணிப் பொறுப்பாளன் தான் பற்றிய பணங்களை எவ்வாறு அப்பொதுப்பணமில் செலவு செய்தான் என்பதைக் காட்டுவதாகவே கணக்கியல் தோன்றியது. பெற்ற பணங்கள் பொறுப்பேற்கப்பெற்ற தொகைகளாகவும் செலவு செய்த பணங்கள் பொறுப்பு நீக்கும் தொகைகளாகவும் காட்சியளித்தன. இக்கணக்கு முறையை Charge and Discharge Accounting என்பர். தமிழில் பொறுப்பேற்பு - நீக்கக் கணக்கு முறை எனலாம்.

பின்னர் இத்தாலி நாட்டில் உள்ள பல நகரங்கள் வர்த்தகத் துறையில் முன்னேறிய காலத்தில் வர்த்தக நடவடிக்கைகட்கு கணககு வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் கணக்கியலை ஒரளவு வளரச் செய்தது. வர்த்தகத்தில் பதிலாட்கள் (Agents) சிப்பந்திகள் போன்றோர் பொறுப்பேற்க வேண்டியமை தவிர்க்க முடியாத ஒரு நிலைமையாதலாலும் கடன் கொள்வனவு விற்பனவு ஏற்படுவதாலும் வர்த்தகர்கள் சீராகக் கணக்கு வைக்க வேண்டியிருந்தது. கிரேக்க நாட்டில் முன்னர் நிலவிய (Charge and Discharge Accounting) பொறுப்பேற்பு - நீக்கக் கணக்கு முறை இவ்வர்த்தகர்களால் கையாளப்பெற்றது.

ஆனால் இன்று ஒரு நிறுவனத்தின் - முக்கியமாக ஒரு வியாபார நிறுவனத்தின் - கணக்குகள் நிறை வேற்ற வேண்டிய பொறுப்பை ஆங்கிலத்தில் இரத்தினச் சுருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமாக Fair Disclosure Doctrine என்று கூறுவர். தமிழில் "நிதான வெளிப்படுத்தல் நியமம்" என்று கூறலாம். முன்னர் சில காலம் கணக்குகள் நிதி நிலைமையைச் சரியாக வெளிக்காட்டல் வேண்டும் என்று கருதப்பட்டது. ஆங்கிலத்தில் True and Correct view of the Financial Position என்று கூறப்பெற்று வந்தது. ஆயினும் பிழைகள் இல்லை, தவறுகள் இல்லை என்ற மட்டத்தில் கணக்குகளைத் தயாரிப்பதோ உறுதிப்படுத்துவதோ செயலாற்ற முடியாத விடயம் என்பதைக் குறிக்கும் முகமாகவே உண்மையான நிதானமான வெளிப்படுத்தல் என்ற பதப் பிரயோகம் வழங்கப்படுகிறது.

இன்றைய உலகில் ஒரு நிறுவனத்தின் கணக்குகள், பொறுப்பு வழங்கியவர்கட்கு பொறுப்பேற்றவர் ஒப்புக் கொடுக்கும் வகையில் அமைந்தால் மட்டும் போதாது. ஒரு வியாபார நிறுவனத்தின் கணக்குகள் மூலதனம் வழங்கிய பங்குதாரருக்கு மட்டும் தயாரிக்கப்படுவதில்லை. வேறு பல பிரிவினரும் ஒரு வியாபார நிறுவனத்தின் கணக்குகளில் கரிசனை கொண்டுள்ளனர். பொதுக்கம்பெனியின் பங்குகள் ஆவணச் சந்தையில் (Securities Market) தினசரி ஏராளமாக விலைப்பட்டுக் கைமாற்றப் பெற்று வருகின்றன. எனவே ஒரு வியாபார நிறுவனத்தின் பங்குமூலதனம் அளிப்பவர் குறிப்பிட்ட ஒருசிலர் அல்லது ஒரு குழுவினர் என்று கூறிவிட முடியாது. இன்றைய பங்குதாரர்தான் நாளைய பங்குதாரர் என்று கூறிவிட முடியாது பங்குகள் தினசரி கைமாறப்படுகின்றன. ஆவணச் சந்தையில் கம்பெனிப்பங்குகளைக் கொள்வனவு செய்யும் நோக்கத்துடன் செயல்படுபவர் அனைவரும் பங்கு மூலதனம் அளிப்பவர் என்றே கருதப்படல் வேண்டும்.

அடுத்த படியாக ஒரு வியாபாரப் பொதுக் கம்பெனியின் உடைமையாளராகக் காட்சியளிக்கும் பங்குதாரர் அன்றி வேறும் பலர் கம்பெனியின் செயல்படும் மூலதனத்தை வழங்குகின்றனர். நெடுந்தவணைக் கடனுக அமையும் தொகுதிக் கடன் வழங்குநர் கம்பெனியின் மூலதனத்திற்கு பெரு மளவில் கை கொடுக்கின்றனர். அன்னார் கம்பெனியின் நிதிநிலைமையை அறிவதற்கு பெரிதும் விரும்புவர். எனவே பங்குகளைக் கொள்வனவு செய்பவர், செய்யக்கூடியவர் தொகுதிக்கடன் ஆவணங்களை கொள்வனவு செய்பவர் செய்யக் கூடியவராகிய அனைவரையும் முதலீடு செய்யும் பொதுமக்கள் (Investing Public) என்று வர்ணிக்கலாம். முதலீடு செய்யும் பொது மக்கள் தாமாக ஒரு வியாபார நிறுவனத்தின் கணக்குகளைப் பரிசீலனை செய்யவோ நீதி நிலைமையை எடைபோட்டு மதிப்பீடுசெய்யவோ தராதரம் உடையவர் என்று கூறமுடியாது. எனவே பொதுக் கம்பெனிகளின் நிதி நிலைமையைப் பரிசீலனை செய்து கருத்து வெளிப்படுத்தும் தொழிற்பாட்டைப்புரியும் சிறப்புத்திறமை கொண்டவரும் இவர்களை ஆங்கிலத்தில் Financial Analysts என்று கூறுவர். தமிழில் நிதித்துறை ஆய்வுளர் எனலாம். கம்பெனிக் கணக்குகளில் கரிசனை உடையவர் வேறும் நாளாந்த நடவடிக்கைகளில் ஈடுபடும் வியாபாரக் கொடுகடன்காரர் பற்றுவரவுக்காரர் போன்ற கம்பெனியில் ஈடுபாடுடையோர் அனைவரும் நிதி நிலைமையை மதிப்பீடு செய்யும் கரிசனை கொண்டவர்களே.

வியாபார நிறுவனங்கட்கு தாபன நீதியில் கடன் நிதி வழங்கும் வங்கிகள் முக்கியமான ஒரு ஸ்தானத்தில் நிற்கின்றன. அவர்கள் கடன் நிதி வழங்குவதில் செய்யும் முடிவு நிறுவனத்தின் கணக்குகள் வெளிக்காட்டும் நிலைமையை முக்கிய ஆதாரமாக கொண்டிருக்கும். எனவே வியாபார நிறுவனத்தின் கணக்குகள் வங்கிகட்கு மிக அத்தியாவசியமாக அமையும்.

வியாபாரக்கம்பெனியின் ஆதாயத்தை அடிப்படையாக வைத்து இறைவரி வசூலிக்கும் அரச இலாக்காக்கள் கம்பெனியின் கணக்குகளை ஆய்வு செய்வதில் மிக்க ஆர்வமுடையர். கணக்கு அடிப்படையிலேயே இறைவரித்தளம் (Tax Base) அமைகின்றது. ஆதாயத்தில் வசூலிக்கும் இறைவரியைவிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்குகளிலிருந்து வெளிவரும் வேறுபல அடிப்படைகளின் படியே இதர இறைவரி களோ உபமானியங்களோ நிர்ணயிக்கப் படும். எனவே பல்வேறு அரச இலாக்கா கட்கு கம்பெனியின் கணக்குகள் அவசியம் வேண்டப்படுகின்றன.

மேற் கூறிய பல திறத்தினரையும்விட அதிமுக்கிய கரிசனை உடைய வேறு ஒரு குழுவினர் இருக்கின்றனர். அவர்கள் தான் கம்பெனியின் சேவையாளர், தமது வாழ் வையே கம்பெனியில் ஈடுபடுத்தி இருக்கின் றனர். கம்பெனியின் வெற்றி தோல்வி அவர்களைப் பெரிதும் பாதிக்கும். அவர் களுடைய வருவாய் (வேதனம்) கம்பெனி யின் சித்தியில் தங்கியிருக்கிறது. எனவே தொழிற்சங்கங்கள் கம்பெனியின் கணக்கு களைப் பரிசிலனை செய்வதில் பெரும் ஆர் வங்கொண்டன. கணக்குகளைப் பரிசிலனை செய்வதில் மட்டுமன்று; நிர்வாகத்தில் பங் கெடுக்க வேண்டும் என்ற ஆர்வமும் கொண் டனர். மேற்கு ஜெர்மனியில் சேவையாளர் முகாமையில் பங்கெடுக்கும் நிலைமை வெற்றி யளிக்கின்றது.

மேலே காட்டப் பெற்ற பல்வேறு பிரி வினரிலும் பார்க்க கூடிய கரிசனை கொண் டோர் நிறுவனத்தை வழி நடாத்தும் முகாமைத்துறையினர் ஆவர். கணக்குகள் பூரணமாக இல்லாதிருந்தால் நிர்வகிக்கவோ திட்டமிடவோ முன்னேறவோ முடியாது.

எனவே கம்பெனியின் கணக்குகளில் கரிசனை கொண்டோர் பல்வேறு திறத்தினர் ஒவ்வொருதிறத்தினரும் வெவ்வேறு கோணத்திலிருந்து கணக்குகளை ஆய்வு செய்ய அணுகுவர். அவரவரின் நோக்கும் கரிசனையும் வெவ்வேறுக அமையும். அவர் களனைவரின் கரிசனையையும் ஈடு செய்யும் வகையில் க்ணக்குகள் அமைதல் வேண்டும். இக்கருத்தை மனதில் கொண்டே நிதான வெளிப்படுத்தல் நியமம் கையாளப்பட வேண்டும். சாதாரணமாக பரீட்சை வினாக் களில் ''நவகால கணக்கியல் செயல் முறை களை'' அனுசரித்து விடை தயாரிக்குமாறு கோரப்பட்டிருக்கும். ஆங்கிலத்தில் Modern Accounting Practice அல்லது Current Accounting Practice என்று கூறப்பெற்றி ருக்கும். நவகால முறை ''நிதான வெளிப் படுத்தல் நியமம்'' செயல்படும் வகையில் அமைந்திருக்கும் என்பதே தொக்கிருக்கும் கருத்தாகும். எனினும் சில ஆண்டுகட்கு முன்னர் ஒரு அமெரிக்க சஞ்சிகையில் வெளிவந்த கட்டுரை ஒன்றில் நவகாலத்தில் அனுசரிக்கப்பெறும் கணக்கியல் துறைச் செயல் முறை நியமங்கள் ''நிதான வெளிப் படுத்தல் நியமத்தை'' நிறைவேற்றுவிடின் கணக்காளன் நவகால கணக்கியல் செயல் முறை நியமங்களின் பின்னல் அடைக்கலம் பெறமுடியாது, அவன் அந்நியமங்களையே ஆய்வு செய்து ''நிதான வெளிப்படுத்தல் நியமத்தை'' நிறைவேற்ற முன் வர வேண் டும் எனக்கூறியிருக்கிறார். பல்கலைக்கழகங் களில் கணக்கியல் இடம் பெற்றபின்னர் தத்துவ அடிப்படையிலான ஆய்வு பெரிதும் முன்னேறியுள்ளது.

வழமைகள் (Coventions) கருத் துக்கள் (Concepts) அடிப்படைகள் (Assumptions) என்று வெவ்வேறு வகை யில் அநுசரிக்க வேண்டிய தத்துவங்கள் பாகுபடுத்தப்படுவதால் உண்மையில் மாண வர்கட்கும் பொதுமக்கட்கும் தடுமாற்றம் ஏற்படும் நிலையிலேயே தத்துவ வளர்ச்சி இன்று காட்சியளிக்கிறது. எனினும் இத் தத்துவங்கள் ஒவ்வொன்றைப் பற்றி ஏறக் குறைய ஒருமைப்பாடான அபிப்பிராயமே நிலவுகிறது. பாகுபாடு செய்வதில் தான் குழப்பம் நிலவுகிறது. முக்கிய சில இலட்சி யங்களைக் கீழே ஆராய்வாம்.

Objectivity யதார்த்த நிலைமை

கணக்குகளில் யதார்த்தநிலைமை வெளிப் படுத்தப்பட வேண்டுமென்பது ஒரு இலட் சியம். இதன் முக்கியத்துவத்தை இலகுவில் விளக்கலாம். வியாபார நிறுவனத்தின் கணக் குகளை வெவ்வேறு பிரிவினர் உபயோகிப்பர். தொழில் அதிபர் ஆதாயத்தை எதிர் பார்க்கை அடிப்படையில் அணுகுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது மனவி தலையீன மந்திரமாகக் கணவனின் எதிர்பார்க்கையைக் கிரகித்து பெண்களுக்கே உரித்தான பெருக்கல் விதிப் படி எதிர்பார்க்கையை இரண்டால் பெருக்கி ஈவரக்கம்மலுக்கு "ஆடர்" கொடுத்து விமானப் பயணம் மூலம் உல்லாச விடுதலைக்குத் திட்டமிடுவாள். சுரண்டல் மந்திரத்தை மனனம் செய்த தொழிற்சங்கவாதிகள் கம்பெனிக்கு "எக்கச்சக்கமான" இலாபம் கிடைக்கிறது என்று கற்பனை செய்வர், நீதி வழங்கும் வங்கியாளர் சொத்துக்களின் பெறுமதி மிகைப்படுத்தப் பெற்றிருக்கும் செல்மதிகள் குறைத்துக் காட்டப்படும் என்ற முன்னுணர்வையே தாரக மந்திரமாகக் கொள்வர். முதலீடு செய்யும் சாதாரண மக்கள் செல்கால நிலையை எதிர்பார்ப்பர். நிதித்துறை ஆய்வுநர் விகிதாசாரங்களைக் கணக்கெடுப்பர். தொழிலதிபனின் எதிர் பார்க்கை சரியாக இருந்தாலும், பெறுமதிகள் கணக்குகள் யதார்த்த நிலையிலேயே தயாரிக்கப்படல் வேண்டும். அப்பொழுது தான் கணக்குகளை உபயோகிப்போர் அனைவருக்கும் செல்லுபடியாகும் அளவுகோல் அமையும்.

Consistency
முன்பின் முரணில்லா இணைவு

கணக்கீடுகள், மதிப்பீடுகள், பங்கிடுகைகள் போன்றபல நடவடிக்கைகளைப்பரிபாலிக்கும் கொள்கைகள் முந்திய வருடங்களில் கையாளப்பெற்றவைக்கு முரண்பாடில்லாமல் இணைவுடையனவாக இருத்தல் வேண்டும். அன்றேல் வெவ்வேறு ஆண்டுகளின் கணக்குகள் பெறுபேறுகள் ஒப்பீடு செய்ய முடியாத இலக்கங்களைக் கொண்டு திரட்டிய அர்த்தமற்ற சாம்பாராகி விடும்.

Continuity or Going Concern Basis

தொடர்ந்தியங்கும் ஒரு நிறுவனத்தின் சொத்துக்களின் பெறுமதி அந்நிறுவனத்திற்கு அவை வருவாய்க்கு வகை செய்யும் கோதாவிலேயே மதிப்படப்படல் வேண்டும். இணைக்கப் பெற்ற அமைப்பில் பயன்தரு சக்தி அதிகம்; பிணைப்பு நீக்கப்பெற்று விற்பனையாக்கப் பெற்றால் அவற்றின் பெறுமதி மிகவும் குறைந்து விடும். தொடர்ந்தியங்கும் நிறுவனமே வருகடனை அறவிடமுடியும். நிலைத்திருக்கும் அமைப்பின் வலு மிகவும் அதிகம். இதை மேல்நாட்டார் நன்கு உணர்ந்திருக்கின்றனர். வரலாறு தோன்றிய காலம் தொட்டு லண்டன் மாநகரமே பிரிட்டினின் தலைநகரம். யுத்த ஆபத்திலும் இடம் பெயரவில்லை. ஃபிரான்சு மக்களின் வாழ்விலும் தாழ்விலும் பாரிசே அவர்கள் தலைநகரம். ஸ்பானிய நாட்டின் வரலாறு தொட்டு மாட்ரிட்டே அந்நாட்டுத் தலைநகர். ஒரேயொரு இல்வாயைக் கொண்ட 10-ம் இலக்க டவுணிங் வீதி இல்லம் தான் அன்றும் இன்றும் பிரிட்டிஷ் பிரதமரின் வாசஸ்தலம். கணக்குகள் தொடர்ந்தியங்கும் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுவதென்பது அர்த்தம் நிரம்பிய ஒரு நியமம் ஆகும்.

Materiality

கணிசமான பருமனின்றேல் கணக்கிலெடுப்பதில்லை என்ற நியமம் முக்கியமானது மிகவும் பின்னிப்பிணைந்து பரந்து விரிந்து காட்சியளிக்கும் பொருளாக்க அமைப்பில் அனுவளவு பெறுமதியைக் கொண்ட அலகுகளைப்பற்றி நேரம் முயற்சி பணம் ஆகியவற்றைச் செலவளிப்பது புத்தித்தாழ்வு. பல தசம இடங்கட்கு கணக்கெடுப்பது போன்ற நடவடிக்கைகள் விலக்கப்படல் வேண்டும். இவ்விடயங்களில் அனுசரிக்க வேண்டிய நியதி பிரயத்தனத்திற்கு பதிலீடாகக் கிடைக்கும் பயன் பெரிதா பிரயத்தனத்தில் எற்படும் செலவுக்கு பொருத்தமா என்பதே. இந்நியதி வேறு துறைகளிலும் நிலவுகின்றது. இலங்கைப் பல்கலைக் கழகத்தின் முதற் துணை வேந்தர் மாணவர் சங்கத்திற்கு மாணவர்கள் நட்டஞ் செய்த வேலி ஒன்றின் பெறுமதி ரூபாய் ஐந்தைச் செலுத்துமாறும் அன்றேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஒரு நிருபம் அனுப்பினர். மாணவர் அந்த நிருபத்தை ஒரு தலை சிறந்த வழக்கறிஞரிடம் கொண்டு சென்றனர். அன்னார் சுழலும் நாற்காலியில் இருந்து நகைப்பிலேயே சுழன்று பதில் ஒன்றை சொல்வதெழுதலாக வரைந்தார். பதில் பின் வருமாறு "De Minimis Lex Non Curat" என்ற பதத்தை தங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கிறேம் என்ற ஒரு வசனம் மட்டும்தான் சட்டம் சில்லறை விடயங்களைக்கருத்தில் கொள்வதில்லை என்பது தமிழாக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்காய்வு - (Auditing)

டேவிட் ஞானரத்னம்
கணக்காளர்,
ஐக்கிய தேசிய நாடுகள் சபை,
இலங்கைக் கிளை.

கணக்காய்வு (Auditing)

கணக்காய்வு என்ற பதத்தின் அர்த்தத்தை நாங்கள் அறிய எத்தனிக்கும்போது இந்தச் சொல்லின் மூலகாரணத்தை அறிய வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆங்கிலச் சொல்லாகிய Auditing என்ற சொல்லில் இருந்து மொழிபெயர்க்கப்பட்ட, சொல்தான் முதலில் கணக்குப் பரிசோதனை என்றும், காலப்போக்கில் அடிப்படையையும் நோக்கத்தையும் கருதி, கணக்கு ஆய்வு என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அடிப்படை கருதி, நோக்கம் கருதி, காரணம் கருதி Auditing என்ற ஆங்கிலச் சொல், கணக்காய்வு என தற்போது பட்டயக் கணக்காளர் சங்கத்தினால் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

Auditing என்ற ஆங்கிலச் சொல், கேட்டறிதல், என்ற வினைப்பயனின் ஊடாக உண்டான பெயர்ச்சொல் ஆகும். Audio என்பது கேட்டறிந்து கிரகிக்கும் உண்மையின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒரு விஷயத்தை பலரின் வாக்கு மூலங்களினூலோ, அல்லது பல விஷயங்களை ஒருவர் பேசுவதன் மூலமோ, அந்த விஷயத்தின் உண்மையை, அல்லது அந்த நபரின் உள்ளான தன்மையை நாங்கள் உய்த்து உணரத்தக்கதாக இருக்கும். கேள்விச் செல்வத்தின் மகிமையை, கணக்கு ஆய்வு மூலமாகவும் நாங்கள் அறியத்தக்கதாக இருக்கின்றது. இதனாலன்றோ எங்கள் பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவரும் கேள்விச் செல்வத்தின் மகிமையை பற்பல குறள்கள் மூலம் வெளிப்படுத்தி உள்ளார். "செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்" என்றும், "செவிக்குணவு இல்லாதபோது வயிற்றுக்கும் ஈயப்படும்" என்பவை நீங்கள் அறிந்தவையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்காய்வு என்றால் என்ன - கணக் காய்வின் அடிப்படைகள் யாவை, கணக் காய்வின் நோக்கங்கள் எப்படிப்பட்டவை - என்பவை யாவும் நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமான உண்மைகளாகும். கணக்காய்வு, கணக்குடன் மாத்திரம் சம் பந்தப்பட்டது, என்று முற்றாக நம்பிய காலம் மருவிக்கொண்டு வருகின்றது. கணக்கு, வர்த்தக ஸ்தாபனங்களின் விஷேச அடிப்படை என்று கருதிய காலங்களும் உண்டு. கணக்காய்வு என்று நாங்கள் சொல் லும்போது கணக்கு அடிப்படையான, கணக்கு சம்பந்தப்பட்ட எல்லாவிதமான அறிக்கைகளையும் மனதில் கொள்ளல் வேண் டும்.

அனேகமாக வர்த்தக ஸ்தாபனங்களையே கணக்காய்வுக்கு அடிப்படையாக மனதில் கொள்வது இயல்பாகும். வர்த்தக ஸ்தாப னங்கள் பலதரப்பட்டவை, பல வகையா னவை. தற்போதைய வர்த்தக ஸ்தாபனங் களையும், வர்த்தக நடவடிக்கைகளையும், ஒரு அரை நூற்றாண்டுகளுக்கு முன்பாக உள்ள வைகளோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து எவ்வளவு தூரம், அடிப்படைகள் பரந்து விட்டன என்பது தெளிவாகும், வர்த்தகம் செய்யும் பொருட்கள், வர்த்தக முறைகள், வர்த்தக விஸ்தரிப்பு, போன்றவைகளை நாங் கள் கூர்ந்து பார்க்குமிடத்து, பல தரப்பட்ட வேறுபாடுகளை, முன்னேற்றங்களை, நாங்கள் அவதானிக்கத்தக்கதாக இருக்கின்றது. கணக் காய்வுக்கு அடிப்படையாக இருப்பது கணக்கு. வர்த்தகக் கணக்குக்கு அடிப்படை யானது வர்த்தகம். வர்த்தகப் போக்குக்கு அடிப்படையாக இருப்பது என்ன...? வணி கம் என்போமா? விஞ்ஞானக் கண்டுபிடிப் புக்கள் என்று சொல்வோமா? ஜனப்பெருக் கம் என்று கூறுவோமா? தற்கால மனிதனின் அதிகப்படியான அபிலாஷைகள் என்று கூறு வோமா?... இவை எல்லாம் தான், இன் னும் பலவகைக் காரணங்களும் உண்டு. கணக்காய்வு வர்த்தகத்தை அடிப்படையா கக் கொண்டுள்ளது. வர்த்தகமோ, காலப் போக்கில், மிகமிக வேகமாக விஸ்தரிக்கப் பட்டு மாறுபட்டுக் கொண்டு வருகின்றது. இதனால் கணக்காய்வின் அடிப்படைகளும், காலத்துக்குக் காலம் மாறிக்கொண்டு வரு கின்றது. கூடிக்கொண்டு வருகின்றது. விஸ் தரிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது. இத னால் கணக்காய்வின் தத்துவம், முக்கியத் துவம் பலம் பெறுகின்றது. முன்னொரு காலத்தில் கணக்காய்வு என்பது வர்த்தக ஸ்தாபனங்களின் தனிச் சொத்தாகக் கருதப் பட்டது. ஆனால் இன்றோ கணக்காய்வில் வர்த்தக ஸ்தாபனங்கள் மாத்திரமல்லாது, மற்றைய தனிப்பட்ட உடன்பாட்டின் மூலம் பல்வேறுபட்ட ஸ்தாபனங்களும், கணக்காய் வின் முக்கியத்துவத்தை அறிந்து பயன் பெற்று வருகின்றன. இலாபத்தை நோக்க மாகக் கொண்டுள்ள வர்த்தக ஸ்தாபனங் களோடு ஏனைய பற்பல துறைகளையும், வகை யறுக்களையும் உள்ளடக்கிய ஸ்தாபனங்களும் கணக்காய்வுக்கு அடிப்படையாகவுள்ள வரி சையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. காலப்போக்கில் உலகில் உள்ள யாவும் கணக்காய்வுக்குள் கொண்டு வரப்பட்டாலும் மிகையாகாது.

அடிப்படைகளை ஓரளவு கிரகித்துக் கொண்ட நாங்கள், கணக்காய்வின் நோக் கத்தை அறிய முற்படுவோம். ஆய்வின் நோக்கு, அடிப்படையில் தங்கியிருக்கும் என் பது சொல்லாமலே விளங்கும். அந்தந்த ஸ்தாபனங்களுக்கு ஏற்ப நோக்கம் ஓரளவு வேறுபட்டாலும், பொதுப்படையான நோக் கங்கள் கிட்டத்தட்ட ஒன்றாகவே இருக்கும். அவைகளைச் சிறிது கவனிப்போம்.

அறிக்கை சமர்ப்பிப்பது ஒரு விஷேட நோக்கமாகும். இங்கே அறிக்கை சம்பந்தப் பட்ட கணக்குத் தொகுப்பு, அதனின் செம்மை முழுமை, நம்பத்தகுமை, திறன் தொழில் அபிப்பிராயம், கண்டிப்பான ஆய்வு என்பது முக்கிய அம்சங்களாகும்.

சட்டத்தின் ஏற்பாடுகள், சில ஸ்தாப னங்களின் கணக்காய்வுக்கு அடிப்படை நோக்கமாக அமைகின்றன. வரையறு கம்பெனிகள், அரச கூட்டுத்தாபனங்கள், தொழிற்சங்கங்கள், போன்றவை, சட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின்கீழ் மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளாகும். இவையல்லாது மற்றைய, தனியுடமை நிலையங்கள், பங்காளி வியாபாரங்கள். நலன்புரிச் சங்கங்கள் என்பவற்றின் கணக்காய்வுகள் தனிமுறை ஏற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படுபவையாகும்.

ஒரு ஸ்தாபனத்தின், ஒரு கால எல்லைக்குள் அடங்குகின்ற கணக்கு ஏடுகளை, சரி பிழை பார்த்து, நம்பத்தகுந்ததை, செம்மை முழுமை. என கணக்காய்வின் மூலம் உறுதிப்படுத்துவது முதலாய முக்கிய நோக்கமாகும். ஏற்ற அளவு உறுதியான சொந்தக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கும் தனியார், வர்த்தக ஸ்தாபனத்தில்தானும், தான் தயாரித்த கணக்குகளை உறுதிப்படுத்தும் வகையில், பிற கணக்காய்வாளர் மூலம் அறிக்கை ஒன்றைப் பெறுவதை நோக்கமாகக் கொள்வர். இதேபோன்று, உள்நாட்டிறைவரித் திணைக்களம், வங்கிகள். பிற நிறுவன ரீதியிலான வட்டிக்காரர், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், உத்தேச முதலீட்டாளர், போன்றவர்களும் கணக்காய்வுக்குக் காரணர்களாய் இருக்கின்றனர். மேலே குறிக்கப்பட்டவர்களுக்கும், ஸ்தாபனங்களின் கணக்காய்வு அறிக்கை, அவர்களின் நோக்கத்தை அல்லது எடுக்கப்பட வேண்டிய தீர்மானத்துக்கு ஒரு முடிவைக் கொடுப்பனவையாக அமைந்துள்ளது.

மோசடிகளைக் கண்டுபிடிப்பது கணக்காய்வின் முதல் நோக்கமாக இல்லாவிடினும், இதுவும் ஒரு பிரதான நோக்கமாகும். உளவு பார்ப்பதற்காகவோ, அல்லது மோசடிகளைக் கண்டு பிடிப்பதற்காகவோ கணக்காய்வாளர் அழைக்கப்படாத போதிலும், கணக்காய்வாளர் தனது கடமையைச் செய்யும்போது ஒரு சந்தேகம் எழும்போது, அந்தச் சந்தேகம் உறுதிப்படுத்தும் வரை அல்லது அந்தச் சந்தேகம் தணிக்கப்படும் வரை, ஏற்ற அளவு தனது தொழில் திறனுக்கு ஏற்ப, அந்தச் சந்தேகத்தைத் துருவி, திடமான ஒரு முடிவுக்கு அவர் வரவேண்டியவராய் இருக்கின்றார். இப்படியான நோக்கங்களை நிர்ணயிக்கும்போது நியாயமானதும், சந்தர்ப்பங்களுக்கு ஏற்றதாயும், ஏற்கக்கூடியதாயும், உண்மை தெளிவடையச் செய்யும் வகையில் பலனுடையதாயும் அமையவேண்டும் என்பதை மனதில் கொள்ளல் அவசியம்.

இன்னும் ஓர் முக்கிய நோக்கம் என்னவென்றால், கணக்காய்வின் மூலம் நடந்த, நடக்க இருக்கின்ற வழுவி நடத்தலையும், மோசடிகளையும் தவிர்த்தல் ஆகும். நேரடியாகக் கணக்காய்வாளர் ஒரு பாதுகாவலர் போல், தனது பிரசன்னத்தை நிரந்தரமாக வைத்திருந்த போதிலும், நேரடியாக மோசடியைத் தவிர்க்க முடியாத நிலையில் இருக்கின்றார். ஆயினும் கணக்காய்வாளர் செய்யும் அத்திறன் தொழிலின் ஊடாக, தார்மீக விளைவுகளுக்கு ஏற்பவும், கணக்கு ஆயப்படுமே என்பதனால் ஏற்படும் விளைவுகளும் இவற்றிற்குத் தடையாக அமைய முடியும். இதனோடு கூட மேற்கூறிய குறைபாடுகள் ஏற்படுவதற்கு உள்ள சந்தர்ப்பங்களையும் குறைப்பதற்கு ஏற்ற ஆலோசனைகளைக் கூறுவதையும், கணக்காய்வாளரின் நோக்கமாகக் கருத்திற் கொள்ளல் அவசியமாகின்றது.

கணக்காளர் - கணக்காய்வாளர்

வர்த்தக ஸ்தாபனம், மற்றைய ஸ்தாபனம் ஆகிய எல்லா ஸ்தாபனங்களிலும், கொடுக்கல் வாங்கல்களை, கணக்கு முறைக்கு ஏற்ப சரியான ஏடுகளில் குறித்து, காலத்துக்குக் காலம், இந்தக் கணக்கேடுகளின் மூலம், பிரதி பலாபலன்களை, லாபநட்டத்தைக் கணிப்பதற்கு உதவும் வகையில் செய்வதே கணக்காளரின் முக்கிய தொழிலாகும். இந்த நோக்கத்தை அடையும் வகையில் கணக்காளர் பல ஏடுகளைத் தயாரிக்க வேண்டியவராய் இருக்கின்றார். இவைகளில் சில ஏடுகளை நாளாந்த வேலைகளுக்கூடாகவும், மற்றைய ஏடுகளை ஒரு காலகட்டத்தின் முடிவிலும், தயாரிக்க வேண்டியவராய் இருக்கின்றார். இன்னும் இவர் அந்த ஸ்தாபனத்தின் அங்கத்தவராகவும், ஊழியனாகவும், தனது கடமையை ஸ்தாபனத்தின் உரித்தாளர்களுக்கும், நடத்துனர்களுக்கும் ஏற்ற வகையில், செய்யவேண்டியவராக இருக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூர். இங்கே கணக்காளர் ஓர் ஊழியனுக வும் குறிப்பிட்ட வகையில் தனது கடமை களைப் பெறும் ஊதியத்திற்கேற்ப செய்ய வேண்டியவராகவும் இருக்கின்றார்.

கணக்காய்வாளர், மேலே கூறப்பட்ட கணக்குகளையும், ஏடுகளையும், ஆய்வதற் காக அழைக்கப்படுகிறார். வர்த்தக, மற் றைய ஸ்தாபனங்களில், நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்களை கணக்காளரினால் தயாரிக்கப்பட்ட ஏடுகளை, பார்வையிட்டு ஏற்ற விதத்தில், சட்டதிட்டங்களுக்கு ஏற்ப, திறன்தொழிலுக்கு ஏற்ப, நம்பத்தகு தன்மை, செம்மை, முழுமையான அறிக் கையை சமர்ப்பிக்க வேண்டியவராய் இருக் கின்றார். கணக்காய்வாளர், ஒரு ஸ்தாபனத் தின், உரிமையாளர் அல்லது இயக்குனர் களின் வேண்டுகோளுக்கிணங்கவும், கணக் காய்வுத்திறன் தொழிலுக்கு ஏற்கத்தக்கதா கவும், மற்றைய சட்டதிட்டங்களுக்கு ஏற்ற தாகவும், கணக்காய்வைச் செய்து, அறிக் கையைச் சமர்ப்பிக்க வேண்டியவராய் இருக் கிறார். கணக்காய்வாளர் ஒரு தனிப்பட்ட நபர். இவர் கணக்காளர் போன்ற ஓர் ஸ்தாபன ஊழியர் அல்லர் என்பதும் தெளி வாக உணர வேண்டியவை. மேலும் கணக் காய்வாளர் தனது அபிப்பிராயத்தை தந் திரமாகத் தெரிவிக்க வேண்டியவராய் இருக் கிறார். இதற்கு இணங்க கணக்காய்வாள ரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் ஒரு போதும் கணக்காய்வு அறிக்கையை பாதிப் பதாக அமையக் கூடாது என்பதை மன தில் கொள்வோம். இன்னும் கணக்காய் வாளர் அனுபவத்தின் ஊடாகவும், படிப் பின் ஊடாகவும் நிறைந்த கணக்கறிவுள்ள வர்களாக இருக்க வேண்டும் என்பதும் தெளி வாகின்றது. மேலே கூறப்பட்டவைகளிலி ருந்து, கணக்காய்வாளர், கணக்காளர் என்ற இருவருக்கும் உள்ள ஒற்றுமைகளை யும் வேறுபாடுகளையும் ஓரளவு கிரகித்துக் கொள்வீர்களென எண்ணுகிறேன்.

கணக்காய்வின் சில முக்கிய அம்சங்கள்

உள்ளகக் கட்டுப்பாட்டின் தன்மை. எந்த ஒரு ஸ்தாபனத்தினதும், பிரதி பலா பலன்கள், விசேடமாக அதன் உள்ளகக் கட்டுப்பாட்டில் தங்கியுள்ளது. நாளாந்த நடவடிக்கைகளில், எவ்வளவு தூரம் குறை கள் தவிர்க்கப்பெற்று, முன்னேற்றம் காண வழி கோரப்பட்டுள்ளதென்பது நிறைவான ஒரு உள்ளகக் கட்டுப்பாட்டின் குணாதிசய மாகும். இதை கணக்காய்வாளர் மனதில் கொண்டு, உள்ளகக் கட்டுப்பாட்டின் நிலை யறிந்து, அதற்கு ஏற்ப, கணக்காய்வை செய்ய வேண்டியவராய் இருக்கின்றார்.

கொடுக்கல் வாங்கல்கள். ஒவ்வொரு ஸ்தாபனத்திற்கும் ஏற்றவகையில் பற்பல வகையில் அமைந்திருக்கும். இவைகளை உறு திப் படுத்த வேண்டிய பொறுப்பு கணக் காய்வாளருடையதாகும். ஒரு கொடுக்கல் வாங்கல் நிகழுமிடத்து, அதன் தொடர் பாக ஒரு சிலரும், இன்னும் பல பட்டியல் களும் ஏடுகளும் தொடர்பு படுத்தப்பட்டி ருப்பது வழக்கம். இன்னும் இவை உண் மையானவையா அல்லவையா என்று ஐயம் திரிபுற நிரூபிக்கப்பட வேண்டும். இவை களை நிரூபிப்பதற்கு, பற்றுச்சீட்டுகள், கிர யப்பட்டிகள் மாதாந்த கூற்றுக்கள், கூட் டறிக்கைகள், கடிதத் தொடர்புகள் போன்ற நம்பக்கூடியதும், ஏற்கும் வகை யில் உள்ள எல்லா சான்றுகளையும் கணக் காள்வாளர் நுணுக்கமாக ஆராய்ந்து உறு திப்படுத்த வேண்டியவராய் இருக்கிறார். இன்னும் இவை தக்க அதிகாரத்தின்கீழ் ஏற்ற முறையில் நடாத்தப்பட்டிருக்கிறதா என்று கணிப்பதும் கணக்காய்வாளரின் தலையாய கடனாகும்.

சாதாரணமாக கணக்குச் சம்பந்தப் பட்ட எல்லாப் பதிவேடுகளும், அங்கீக ரிக்கப்பட்ட முறையின்படி ஒழுங்கு முறை யாக வைக்கப்பட வேண்டும். கணக்காய் வாளர் ஓர் பிரத்தியேக, திறமைவாய்ந்த கணக்காளர் என்பதை மனதில் கொள்ளு மிடத்து, அவர் கணக்கு வைத்திருக்கும் முறைகளையும், கண்காணித்து, அவற்றின் தன்மை பற்றியும் தனது கருத்தைத் தெரி விக்க வேண்டியவராய் இருக்கிறார். இன் னும் கணக்கு முறைகளைச் சரிவரச் செய்வ தற்கு ஏற்ற ஆலோசகராகவும் அமைகின் றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments

from

VICKNA
ICKNA
ICKNA

VICKNA TUTION CENTER

52, STANLEY ROAD,

JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments

from

SHAMIE

HARDWARE

243/5, STANLEY ROAD,

JAFFNA.

Hardware & General Merchant

For all your requirements of Honda Vehicles & Spares

VISIT

T. SENATHIRAJAH

&

SONS

STANLEY ROAD,

JAFFNA.

With best Compliments

from

PROMOTERS

Engineering

Company

Ltd.

844, POINT-PEDRO ROAD,

Nallur, JAFFNA.

CALL AT

The Jaffna

Co-operative Stores

Ltd.

For all your requirements

of

Quality goods at fair prices

OUR MOTTO IS SERVICE

ABOVE SELF

Telegrams: LAKSHMI, Jaffna.

Phone: 22438, 22537, & 22370

420, Hospital Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST WISHES FOR

Commerce Students' Union

SELLAMS

PHOTOGRAPHERS

JAFFNA.

WITH THE BEST COMPLIMENTS

FROM

KALANTAN TRADERS

Authorised Distributor for C. I. C. paints,

DUCO, DULUX & PENTALITE.

THIRUNELVELY JUNCTION,

JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NATIONAL
TELEVISION

SLIGHTLY AHEAD OUR TIME
FOR REAL COLOUR
AND QUALITY
SELECT NATIONAL **T. V.**



V. K. RAJARATNAM

95, Stanley Road,

JAFFNA.

 23447

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வர்த்தக ஸ்தாபனத்தின் லாப, நட்டங்கள், அந்த வருடத்தின் முடிவில் இறுதிக்கணக்குகள் மூலம் கணிக்கப்படுவது வழக்கம்: இதில் கணக்காய்வாளரின் பங்கு என்னவென்றால், அவர் கணக்காளரால் கணிக்கப்பட்ட அந்த லாபம் அல்லது நட்டம், சரிவரக் கணிக்கப்பட்டுள்ளதா என்று பரிசோதித்து சமர்ப்பிக்கப்பட்ட ஏடுகளை நுணுக்கமாக ஆராய்ந்து எவ்வளவு தூரம் உண்மைப் பலனுக்குக் கிட்ட அல்லது தூர உள்ளது என்று தெரிவிக்க வேண்டியவராய் இருக்கிறார். இதனோடு சேர்த்து அவரது கணக்குப்பற்றிய உறுதியான முடிவும் ஏற்றக் கூடியதாக அமைய வேண்டும் என்பது குறிக்கப்பட வேண்டிய அம்சமாகும்.

ஒரு வர்த்தக ஸ்தாபனத்தின் இருப்புகளும், பொறுப்புகளும் அதன் மூலதனத்தை ஒரு குறிப்பிட்ட திகதியில் கணிக்க உதவும். ஆகவே ஒரு ஸ்தாபனத்தின் நிலையை, அதன் தன்மையை, ஸ்திரத்தை, அறிவதற்கு இருப்புகள், பொறுப்புகளின் பெறுமதி, மதிப்பு மிகவும் அவசியமாகின்றது. வெளிக்காட்டப்பட்டுள்ள, காட்டப்படாத இருப்புகள், பொறுப்புகள் யாவும் சரியான, ஏற்றக்கூடிய, பெறக்கூடிய, பெறுமதியைக் காட்டுபவையாக அமைந்திருக்க வேண்டும். எல்லாவற்றையும் ஒழுங்கு சேர்த்து, ஒரு நிலையில், மதிக்கப்பட்டவையாக அமைய வேண்டும். இங்கும் கணக்காய்வாளர், தனது திறன்தொழில் நுணுக்கங்களுக்கேற்ப, இருப்புகளும் பொறுப்புகளும் சரிவரக்கணிக்கப்பட்டு உண்மையான ஓர் பாடத்தை உரிமையாளருக்கும், பங்குதாரர்களுக்கும், இயக்குனர்களுக்கும், சம்பந்தப்பட்டவர்களுக்கும், சரிவரக்கூற வேண்டியவராயிருக்கிறார் என்பதை மனதில் கொள்வோம்.

அறிக்கை சமர்ப்பிப்பது கணக்காய்வாளரின் முக்கிய, விசேஷ அம்சமாகும். இந்த அறிக்கை பலராலும், மதித்து ஏற்கப்படும் ஒன்றாகும். இன்னும் இந்த அறிக்கையை நம்பி, செயலில் இறங்க வேண்டிய பல சந்தர்ப்பங்கள் உண்டாகின்றன. ஆகவே, கணக்காய்வாளர் தனது அபிப்பிராயத்தை இந்த அறிக்கை மூலம், சில விதிகளுக்கேற்ப நியதிகளின்படி மட்டுப்படுத்தலின்றி தெளிவாகவும் ஆணித்தரமாகவும் சமர்ப்பிக்க வேண்டியவராய் இருக்குன்றார்.

கணக்காய்விலுல் உள்ள சாதாரண நன்மைகள் பல வகையானவை. சில நிறுவனங்கள் கட்டாயமாகக் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியவையாகும். மற்றவை நன்மை கருதி அவரவர்கள் கணக்காய்வுக்கு அழைப்பு விடுவிக்கும் நோக்கத்தைப் பொறுத்துள்ளது. எப்படிப்பார்க்கினும், கணக்காய்வு, ஒரு சுதந்திரமான அறிக்கையின் மூலம், செம்மை, முழுமை, நம்பத்தகு தன்மை ஆகிய தன்மைகளை அடக்கிய திறன்தொழில் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தி, பலருகும் பயன்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைப்படுத்துதல் - (Marketing)

ooooooooooooooooooo

ம. அன்ரன் அல்பிறெற்

இறுதியாண்டு வணிகம் (சிறப்பு)

ooooooooooooooooooo


உலகில் எவ்விடயமும் உடன் தோன்றுவதை நாம் பொதுவாக காணமுடியாது. அதற்கு ஒரு வரலாறு இருக்கும். அதன் உருவாக்கத்தில் பல படிமுறைகள் காணப்படும். அவ்வாறே சந்தைப்படுத்தல் எண்ணக் கருதோன்றுவதற்கும் சில படிமுறைகள், ஒரு வரலாற்று ஒட்டம் இருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

சந்தைப் படுத்தல் எண்ணக்கரு
Concept of Marketing


ஆரம்பகால மனித வரலாற்றில் ஒவ்வொரு குடும்பமும் தமக்கு தேவையான வற்றை தாமே பூர்த்தி செய்தனர். இதனால் அங்கு பரிமாற்றமே இடம் பெறவில்லை. எனவே அங்கு சந்தைப்படுத்தல் எண்ணக்கருவும் இருக்கவில்லையெனலாம்.

படிப்படியாக வர்த்தகத்தில் ஏற்பட்ட வளர்ச்சியினால் பரிமாற்றம் அவசியமாக மாறியது. அப்பொழுது உற்பத்தியாளர், விநியோகிப்பாளரிடையே போட்டி இருக்கவில்லை. அப்படி முறையில் பண்டமாற்று மூலமே பொருள், சேவைகள் பரிமாறப்பட்டது. இப்பண்டமாற்று முறையில் பல குறைபாடுகள் இருந்ததால் பணம் புழக்கத்திற்கு வந்தது. பண்டமாற்றினால் ஏற்பட்டிருந்த குறைபாடுகள் தீர்ந்தன. அதனால் பரிமாற்றம் இலகுவாகவும், சுதந்திரமாகவும் மாறியது. பொருட்களின் பரிமாற்றம் ஒரு இடத்தை அறிமுகப்படுத்திய பிறகு அவ்விடம் சந்தை என அழைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(சந்தை தோன்றுவதற்கு முன்)



(சந்தையின் தோற்றத்தின் பின்)

கைத்தொழில் புரட்சியின் காரணமாக உற்பத்திகள் பேரளவாக்கப்பட்டன. இங்கு உற்பத்தி முக்கியப் படுத்தப்பட்டதேயன்றி நுகர்வு முக்கியப்படுத்தப்படவில்லை. எனவே சந்தைப்படுத்தல் எண்ணக்கருவும் புறக் கணிக்கப்பட்டிருந்தது எனலாம்.

பின் ஏற்பட்ட படிமுறையில் விவசாயம் கைத்தொழிலுக்கு மாறியது. வாழ்க்கைத்தரம் உயர்ந்தது, போக்கு வரத்து அபிவிருத்தியடைந்தது, செய்தி தொடர்புகள் அபிவிருத்தியடைந்தது. இந்நிலையில் நுகர்வோர் முக்கியம் உணரப்பட்டது. சந்தைப் படுத்தலின் அவசியமும் உணரப்பட்டது. ஆனால் நுகர்வோர் திருப்தியடையும் முறையிலான சந்தைப்படுத்தல் உருவாக வில்லை எனலாம்.

நுகர்வோர் தேவையும், உற்பத்தியாளர் உற்பத்தி இயலளவும் ஒருசமநிலைக்கு வந்த பொழுது உற்பத்தியாளர் சந்தைப் படுத்தல் தத்துவத்தைப் பற்றி அதிக அக்கறை கொள்ள தலைப்பட்டனர். போட்டிச் செயற்பாடு இன்றி தமது உற்பத்திகளை விற்கமுடியாது என்பதை உற்பத்தியாளர் உணர்ந்தனர். உற்பத்தி அதிகளவில் மேற் கொள்ளப்பட்டதால் கேள்வியிலும் நிரம்பல் மிகையாக காணப்பட்டது. ஒரு தேவைக்கு பல பொருட்கள் உற்பத்தியாகியது. மேலும் நுகர்வோரது தேவையில் ஏற்பட்ட வேகமான மாற்றங்கள் அநேக நிறுவனங்களை குழப்பியது, நட்டத்தில் இயங்கச் செய்தது. இதனால் பொருள்கள், சேவைகள் விற்பனை செய்வதில் சந்தைப் படுத்தல் எனும் கருமம் மிக அவசியப்பட்டது. இவ்வாறு சந்தைப்படுத்தல் தத்துவம் வளர்ச்சி பெற்றுள்ளதை நாம் உணரக் கூடியதாக உள்ளது.

சந்தைப்படுத்தல் என்றால் என்ன ?
What is marketing ?

சந்தைப்படுத்தல் என்றால் என்ன என் பதற்கு பல அறிஞர்கள் பலவித வரையறை களைத் தந்துள்ளனர். காலமாற்றத்திற்கு ஏற்ப, சந்தைப்படுத்தல் எண்ணக்கரு படி முறைக்கேற்ப வரைவிலக்கணங்களும் வேறு பட்டு அமைந்துள்ளன.

(a) அமெரிக்க சந்தைப்படுத்தும் நிறுவனம் ''விற்பனையாளரிடமிருந்து பொருள் சேவைகள் நுகர்வோருக்கு பாய்ச்சப் படும் செயற்பாடு சந்தைப்படுத்துதல்'' ஆகும் என வரையறை செய்கிறது.

(b) ''பண்டங்களின், பொருட்களின் உரிமையை மாற்றும் கருமம் சந்தைப் படுத்துதல்'' ஆகும்.

(c) E. F. L. Brech என்பவர் ''ஒரு பொருளுக்கான, சேவைக்கான நுகர்வுத் தேவையை தீர்மானம் செய்து விற்பனையை இலாபத்தில் தூண்டி, இறுதி நுகர்வோருக்கு பாய்ச்சும் கருமம் சந்தைப்படுத்துதலாகும்'' என வரையறுக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(d) Paul Mazur என்பவர் "சமூகத்திற்கு ஒரு வாழ்க்கைத் தரத்தைத் தரும் ஒரு கருமம் சந்தைப்படுத்தலாகும்" என்கிறார்.

(e) Malcolm Mcnair என்பவர் "சமூகத் திற் ஒரு வாழ்க்கைத்தரத்தை உரு வாக்கி வழங்கும் செயற்பாடு சந்தைப் படுத்தல்" என்கிறார்.

f) William I. Santon என்பவர் "திட்ட மிடல், விலையிடல், அபிவிருத்தி செய் தல், வழங்கல், பொருள்கள் சேவை களுக்கு ஏற்ப நிகழ்கால, எதிர்கால நுகர்வோரை பூர்த்தி செய்தல் ஆகிய செயற்பாடுகளின் கூட்டு மொத்தமே சந்தைப்படுத்துதல்" ஆகும் என்கிறார்.

(g) Philip Kotler என்பவர் "நுகர்வோர் தேவைகள், விருப்பங்களை திருப்தி செய்யும் வண்ணம் பொருள்கள் சேவைகளை இலாபத்தில் வழங்கும் செயற்பாடு சந்தைப்படுத்துதலாகும்" என்கிறார்.

(h) பிழுத்தானிய சந்தைப்படுத்தும் நிறு வனம் "ஒரு குறிப்பிட்ட பொருளுக்கு அல்லது சேவைக்கு மக்களிடையே கேள்வியை உண்டாக்கி அவர்களது கொள்வனவுச் சக்தியை அளவிட்டு, அப்பொருளை நுகர்வோர் வாங்கத் தூண்டுவதுடன் அப்பொருளின் பாவ னைமூலம் நுகர்வோர் பயனடையச் செய்யும் ஒரு செயற்பாடு சந்தைப் படுத்துதல் ஆகும்" என வரையறுக் கிறது.

சந்தைப்படுத்தல் தொழிற்பாடுகள்
Functions of marketing

சந்தைப்படுத்தல் என்பது ஒரு செயற் பாடல்ல பல செயற்பாடுகளின் கூட்டு மொத்தமே சந்தைப்படுத்தல் செயற்பாடு கள் பின்வருமாறு அமையும்.

சந்தைப்படுத்துதல்

→ விற்பனைச் செயற்பாடு
- (a) உற்பத்திப் பொருள் திட்டமிடலும் அபிவிருத்தியும்.
- (b) நியமப்படுத்தலும் வகைப்படுத்தலும்.
- (c) கொள்வனவும் ஒன்று சேர்த்தலும்
- (d) விற்பனை
  - (i) கேள்வியை தூண்டுதல்
  - (ii) விளம்பரம்
  - (iii) விற்பனை மேம்படுத்தல்
  - (iv) பொதியிடல்
  - (v) விற்பனையின் பின் சேவை

→ பௌதிகபங்கீட்டுச் செயற்பாடு
- (a) களஞ்சியப்படுத்தல்
- (b) விநியோகம் (கொண்டு செல்லல்)

→ உதவிச் செயற்பாடு
- (a) சந்தைப்படுத்தல் நிதியீட்டல்
- (b) நட்ட அச்சமேற்றல்
- (c) சந்தைப்படுத்தல் தகவல் பெறல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனைச் செயற்பாடு

(a) உற்பத்திப் பொருள் திட்டமிடலும் அபிவிருத்தியும்.

விற்பனை இலக்கும், இலாப இலக்கும் சந்தைப் படுத்துவோரினால் அடையப்பட வேண்டுமானால் நுகர்வோர் திருப்தி அவசியமாகும். நுகர்வோர் தேவைகள் விருப்புக்களை பூர்த்தி செய்யாத பொருள்கள் சந்தையை விட்டு நீங்கும். நுகர்வோர் விருப்பில் தேவையில் ஏற்படும் மாற்றங்களுக்கு பொருள்கள் ஈடு கொடுக்கக் கூடியதாய் திட்டமிடப்பட்டு, அடிக்கடி அபிவிருத்தி செய்யப்படவேண்டும். உற்பத்திப் பொருள் ஆராய்ச்சியாலும், நுகர்வோர் தேவையில் ஏற்படும் மாற்றங்களினாலும் பொருள்கள் (சேவைகள்) பழைமையடைகிறது. எனவே சந்தைப்படுத்தும் நிர்வாகி இவற்றுக்கேற்ப பொருள் திட்டமிடல் அபிவிருத்தியை மேற் கொள்வார். சந்தைப்படுத்தல் ஆராய்ச்சியின் ஒரு அங்கமான பொருள் ஆராய்ச்சியினை மேற்கொண்டு பொருளின் தரம், நிறம், வடிவமைப்பு பயன்பாட்டினளவு என்பவற்றில் தேவைக்கேற்ப அபிவிருத்திகள் மேற் கொள்ளப்படும் இவ்வாறு செய்வதினால் சந்தையில் குறித்த திறுவனம் குறித்த பொருளுக்கு ஒரு நிலையான இடத்தைப் பிடிக்கும்.

(b) நியமப்படுத்தலும் வகைப்படுத்தலும்

ஒரு குறிப்பிட்ட பொருள் இன்ன அம்சங்களை உள்ளடக்கியிருக்க வேண்டுமென முதலே தீர்மானித்து அதன்படி பொருள் இருக்கிறதா என பார்க்கும் செயற்பாடு நியமப்படுத்தல் எனப்படும். தரம், பெறுமதி, உபயோகம் என்பனவற்றை உள்ளடக்கியதாக பொருள்கள் நியமப்படுத்தப் படுகிறது. ஒரே மாதிரியான பொருட்களிடையே வேறுபாட்டை ஏற்படுத்த சில அம்சங்களை நியமப்படுத்தல் கொண்டமையும். நியமப்படுத்தலில் குறிப்பிட்ட பொருளில் தற்பொழுதுள்ள குணதிசயங்களை கூறுதல் நேர் நியமப்படுத்தல் என்றும், பொருளில் தற்பொழுது இல்லாத குணதிசயங்களை கூறுதல் நேரில் நியமப்படுத்தல் என்றும் கூறப்படும்.

பொருட்களின் தரம், அளவு என்பவற்றில் ஒரே தன்மையைக் கொண்டு பொருட்களை பகுத்தல் வகைப்படுத்தல் எனப்படும். நியமப் படுத்தலும், வகைப் படுத்தலும், குறிப்பிட்ட பொருட்களுக்கான களஞ்சிய செலவை குறைப்பதற்கும், மாதிரிகளைகாட்டி பொருளை விற்பனை செய்வதற்கும், வேறு பொருட்களில் இருந்து வேறு படுத்துவதற்கும், விலைகளை வேறு படுத்துவதற்கும், தரங்களை உறுதியிட்டு நுகர்வோருக்கு நம்பிக்கையை அளிப்பதற்கும் மேற்கொள்ளப் படுகிறது.

(c) கொள்வனவும் ஒன்று சேர்த்தலும்

சந்தைப்படுத்தலில் ஒரு முக்கிய தொழிற்பாடு கொள்வனவு செய்தலாகும். கொள்வனவு பல்வேறு காரணிகளை இணைத்துள்ளது. நன்கு செய்யப்பட்ட கொள்வனவு பாதி விற்பனை செய்யப்பட்டது போலாகும். கொள்வனவு செய்யப்படுமுன் பின்வரும் கேள்விகள் எழுப்பப்படுவது வழக்கமாகும்.

(i) என்னத்தை வாங்குவது

(ii) எப்பொழுது எவ்வளவு வாங்குவது

(iii) எங்கிருந்து எப்படி வாங்குவது

(iv) என்ன வழியில், விலையில் வாங்குவது

கொள்வனவு, இறுதிப்பாவனைக்கு, உற்பத்தி செய்முறைக்கு மீள விற்பனை செய்வதற்கு, மேற் கொள்ளப்படுகிறது. கழிவு, போக்கு வரத்துச் செலவு, விநியோக காலம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு விலை தீர்மானிக்கப்பட்டு. காசு கொடுத்து அல்லது வேறு ஒழுங்குகளை மேற் கொண்டு பொருளின் உரிமை மாற்றப்படுகிறது. இது கொள்வனவின் இறுதியங்கமாகும். நேரில் சென்று பொருட்களை கொள்வனவு செய்தல், மாதிரிகளை பார்த்து, பரிசோதித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வனவு செய்தல், விவரணங்கள்மூலம் ஒப்பந்தங்கள்மூலம் கொள்வனவு செய்யப் படும்.

ஒன்று சேர்த்தல் என்பது தேவையான பொழுது தேவையான இடத்தில், தேவை யான தரம், அளவுகளுக்கு ஏற்ப நிரம்பல் மூலகங்களை தேடுதல் ஒன்று சேர்த்தலாகும் இச் செயற்பாடு கொள்வனவுக்கு பிந்திய செயற்பாடாகும். ஏனெனில் பொருளினை கொள்வனவு செய்த பிறகே அவற்றினை ஒன்று திரட்ட முடியும். பொருட்களின் தட்டுப்பாட்டை தவிர்ப்பதற்கும் பல்வேறு பொருட்களையும் நியாயமான விலையிலும் உரிய நேரத்திலும் சந்தைப்படுத்தலை மேற் கொள்ளுவதற்காக ஒன்று திரட்டல் மேற் கொள்ளப்படுகிறது.

(d) விற்பனை

சந்தைப்படுத்தல் செயற்பாட்டில் விற் பனையைப் போல கவனத்தை அதிகமாக ஈர்க்கக்கூடிய தொழிற்பாடு வேறில்லை எனப் படுகிறது. சரக்கு விற்பனைச்சட்டத்தின்படி பொருள்களின் உரிமையினை பணத்திற்கு மாற்றும் செய்முறை விற்பனையெனப்படுகி றது. விற்பனையெனும்போது பின்வரும் துணைச் செயற்பாடுகளையும் அது கொண் டுள்ளது.

(அ) கேள்வியைத் தூண்டுதல்

கேள்வியை உருவாக்குதல் ஒரு கலை யாகும். மறைந்துள்ள கேள்வியை பயன் படு கேள்வியாக்கும் செயற்பாடு இதுவாகும் மனித நடத்தை மாறக்கூடியது ஆனால் பொருள்களின் பௌதீகத்தன்மை மாறக் கூடியதல்ல. மேலும் நுகர்வோர் தன்மை களும், நடத்தைகளும் வேறுபட்டது. எனவே சில பொருள்கள் நுகர்வோருக்கு அவசியம் என நம் பவைக்க வேண்டும். இவற்றுக்காகவே பின்வரும் செயற்பாடுகள் மேற் கொள்ளப்படுகிறது.

(ஆ) விளம்பரம் செய்தல்

விளம்பரம் செய்தல் என்பது பொருள் சேவையினைப் பற்றி தகவலை நுகர்வோருக்கு கொள்வனவாளருக்கு) அளிக்கும் செயற் பாடு ஆகும். நிறுவனங்கள் தாங்களாகவோ, முகவர் நிலையங்களின் மூலமோ, வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி, சுவரொட்டி, துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றில் விளம்ப ரங்களை மேற் கொள்கின்றன. தற்காலத் தில் விளம்பரமில்லையேல் விற்பனையில்லை என்ற அளவில் விளம்பரம் முக்கியமாகி யுள்ளது. வெற்றியளிக்கும் சந்தைப்படுத் தலுக்கு விளம்பரம் உயிர்நாடியாக உள்ளது.

(இ) விற்பனை மேம்படுத்தல்

இது கைத்தொழில் பொருள்களுக்கு மேற்கொள்ளப்படுவதில்லை; மாதிரிகளை அளித்தல், மலிவு விற்பனை, கழிவுகளை நுகர் வோருக்கு வழங்கும் செயற்பாடு விற்பனை மேம்படுத்தலாகும். விற்பனையில் உடன் தாக்கத்தை இது ஏற்படுத்தும். ஆனால் விளம்பரம் பிந்தியே தாக்கத்தை ஏற்படுத் தும்.

(ஈ) பொதியிடல்

பொருள்களை உறையிடுதல், சுற்றிக் கட்டுதல், பெட்டியிலிடுதல், கூடையிடுதல் என்பன பொதியிடலைக்குறிக்கும். நியமத் தரத்திற்கு மிக நெருங்கிய சம்பந்தமுடை யது பொதியிடலாகும். முன்பு பாதுகாப்பு நோக்கம் மட்டும் கருதியே பொதியிடல் செய்யப்பட்டது. அண்மைக் காலங்களில் நியமத்தரத்தைப் பேணுவதற்கு மாத்திர மன்றி இலகுமயப்படுத்தல், விளம்பரம் என்றளவிலும் பொதியிடல் முக்கியம் பெறு கிறது. பொதியிட்ட பொருட்கள் இலகு வாக களஞ்சியப்படுத்தமுடிவதோடு நுகர் வோரையும் திருப்தி செய்வதாக அமைகிறது

(உ) விற்பனையின் பின்சேவை

நீண்ட காலம் உபயோகிக்கப்படும் பொருட்களுக்கு விற்பனையின் பின் சேவை வழங்கப்படுகிறது. போட்டியாளரிடையே ஒரு தெரிவினைப் பெறுவதற்கும், பொருள் களில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் இச்செயற்பாடு வழிவகுக்கிறது. இச்செயற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடு விற்பனையாளரை நுகர்வோரோடு நேரடியாக தொடர்பு கொள்ளச் செய்கிறது. இதனால் அவனது விருப்பு வெறுப்புகளை விற்பனையாளர் உணர்ந்து சந்தைப்படுத்தலை திறம்பட ஆற்றமுடியும்.

பௌதிக பங்கீட்டுச் செயற்பாடு


(அ) களஞ்சியப்படுத்தல்

எல்லாப் பொருட்களும் எக்காலத்திலும் கிடைக்கமாட்டாது. மேலும் எக்காலமும் நுகர்வோருக்கு தேவைப்படாது. பின்வருமாறு கொண்டு செல்லல் தொழிற்பாடு அமையலாம். (படம் கீழே)

உதவிச் செயற்பாடு

(அ) சந்தைப்படுத்தல் நிதியிட்டம்

எவ்விடயமும் நிதியில்லாவிட்டால் மேற்கொள்ள முடியாது. அந்த வகையில் சந்தைப்படுத்தலுக்கு தேவையான நிதியினை பெறும் செயற்பாட்டை இது கருதும் மேலதிக மூலதனமிடல், பங்கு வழங்கல்,



எனவே பொருட்களை கிடைக்கும் பொழுது கொள்வனவு செய்து, உற்பத்தி செய்து தேவையான பொழுது சந்தைப்படுத்த களஞ்சியப்படுத்தல் இன்றியமையாத ஒரு கருமமாகும்.

(ஆ) விநியோகம்

பொருள்களை நுகர்வோருக்கு பாய்ச்சும் இறுதிச் செயற்பாட்டை இது கருதும். கடன் பெறுதல் என்பனமூலம் நிதியை பெற்றுக் கொள்ள முடியும்.

(ஆ) நட்ட அச்சமேற்றல்

எதிர்காலத்தை நிச்சயத்துக் கூறமுடியாத நிலையில் சந்தைப்படுத்தலால் வரும் நட்டங்களை ஈடுசெய்வதற்கு வேண்டிய ஒழுங்குகளை செய்தல் வேண்டும். காப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுதி போன்றவற்றை இதற்கு மேற்கொள்ளலாம். எல்லா நட்டத்திற்கும் காப்புறுதி செய்யமுடியுமா என்பது சந்தேகமே.

(இ) சந்தைப்படுத்தல் தகவல்கள் பெறல்

சந்தைப்படுத்தல் ஆராய்ச்சியின் மூலம் சந்தைப்படுத்தலுக்கு வேண்டிய தகவல்களை பெறலாம். சந்தைப்படுத்தலின் பூரண வெற்றிக்கு அவை பற்றிய தகவல் பெறப்பட்டு திட்டமிடப்பட்டு செய்யப்படும் சந்தைப்படுத்தல் செயற்பாடே பொருத்தமானதாகும். சந்தைப்படுத்தல் ஆராய்ச்சியில் பின்வருவன அடங்கும்.

(a) சந்தை ஆராய்ச்சி
(b) விற்பனை ஆராய்ச்சி
(c) பொருள் ஆராய்ச்சி
(d) விளம்பரம் செய்தல் ஆராய்ச்சி
(e) நுகர்வோர் ஆராய்ச்சி

இவ்வாராய்ச்சிகள் வெளிக்கள ஆய்வு முறை மூலமோ, மேசை ஆய்வு முறையிலோ மேற் கொள்ளப்படலாம்.

சந்தைப்படுத்தும் முகாமை
Marketing Management

நவீன சந்தைப்படுத்தல் நுகர்வோரிடம் ஆரம்பித்து நுகர்வோரிலேயே முடிவடைகிறது. முதலாவது நுகர்வோரின் கேள்வி நிலைமைகளின் மாற்றங்களை தீர்மானிப்பதற்கு தேடுதல் வேண்டும். பின் அடையாளம் காணப்பட்ட தேவையை திருப்தி செய்வதற்கு உற்பத்தி மூலவளங்களை பயன்படுத்த வேண்டும் இன்று உற்பத்திகளை சாதாரணமாக விற்கமுடியாது நவீன சந்தைப்படுத்தல் அநேக செயற்பாடுகளின் ஒன்றிணைதலாகும். இச்செயற்பாடுகள் கவனமாக திட்டமிடப்படவேண்டியது அவசியமாகிறது. இதற்கு எதிர்காலம் பற்றிய முன்னுணர்தல் மிகவும் வேண்டப்படுகிறது. எனவே சந்தைப்படுத்தல் முகாமையென்பது சந்தைப்படுத்தல் தொழிற்பாடுகளை உரிய முறையில் ஒழுங்கு படுத்தி நிறுவனத்தின் விற்பனை இலக்கு, இலாப இலக்கு, குறிப்பிட்ட பொருளின் வாழ்க்கை நீட்டம் என்பவற்றை அளிப்பதோடு நுகர்வோரை திருப்தி செய்யவும் செய்யும் ஒரு (முகாமைக்) கருமம் சந்தைப்படுத்தல் முகாமையாகும். முகாமைக் கோட்பாட்டில் ஒரு முக்கிய இடம் சந்தைப்படுத்தல் முகாமைக்கு உண்டு. ஏனெனில் சந்தைப்படுத்தலின் வெற்றியே ஒரு நிறுவனத்தின் நிலைப்பாட்டுக்கு அடித்தளமாகும். திட்டமிடல், அமைத்தல் ஒன்றுபடுத்தல் (ஒன்றிணைத்தல்) கட்டுப்படுத்தல் ஆகிய முகாமைக் கருவிகள் மூலம் சந்தைப்படுத்தல் முகாமை வழி நடர்த்தப்படுகிறது.

அபிவிருத்தியடையும் நாடுகளில் சந்தைப்படுத்தல்

இந்நாடுகளில் சந்தைப்படுத்தும் கருமம் குழந்தைப் பருவத்திலேயே உள்ளது எனலாம். இப்பொருளாதாரங்களில் நவீன உற்பத்தித் தொழில் நுட்பங்கள் தற்பொழுது மேற்கொள்ளப்படுகிறது. சந்தைப்படுத்தலில் நவீன முறைகள் பயன்படுத்தப்படவில்லை. பங்கீடு ஒரு முக்கிய செயற்பாடாக இந்நாடுகளில் சந்தைப்படுத்தலில் கருதப்படவில்லை. சந்தைப் படுத்தல் தோல்வியைத் தழுவும் பொழுது பங்கீடு ஒரு முக்கிய செயற்பாடு என உணரப்படுகிறது. Peter F. Drucker ''சந்தைப்படுத்தல் இல்லாமல் ஜனநாயக பொருளாதார அபிவிருத்தியில்லை'' என்கிறார். மேலும் அவர் ''சந்தைப்படுத்தல் இன்மை ஜனநாயக அமைப்பு ஒரு சர்வாதிகார அமைப்புக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவேசிக்கவைக்கும் என்கிறார். சந்தைப் படுத்தல் முதலில் தனிப்பட்டவர்களது தேவைகளையும் பெறுமானங்களையும் நோக்கியபின் நுகர்வோர்களது (நாட்டினது) தேவைகள், விருப்புக்களுக்கு ஏற்ப இயங்குகிறது. இதனால் நுகர்வோர் வாழ்க்கைத் தரம் உயர்வடைய வழி வகுப்பதனால் பொருளாதாரம் அபிவிருத்தியடைய முயற்சிக்கிறது. எனவே அபிவிருத்தியடையும் நாடுகளின் அபிவிருத்தியில் ஒரு முக்கிய இடத்தை சந்தைப்படுத்தல் கொண்டுள்ளது என்றால் அது மிகையாகாது.

பயன் படுத்திய நூல்கள்

(1) **MARKETING**
By N. Rajan Nair M. Com

(2) **BASIC MARKETING**
By E. W. Cundiff and R. R. Still

(3) **MARKETING AN INTRODUCTORY TEXT**
By M. J. Baker

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைப்படுத்தல் முகாமை
MARKETING MANAGEMENT

தனியார் துறையில் விற்பனை மேம்படுத்தல்
(Sales Promotion in Private Sector)

தேவராஜன் ஜெயராமன்
வணிகமாணி 3-ம் வருடம்

தனியார் துறையில் விற்பனை மேம்படுத்தல் : (Sales Promotion In Private Sector)

ஒரு வியாபாரி அல்லது உற்பத்தியாளனின் லாபம் ஆனது பெருமளவுக்கு அவனது விற்பனை அளவிலேயே தங்கியுள்ளது. கூடிய லாபத்தைப் பெறவேண்டுமானால் விற்பனையை அதிகரிக்க வேண்டும். விற்பனையை அதிகரிப்பதற்கு சில தந்திரோபாய முறைகள் (Strategy) கையாளப்படுகிறது. ஆரம்பகாலத்தில் அதாவது வணிகத்தின் ஆரம்ப கட்டத்தில் விற்பனையை அதிகரிக்க விளம்பரம் எனும் சாதனம் பயன்படுத்தப் பட்டது. இவ் விளம்பர முறையானது முதன் முதலில் கிரேக்க தேசத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது- நாளடைவில் சகல நாடுகளிலும் இவ்விளம்பர முறையானது வியாபார ஸ்தாபனங்களாலும், உற்பத்தி நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்பட்டன. போரளவு உற்பத்திக்குப் பின் வர்த்தக உலகானது நவீன முறையில் பெருமளவுக்கு வளர்ச்சி அடைந்தது. இதனால் விளம்பரம் மட்டும் விற்பனையை அதிகரிக்க போதுமானது ஒன்றாக கருதப்படவில்லை. அத்துடன் விளம்பர முறைகளில் காணப்பட்ட சில குறைபாடுகளின் காரணமாகவும் பல நிறுவனங்கள் புதிய ஒரு தந்திரோபாயத்தை கையாண்டு தமது விற்பனையை அதிகரிக்க முற்பட்டன. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட தந்திரோபாயமே விற்பனை மேம்படுத்தல் (Sales Promotion) ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரமும் விற்பனை மேம்படுத்தலும் (Advertisement and SalesPromotion)

நடைமுறையில் விளம்பரமும், விற்பனை மேம்படுத்தலும் ஒரே நோக்கத்திற்காக அதாவது விற்பனையை அதிகரிக்கச் செய்வதற்காகவே மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் இவ் இரண்டிற்கும் இடையில் குறிப்பிடத்தக்க வித்தியாசங்கள் உண்டு. ஒரு பொருள் ஒன்றிற்கு விளம்பரம் செய்கின்ற போது, இவ்விளம்பரமானது நீண்ட காலத்தின் பின்பு பொருளின் விற்பனையை அதிகரிக்கும். அதாவது விளம்பரத்தின் மூலம் பெறும் பலாபலன் ஆனது ஒரு நீண்ட காலத்தின் பின்பே கிடைக்கும். ஆனால் பொருள் ஒன்றிற்கு விற்பனை மேம்படுத்தலை செய்கின்றபோது, அவ் விற்பனை மேம்படுத்தலானது ஒரு குறுகிய கால இடைவெளிக்குள் அப்பொருளின் விற்பனை அளவின் மீது ஒரு குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பை ஏற்படுத்தும். அதாவது விற்பனை மேம்படுத்தலின் மூலம் நிறுவனம் பெறும் பலாபலன் ஆனது ஒரு குறுங்காலத்துள் அவ் நிறுவனத்தால் அனுபவிக்கப்படும்.

மேலும் ஒரு பொருள் ஒன்றிற்கு விளம்பரம் செய்கையில் அப்பொருளின் சிறப்பு அம்சங்களும், தன்மைகளும் எடுத்துக் கூறப்படுகின்றதே தவிர, அப்பொருளை நுகர்வோர் பார்ப்பதற்கு அல்லது நுகர்வதற்கு பொதுவாக சந்தர்ப்பம் அளிக்கப்படுவதில்லை. ஆனால் விற்பனை மேம்படுத்தலின் போது நுகர்வோன் பொருளைப் பார்ப்பதற்கும், சில சந்தர்ப்பங்களில் பொருளை நுகர்வதற்கும் கூட சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. அனேகமாக எல்லாப் பொருட்களுக்கும் விளம்பரம் செய்யப்படுகிறது. ஆனால் எல்லாப் பொருட்களுக்கும் விற்பனை மேம்படுத்தல் செய்யப்படுவதில்லை. பாரிய பல நிறுவனங்களும், பல்தேசியக் கம்பனிகளும் (Multi National Companies) தமது உற்பத்திப் பொருட்களிற்கு வெவ்வேறு விதமாக விற்பனை மேம்படுத்தலை மேற்கொள்கின்றன. பொதுவாக இலங்கையில் பின் வரும் முறைகளில் விற்பனை மேம்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) விசேட விலையில் பொருளை விற்றல் (Special Price Sales)

பொருட்களை பொருளின் வழமையான விலையிலும் பார்க்க குறிப்பிட்ட கழிவு விலையில் விற்பதன் மூலம் விற்பனை மேம்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. பொதுவாக நிறுவனங்கள் இச்சலுகையை குறிப்பிட்ட சில காலம் வரையும் மட்டுமே தமது பொருட்களுக்கு வழங்குகின்றன. இதனால் பலர் இப்பொருட்களை குறைந்த விலையுடன் பெறும் நோக்குடன் வாங்க முற்படுவர். அதேபோல் சிலர் வழமையாக வாங்கும் அளவிலும் அதிகமாகவும் வாங்க முற்படுவர். இதனால் இப்பொருளின் விற்பனை குறிப்பிட்ட காலத்துக்குள் அதிகரித்து விடும்.

(ஆ) இலவச மாதிரிகளை விநியோகித்தல் : (Free Samplc Distribution)

சில நிறுவனங்கள் தமது உற்பத்திப் பொருட்களின் மாதிரிகளை இலவசமாக நுகர்வோருக்கு வழங்குவதன் ஊடாகவும் விற்பனை மேம்படுத்தலை மேற்கொள்கின்றன. பொருட்களின் மாதிரிகளை இலவசமாக வழங்கும்போது நுகர்வோர் அதனைப் பார்ப்பதற்கும், நுகர்வதற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. இதனூடாக இப்பொருட்களை வாங்கும்படி நுகர்வோர் தூண்டப்படுகின்றனர். அதுமட்டுமன்றி ஏற்கனவே இப்பொருட்களை நுகர்ந்து வந்தவர்கள் கூட அடிக்கடி இப்பொருட்களை நுகர முற்படுகின்றனர். (More Frequent use of a Product)

உதாரணம் : நெஸில் (Nestle) ஸ்தாபனத்தார் தமது உற்பத்திப் பொருளான நெஸ்டோமோல்ட் (NestomoIt) பானத்தின் விற்பனையை கூட்டும் முகமாக இப்பானங்களை இலவசமாக நுகர்வோருக்கு வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) போட்டிகளை (Contests) நடத்தல்

சில வியாபார நிறுவனங்கள் தமது பொருட்களின் விற்பனை மேம்படுத்தலுக்காக தமது உற்பத்திப் பொருட்களை மையமாக வைத்து போட்டிகளை நடத்துகின்றன இவ் வாறான போட்டிகளில் வெற்றியீட்டியவருக்கு பல விலையுயர்ந்த பரிசில்களையும் கொடுக்க முன்வருகின்றனர். ஆனால் இப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்கான விண்ணப்பபடிவங்களை அனுப்பும்போது, அவ்விண்ணப்பப் படிவத்துடன் குறிப்பிட்ட அப் பொருளின் வெற்றுறைகள் அல்லது வெற்றுப் பக்கற்றுக்கள் சிலவற்றையும் இணைத்து அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர். போட்டியில் பங்கு பற்றுவதற்கு இது அவசியமான தொன்றாக கருதப்படுகிறது. எனவே போட்டியில் பங்கு பற்றும் பொருட்டு இவ் வெற்றுப்பெட்டி அல்லது வெற்றுறைகளை பெறுவதற்காக பலர் இப் பொருட்களை வாங்குவர். முன்பு இப் பொருட்களை உபயோகிக்காதவர் கூட இதனை வாங்க முற்படுவர். இதனால் பொருளின் விற்பனை உடனே அதிகரிக்கும்.

உதாரணம்: பி. சி. சீ. (B. C. C.) சிறுவனத்தார் தமது உற்பத்திப்பொருளான ஸ்னோவைட் (Snowwhite) சவர்க்காரத்தின் விற்பனையை அதிகரிக்கும்பொருட்டு விற்பனை மேம்படுத்தலை மேற்கொண்டனர். அதற்காக அப்பொருளை மையமாக வைத்து ஒரு போட்டியை நடத்தினர்.

(ஈ) காட்சிக்கு வைத்தலும் செய்து காட்டலும்: (Window Display and Demonstration)

சில நிறுவனங்கள் தமது உற்பத்திப் பொருட்களிற்கு விற்பனை மேம்படுத்தலை செய்வதற்கு, அப் பொருட்களை காட்சிசாலையில் (Show rooms) காட்சிக்கு வைக்கின்றன. பொதுவாக இக்காட்சிசாலையை மக்கள் அதிகமாக நடமாடும் பகுதிகளில் முக்கியமாக நகரப்புறத்தில் அமைத்து அங்கு இப்பொருட்களை காட்சிக்கு வைத்து அதனூடாக நுகர்வோர் இதனை பார்ப்பதற்கு வசதி அளிக்கப்படுகிறது. சில சமயங்களில் இப்பொருட்களை இயக்கி இதனைப் பாவிக்கும் முறைகள் பற்றியும், பாவிப்பதால் நுகர்வோர் அடையும் நன்மைகள் பற்றியும் எடுத்துரைக்கப்படுகிறது. இதனூடாக நுகர்வோர் இப்பொருட்களை வாங்கும்படி தூண்டப்படுகின்றனர். பொதுவாக இம்முறை மின்சாரத்தினால் இயக்கப்படும் பொருட்களுக்கே (Electrical Goods) பொருத்தமானதாகும். முக்கியமாக தொலைக்காட்சி (T. V.) றேடியோ மற்றும் இது போன்ற பொருட்களுக்கே இது சிறந்தது.

உதாரணம்: சென் அந்தனீஸ் நிறுவனத்தார் கொழும்பு கோட்டையில் ஒரு காட்சி சாலையை (Cyntex Show Room) அமைத்து அங்கு உற்பத்தி, விற்பனைப் பொருட்களை காட்சிக்கு வைத்துள்ளனர்.

(உ) கூட்டாக இரு பொருட்களை விற்பனை செய்தல்: (Combination or banded-pack product offers)

ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் சில நிறுவனங்கள் ஒரு பொருளிற்கு விற்பனை மேம்படுத்தலை செய்வதற்கு தமது மற்ற உற்பத்திப் பொருட்களை பயன்படுத்துகின்றன ஒரு பொருளுடன் சேர்த்து மற்ற பொருளையும் இணைத்து ஒன்றாக விற்பனை செய்வர். ஆனால் ஒரு பொருளுக்கான விலையை மட்டும் அறவிடுவர். அதாவது ஒரு பொருளை இலவசமாக வழங்குவர் இதனால் நுகர்வோர்ஒருபொருளை இலவசமாக பெறும் நோக்குடன் குறிப்பிட்ட பொருளை வாங்குவர். அத்துடன் வாங்கும் அளவையும், கூட்டிக் கொள்வதுடன், இப்பொருட்களை வாங்காத சிலரும் கூட இதனை வாங்க முற்படுவர். எனவே பொருளின் விற்பனையானது உடனே அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் உங்கள் வைப்புக்களுக்கு

30%

வட்டி வழங்கும் ஒரே நிதி நிறுவனம்

ஏர்ட் (F) பினான்ஸ் லிமிட்டெட்.

Head Office:

ERD (FINANCE) LTD.

182 1/1, STANLEY ROAD, JAFFNA.

★

Branch:

ERD (FINANCE) LTD.

111, KANDY ROAD, VAVUNIYA.



"சிறந்தது ஒன்றே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட இலங்கையில்
பிரபல புத்தகசாலை

பூபாலசிங்கம்
புத்தகசாலை

- சஞ்சிகைகள்
- பத்திரிகைகள்
- சினிமா மாத இதழ்கள்
- மருத்துவ, விஞ்ஞான, சட்டம், கலை சம்பந்தமான சகலவித நூல்களும் பெற்றுக்கொள்ளலாம்.

பூபாலசிங்கம்
புத்தகசாலை

பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

விக்ரர் அன் சன்ஸ்
100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
சகலவிதமான தமிழ், ஆங்கில, சிங்கள சினிமாப்பாடல்கள் ஒலிப்பதிவு செய்பவர்கள்.

With the best Compliments
from

NEW LANKA
TRADERS

222, STANLEY ROAD,
JAFFNA.

அன்பளிப்பு

ஹோம் பினான்ஸ் லிமிட்டெட்
உங்கள் நம்பிக்கையை பெற்ற ஸ்தாபனம்.
உங்களுக்கு கொழும்பு–யாழ்ப்பாணம் பயணத்திற்கு புதிய உல்லாச பஸ் சேவையை அளித்திருக்கிறது. உங்களுக்குத் தேவையான சைக்கிள், றேடியோ, T. V., குளிர்சாதனப் பெட்டிகள், இரும்பு அலுமாரிகள், தட்டச்சு இயந்திரங்கள், நீர் இறைக்கும் யந்திரம் இன்னும் பல பொருட்களை வாடகைக் கொள்வனவு முறையில் தந்துதவுகிறது.
ஹோம் பினான்ஸ் லிமிட்டெட்
82, கண்ணதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 24310

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments

from



NEWTONE ELECTRICALS

FOR ALL OF YOUR ELECTRICAL REQUIREMENTS

★

NEWTONE ELECTRICALS

ELECTRICAL CONTRACTORS

141, 143, STANLEY ROAD,

JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Space Donated by



SCIENCE CENTRE
KARAVEDDY.

MODERN EDUCATION CENTRE
KARAVEDDY.

"கவ்விச்சாலைகள் கடவுள் வாழ் ஆலயங்கள்
கல்விப்பயன் அதி நல்லொழுக்க சீலங்கள்"

SPACE DONATED BY



LIVERPOOL ACADEMY

Nelliady & Thanpachetty.

SIT YOUR EXAM WITH ABSOLUTE CONFIDENCE

DAY CLASSES G. C. E. (O/L)

EVENING CLASSES (A/L)

Science Only

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் : லீவர்பிறதர்ஸ் (Lever Brothers) ஸ்தாபனத்தார் தங்கள் உற்பத்திப் பொருளான சிக்னல் பற்பசையும் (Signal Tooth paste) சன்சில்க் சம்பூவையும் (Sun Silk Shampo) ஒன்றுக விற்பனை செய்தனர். ஆனால் பற்பசைக்கு மட்டும் விலையை அற விட்டனர் எனவே நுகர்வேயர் ஒரு பொருளை இலவசமாக பெற்றனர். இதனால் பொருளின் விற்பனை அதிகரித்தது.

(ஊ) வியாபாரமுத்திரையை (Trading Stamps) பயன் படுத்தல்

சில நிறுவனங்கள் தமது உற்பத்திப் பொருட்களை வாங்குபவர்களுக்கு பொருட்களின் தொகைக்கு ஏற்ப வியாபார முத்திரைகளையும், அத்துடன் அவற்றை ஓட்டி சேகரிப்பதற்காக ஒரு அல்பத்தையும் (Album) வழங்குகின்றன. குறிக்கப்பட்ட முத்திரைகளை சேகரித்து இவ் அல்பத்தில் ஒட்டி அவ் நிறுவனத்திடம் வழங்கினால் அவ் நிறுவனம் சில பொருட்களை இலவசமாக வழங்கும். நுகர்வோர் வியாபார முத்திரைகளை பெறுவதற்காக அதிகளவு பொருட்களை வாங்குவர். இதனால் விற்பனை அதிகரிக்கும்.

ஆனால் இம்முறை பொதுவாக இலங்கையில் மேற் கொள்ளப்படுவதில்லை. மேலைத்தேய நாடுகளிலே இம்முறை பெரிதும் பின்பற்றப்படுகின்றது.

(எ) அன்பளிப்பு (Gift) பொருட்களை வழங்கல்

சில நிறுவனங்கள் தமது உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்வோர்களுக்கு அவற்றுடன் சேர்த்து சில பொருட்களை இலவசமாக வழங்குவர். இவை பொதுவாக அன்பளிப்பு பொருட்களாகவே காணப்படும். நுகர்வோர் இப்பொருட்களை இலவசமாக பெறுவதற்காக குறிப்பிட்ட பொருட்களை வாங்குவர். இதனால் இப் பொருட்களின் விற்பனை தொகை அதிகரிக்கும். மேலும் இச்சலுகையை நிறுவனங்கள் குடிப்பிட்ட காலம் வரைக்கும் மட்டும் வழங்குவர். எனவே நுகர்வோர் குறிப்பிட்ட அக்காலத்துக்குள் அப்பொருட்களை வாங்கினால் மட்டுமே அவ் அன்பளிப்பு பொருட்களை பெறலாம். எனவே நுகர்வோர் உடனே அப்பொருட்களை கொள்வனவு செய்ய முற்படுவர். இதனால் விற்பனையானது குறிப்பிட்ட காலத்துக்குள் வெகுவாக அதிகரிக்கும்.

பொதுவாக நிறுவனங்கள் தமது உற்பத்திப் பொருளுடன் கலண்டர் (Calendar) வர்ணப் படங்கள், பைகள் (Shopping Bags) போன்ற பொருட்களை அன்பளிப்பாக வழங்குகின்றன.

உதாரணம் : லீவர் பிறதர்ஸ் (Lever Brothers) ஸ்தாபனத்தார் தமது உற்பத்திப் பொருளான லக்ஸ் (Lux) சவர்க்காரத்துடன் சினிமா நட்சத்திரங்களின் (Film Stars) வர்ணப்படங்களை இலவசமாக வழங்கி சவர்காரத்தின் விற்பனையை அதிகரித்தனர்.

உபாலி ஸ்தாபனத்தார் தமது உற்பத்தி பொருளுடன் சேர்த்து சிறிய கலண்டர் (Pocket Calender) அன்பளிப்பாக வழங்கினர்.

(ஏ) வீட்டுக்கு வீடு விற்பனை செய்தல் (House to house sale or door to door sale)

சில உற்பத்தி நிறுவனங்கள் தமது உற்பத்திப் பொருட்களின் விற்பனையை குறுகிய காலத்துக்குள் அதிகரிக்கச் செய்வதற்காக அவ் விற்பனைப்பொருட்களை வீடு வீடாக எடுத்துச் சென்று விற்பனை செய்வர். அதாவது ஒரு விற்பனை மேம்படுத்தல் முறையாக இதனை செய்வர். வீடு வீடாக பொருட்களை கொண்டு சென்று விற்பனை செய்யும் போது, அதனை ஒரு வகையில் விற்பனை என்று சொல்வதும் உண்டு. ஆனால் உண்மையில் விற்பனையாளர் அவ்பொருட்களை நேரடியாக வீடுகளுக்கு எடுத்துச் சென்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொருளின் சிறப்புத்தன்மைகளை எடுத்துக் கூறி அப்பொருட்களை வாங்கும்படி நுகர்வோரை தூண்டுகின்றனர். இதனால் இப்பொருட்களை முன்பு வாங்காத பலரும் வாங்க முனைகின்றனர். ஆனால் கடையில் நேரடியாக சென்று பொருட்களை வாங்கும் போது நடைபெறும் விற்பனைக்கும் இவ் விற்பனைக்கும் இடையில் காணப்படும் பொதுவான வித்தியாசம் என்னவெனில் அங்கு நுகர்வோர் தங்கள் தேவைகளுக்கு முக்கியம் கொடுத்து பொருட்களை வாங்குகின்றனர். ஆனால் வீடு வீடாக சென்று பொருட்களை விற்கும்போது நுகர்வோர் பொருட்களை வாங்கும்படி தூண்டப்படுகின்றனர். இதனால் இது சாதரண விற்பனையிலும் வேறுபட்ட ஒரு முறையாகும். அதாவது இதுவும் ஒரு விற்பனை மேம்படுத்தல் முறையாகும்.

உதாரணம் : சில வருடங்களுக்கு முன் லீவர் பிறதர்ஸ் ஸ்தபானத்தார் தமது விற்பனையாளர் ஊடாக தமது உற்பத்திப் பொருட்களை வீடு வீடாக எடுத்து சென்று விற்பனை செய்தனர். பொதுவாக இவ் விற்பனையை செய்வதற்காக பெண் விற்பனையாளாகளையே (Sales Girls) நியமித்தனர்.

(ஐ) வெற்றுறைக்கு விலை கழிவு வழங்கல் (Premium Offers)

சில உற்பத்தி, விற்பனை ஸ்தாபனங்கள் தமது உற்பத்தி, விற்பனைப் பொருட்களுக்கு விற்பனை மேப்படுத்தலை மேற் கொள்வதற்காக அப் பொருட்களின் வெற்றுறை, வெற்றுப் பக்கற்றுகளுக்கு விலைக் கழிவை வழங்குகின்றன. அதாவது குறிப்பிட்ட பொருட்களின் வெற்றுறைகளை வழங்கி அப்பொருட்களை வாங்கினால் அப் பொருட்களுக்கு கழிவு வழங்கப்படும். உண்மையில் இவ் சலுகையை பெற ஒருவர் விரும்பினால் ஆகக் குறைந்தது இருதடவை இப் பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டும். ஏனெனில் முதல் தடவை குறிப்பிட்ட பொருளை வாங்கினாலே அதன் வெற்றுறை அல்லது வெற்றுப்பக்கற்றைப் பெறலாம். மீண்டும் அவ் வெற்றுப்பக்கற் அல்லது வெற்றுறையை கொடுத்து பொருளை வாங்கினாலேயே குறிப்பிட்ட சலுகை அதாவது விலைக்கழிவைப் பெறமுடியும். தனியே வெற்றுறைக்கு மட்டும் எது வித பணமும் வழங்கப்படமாட்டாது. இதனால் குறிப்பிட்ட பொருளை வாங்கியவர் தொடர்ந்து அச்சலுகை முடியும் வரை அப்பொருளை வாங்குவர். இதனால் பொருளின் விற்பனை குறிப்பிட்ட காலத்துள் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கும்.

உதாரணம் : லீவர் பிறதர்ஸ் (Levers Brothers) ஸ்தாபனத்தார் தமது உற்பத்தி பொருளான றெக்சோனா (Rexona) சவர்காரத்தின் வெற்றுறையை கொடுத்தால் இச் சவர்காரத்தை முப்பது சதம் குறைந்த விலையில் பெறலாம் என பொது மக்களுக்கு அறிவித்தனர். இதனால் றெக்சோனா வெற்றுறையை வைத்துள்ளவர்கள் மீண்டும் றெக்சோனா சவர்க்காரத்தையே கொள்வனவு செய்தனர். அத்துடன் வேறு சவர்க்காரத்தை உபயோகித்தவர்கள் கூட இச் சலுகையை பெறுவதற்காக றெக்சோனா சவர்காரத்தை கொள்வனவு செய்தனர். இச்சலுகையானது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே வழங்கப்பட்டது. இதனால் விற்பனையானது குறிப்பிட்ட காலத்துள் வெகுவாக அதிகரித்தது. இதுவும் ஒரு விற்பனை மேம்படுத்தல் முறையாகும்.

நடை முறையில் விற்பனை மேம்படுத்தல், விளம்பரம் இரண்டு ஒரே நோக்கிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகவே செய்யப்படுகின்றது. ஆனால் இலங்கையில் விளம்பரம் மேற் கொள்ளப்படும் அளவிற்கு விற்பனை மேம்படுத்தலை நிறுவனங்கள் மேற்கொள்வதில்லை. இலங்கையில் காணப்படும் தனியார்துறை ஸ்தாபனங்களை நோக்கும்போது அவை எல்லாம் விளம்பரத்தை மேற்கொள்கின்றன. சில நிறுவனங்கள் பெரிய அளவிலும், சில நிறுவனங்கள் சிறிய அளவிலும் விளம்பரத்தை மேற் கொள்கின்றன. ஆனால் அவற்றுள் விற்பனை மேம்படுத்தலை நடைமுறைப்படுத்தும் ஸ்தாபனங்கள் வெகு குறைவாக காணப்படுகின்றது.

இலங்கையில் காணப்படும் பல பாரிய நிறுவனங்களும் சில பல் தேசியக் கம்பனிகளுமே இவ் விற்பனை மேம்படுத்தலை திட்டமிட்டு மேற் கொண்டு, அதில் குறிப்பிடத்தக்களவு வெற்றியையும் கண்டுள்ளன. பாரிய நிறுவனங்கள் தமது உற்பத்திப் பொருட்களுக்கு விற்பனை மேம்படுத்தலை திறமையாக செய்யும் பொருட்டு விற்பனை மேம்படுத்தல் அதிகாரி (Sales Promotion Officer) என்றும் ஒருவரை நியமிப்பது வழக்கம். இவர் அவ்ஸ்தாபனத்தால் மேற்கொள்ளப்படும் விற்பனை மேம்படுத்தலுக்கு பொறுப்பாக இருப்பார். மேலைத்தேய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இவ்விற்பனை மேம்படுத்தலானது இலங்கையில் பரவலாக எல்லா நிறுவனங்களாலும் மேற் கொள்ளப்படாவிடினும், இவ் விற்பனை மேம்படுத்தலை மேற்கொண்ட நிறுவனங்கள் வெற்றி கண்டுள்ளன.

மக்கள் கம்பனி

இலங்கையில் சிறு முதலீட்டாளர் நலன்களுக்காக நடைமுறை அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட கம்பனி அமைப்பே மக்கள் கம்பனி என வேறுபடுத்தப்படுகின்றது. பொதுக் கம்பனியொன்றின் பெரும் பாலான அம்சங்களை உள்ளடக்கி இருந்தாலும் பின்வரும் தன்மைகளில் வேறுபடுகின்றது.

1. குறைந்தளவாக 50 பங்குதாரரையும் கூடியளவாக வரையறுக்கப்படாமலும் இருத்தல்.
2. ஒவ்வொரு பங்கின் முகப் பெறுமதியும் 10/- இருத்தல்.
3. குறைந்தது 3 இயக்குநருடன் இயங்குதல்.
4. தனிப்பட்டவர், மனைவி, பராயமடையாத பிள்ளைகளுடன் 10% அளவுக்குள்ளாக பங்குமுதலைப் பெறுதல்.
5. இயக்குநர், ஓராண்டுப் பதவிக் காலத்தைக் கொண்டிருத்தல். ஆனால் மீண்டும் தெரிவு செய்யப்படலாம்.
6. இக்கம்பனி இயக்குநர் பிற கம்பனிகளில் இயக்குநராக இருத்தலைக் கட்டுப்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமைத்துவ விஞ்ஞானம்
Management Science

மயில்வாகனம் ஸ்ரீகிருஷ்ணன்
(வணிகமணி 4ம் வருடம்)

முகாமையின் வரலாறு :

மனிதர்கள் குழுக்களாகச் சேர்ந்து தமது தேவைகளை நிறைவேற்றத் தொடங்கிய காலம் தொட்டே முகாமைச் செயற்பாடும் ஆரம்பித்துள்ளது. ஆனால் அது கடந்த ஒரு நூற்றாண்டுக்கு உட்பட்ட காலப் பகுதியிலேயே விஞ்ஞானமாக வளர்ச்சியடைந்துள்ளது. அதிலும் கடந்த மூன்று தசாப்தங்களில் முகாமைத் தொழில்நுட்பம் மிக வேகமாக வளர்ந்துள்ளது. கைத்தொழிற் புரட்சியை அடுத்து வியாபார நிறுவனங்கள், காப்புறுதி, கடன் வழங்கல், சந்தைப்படுத்தல், என்பன நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் இவற்றினை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள் ஒருவராலும் மேற்கொள்ளப்படவில்லை. ஏனெனில் அக்காலத்தைய கருத்துக்களும் கொள்கைகளும் அம்முயற்சியை ஊக்கப்படுத்துவதாக இல்லை. உதாரணமாக அரிஸ்டோட்டிலின் கருத்தாகிய "வாங்குவதும் விற்பதும் இயற்கைக்கு மாறான பணம் உழைக்கும் செயல்" என்பதும், அடம்சிமித்தின் கருத்தாகிய "வியாபாரம் தனிமனிதனுக்கு நன்மை பயப்பதே அல்லாமல் சமூகத்துக்கல்ல, அது சமூகத்தினை நசுக்குகிறது." என்பது போன்ற கருத்துக்களும், அத்துடன் மாசல், ரெபின்சன் போன்றோரின் நிறை போட்டி, தனியுரிமை போன்ற பொருளியல் கோட்பாடுகள் வியாபார நிறுவனம் ஒன்றின் வளர்ச்சி சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கத்தக்கது என்பது போன்ற கருத்தினை வழங்கியதும் காரணங்களாக அமைந்தன. எல்லா பொருளியல் கோட்பாடுகளும் நடைமுறை சாத்தியமானது அல்ல என்பது பின்னால் நிரூபணமாகிய பின்பு இக்கருத்துக்கள் மாறத் தொடங்கின. அத்துடன் 1929-ன் பின்பெருமந்தத்தின் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்காக எல்லா உற்பத்தி அமைப்புக்களினதும், வியாபார நிறுவனங்களினதும் தலைவர்கள் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களைத் திறம்பட இயக்குவதற்கான முயற்சிகளை எடுக்கும் வகையில் தொழில் நுட்ப, முகாமை தந்திரோபாயங்களை விருத்தி செய்வதற்கு ஊக்குவித்தனர். அதன்பின் முகாமையானது மிகக் குறுகிய காலத்திலேயே அதாவது 3 தசாப்த கால கட்டத்திலேயே அதிகளவில் வளர்ச்சியடைந்து இன்று சமூக நலனுக்கு மிக வேண்டியதொன்றாகவும், சமூகத்தின் எல்லாப் பகுதியினது செயற்பாட்டிற்கும் அத்தியாவசியமானதாகவும் விளங்குகிறது.

முகாமையின் முக்கியத்துவம் :

தற்காலத்தில் எந்த ஒரு இலக்கினையும் அடைந்து கொள்வதற்கு மனிதர்கள் குழு முறையில் இயங்க வேண்டியுள்ளது. ஆகவே, தனிமனிதர்களின் செயற்பாட்டை ஒருங்கிணைத்து குழு முறையில் செயற்பட வைப்பதற்கு முகாமை மிக முக்கியமானதாகும்.

நிறுவனங்களை நல்ல முறையில் இயங்க வைப்பதற்கு நவீன முகாமை தொழில்நுட்பங்கள் அவசியமாகின்றது. இரண்டாவது உலக மகாயுத்தத்தின்பின் தோல்வியடைந்த நிறுவனங்களில் 90 % மானவை சரியான முகாமையில்லாததினாலேயே தோல்வியடைந்தன என்பது தெளிவானது.

ஒரு நாடு அல்லது சமூகம் அபிவிருத்தியினை அடைந்து கொள்வதற்கும், முகாமை உதவுகிறது. முதலீடோ அல்லது தொழில் நுட்பமோ தனித்து அபிவிருத்தியினை ஏற்படுத்தி விடமாட்டாது. அபிவிருத்திக்கு முகாமையின் பங்கு மிக முக்கியமானது. பலதரப்பட்ட சமூகங்களுடனும், துறைகளுடனும் தொடர்பு கொள்ளும் பொருளாதாரத்திட்டங்கள் குழப்பம் இல்லாது குறித்த இலக்கினை அடைந்துகொள்வதற்கு முகாமை உதவுகிறது. முகாமைத் தத்துவங்களும், தொழில் நுட்பங்களும் அபிவிருத்தியினை ஏற்படுத்துகின்றன என்பது நிரூபணமாகியுள்ளது. அத்துடன் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும், தவறுகள் குறைகள் இல்லாமல் இலக்கினை அடைந்து கொள்வதற்கும் முகாமை உதவுகிறது.

முகாமையின் நோக்கம் :

இலாபம் மட்டும் முகாமையின் நோக்கம் அல்ல. அது ஓர் அளவீடு மட்டுமே. முகாமையின் உண்மையான நோக்கம் குறைந்த அளவில் உள்ளீடுகளாகிய நிதி. முயற்சி, நேரம், மூலப்பொருட்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தியும் மிகக் குறைந்தளவான சிரமத்துடனும், ஓர் முயற்சியில் மேலதிகமொன்றினைப் பெறுவதாகும். இது லாபநோக்கமுடைய அல்லது லாபநோக்கமற்ற பல்வேறு வகையான தன்மைகளைக் கொண்ட நிறுவனங்கட்கும் அந்நிறுவனங்களிலுள்ள பல்வேறுபட்ட மட்டத்திலுள்ள முகாமையாளர்கட்கும் பொதுவானதாகும். ஆனால் அவர்கள் செயற்பட வேண்டிய சூழலும், எதிர்நோக்கும் பிரச்சினைகளும் வேறுபட்டதாகும். உதாரணமாக பல்வேறு முகாமை மட்டத்தவர்களான மேற்பார்வையாளர், மேலதிகாரி, காரியாலய பொறுப்பதிகாரி முகாமையாளர், பொதுமுகாமையாளர், இயக்குநர் ஆகியோரது அடிப்படை நோக்கம் ஒன்றாக இருந்தபோதிலும் அவர்கள் ஒவ்வொருவரது சூழ்நிலையும் பிரச்சினைகளும் வேறுபட்டதாகும். இதேபோல் பல்வேறு வகைப்பட்ட தாபனங்களின் தலைவர்களது செயற்பாடுகளும், பிரச்சினைகளும் வேறுபட்டதாக இருந்தபோதிலும் அவர்கள் அனைவரது அடிப்படை நோக்கமும் ஒரே தன்மையுடையதே. உதாரணமாக அரசியற் கட்சித் தலைவர், கூட்டுத்தாபனத் தலைவர், நகர மேயர், அரச திணைக்கள அல்லது வைத்தியசாலைத் தலைவர், சாரணர் படைத்தலைவர், இராணுவ தளபதி, விளையாட்டுக் குழுவின் முகாமையாளர், பல்கலைக்கழக துணைவேந்தர் அல்லது பீடாதிபதி ஆகியோரது பொறுப்புக்கள், கடமைகள் வேறுபட்ட போதிலும் அவர்கள் அனைவரதும் முகாமையின் அடிப்படை நோக்கம் ஒன்றுபட்டதாகவே உள்ளது. ஆகவே முகாமையாளரின் நோக்கத்தினைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம். " ஓர் குழுவினர் தமது இலக்கினை குறைந்தளவுநேரம், குறைந்தளவு செலவு, குறைந்தளவான முலப்பொருட்கள் ஆகியவற்றுடன் அடைந்து கொள்வதற்கான செயற்பாடுகளை சில முறைகளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றுவதனூடாகவும் சில நிபந்தனைகள், கட்டுப்பாடுகளை மேற்கொள்வதனூடாகவும் வடிவமைத்துக் கொள்ளுதல் முகாமையின் அடிப்படை நோக்கமாகும்.''

முகாமையியலின் முன்னோடிகள் :

முகாமையியலின் வளர்ச்சிக்கு காலத்துக்குக் காலம் பல அறிஞர்கள் பங்களிப்பினை செய்து வந்துள்ள போதிலும், அவர்களில் முக்கியமானவர்கள் சிலரைப் பின் வருமாறு வரிசைப்படுத்தலாம்

1. ஜெம்ஸ் வாற்றும் மத்தியூ ரொபின் புல்ற்றனும் (James Watt and Mathew Robinson Boulton)

இவர்கள் 1796-ல் ஓர் பொறியியல் தாபனத்தை அமைத்து அதில் வாற் உற்பத்தி மற்றும் நிர்வாக துறைக்குப் பொறுப்பாகவும், புல்ற்றன் விற்பனை வியாபாரத் துறைக்குப் பொறுப்பாகவும் கடமையாற்றி புதிய முகாமை நுட்பங்களை அறிமுகப்படுத்தினர். இவை மிகப் பழமை வாய்ந்தனவாஞலும் சில முறைகள் இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது. அவை சந்தைஆராய்ச்சி மூன்னுணர்தல், பொதியமைத்தல். உற்பத்தி திட்டமிடல், தர நிர்ணயம், உற்பத்திச் சேர்க்கை என்பவற்றுடன் கணக்கியல், செலவு கணக்கியல் என்பனவும் புள்ளி விபரவியல் ஆய்வு, கட்டுப்பாட்டு பகுதி, ஆளணி உறவு ஆகியவற்றையும் அறிமுகப் படுத்தினர்.

2. ரொபேற் அவுன் (Robert Owen)

இவர் 1820 தொடக்கம் 1828 வரை ஓர் பாரிய புடவை ஆலையை நிர்வகித்து தொழிளாளர் நலன் சம்பந்தமான பல முறைகளை அறிமுகப்படுத்தினர். இவரது நுட்பங்களில் சிறுவர்களை வேலைக்கு சேர்த்து கொள்வதிலான வயது எல்லை, தொழிலளர் கட்டான வேலை நேர நிர்ணயம், ஊதிய கொடுப்பனவு முறைகள் என்பன முக்கியமானவையாகும்.

3. சாள்ஸ் பாபேஜ் (Charles Babbage)

இவர் ஒரு கணித பேராசிரியர் இவர் 1822ல் கணித கருவி ஒன்றினை கண்டுபிடித்தார். 1832ல் இயந்திரங்களினதும் உற்பத்தியினதும் சிக்கனம் என்னும் நூலை எழுதினர். இவர் தொழிற் பிரிப்பு, தொழிலாளர் ஊக்குவிப்பு சம்பந்தமான புதிய முறைகளை அறிமுகப்படுத்தினர்.

4. ஹென்றி வார்நம்புவர் (Henry Varnumpoor)

இவர் அமெரிக்கன் புகையிரத பாதை சஞ்சிகைளின் ஆசிரியராக 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கடமை யாற்றியபோது புகையிரத பாதையானது தவறான முகாமைக்குட்படுத்தப்படுவதை அவதானித்து அதை கண்டித்ததுடன் அவற்றினை சிறப்பாக நிர்வகிப்பதற்கும் தொழிளாளர்களுடன் தொடர்பு கொள்வதற்கும் புதிய அமைப்பினை உருவாக்கி கொடுத்தார்.

5. பிறெற்றிக் ரெயிலர் (Feredric Taylor)

1878ல் ஓர் இரும்பு உருக்கு தொழிற் சாலையில் சாதாரண தொழிலாளியாக சேர்ந்து பகுதி நேர படிப்பின் மூலம் பட்டம் பெற்று பிரதம பொறியியளாளராஞர். பொறியியல் துறையில் அதிவேக இரும்பு வெட்டும் கருவியை கண்டுபிடித்த இவர் 1901ல் இளைப்பாறிய பின்பு முகாமைத்துவ ஆலோசகராகக் கடமையாற்றி உற்பத்தி சம்பந்தமாக பல முகாமை தொழில் நுட்பங்களை கண்டு பிடித்தார் இதன்மூலம் விஞ்ஞான முகாமையின் தந்தை என அழைக்கப்பட்ட இவர் 1911ல் முகாமைத்துவ விஞ்ஞானத்தின் தத்துவங்கள் என்ற நூலை வெளியிட்டார். உற்பத்தி திறனை அதிகரிப்பதுடன் உற்பத்தி திறனுக்கேற்ற ஊதிய கொடுப்பனவு முறைகளையும் வலியுறுத்தினர். விஞ்ஞான முறைகளை அமுல்படுத்துவதன் மூலம் உயர் உற்பத்தி, உயர் இலாபம் என்பவற்றினை பெற்றுகொள்ளலாம் என்றார். அவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தையிலேயே கூறப்போனால் "இது ஒரு உற்பத்தி திட்டமிடல் இல்லை, உற்பத்தி செலவைக் குறைப்பதற்கான ஒரு முறையும் இல்லை, சம்பள கொடுப்பனவுகட்கான புதிய முறையுமில்லை, துண்டு வேலை முறையல்ல, வெகுமதி திட்டமல்ல, இது தொழிலாளரைப் பற்றி ஆராயும் வேலை இயக்க படிப்பு அல்ல, இது ஒரு முழுமையான ஊளவியல் புரட்சி,தொழிலாளர்களின் மனோநிலையை அவர்களது கடமையை நோக்கியும் அவர்களது வேலையை நோக்கியும், முகாமைப் பக்கத்திலிருப்போர்களின் மனோநிலையை அவர்களது தொழிளாலர்களை நோக்கியும் அவர்களது அன்றாட பிரச்சனைகளை நோக்கியும் திருப்புவதாகும். இது இரு பகுதியினரிடையேயும் பரஸ்பர ஒத்துழைப்பினையும் புரிந்துணர்வினையும் ஏற்படுத்தல் தாகும்" என விளக்கம்மளித்தார். இவரது கருத்தினை கொட்டி பின்வரும் விளைவுகள் முகாமை தொழிற்பாட்டில் ஏற்படுத்தப் பட்டன.

1. கடுமையான சட்ட அமுலாக்கத்தை விஞ்ஞான முறையின் உதவியுடன் மாற்றியமைத்தல்.

2. குழு முறையான செயற்பாட்டில் குழப்பத்தை தவிர்த்து அமைதியையும் சமாதானத்தையும் கடைப்பிடித்தல்.

3. மனித நடத்தையில் கூட்டுமுயற்சியை வளர்த்தல்.

4. அதியுச்ச வெளியீட்டுக்காக உழைத்தல்.

5. தமதும் தமது நிறுவனத்தினதும் நன்மைக்காக தம்மால் இயன்றளவு செயற்படும்படி தொழிலாளரைத் தூண்டல்.

ரெயிலரது கொள்கைகளை பின்பற்றி அவற்றை அபிவிருத்தி செய்தவர்களில் பின்வருவோர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் கார்ல் ஜோஜ் பாத், ஹென்றி எல் காண்ற், பிராண்க், லில்லியன் ஜில்பேத், எட்வேட் ஆகியோராவர்.

6. ஹென்றி பயல் (Henry Fayol)

பிரான்சிய தொழில் அதிபரான கெஹன்றி பயல் நவீன முகாமைத்துவத்தின் தந்தையென கணிக்கப்படுகின்றார். பொது முகாமையும் தொழில் நிர்வாகமும் என்ற நூலை 1916 – ல் பிரான்சிய மொழியில் வெளியிட்டார். இவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் 1926 -ல் இங்கிலாந்திலும் 1949 ல் அமெரிக்காவிலும் வெளியிடப் பட்டது.

இவர் கைத்தொழில் தொழிற்பாகுகளை 6 வகையாக பகுத்து ஆராய்ந்தார். அவை.

1. தொழில் நுட்பம் (உற்பத்தி)
2. வர்த்தகம் (வாங்குதல், விற்றல், மாற்றல்)
3. நிதி (மூலதனம்)
4. பாதுகாப்பு (தொழிலாளர் பொருட்கள்)
5. கணக்கியல் (புள்ளிவிபரங்கள்)
6. முகாமை (திட்டமிடல், அமைத்தல், நெறிப்படுத்தல், தொடர்பு கொள்ளல், கட்டுப்படுத்தல்)

இவர் ஓர் சிறந்த முகாமையாளருக்கு இருக்க வேண்டிய அடிப்படை தகுதிகளை பின்வருமாறு வரையறுத்துள்ளார்கள்.

1. உடலியல் ரீதியானது
2. மதி நுட்பம் சார்ந்தது
3. குணாதிசயம் சம்பந்தமானது
4. கல்வி சம்பந்தமானது
5. தொழில் நுட்ப அறிவு
6. அனுபவம்

பயலை பின்பற்றி அவரது கருத்துக்களை அபிவிருத்தி செய்தவர்களில் பின்வருவோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். அவர்கள் கெல்டன், டெனிகான், மூனி, பெனர்ட் ஆகியோராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமைத்துவ அணுகு முறைகள்

முகாமையை ஒரு குறிப்பிட்ட எல்லைக் குள் உள்ளடக்கிவிடமுடியாது அது பல் வேறு துறைகளையும் உள்ளடக்கி பல்வேறு கோணங்களில் அணுகப்படுகின்றது. அண் மைக் காலத்தில் எல்லாமாக 9 வகையான அணுகு முறைகள் முன்வைக்கப்பட்டுள் ளன. இதன் மூலம் முகாமையைப்பற்றியும் அதன் தன்மையைப்பற்றியும் ஓரளவிற்கு அறிந்து கொள்ள முடியும்,

1. அனுபவ ரீதியிலான அணுகுமுறை

இது கடந்த கால பிரச்சனைகளை ஆராய்ந்து அந்த அறிவினை அவற்றை ஒத்த பிரச்சனைகட்கு பிரயோகிக்க முற்படு வதாகும். தனித்தனியாக ஒவ்வொரு பிரச் சனைகளிலும் கடந்த காலத்தில் முகாமை யாளர்களின் வெற்றியையும், தவறுகளையும் அவர்கள் அந்த பிரச்சனையை தீர்த்து கொள்வதற்காக எடுத்து கொண்டமுயற்சி களையும் அத்தகைய சந்தர்ப்பத்தில் எடுத் திருக்கக்கூடிய சாத்தியமான நுட்பங்களை யும் விளங்கிக் கொள்வதாகும்.

2. தனி மனிதர்கட்கிடையிலான நடத்தை பற்றிய அணுகுமுறை :

மனிதர்கள் குழுவாக சேர்ந்து ஒரு நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி கொள்ள முற்படும்போது அவர்கட்கிடையி லான தொடர்புகளைப்பற்றி ஆராய்வதர் கும். இத்துறை சார்ந்தவர்கள் தனிமனிதர் களது ஆக்க செயற்பாடுகளை சமூக உளவி யல் அடிப்படையில் நோக்குகிறார்கள். தனி மனிதனதும் குழுவினதும் உளவியல் ரீதியான அணுகுமுறையானது முகாமைத் துவத்தின் முக்கிய பகுதியாகிறது. இது மனிதர்களது செயற்பாட்டையும் தேவை யையும் அறிந்து கொள்வதற்கு பெரிதும் உதவுகிறது. மனித தொடர்புகளை திறமை யாக மேற் கொள்ள முகாமையாளர்கள் பழகிக் கொள்ள வேண்டும். ஓர் நல்ல முகாமைத்துவம் ஓர் நல்ல தலைமைத்துவ மாகிறது. குழுமுறை இயக்கத்தையும் தனி மனித உளவியல் ரீதியிலான தொடர்பு களையும் அறிந்திருப்பதால் எந்த சூழ்நிலை யையும் சமாளிக்கக்கூடியதாக இருக்கும்.

3. குழு முறையிலான அணுகுமுறை:

இது தனிமனிதநடத்தைபற்றிய அணுகு முறையுடன் தொடர்புடையதாக காணப் பட்டாலும் இந்த முறையில் எந்த வகை யான குழுக்களதும் உறவு முறைகளையும், நிறுவனத்தில் அவற்றின் செயல் முறை யின் மாதிரியைப் பற்றியும் ஆராய்வதாகும் முகாமையின் நோக்கத்தை அடைவதற்காக அவர்களது கவனத்தை திருப்புவதற்கான ஊக்கம் கொடுக்கப்படல் வேண்டும். குழு முறை பற்றிய அறிவும் மனித உளவியல் பற்றிய அறிவினைபோல் முக்கியமானதாகும்.

4. கூட்டுறவு சமூக முறையிலான அணுகு முறை:

இதன் அடிப்படையாகவும் மனித நடத்தைபற்றிய அணுகுமுறை, குழுமுறை யான அணுகுமுறை என்பவையே அமைந் துள்ளன. கூட்டுறவு சமூகரீதியிலான அணுகு முறையை சேர்ந்தவர்கள் அத்துறையின் தந்தையென ரொபேர்ட்டை கூறுவர். இது மனித வரையறையிலான கூட்டு செயற் பாட்டின் கொள்கையாகும். நிறுவனத் தினுள்ள எல்லா சமூக குழுக்களைப்பற்றி யும் அறிந்து கொள்ளுவதால் எல்லா வகை யினரையும் சமாளிக்கக்கூடியதாக இருக்கும்.

5. சமூக தொழில்நுட்ப அணுகுமுறை

இது சமூகரீதியில் எழும் பிரச்சனை களை தீர்ப்பதற்காக கண்டு பிடிக்கப்பட்டது இதுவும் சமூக கூட்டுறவு முறையினை ஒத் திருந்தாலும் உற்பத்தி, தொழில் நுட்ப முறைகள் எவ்வாறு சமூக, கலாச்சார முறைகளினுல் தாக்கத்துக்குள்ளகிறது என் பதைப்பற்றி ஆராய்கிறது. தனிமனித, குழுமுறைகளின் பண்புகளினுல் உற்பத்தி நுட்ப முறைகள் மாற்றத்துக்குள்ளகிறது. உற்பத்திதிறனும் முகாமைத்திறனும் தனியே தொழிலாளர்களது உள்வாரியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணிகளில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அவற்றின் சமூக அமைப்பிலும் தங்கியுள்ளன. ஆகவே மனித சமூக நிலைமைகளை ஆராய்வதுடன் அவற்றின் தொழில் நுட்ப தன்மைகளையும் ஆராயவேண்டும்.

6. தீர்மானக் கொள்கை அணுகுமுறை

இது நுகர்வோர்களின் தெரிவு கொள்கையிலிருந்து தோன்றியதாகும். தீர்மானம் என்பது இயாலுமான பல மாற்றுக்களில் ஒன்றினை தெரிவு செய்வதாகும். இது பொருளாதார கொள்கை ரீதியிலேயே அணுகப்படுகிறது. தீர்மானம் செய்தல் முகாமை கோட்பாடுகளின் மையமாக விளங்குகிறது.

7. மத்திய தொடர்புகொள்ளல் அணுகுமுறை

பல தகவல்களையும் பெற்று சேமித்து வைத்து பயன் படுத்துவதுடன் ஏனைய பகுதிகட்கும். பரப்புவதாகும் இது ஒரு தொலைபேசி இணைப்பகம் மாதிரியான தொழிற்பாடாகும். இது தீர்மான கொள்கை முறையுடன் தொடர்புடையது. இந்த வகையிலேயே கணணி முறையிலான தீர்மானம் செய்தலும் முகாமையில் இணைக்கப்படுகிறது.

8. கணித அல்லது முகாமைத்துவ விஞ்ஞான ரீதியான அணுகுமுறை

கணித முறையானது எல்லாவகையான முகாமைத்துவ முறைகளிலும் பயன்படுத்தப்பட்டாலும் இங்கு சிறப்பாக முகாமையானது கணித ரீதியில் அணுகப்படுகிறது இம் முறையானது இயக்க ஆய்வாளர்களால் கூடுதலாக பயன் படுத்தப்படுகிறது. அமைத்தலானாலும், திட்டமிடலானாலும், தீர்மானம் செய்வதானாலும் கணித ரீதியிலான தர்க்க முறையில் மேற்கொள்ளப்பட வேண்டு மென்றே விரும்பப்படுகிறது.

9. இயக்க ரீதியிலான அணுகுமுறை

முகாமையை நடைமுறைப் படுத்துவோர்கட்கு அதனை நன்கு விளங்கிக் கொள்வதற்கு இம்முறை உதவும். முகாமைத்துவ அறிவின் மையமாக இது விளங்குகிறது. இம் முறையிலான தலைமை வகித்தலும் தூண்டுதலும், தீர்மானம் செய்தல், குழுமுறையிலான கூட்டு முறையான செயற்பாடுகள் தொடர்பு கொள்ளல், கணித ரீதியிலான ஆய்வு, ஆகியவற்றினை உள்ளடக்கியது. இம்முறையிலான முகாமையானது எல்லா வகையான நிறுவனங்களிலும் எல்லாவகையான முகாமை மட்டங்களிலும் பிரயோகிக்கக் கூடியதாகும்.

முகாமையாளரின் தொழிற்பாடுகள் :

வாங்குதல், விற்றல், உற்பத்தி, கணக்கியல், தொழில்நுட்ப அம்சங்கள் ஆகியன நிறுவனத்தின் தன்மைக்கேற்ப மாறுபடலாம். ஆனால் முகாமையினது நோக்கம் மாறுபடாததாகும். ஆகவே முகாமையானது ஒரு பொது தொழிற்பாடாகும். அவை திட்டமிடல், அமைத்தல், ஊழியரிடல். தலைமை வகித்தலும் நெறிப்படுத்தலும், கட்டுப்படுத்தல் என அழைக்கப்படுகின்றன.

திட்டமிடல் : (Planing)

திட்டமிடல் என்பது நிறுவனத்தின் எதிர்கால இலக்கினை நிர்ணயித்து அது செயற்படுத்தப்பட வேண்டிய சூழ்நிலைகளை முன்னுணர்ந்து அவற்றை நிறைவேற்றுதற்குரிய பல மாற்று வழிகளில் ஒன்றினைத் தெரிவு செய்து தீர்மானம் செய்வதனூடாக நிறுவனத்தினது எல்லா செயற்பாட்டுக்குமான ஓர் அடிப்படையை அமைத்தல் ஆகும். இது எதிர்காலச் செயற்பாட்டுக்குரிய பல மாற்று வழிகளில் ஒன்றினைத் தெரிவு செய்வது முதற்கொண்டு ஏனைய எல்லா முகாமை செயற்பாட்டிற்கும் அடிப்படையாக அமைகிறது. அதாவது திட்டமிடலின் படியே ஏனைய முகாமைச் செயற்பாடுகளாகிய அமைத்தல், ஊழியரிடல், நெறிப்படுத்தலும் தலைமை வகித்தலும், கட்டுப்படுத்தல் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன.

திட்டமிடலானது இலக்கினைத் தெரிவு செய்தல். முன்னுணர்தல், தீர்மானம் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல், ஆகிய படிமுறைகளில் மேற்கொள்ளப்படுகிறது. இது எல்லா வகையான நிறுவனங்களிலும் எல்லா மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். கடந்த 30 ஆண்டுகளில் வியாபார, அரச, கல்வி நிறுவனங்களிலெல்லாம் திட்டமிடலின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. திட்டமிடலின் மூலம் எவ்வகையான அமைப்பு முறைகள், தொடர்புகள், ஆளணி தரங்கள் தேவைப்படுகின்றன என்பதுடன் எவ்வகையான தலைமை தேவைப்படுகிறது எவ்வாறு கட்டுப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பன முன்னரே தீர்மானிக்கப்பட்டிருக்கும். ஒரு குறிக்கோளை எவ்வாறு அடைவது எனத் திட்டமிடும்போது எந்த வகையான அமைத்தல் முறையினைக் கையாள்வது என தீர்மானிக்க வேண்டும். இது எவ்வளவு மனித சக்தி தேவை என்பதை அறிய உதவும். அதன் மூலம் அந்த மனித சக்தியை நெறிப்படுத்த எவ்வகையான தலைமை வகித்தலும் வழிநடத்தலும் அவசியம் என்பதை உணரலாம் என்பதுடன் இவற்றினைக் கட்டுப்படுத்தி எவ்வாறு இலக்கை அடைந்து கொள்ளலாம் என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

திட்டமிடலின் வகைகள் :

ஓர் திட்டமானது சிறப்பானதாக அமைவதற்கு எல்லா வகையான திட்டமிடல் கருமங்களையும் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகும். அவை பின்வருமாறு:

(i) நோக்கம் (Purpose)

ஒரு குழுவினது அல்லது ஓர் நிறுவன அமைப்பினது அடிப்படை செயற்பாடு என்ன என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும். பொதுவாக இது பொருளாதார பண்டங்களை உற்பத்தி செய்து விநியோகித்தலும், அல்லது சேவைகளை வழங்கலும் ஆக இருக்கும். உதாரணமாக ஓர் பல்கலைக் கழகத்தினது நோக்கம் பாடநெறிகளைப் போதித்தலும், ஆராய்ச்சிகளை மேற்கொள்வதுமாக இருக்கும். ஓர் நீதிமன்றத்தின் நோக்கம் சட்ட வியாக்கியானங்களை மேற் கொள்தலும், அவற்றினைப் பிரயோகிப்பதுமாக இருக்கும். அதேபோல் வீடமைப்புத் திணைக்களத்தின் நோக்கம் குடியிருப்பு வசதிகளை அதிகரித்தல், பல்வேறு மட்ட மக்கட்குமான வீடுகளை வடிவமைத்தல், தீர்மானம் செய்தல் என்பதுமாக இருக்கும். பீற்றர் தக்கர் இதுபற்றிக் குறிப்பிடும்போது வியாபாரத்தின் நோக்கம் எமது தொழிற்பாடு என்ன, அது என்னவாக இருக்க வேண்டும் என்பதாக இருக்கும் என்றார்.

(ii) இலக்கு (Objectives)

இது திட்டத்தின் இறுதி முடிவாக இருக்கும். இதனை அடைவதே ஏனைய எல்லா முகாமைச் செயற்பாடுகளின் நோக்கமாக இருக்கும். ஓர் வியாபார நிறுவனத்தில் இவை உற்பத்தி இலக்கு (உதாரணமாக 1000 அலகுகள்) விற்பனை இலக்கு ஆகியனவாக இருக்கும். அத்துடன் ஓர் பல்கலைக் கழகமாயின் இந்த துறையில் பயிலும் மாணவர்கட்கு இந்த இந்த வருடங்களில் இந்த இந்த பாடங்களைப் போதிக்க வேண்டும் என்பதாக இருக்கும்.

(iii) தந்திரோபாயங்கள் (Strategies)

இது சூழ்நிலைகட்கேற்ப தமது செயற்பாடுகளை தேவையானபடி மாற்றியமைப்பதன் மூலம் தமது இலக்கினை அடைந்து கொள்வதாகும். அடிப்படை நோக்கத்தினை தவிர ஏனைய எல்லா திட்டமிடற் செயற்பாடுகளையும் நிலைமைக்கேற்ப மாற்றியமைக்க வேண்டியிருக்கும். இதற்கேற்ப திட்டங்கள் நெகிழ்ச்சியுடையதாக இருக்க வேண்டியது அவசியமாகும். இவை பெரும்பாலும் போட்டி நிலைமை, சந்தை நிலைமை, ஆகியவற்றிக்கேற்ப மேற்கொள்ளப்படும். உதாரணமாக ஜப்பான் நிறுவனங்கள் அமெரிக்கன் கார்களை முறியடிக்கும் வகையில் குறைந்தளவு எரிபொருளை நுகரக்கூடியதும் செலுத்துவதற்கும் பிரயாணம் செய்வதற்கும் இலகுவானதும், மலிவானதும், அழகானதுமான கார்களை உற்பத்தி செய்வதற்கான திட்டங்களை அமைத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) கொள்கைகள் (Polieies)

இவை தீர்மானம் செய்தலின் செயற் பாடுகளாக அமையும். அதாவது கொள் கைகட்கேற்பவே தீர்மானம் செய்யப்படு கின்றது. ஓர் நிறுவனத்தின் பேரின (Macro) கொள்கைகளையும், சிற்றினகொள்கை(Micro) களையும் வகுக்கவேண்டியிருக்கும். இவை உற் பத்தி, சந்தைப்படுத்தல் கொள்கைகளாயும், விற்பனை, நெறிப்படுத்தல் கொள்கைகளாக வும் இருக்கும்.

(v) நடைமுறை செயற்பாடுகள்: (Procedures)

இது நிறுவனத்தினது இலக்கினை அடைந்து கொள்வதற்கான நடைமுறைகளை வரையறுப்பதாகும். ஓர் நிறுவன அமைப் பின் அடி மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையிலுமுள்ளவர்கள் எவ்வாறு தமது கருமங்களை ஆற்றவேண்டும் என்பது இங்கு நிர்ணயிக்கப்படும். உதாரணமாக ஓர் பொருளியல் நடவடிக்கையின் பல்வேறு பகுதிகளான உற்பத்தித் திணைக்களம், விற் பனைத் திணைக்களம், நிதி திணைக்களம், கணக்கியல் திணைக்களம், பாதுகாப்புத் திணைக்களம் என்பவற்றின் செயற்பாடுகளை வரையறுப்பதாகும்.

(vi) விதிகள் (Rules)

கொள்கைகளின் அடிப்படையான நடை முறை விதிகளாக இவை அமைகின்றன. முகாமையின் தீர்மானங்கள் விதிகளாகப் பிரதிபலிக்கின்றன. விதிகட்கேற்பவே நட வடிக்கைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. சிறு சிறு நடவடிக்கைகட்கும் விதிகள் அமைக்கப் பட்டிருக்கும். திட்டமிடலின் மிக இலகு வாக்கப்பட்ட வடிவம் என இதனைக் கூற லாம்.

(vii) நிகழ்ச்சித் திட்டம் (Programme)

இது நிறுவனத்தின் நோக்கம், இலக்கு கொள்கை, நடைமுறை வழிகள், விதிகள் என்பவற்றிற்கேற்ப மூலவளங்களைப் பயன் படுத்தும் செயற்பாட்டிற்கு அமைப்பினுள்ள ஒவ்வொருவரும் எடுக்க வேண்டிய நடவடிக் கைகளை எடுத்துரைக்கும். ஒருங்குபடுத்தப் பட்ட பல்வின திட்டங்களில் பலவீனமான பகுதிகளைத் தவிர்க்கும் வகையில் நிகழ்ச்சித் திட்டங்கள் வரையப்படுகின்றன. இவை ஒவ்வொரு கருமங்கட்குமான இடைவெளி நிரப்புகிறது.

(viii) வரவு செலவுத் திட்டம் (Budjects)

இது கணித ரீதியிலும் புள்ளிவிபர ரீதி யிலும் மேற்கொள்ளப்படும் திட்டமாகும். இதில் எதிர்பார்க்கப்படும் பண ஓட்டம், செலவினங்கள், வருமானங்கள், மூல தனங்கள், மனித இயந்திர நேரங்கள் போன்றவை நிர்ணயிக்கப்படும். இதன் அடிப்படையிலேயே கட்டுப்படுத்தல் மேற் கொள்ளப்படுகிறது. ஆகவே நியமனங்களை கட்டுப்படுத்துவதற்கு வரவு செலவு திட்ட மிடல் மிக அவசியமானதாகும்.

திட்டமிடலின் படிமுறைகள்:-

நோக்கினை தெரிவு செய்தல், முன்னு ணர்தல். தீர்மானம் செய்தல் என்ற ஒழுங்கிலேயே திட்டமிடல் மேற்கொள்ளப் படுகிறது.

நோக்கம் (Objectives):

தனிமனிதர்கள் குழுவாகச் சேர்ந்து இயங்கும்போது அவர்களது குறிக்கோள் என்ன? இலக்கு என்ன? அடைந்து கொள்ள வேண்டியது என்ன? என்பது பற்றி தெளிவாக அறிந்து இருக்க வேண்டு குழுமுயற்சி தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய தாக இருக்க வேண்டுமானால் அவர்கள் அடைந்து கொள்ள முயற்சிப்பது என்ன என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும். இந்த நோச்கத்துக்கும் இலக்கிற்கும் நுண் ணிய வேறுபாடு உண்டு. இலக்கு என்பது கணிய ரீதியில் அளவிடக் கூடியதாகும். நோக்கம் என்பது பண்பு ரீதியில் அளவிடக் கூடியதாகும். ஆனால் நோக்கத்தை அடைந்து கொள்ளும் முறையிலேயே இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. குறைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளவு வளங்களைப் பயன்படுத்தி அதிகள வான் மிகையினை பெற்று கொள்வதே எல்லா முகாமையாளரதும் பொதுவான நோக்கமாக இருக்கும். இலாப நோக்க முடைய, இலாப நோக்கமற்ற நிறுவனங்கட்கும் நோக்கம் அவசியமானதாகும். உதாரணமாக ஓர் பல்கலைக் கழகத்தினது நோக்கம் அறிவினை விருத்தி செய்வதாகும். நோக்கத்தினை நடைமுறைத் திட்டத்தில் கட்டுப்படுத்தி பார்ப்பது கடினமாகவே இருக்கும். ஏனெனில் இவை பொதுவாக புள்ளி விபர ரீதியில் அளவிடக்கூடியதாக இருக்க மாட்டாது.

முன்னுணர்தல் (Fore casting) :

எதிர்காலத்திற்கான திட்டமிடலினை மேற்கொள்ளும் போது அந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற சூழ்நிலைகளையும் முன்னுணர்ந்து கொள்ளவேண்டியதவசியமாகும். எதிர்காலத்தில் நிகழக்கூடிய சூழலைப் பற்றி ஒன்றுமே தெரியாத நிலையில் அந்த காலத்துக்கான திட்டங்களை தயாரிக்க முடியாது. ஆகவே எதிர்காலத்தை ஊகித்து முன்னுணர்ந்து அதற்கேற்பவே திட்டங்கள் மேற்கொள்ளப்படுகிறது எதிர்கால பொருளாதார நிலைமைக்கேற்ப குறித்த நிறுவனத்தினது மூலதனம், வெளியீடு, உற்பத்திச் செலவு, விற்பனை அளவு, விற்பனை விலை என்பவைகள் முன்னுணரப்படுகிறது கடந்தகால நிகழ்கால தரவுகளையும் அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு தனது சொந்த மதிப்பீட்டின்படியே மேற்கொள்ளப்படுகின்றது. முன்னுணர்தல் ஆனது முகாமையை எதிர்காலத்தை நோக்க வைக்கிறது. எதிர்காலம் பற்றி சிந்திக்க வைக்கிறது. முன்னுணரப்படுபவை 100 க்கு 100 சரியாக அமைய மாட்டாது. அவற்றில் சிறுசிறு தவறுகளும் வழுக்களும் ஏற்பட இடமுண்டு. எதிர்கால சூழல் 3 பெரும் பிரிவுகளாக முன்னுணரப்படுகிறது. அவை பொருளாதார முன்னுணர்தல், தொழில்நுட்ப முன்னுணர்தல், சமூக அரசியல் முன்னுணர்தல் என்பவையாகும். பொருளாதார எதிர்வு கூறலில் வேலை வாய்ப்பு, உற்பத்தித் திறன், தேசிய வருமானம் என்பவையும், தொழில் நுட்ப எதிர்வு கூறலில் எதிர்காலத்தில் தொழில் நுட்பத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களும் முன்னுணரப்படுகிறது. உதாரணமாக நிறுவனத்திலுள்ள ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் பகுதி உத்தியோகத்தர்களின் அறிக்கைகளின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்படலாம். சமூக அரசியல் எதிர்வுகூறலில் எதிர்காலத்தில் சமூகத்தில் நிகழக்கூடிய மாற்றங்கள் விருப்பு வெறுப்புக்கள் அரசியல் சூழ் நிலைகள் என்பன முன்னுணரப்படுகின்றன. எதிகால சமூக அரசியல் சூழ் நிலைகளை அறிந்து கொள்ளாமல் திட்டங்கள் தீட்டப்பட முடியாது. அவ்வாறுயின் அது இருட்டறையில் நடப்பதுபோல் தான் இருக்கும். ஆகவே முன்னுணர்தல் என்பது திட்டமிடுதலின் மிக முக்கியமான செயற்பாடாக அமைகிறது.

தீர்மானம் செய்தல் :
(Decision Making)

எதிர் காலத்தில் செயற்படுத்தக்கூடிய பல மாற்றுக்களிலிருந்து ஒன்றினைத் தெரிவு செய்தல் தீர்மானம் செய்தல் எனப்படும். தீர்மானம் செய்யாமல் எந்த ஒரு திட்டத்தையுமே உருவாக்க முடியாது. எதிர்கால செயற்பாடுகளில் பல மாற்றுக்கள் கண்டு பிடிக்கப்படும்போது தான் திட்டமிடலின் பிரச்சினையே எழுகின்றது. அதனால் தீர்மானஞ் செய்தல் அவசியமாகின்றது. என்னத்தை செய்வது? எப்படி செவவது? எப்போது செய்வது? என்பது தீர்மானிக்கப்பட்டு திட்டத்தில் சேர்க்கப்படுகின்றது. தீர்மானம் செய்தல் பின்வரும் படிமுறைகளில் மேற்கொள்ளப்படுகிறது.

1. நிலைமையை வரையறை செய்தல்
2. நோக்கங்களை குறிப்பிடுதல்
3. தீர்மானம் செய்தலுடன் தொடர்புடைய காரணிகளை ஒன்றுக சேர்த்தல்
4. சாத்தியமான நெறிமுறைகளை அல்லது வழிமுறைகளை ஆராய்ந்து அறிதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஒவ்வொரு நெறிமுறையினதும் பலா பலன்களை நிதானித்தல்.
6. குறித்த இலக்கினை அடைந்து கொள்வதற்கு அனுகூலமானதும், குறைந்த பிரதிகூலமுள்ளதுமான முறையினை தெரிவு செய்து கொள்ளல்

தீர்மானம் செய்யப்போகின்ற முயற்சியானது எத்தன்மையானது என்பதை முதலில் வரையறை செய்தபின் தீர்மானம் மேற்கொள்ள வேண்டியுள்ள முயற்சியின் நோக்கங்கள் குறிக்கோள்கள் என்ன என்பதைத் தெரிந்து கொண்டு, தீர்மானம் செய்யப்போகின்ற முயற்சி குறிக்கோள் சம்பந்தமான நிலைமைகளை ஒன்று சேர்த்துக் கொள்ள வேண்டும். அதாவது கிடைக்கக் கூடிய வளங்களாகிய நிதி, ஆளணி போன்றவற்றையும் ஏற்படக்கூடிய நிச்சயமற்ற தன்மைகளையும் குறித்துக் கொள்ள வேண்டும். தீர்மானம் செய்ய வேண்டியுள்ள மாற்றுக்கள் (Alternatives) சம்பந்தமான சகல விபரங்களையும் பெற்றுக்கொண்டபின் அவற்றின் அனுகூலங்கள், பிரதிகூலங்களை வரிசைப்படுத்தி அவற்றில் எது கூடிய அனுகூலமும், குறைந்த பிரதிகூலமும் கொண்டதோ அதனை தெரிவுசெய்து தீர்மானம் செய்து கொள்ளலாம்.

தீர்மானம் செய்வது தொடர்பான அம்சங்களை பின்வரும் வழிகளில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

1. சொந்த அறிவு அல்லது அனுபவம்
2. குறித்த நிறுவனத்திலிருந்து பெறும் அறிவு அல்லது அனுபவம்
3. வெளியிடத்திலிருந்து பிரசுரமாகும் தகவல்கள்
4. சந்தை ஆராய்ச்சி
5. இயக்க ஆய்வு
6. வேலைப் படிப்பு, முறைப் படிப்பு
7. சிருஷ்டி தன்மைவாய்ந்த சிந்தனைகள்

நாம் திரட்டிக் கொள்ளும் தகவல்களின் அடிப்படையிலேயே தீர்மானம் மேற்கொள்ளவேண்டியுள்ளது. ஆகவே தீர்மானம் சிறந்ததாக அமையவேண்டுமாயின், இயன்ற அளவிலான முழுத் தகவல்களையும் திரட்டிக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அதாவது முகாமையாளரின் சொந்த அறிவுடன் அவர் பணியாற்றும் நிறுவனத்தினது கடந்தகால வரலாற்றினடிப்படையிலான அறிவும், அவர்கள் மேற்கொண்டுள்ள முயற்சி சம்பந்தமான ஆராய்ச்சி நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் வெளியிடும் தகவல்கள், சந்தை ஆராய்ச்சி, உற்பத்தி பொறிமுறை சம்பந்தமான இயக்க ஆய்வு, வேலைப் படிப்பு போன்ற தொழில்நுட்ப அறிவினையும், இவற்றிற்கெல்லாம் மேலாக வேறு மாற்றுக்களை உருவாக்கக்கூடிய சிருஷ்டித் தன்மை வாய்ந்த சிந்தனைகளின் அடிப்படையிலும் விபரங்கள் சேகரிக்கப்பட வேண்டும்.

மேற்கூறிய வழிகளில் தயாரிக்கப்பட்ட ஓர் நல்ல திட்டமானது பின்வரும் அனுகூலங்களை ஓர் நிறுவனத்திற்கோ அல்லது சமூகத்திற்கோ பின்வரும் நன்மைகளை வழங்குகிறது.

1. நிட்சயமற்ற தன்மைகளையும், மாற்றங்களையும் தவிர்த்துக் கொள்ள உதவுகிறது

(To off Uncertainty and Change)

அதாவது எதிர்காலத்திற்கான கட்டளைகள் (orders), உற்பத்தி வெளியீடுகள் பணகிடைப்புக்கள், ஆகியவற்றை முன்னரே அறிந்து கொள்ளக்கூடியதாக இருப்பதுடன், எதிர்காலத்தில் ஏதாவது தீ அபாயம், திடீர் வேலை நிறுத்தம், உற்பத்திக் குறைவு (Break down), பெரியளவிலான கட்டளைகள் ரத்துச் செய்யப்படுதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும்போது அதற்கு ஏற்ற மாற்று வழிகள் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்குமாகையால் இவைகளை எளிதில் சமாளித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. குறித்த இலக்கை நோக்கி சம்பந்தப் பட்டவர்களது கவனத்தைத் திருப்ப உதவுகிறது
(To Focus attention on objectives)

அதாவது ஓர் நிறுவனத்திலுள்ள பல் வேறு பகுதிகளிலுமுள்ள பல்வேறு மட்ட நிர்வாகிகள், அனைவரதும் கவனத்தைக் குறித்த இலக்கினை நோக்கி திருப்பக்கூடிய வகையில் திட்டமானது வரையப்பட்டிருக் குமானால் இலக்கினை எளிதில் அடைந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

3. சிக்கனமான செயற்பாட்டினைப் பெற் றுக்கொள்ள உதவுகிறது.
(To gain Economical Operation)

சரியான திட்டமிடலானது அதிக செல வினத்தையும், வீண் விரயங்களையும் குறைக் கிறது. சரியான பொறி, சரியான ஆளணி, சரியான ஆகியவற்றைப் பிரயோகிப்பதால் நிறுவனம் சிக்கனத்தைப் பெறுகிறது.

4. கட்டுப்படுத்தலை மேற்கொள்ள உதவுகிறது
(To Facilitate Control)

இலக்குகள் திட்டமிடப்படா விட்டால் அவை அடைந்து கொள்ளப்பட்டதா என் பதை பரிசோதித்து பார்க்க முடியாதிருக் கும். ஆகவே கட்டுப்படுத்தல் கருமத்தினை மேற்கொள்வதற்கு திட்டமிடலானது அவ சியமாகிறது.

5. அமைத்தல் (Organizing)

குழு முறையிலான முயற்சியில் வெற்றி பெறும் நோக்கில் சகலரது ஒத்துழைப்புட னும் முறையானதும் நிலையானதுமான ஒழுங் குகளை உள்ளடக்கிய ஓர் அமைப்பே நிறு வனமாகும். இந்த நிறுவனத்தின் பல பகு திகட்கிடையேயும் தொடர்புகளை உண் டாக்கி மனித சக்தியினைப் பயன்படுத்திச் செயற்பாடுகளை இயங்க வைப்பது அமைப் பாகும். இந்த அமைப்பானது திட்டமிட லின் பல்வேறு நோக்கங்களையும், அவற்றை அடைவதற்கான பிரதான கடமைகளையும். முயற்சிகளையும், அதிகார பரப்பளவையும் உள்ளடக்கியதாகும். இது குறித்த இலக்கை அடைவதற்கான கருமங்களை பல்வேறு பிரி வுகளாக பிரித்தலையும், அப்பிரிவுகட்கு தலைமை தாங்குபவர்கட்குத் தேவையான அதிகார வழங்கலையும், அத்தகைய பல பிரிவுகட்கிடையே கிடையாகவும், நிலை யாகவும் தொடர்புபடுத்தலையும் குறிக்கும். அத்துடன் நிறுவனத்தில் கடமையாற்றும் ஒவ்வொருவரதும் பொறுப்பு என்ன? கடமை என்ன? என்பன வரையறுக்கப் பட்டிருக்கும். G. Milward என்பவர் தனது Large Scale Organization என்னும் நூலில் பின்வருமாறு கூறுகிறார். "அமைத்த லெனும் தொழிலானது வசதிக்குத் தகுந்த முறையில் ஒரு முயற்சியின் அல்லது தொ-ழிலின் கடமைகளையும் வேலைகளையும் பாகு பாடு செய்தலையும் அல்லது பாகுபடுத்தப் பட்ட வெவ்வேறான கடமைகளையும் பதவி கள் உரிமை குழு முறைப்படுத்தியும், அல் லது குழுமுறைப்படுத்தப்பட்ட பதவிகட்கு அதிகார ஒப்படைப்பு செய்தலையும், அவ் வாறான பதவிக்குப் பொறுப்பாக திட்ட மிட்டதன் பிரகாரம் வேலையை நடை முறைப்படுத்தும் பொருட்டு வேண்டப்படும் தகுதிகளையுடைய ஊழியர்களை வேலைக்கு அமர்த்தலும் ஆன அம்சங்களைக் கொண்டது மாக இருக்கும்" என்று கூறுகிறார். நவீன முகாமையின் தந்தையெனப்படும் Henry Fayol தனது General and Industrial Management எனும் நூலில் அமைத்தல் பற்றி பின்வருமாறு கூறுகிறார். "ஓர் முயற்சியை மேற்கொள்வதற்கு வேண்டப்படும் முக்கிய காரணிகளை, அதாவது மூலப் பொருட்கள், நிதி, ஆளணி, உபகரணங்கள் என்பவை பற்றி தீர்மானம் செய்வதும் ஒதுக்குவதும் பற்றிய முயற்சி" என்கிறார். இவ்வாறு பலராலும் பல கருத்துக்களும் கூறப்பட்ட போதும் சிறந்த அமைப்பிற்குரிய குணதிச யங்களை வரையறை செய்வது கடினமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்தல் பற்றிய கொள்கைகள்:
(Organization Theories)

முகாமையின் வளர்ச்சியைப் பொறுத்து பல்வேறு காலப் பகுதியிலும் பல்வேறு கொள்கைகள் முன்வைக்கப்பட்டன. அவை பின்வருமாறு :

பண்டைய கொள்கைகள் :

அமைப்பின் பண்டைய கொள்கைகளாக Taylor இன் நிர்வாகக் கொள்கையே கருதப்படுகிறது. இது தொழில் சிறக்குமியல்பினை அடிப்படையாகக் கொண்ட தொழில் பகுப்பிலே படியமைப்புள்ளதும் நடைமுறையிலுள்ளதுமான முறைமை உருவ அமைப்பு ஒழுங்குபடுத்தலின் விசால அளவு ஆகிய அம்சங்களை உள்ளடக்கியதாகும்.

நவ பண்டைய கொள்கைகள்

இதில் பண்டைய கொள்கையில் கூறப்பட்ட தொழிற்பகுப்பு, படியமைப்புள்ளதும் நடைமுறையிலுள்ளதுமான முகாமை உருவமைப்பு, கட்டுப்படுத்தலின் விசால அளவு என்பவற்றுடன் மேலதிகமாக மனித உறவுகளையும் கொண்டதாக உள்ளது ஒரு தொழிலின் வெற்றி ஊழியனின் உறவு, பங்களிப்பு போன்ற மனித நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது என இங்கு வலியுறுத்தப்படுகிறது.

3. நவீன கொள்கைகள் :

இது கருத்து பாகுபாடு, அனுபவம் சார்ந்த ஆய்வு ஆகியவற்றின் அடிப்படையில், அமைப்பானது நிறுவப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. வளர்ச்சியடைந்துவரும் பொருளாதார அமைப்பில் கடந்தகால அனுபவத்தின் அடிப்படையில் தன்னலத்திற்கேற்ற வகையில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்பதை கருத்து பாகுபாடு வலியுறுத்தும் அதே வேளையில் விஞ்ஞான ரீதியாகவன்றி ஒருவரின் அல்லது குழுவின் அனுபவத்தின் அடிப்படையில் அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்பதை அனுபவம் சார்ந்த ஆய்வு வலியுறுத்துகின்றது.

அமைத்தலின் வகைகள்

Types of Organization

1. செயலணி வரிசை முறை
(Line Organization)

இதில் அதிகார படிகளும், பொறுப்புகளும் நேரடியாக அமைந்திருக்கும். அதாவது அமைப்பிலுள்ள சிரேஷ்ட தலைவர்கட்கும், அவர்கட்கு நேரே கீழேயுள்ள உதவியாளர்கட்குமிடையே தான் தொடர்புகள் அமைந்திருக்கும். இது பண்டைய காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட முறையாகும். அப்போது இருந்த நிறுவனங்கள் தனி ஒருவரின் அதிகாரத்தில், கட்டுப்பாட்டில், திறமையில் தங்கியிருந்தன. சிறிய அளவினதானதும், மிகக் குறைந்த தொழிலாளரையும் கொண்ட நிறுவனங்கட்கே இது மிகப் பொருத்தமாக இருக்கும். இது விளங்கிக் கொள்வதற்கு எளிதாக இருப்பதுடன் விரைவான தீர்மானம் எடுத்தல், நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றிற்கு இலகுவானதாகும். தலைவரின் திறமை அளவுக்கே நிறுவனத்தின் திறமையும் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் நிறுவனம் வளருவது கடினமாகும்.

2. செயலணியும் ஊழியரும் சேர்ந்த அமைப்பு
(Line and Staff Organization)

செயலணி வரிசை அமைப்பின் விரிவாக்கமும் இதுவாகும். இதில் தலைவருக்கும், ஏனையவர்கட்கும் மூன்று விதமான உதவியாளர்கள் இருப்பர். அவர்கள் சொந்த உதவி தலைவர், விசேட உதவி தலைவர், பொது உதவி தலைவர் ஆகியோராவர். இந்த அமைப்பில் நிறுவனத்தின் முயற்சியை பாதிக்கக்கூடிய சகல விடயங்களையும் சிறப்பான முறையில், சகல பகுதிகளையும் இயைபுபடுத்தி இலக்கினை வெற்றிகரமாக அடைந்து கொள்ளக் கூடியதாக உதவியாளர்களைக் கொண்டதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. செய்கடமை முறை அமைப்பு (Functional Authority)

ஓர் நிறுவனத்தினது பல்வேறு பெரும் செயற்பாட்டு பகுதிகளும் வெவ்வேறு அதிகாரிகளின் பொறுப்பில் இயங்கக்கூடிய வகையில் இந்த அமைப்பானது உள்ளது. இதனால் அந்த அந்த பகுதிகளின் செயற்பாடுகளை அந்த அந்த பகுதி முகவர்களே கவனிப்பதால் நிறுவனம் சிறப்பாகவும், விரைவாகவும் தனது இலக்கினை அடைந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். உதாரணமாக ஒரு செய்முறை பின்வருமாறு பிரிக்கப்பட்டிருக்கும்.

1. பகுதிகட்குப் பொறுப்பான முதல்வர்
2. விரைவான செயற்பாட்டு முதல்வர்
3. பரிசோதனை முதல்வர்
4. பராமரிப்பு முதல்வர்

உற்பத்தி சம்பந்தமான தேவைகளைப் பகுதிகட்குப் பொறுப்பான முதல்வர் கவனிக்கும் அதே வேளையில், அவை உரிய காலத்தில் நடைபெறுகிறதா என்பதை விரைவான செயற்பாட்டுக்குப் பொறுப்பான முதல்வர் கவனிக்க, உற்பத்தி சரியான தரத்தில் மேற் கொள்ளப்படுகிறதா என்பதை பரிசோதனை முதல்வரும், இயந்திரங்கள், உபகரணங்களைப் பராமரிக்கும் பொறுப்பு பராமரிப்பு முதல்வரிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கும். இதனால் சகல விசேட அறிவுள்ளவர்களும் ஒரு முயற்சியில் சம்பந்தப்பட்டிருப்பார்கள். அத்துடன் கீழே தொழில்புரியும் தொழிலாளர்களும் ஒரே திறமையைக் கொண்டிருப்பார்கள். ஆனால் ஒரே தொழிலாளர் பல்வேறு மேலதிகாரிகட்கு கீழ் கடமை புரியவேண்டிய இக்கட்டான சூழ்நிலை இதில் உண்டு.

4. செயலணி செய்கடமை அமைப்பு (Line and Functional Organization)

செயற்பாடுகளின் பொதுவான தன்மையின் அடிப்படையில் பல தினைக்களங்களாக பிரிக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பர். உதாரணமாக நிதி, உற்பத்தி, ஆளணி, சந்தைப்படுத்தல் ஆகியவற்றிற்கு தனித்தனி முகாமையாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பர். அமைப்பின் நிலையியல் தன்மைக்கும், திறமைக்கும் இது உதவும்.

5. செயலணி செய்கடமை, குழுமுறையும் சேர்ந்த அமைப்பு (Line, Functional and Committee Organization)

தற்கால அமைப்புக்கள் அளவிற் பெரிதாகவும், பாரிய மூலதனத்தைக் கொண்டதாகவும், நீண்டகாலத் திட்டத்தினடிப்படையில் செயற்படுவதுமாக இருப்பதனால் இந்த அமைப்பு அவற்றிற்கு மிகச் சிறந்ததாகும். இதில் ஒவ்வொரு விடயத்தினையும் பலர் சேர்ந்து ஆலோசித்து செயற்படுத்துவதால் தீர்மானங்கள் சிறப்பானதாக அமையும். அத்துடன் ஒருவருக்கும் அளவுக்கு மீறிய அதிகாரமும், அளவுக்கு மீறிய பொறுப்பும் இருக்கமாட்டாது. இதில் பலர் சேர்ந்து செயற்படுவதால் தீர்மானம் எடுப்பதில் சிக்கல் காணப்படலாம். அத்துடன் காலமும் நிதியும் வீண் செலவாக அமையக்கூடிய ஆபத்தும் உண்டு.

ஊழியரிடல் (Staffing)

இக்கருமமானது அமைப்புக்கு வேண்டிய மனித சக்தியை சரியான முறையில் தெரிவு செய்து பரிபாலித்து அபிவிருத்தி செய்வதனைக் குறிக்கிறது. ஒரு நிறுவனத்தின் வெற்றி அதில் செயற்படும் தொழிலாளர்களது திறமையிலேயே தங்கியுள்ளது. எனவே முகாமைக் கருமங்களில் ஊழியரிடல் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

ஊழியரிடல் கருமமானது பின்வரும் முறைகளில் மேற்கொள்ளப்படுகிறது.

1. ஊழியர்களை சேர்த்தலுக்கான திட்டத்தினை வகுத்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஊழியர்களைத் தேர்ந்தெடுத்தலும், சேர்த்தலும்.
3. பயிற்சி அளித்தல்.
4. பதவியுயர்த்தல்.
5. தண்டனைகள், சலுகைகளை அளித்தல்

நிறுவனமொன்று தனக்குத் தேவையான ஊழியர்களைப் பின்வரும் வழிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

1. வாய்ச்சொல் மூலம் (தெரிந்தவர்கள் ஊடாக)
2. தொழில் வங்கிகள், தொழில் மாற்றுக்கள் (Job Banks, Employment Exchange)
3. விளம்பரம் செய்தல்
4. கல்வி நிறுவனங்களிலிருந்து
5. கலாசார தொடர்புகள் மூலம்

சிறந்த ஊழியர்களைப் பெற்றுக்கொள்ள விரும்பும் நிறுவனங்கள் பின்வரும் படிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனக் கூறப்படுகிறது.

1. தொழில் விவரணம்
2. விளம்பரம் செய்தல்
3. விண்ணப்பங்களை நிரைப்படுத்தல்
4. விண்ணப்பங்களை வகுத்தல்
5. தெரிவு செய்தல்

தலைமை வகித்தலும் நெறிப்படுத்தலும்: (Leading and Directing)

இக்கருமமானது உடன் உழைப்பாளர்களை வழி நடத்துதல், தூண்டுதல், தலைமை வகித்தல், சிறந்த தொடர்பினை ஏற்படுத்தல் ஆகிய செயற்பாடுகளைக் கொண்டதாகும். முகாமையாளர்கள் தலைமை வகிப்பவர்கள் ஆகையினால் பரஸ்பர நம்பிக்கை, மரியாதை போன்றவற்றைத் தமக்குள்ளும் தமக்கு கீழுள்ளவர்கட்கிடையேயும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் ஒழுங்கான கூட்டு முயற்சிக்கான வழிகாட்டுதலையும், குறிக்கோளை அடைவதற்கு ஒன்றுபட்டு உழைக்கும் தன்மையினையும் ஏற்படுத்திக் கொள்வதுடன் தமது குறிக்கோளையும், கொள்கையையும் எடுத்துரைத்து நிறுவனம் இருக்கும் நிலையையும் அது அடைந்து கொள்ளவேண்டிய இலக்கினையும் தெளிவாக விளங்க வைத்தலாகும். நவீன நிறுவனங்களில் சிறந்த தொடர்பு கொள்ளலும், தூண்டுதலுமே நிறுவனம் தனது இலக்கினை அடைந்து கொள்வதற்கு உதவுகிறது.

கட்டுப்படுத்தல்: (Controling)

கட்டுப்படுத்தல் சிறப்பாக அமையாவிட்டால் ஏனைய முகாமைத்துவ செயற்பாடுகளாகிய திட்டமிடல், அமைத்தல், ஊழியரிடல், நெறிப்படுத்தல் கருமங்களில் எதுவித பயனும் இல்லாது போய்விடும்.

திட்டமிட்டபடி கருமங்கள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை இங்கு உறுதிப்படுத்திக் கொள்ளப்படுகிறது. அதாவது நியமங்களை விளைவுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் எனப்படுகின்றது. கட்டுப்படுத்தலின் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

1. ஒவ்வொரு அம்சத்திற்கும் நியமத்தினை ஏற்படுத்தல்.
2. அந்த நியமங்களை விளைவுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தல்.
3. நியமத்திற்கும் விளைவிற்கும் வித்தியாசம் காணப்பட்டால் அவற்றினைத் திருத்துதல் என்பனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி முகாமை :

உற்பத்தி முறையில் தரக் கட்டுப்பாட்டு முறையின் முக்கியத்துவம் பற்றிய ஒரு நோக்கு.

S. Puvanendirarajah
Asst. Lecturer,
Dept. of Com. & Management Studies

இன்றைய உலகம் பல்வேறு உற்பத்திப் பொருட்களின் உருவாக்கலிலும் அவற்றின் செய்முறையிலுமே தமது செயல்திறனைக் காட்டி வருகின்றது. உலகில் வளங்கள் அருமையாகக் காணப்படுகின்றன. அவற்றைச் சிறந்த முறையில் சிக்கனவழியில் பயன்படுத்தி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒவ்வொரு மனிதனும் இயங்கி வருகின்றான். தமது உற்பத்திப் பொருட்களையும், உற்பத்தி முறைகளையும் தரமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கிலேயே ஒவ்வொரு நிறுவனமும் இயங்கி வருகின்றது. இந்நிலையில் தரக் கட்டுப்பாடு (Quality Control) என்ற ஒரு பதத்தினையும் இத்தலைப்புடன் ஒரு யதார்த்தமான முறையில் ஒன்றிணைக்க வேண்டிய முறையில் நாம் வந்து இருக்கின்றோம். இந்த விடயம் பல்வேறு கணித மாதிரியுருக்களினூலும், வரைபுப் படங்களினூலும் கட்டி எழுப்பப்பட்டது. ஆனால் எமது நோக்கில் இதனை ஓர் கருத்தாளமிக்க கட்டுரையாக பலருக்கும் பயன்பெற வேண்டுமென்ற நம்பிக்கையிலேயே நோக்கிக் கொள்கிறோம்.

உற்பத்தி முறை
(Production Methods)

உற்பத்தி முறை என்பது பொருட்கள் சேவைகள் என்ற இரு வழியிலும் விவசாய ரீதியாகவோ அல்லது கைத்தொழில் ரீதியாகவோ அல்லது வர்த்தக ரீதியாகவோ உருப்படலாம். மனித தேவையைப் பூர்த்தி செய்யும் எல்லாம் உற்பத்தி என்ற பொருளியல் தேவையிலும் அம்மனித தேவையை பூர்த்தி செய்வதற்காக ஒவ்வொருவரும் பல்வேறு உற்பத்தி முறைகளை அணுகுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவொரு உற்பத்தி முறையை எடுத்துக் கொண்டாலும் அது இயந்திரமயமாகவோ அல்லது கைத்திறன் உடையதாகவோ அல்லது சேர்க்கை மயமாகவோ அவை படைக்கப்படலாம். எந்த முறையில் வந்தாலும் அவற்றில் ஓர் பொதுக் கடப்பாடு உண்டு என்பதை எல்லோரும் அறிவார்கள். அது தான் "தரம்". உதாரணமாக நாம் உணவை சமையல் அறையில் உற்பத்தி செய்கின்றோம். அவற்றின் நோக்கம் அது தரம் உடையதாகவும் இருக்க வேண்டும், சுவையுடையதாகவும் இருத்தல் வேண்டும், வீட்டில் செய்யப்படும் உற்பத்தி முறைக்கும் கடைத்தெரு ஹோட்டல்களில் செய்யப்படும் சமையல் உற்பத்தி முறைக்கும் வித்தியாசம் உண்டு. எந்தவொரு உற்பத்தி முறையையும் தரமானதாக மேற்கொண்டால் அது இயல்பாகவே சுவையுடையதாக மாற்றம் பெறுவதை நாம் அனுபவ வாயிலாக காண்கின்றோம். எனவே உற்பத்தி முறையில் தரம் என்ற விடயம் எல்லாப் பொருட்கள் சேவைகள் யாவற்றிலும் முன்னிற்பதை நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. ஓர் விரிவுரையாளர் தரமான சேவையை உற்பத்தி செய்யாவிட்டால் அது சேவை உற்பத்தி முறையில் சுவையில்லாது ஆக்கப்படுகிறது. எனவே உற்பத்தி முறை என்பது பொருட்கள், சேவைகள் என்ற வகையிலும் நோக்கப்பட வேண்டியது தரமும் நிர்ணயிக்கப்பட வேண்டியதும் அவசியமாகும்.

தரக் கட்டுப்பாடு (Quality Control)

உற்பத்தி முறையில் தரம் ஏற்படுத்தப்படவேண்டும். அது நிலைத்து நிற்கவேண்டும். அதனைத் தொடர்ந்து கட்டுப்பாடு செய்து பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். திறமை வாய்ந்த வெளியீட்டினைச் செய்ய வேண்டுமாயின் அது தரக்கட்டுப்பாட்டிலேயே முடியும். எந்தவொரு உற்பத்தி நிறுவனமும் தமது நோக்கை இருவழியிலேயே செயற்படுத்தும்.

1. மிகக்கூடிய இலாபம்
(Maximum Profit)

2. மிகக் குறைந்த செலவு
(Minimize Cost)

இவ்விரு வழியில் செயற்படுவதற்கு மிகக்குறைந்த செலவு என்பது தரக்கட்டுப்பாட்டுடன் மிக நெருங்கிய வழியில் இணைந்து இருக்கின்றது. சேதாரங்கள், வீண் விரயங்கள் இன்றி குறைந்த செலவில் பொருட்களை உற்பத்தி செய்யவேண்டும். குறித்த நேரத்தில் தரத்தினைக் கட்டுப்பாடு செய்வதனால் வளமும் சிக்கனமாகப் பயன்படுத்தப்படுகின்றது. தரமற்ற பொருட்களின் வெளியீட்டுக்கு வளங்கள் வீணடிக்கப்படுவது முன்கூட்டியே தடுக்கப்படுகின்றது ஓர் தொழிற்சாலையில் 90% மான தொழிலாளர் சரியான முறையில் உற்பத்தி செய்வதையே சந்தோசமாக கொண்டு செயற்படுவார்கள். இதனால் தொழிலாளர் சார்பிலும் தரக் கட்டுப்பாடு நியமிப்பது மன ரீதியாக வரவேற்கக்கூடியதாகும்.

உற்பத்தி உடமையாளரைப் பொறுத்த மட்டில் தமது கட்டுப்பாடான மூலதன வளம் கட்டுப்பாட்டுடன் பயன் படுத்தப்படுவதும். தமது தொழிலின் உற்பத்தி இயக்கமுறை பற்றிய கல்வியிலும் தமது உற்பத்தி பொருள் ஆக்கம் பற்றிய உச்ச அறிவும் சிறந்த வெளியீட்டுக்கு வழிவகுக்கின்றது தரக் கட்டுப்பாடே ஆகும். இந்த தரக்கட்டுப்பாட்டை மையமாக வைத்தே இன்று ஒவ்வொரு நிறுவனமும் சந்தையில் அறிமுகமாகின்றது. தொழில் சார்பாக பொருளின் மதிப்பை உயர்த்துவது தரம். ஏன் என்றால் நுகர்வோன் இருநோக்கினில் ஒரு பொருளை அணுகுகின்றான்.

(1) ஆகக்கூடிய தரம்

(2) ஆகக் குறைந்த செலவு

தரமும் அதிகமாக இருக்க வேண்டும் அது ஆகக் குறைந்த செலவும் உடையதாக இருந்தாலே அது நுகர்வோனை கவர முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளை தொடர்ந்து சந்தையில் ஒரே நிலையில் பேணவேண்டுமயின் அல்லது அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின் தொடர்ந்து தமது தரக்கட்டுப்பாட்டினை பேணி வரல் வேண்டும். தரக்கட்டுப்பாடு நுகர்வோரின் தேவைகளுக்கு ஆதரவாகவும் காணப்படுகின்ற உற்பத்தி செய்முறைகள், மூலப் பொருட்கள், செலவுகளுக்கு சார்பாகவே அது நிர்ணயம் செய்யப்படல் வேண்டும். உற்பத்தி செய்கைகள் முதலில் வடிவமைக்கப்பட்டு தொடர்ச்சியாக பரும்படியாக நிகழ்த்தப்பட்டுவரும் பரும்படி உற்பத்தியில் சிறப்பிடம் வகிக்கும் பொறியமயப்படுத்தல் பொருளின் வடிவம் சார்பாக தரம் கட்டுப்பாடு செய்யப்படாவிட்டால் வித்தியாசமான பல வடிவில் பொருளை வார்த்து வைக்கக்கூடிய இயல்புகளை கொண்டு காணப்படுவது இயல்பாகும். எனவே இத்தரக் கட்டுப்பாடு இருப்பதால் உடனுக்குடன் அவை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வெளியீட்டு அமைப்பின் உண்மை நிலையின் இணைப்பு அவதானிக்கப்பட்டு மீளமைக்கப் படுகின்றது. இதனால் உண்மையான நம்பிக் கையான முறையில் உற்பத்தித் தொழிலை ஆற்ற முடிகின்றது.

எந்த உற்பத்தி நிறுவனமும் தரத்தினை ஒரே நிலையில் பேணுவது கிடையாது அவ்வாறு அவர்கள் செய்வதற்கு பல காரணங்கள் காணப்படுகின்றன. பௌதீக நிலையில் அவற்றுல் நிலைத்திருக்க முடியாத வளப்பற்றுக்குறை, பொருளாதார ரீதியான நிதிப் பற்றுக்குறை சந்தையில் ஏற்பட்ட திடீர் கேள்வியிலான அதிகரிப்பு. இதனால் உற்பத்தி நிறுவனங்கள் தமக்கு இயலக்கூடிய முறையில் தான் உற்பத்தி செய்ய முயற்சிக்கின்றன இதற்கும் புதிதான தரக் கட்டுப்பாடு நிர்ணயிக்க வேண்டும் ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு தரக்கட்டுப்பாடு பேணப்படல் வேண்டும். இதனாலேயே சந்தையில் ஒரு பொருள் வித்தியாசமான தரத்துடன் இயங்குகின்றது உதாரணமாக ஹொண்டா மோட்டார் பைசிக்கிள் ஒவ்வொரு தரத்திலும் அதாவது இழுவைச்சக்தி கட்டுப்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது. அத்துடன் ஒவ்வொரு வருடமும் உற்பத்தி மாதிரிகளையும் மாற்றி அமைக்கின்றார்கள் இதனால் அவற்றின் தரமும் வித்தியாசமாகவே இருக்கின்றது. இப்பொழுது உற்பத்தி செய்யப்படுகின்ற பைசிக்கிள் உதிரிப்பாகங்களின் தரத்திற்கு 10 வருடங்களுக்கு முன்பு இதே பைசிக்கிள்களுக்கு பொருத்தப்பட்ட உதிரிப்பாகங்களின் தரமும் வித்தியாசமானதாகும். உள்ளூர் உதாரணத்திற்கு மெலிபன் பிஸ்கட் கம்பனி ஆரம்பத்தில் உச்சநிலையான தரத்துடன் பொருளை உற்பத்தி செய்தன தற்போதைய மெலிபன் பிஸ்கட் புதிய சற்று குறைந்த தரக்கட்டுப்பாட்டுடன் வெளியீடு செய்து வருகின்றது. இதுவே அவற்றுக்கு சாத்தியமானதாக இருக்கின்றது.

தரக் கட்டுப்பாட்டின் வரலாறு
History of Quality Control

ஆரம்ப காலத்தில் புள்ளி விபரவியல் ஆய்வுகளும் அறிக்கைகளுமே உற்பத்தி முறையின் பல்வேறு கட்டங்களில் பயன்படுத்தப்பட்டன இவை தரக் கட்டுப்பாடு என்ற பதமாகவோ அல்லது ஒரு செயல் பாடாகவோ செயல்படவில்லை இதற்கு காரணம் அக்காலத்தில் இதனைப் பயன்படுத்திய அறிஞர்கள் இதற்கென்று ஒரு தொகுதியை தோற்றுவிக்காமையேயாகும். அத்துடன் தொழில்கூட்டு விஞ்ஞான வளர்ச்சியும் குறைவாகவே காணப்பட்டன. ஆனால் இப்படியான ஒரு பதத்தினையும் ஆய்வு நோக்கையும் கொண்டதாக உற்பத்தி முறையில் முதன் முதலில் புகுத்தியவர் வால்ட்டர் செவ்காட் என்பவர் ஆவர். Walter A. Shewhart இவர் 1920 ம் ஆண்டிலேயே இத்தகைய ஆராய்ச்சியில் தனது ஆற்றலை எல்லாம் ஒரு முகப்படுத்தி இதனை ஓர் முக்கியத்துவமான உற்பத்தி தொழில் பாடாக 1924 ம் ஆண்டு மே மாதம் 16 ந்தி நவீன தரக் கட்டுப்பட்டு செயல்முறைகள் என்ற முறையில் வெளியீடு செய்தார். அத்துடன் பல்வேறு விதமான உற்பத்தி தரக் கட்டுப்பட்டு முறைகளினால் அக்காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியாளர் பெற்ற நன்மைகளை நிரூபித்து காட்டினார் இதற்கு ஆதாரமாக 'பொருள் உற்பத்தியில் பொருளாதார தரக் கட்டுப்பாடு'' என்ற நூலை வெளியீடு செய்து இதனை சர்வ உலகிலும் ஓர் முக்கிய பணியாகவும் ஒவ்வொரு உற்பத்தியாளராலும் கடைப்பிடிக்கக் கூடிய முறையிலும் தமது புத்தகத்தை பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பிவைத்தார் இதன்பின்னர் புள்ளி விபரவியலின் பல் வேறு விதமான முடிவுகளும் மாதிரியுருக்களும் தரக்கட்டுப்பாட்டு முறைகளாக உற்பத்தியில் பயன்படுத்தப்பட்டன இதனை ஐக்கிய அமெரிக்காவின் பல்வேறு பரும்படியாக்க நிறுவனங்களிலும் தரக்கட்டுப்பாட்டாளர் பலர் நியமனம் பெற்றனர். இதனால் உற்பத்திப் பொருட்களும் தரமாயும் சிக்கனமான வளப்பாவனைகளும் இடம் பெற்றன. மேலும் புள்ளிவிபரவியல் முறைகள் விருத்தியாக்கப்பட்டு தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகளாக தொடர்ந்த காலஞ்களில் புகுத்தப்பட்டன. 2-ம் உலக யுத்தத்திலும் தரக்கட்டுப்பாட்டின் பல்வேறு விருத்தியாக்கங்கள் இடம்பெற்றன. இராணுவ ரீதியாகவும் இந்நடைமுறைகள் புகுத்தப்பட்டன இதனைத் தொடர்ந்து அமெரிக்காவின் சர்வகலாசாலையிலும் தரக் கட்டுப்பாட்டு முறைகள் ஆராம்பிக்கப்பட்டன அவர்கள் இது சம்பந்தமாக ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டனர் இதனால் இத்துறை பல்வேறு கட்டங்களாக வளர்ச்சியடைந்து இதற்கெனவும் தனித் தனியான மாதிரியுருக்கள் தோற்றம் பெற்று இருக்கின்றன.

தரக்கட்டுப்பாட்டின் நடைமுறைகள் : Procedure of Quality Control

1, செவ்வைத் தாள் Check Sheet

உற்பத்தி நடைபெறும் போது இச் செவ்வைத்தாளை வைத்துக்கொண்டு செய் முறையை குறித்துக் கொள்ளலாம் இதன் தொழில்கள் பின்வருமாறு

(அ) உற்பத்தி செய்முறைகளை படுத்தலை செவ்வைபார்க்கலாம்

(ஆ) குறைபாடுள்ள அலகுகள் செவ்வை பார்க்கப்படுகின்றன

(இ) குறைபாடுள்ள இடம் அறியப்படுகிறது

(ஈ) குறைபாடுள்ள காரணங்கள் அவதானிக்கப்படுகின்றன

(உ) உற்பத்தியின் தரம் உறுதிப் படுத்தப் படுகிறது இவை அச்சிடப்பட்ட குறிப்புக்களைக் கொண்டதாகும்

2. பரைட்டோ வரைவு Pareto Diagram

பரைட்டோ என்பவர் உற்பத்தி பொருட்களின் இயக்கத்தை பரிசோதித்து அதனை ஒவ்வொரு துருப்புக்களிலும் அதனை ஒரு வரைவுத்தாளில் இணைந்த வரைபடங்களாக வரைவதால் அவற்றைப் பார்த்தவுடன் குறித்த மட்டத்திற்கு உற்பத்தி குறைந்தவுடன் நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருக்கின்றது. இதுவும் ஒரு புள்ளி விபரவியல் மாதிரியுரு அமைப்பாகும்.

3. கிடை அச்சுப்படம் Histrogram Chart

ஒவ்வொரு மாற்றங்களை தனித் தனி அச்சுக்களாக இரண்டு அச்சுக்களை தேர்வு செய்து மாற்றங்களுக்கு முன்பு பின்பு என்றமுறையில் வரைவுகளை வரைந்து தரத்தை கட்டுப்பாடு செய்து கொள்ளமுடியும்.

4. காரண நடைமுறை வரைபடம் Cause & Effect Diagrm

இது தரக் கட்டுப்பாடு என்ற நடைமுறையை மையமாக வைத்து வரையப்பட்டு இருக்கும் இதனை அடைய முடியாமல் பல்வேறு காரணங்கள் தடையாக இருக்கும் உதாரணமாக வேலை முறைகள் மூலப்பொருள், உபகரனங்கள் தன்மை, உற்பத்தி தன்மை ஆகிய காரணங்களை கூறிக் கொள்ளலாம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தரக் கட்டுப்பாட்டு வரைபடம்
Quality Control Graph

இது சாதரண வரைபடம் போன்றது உற்பத்தி பொருட்களின் தரத்தை அளவீடு செய்து அவற்றை தொடாபான வரைவு களாக தொடர்ந்து இணைத்து வரைவதனால் குறித்தமட்டத்திற்கு கீழாக செல்லும்போது தரக்கட்டுப்பாட்டை வைத்துக்கொள்ளலாம்

ஸ்கட்டர் வரைபடம் (Scatter Diagram)

உற்பத்திப் பொருளின் விபரங்களையும் ஒவ்வொரு செய்முறையையும் இரண்டு அச்சுக்களை தேர்வு செய்து அவற்றைக் குறித்த சில புள்ளிகளாக ஒரே நோக்கில் குறித்து அதில் இருந்து தரத்தின் நியம விலகலைக் கொண்டு தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுக்கக்கூடியதாக இருக்கின்றது.

7. நிகழ்தகவு ஆய்வு (Probability Analysis)

புள்ளி விபரவியல் சார்பான ரீதியில் அந்தப் பொருளை உற்பத்தி செய்யவேண்டும். எந்த வளங்கள் எவ்வளவு நிலையில் சேர்க்க வேண்டும், எந்த தரவுகளை அணுகுதல் வேண்டும் என்ற பல விடயங்கள் இவற்றில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

8. மாதிரி எடுப்புகள் (Sampling)

இதுவும் தரக்கட்டுப்பாட்டின் பிரதான நடைமுறை ஆய்வு ஆகும். உற்பத்தி இயங்கும்பொழுது தொடர்ந்து ஒரே முறையில் இயங்கினாலும் குறித்த சில வெளியீடுகட்கு இடையில் எழுந்தமான மாதிரிகளை எடுப்பு செய்தல் வேண்டும். அதனை ஆராய்ந்து தரத்தினைக் கட்டுப்பாடு செய்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம்.

9. புள்ளிவிபரவியல் கட்டுப்பாடு
(Statistical Control)

புள்ளிவிபரவியலில் நாம் எடுத்துக் கொள்கின்ற நியமங்களையும் அந்த நியமங்களில் இருந்து பிற்செலவும் இணைப்பு ஒய்வு ரீதியாக எவ்வாறு விலகிச் செல்கின்றன விலகல் இடம்பெறும்போது தரக்கட்டுப்பாடு செய்யக்கூடியதான முறைகளை எடுக்கக் கூடியதாக இருக்கின்றது. இதற்குப் பல் வேறு புள்ளிவிபர ஆய்வுகளை இக் கட்டுப் பாடாகப் பயன்படுத்துகிறோம்.

10. பரிசோதனை ஆய்வு :
(Inspection Control)

ஒவ்வொரு உற்பத்தி நிறுவனங்களும் தமது உற்பத்திப் பொருளுக்குப் பொறுப் பாக ஒரு தரக்கடுப்பாட்டாளரை நியமனம் செய்து அவரே உற்பத்திப் பொருளின் தரத்தினை பரிசோதனை செய்து தொடர்ந்து உற்பத்தி செய்யக்கூடியதாக நேரடியான நடவடிக்கையாக இதனை ஏற்பாடு செய்யப் படுகின்றது.

எனவே மேற்கூறிய 10 முறைகளிலும் இன்றைய நிறுவனங்கள் உற்பத்தியின் பல் வேறு இடங்களிலும் தரக்கட்டுப்பாட்டினை நிறுவி, இதன் நன்மையினை அனுபவித்து வருகின்றன. எமது இக்குறுகிய தரக் கட்டுப்பாடு பற்றிய நோக்கானது சாதாரண மாணவர்களும் அறியக்கூடிய முறையில் ஆய்வு செய்யப்பட்டமையினால் இதன் கணித எடுகோள்கள் வரைபட விளக்கங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம் :

கைத்தொழில் உறவுகளும் பிணக்குகளும்
(Industrial Relations & Disputes)

பாலசிங்கம் பாலச்சந்திரன்
வணிகமாணி
4-ம் வருடம்

கைத்தொழில் உறவு
(Industrial relation)

தொழில் உறவு என்பது தொழில் நிறுவனங்களில் தொழில் அதிபர்களுக்கும் தொழிலாளருக்கும் இடையில் தொழில் முறை தொடர்பாக உள்ள உறவைக் குறிக்கும். தொழில் உறவானது சுமூகமாக இருக்க வேண்டுமென்பது கூறுமலே தெளிவாகும் சுமூகமான தொழில் உறவு நிலவுவதற்கு பின்வருவன அமைந்திருத்தல் வாய்ப்பாக இருக்கும்.

(1) சம்பளங்கள் வேலை நிபந்தனைகள் முதலியனவற்றைச் சீர்செய்து கொடுக்கக் கூடிய அமைப்பு.

(2) தொழில் அதிபன் – தொழிலாளன் ஆகியோருக்கு இடையில் ஏற்படும் பிணக்குகளை தீர்ப்பதற்கும், இயலுமாயின் தவிர்ப்பதற்கும் உரிய வழிவகைகளும் ஒழுங்குகளும்.

(3) தொழிலாளர்களுக்கு அவர்களது நலனைப் பேணக் கூடிய சட்டங்கள்.

(4) தொழில் அதிபர்கள் – தொழிலாளர்கள் ஆகியோருக்கிடையே நிறுவனங்களது முன்னேற்றம் சம்பந்தமான கருத்துக்களை பரிமாற்றிக் கொள்ளவும் நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ளவும் தேவையான ஏற்பாடுகளும் வசதிகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) தொழில் உறவுகள் தொடர்பான பயிற்சிகளை முகாமை யாளருக்கும் தொழிற்சங்க உத்தியோகத்தர்களுக்கும் ஒழுங்கு செய்தல்.

கைத்தொழில் பிணக்கு (Industrial Dispute)

தொழில் ஸ்தாபனங்களில் பிணக்குகள் ஏற்படுமிடத்து சுமூகமான தொழில் உறவு நிலவ முடியாது. இப்பிணக்கு என்பது கைத் தொழில் பிணக்கு என அழைக்கப்படுகின்றது. கைத்தொழில் பிணக்கு என்பது தொழில் அதிபனுக்கும், தொழிலாளருக்கு மிடையில் வேலை சம்பந்தமாக அல்லது வேலை கொடுக்காமை சம்பந்தமாக அல்லது வேலை நிபந்தனைகள் சம்பந்தமாக அல்லது ஒருவரின் சேவைகளை முடிவுறுத்தல் சம்பந்தமாக அல்லது ஒருவரைச் சேவையில் அமர்த்துதல் சம்பந்தமாக ஏற்படும் பிணக்கு எனப் பொருள் படும்.

இப்பிணக்குகளின் விளைவாக தொழில் தாபனங்களில் வேலை நிறுத்தம் கதவடைப்பு தாமதமாக வேலை செய்தல். மறியல் செய்தல் போன்ற நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன.

வேலை நிறுத்தம் (Stuike)

வேலை நிறுத்தம் என்பது ஒரு வியாபாரம் அல்லது கைத்தொழிலில் வேலை செய்பவர்கள் ஒன்று சேர்ந்து அல்லது அவ்வாறு வேலைசெய்பவர்களில் ஒரு பகுதியினர் ஒரு பொது உடன்பாட்டின்படி தொடர்ந்து வேலை செய்வதனை அல்லது வேலையினை ஏற்றுக் கொள்வதனை நிறுத்துதல் எனப் பொருள்படும். பொதுவாக தொழில் சங்கங்கள் தமது கோரிக்கைகளுக்கு நிர்வாகத்தினர் செவி சாய்க்காத விடத்து, கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதனைக் காணலாம்.

இலங்கையில் தொழிற்சங்கச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்களே வேலை நிறுத்தம் செய்யும் உரிமையுடையனவாகும். இத் தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தம் செய்யத் தொடங்குவதற்கு முன்னர் நிர்வாகத்தினருக்கு, அல்லது தொழில் அதிபனுக்கு பதினைந்து நாட்களுக்கு முன் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். இந்நிபந்தனையின்படி ஒழுகாவிடின் வேலைநிறுத்தம் சட்டத்திற்கு முரணானதாகும்.

கதவடைப்பு : (Lock Out)

கதவடைப்பு வேலை நிறுத்தத்திற்கு எதிரிடையானதாகும். இது தொழில் அதிபர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும். தொழில் அதிபர் ஒருவர் கதவடைப்பு செய்வதன் மூலம் தொழிலாளருக்கு வேலையினை மறுத்து, அவர்களைத் தன்னுடன் ஓர் உடன்படிக்கைக்கு வரும்படி வற்புறுத்த முனையலாம். வேறு வகையில் கூறுவதானால் தொழில் அதிபன் ஒருவன் தன் தொழிலாளரிடமிருந்து சில சலுகைகளைப் பெறுவதற்காக அவர்களுக்கு வேலை வழங்குவதனை மறுப்பதனை கதவடைப்பு என்பர்.

தாமதமாக வேலை செய்தல் : (Go Slow)

தாமதமாக வேலை செய்தல் என்பது வழக்கமான வேகத்தில் வேலை செய்வதனை விட குறைந்த வேகத்தில் வேலை செய்வதனைக் குறிக்கும். இதன் மூலம் உற்பத்தி வேகம் குறைவடையும். தமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக தொழிற் சங்கங்களால் தாமதமாக வேலை செய்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மறியல் செய்தல் : (Picketing)

ஒரு வேலை நிறுத்தம் நடைபெறும் பொழுது வேலை கொள்பவர் தனது தொழிலினை நடாத்துவதைத் தடை செய்வதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Visit Our Show Room

FOR TELEFUNKEN & J. V. C.

COLOUR TELEVISIONS



MAHARAJAH
INVESTMENTS
LTD.

122, K. K. S. ROAD,

JAFFNA.



24267

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகை உலகில் நம்பிக்கையை பெற்ற ஸ்தாபனம்

செல்லையா சிவபாதலிங்கம்

வைரக்கல் நகை வியாபாரம்

220A, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

சிறந்த வேலைப்பாடுள்ள தங்க – வைர நகைகளை
விரும்பிய டிசைன்களில் தெரிவு செய்யலாம்.

WITH THE BEST COMPLIMENTS
FROM

BITSMAN INSTITUTE

MANIPAY

- BEST INSTITUTE
- QUALIFIED TEACHERS
- BEST RESULTS
- GOOD ADMINISTRATION

For G.C.E. (O/L) & (A/L) CLASSES

Bitsman Institute, Manipay.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Space Donated by

★

CHITRALAYA

PHOTOGRAPHERS

★

STANLEY ROAD,

JAFFNA.

FOR QUALITY

PHOTOGRAPHS

ASOKA

PHOTO



POWER HOUSE ROAD,

JAFFNA

Space Donated by



VICTOR & SONS

RECORDING CENTRE

100, STANLEY ROAD,

JAFFNA.

For Quality
Selection

S.L.M.

Theeby & Sons

Jewellers & Diamond
Merchant.

R. G. BUILDING,

KANNATHIDDY,

JAFFNA.

Phone:22182

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Compliments from

(
)

FINE FIT
TAILORING
for
Fashionable
Tailoring

10, Grand Bazaar, Lane
JAFFNA.

Best Compliments from



MODERN
COMMERCE

BEACH ROAD,
POINT-PEDRO.

G. C. E. (A/L), (O/L)
Grade 10, 9, 8, 7, 6, 5
Classes are now being held.

அன்பளிப்பு



A/L கலை, வர்த்தகம்

Q. C.
ACADEMY

மகாத்மா வீதி,
நெல்லியடி.

காட்லி இன்ஸ்ரிரியூட்
பிரதான வீதி, பருத்தித்துறை.

83-ம் ஆண்டுக்கான
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

G. C. E. (A/L)
கலை, வர்த்தக, விஞ்ஞானம்.

G. C. E. (O/L)
5ம், 6ம், 7ம், 8ம், 9ம் வகுப்புக்கள்

மற்றும் பிட்மன் தமிழ், ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து வகுப்பும், SPOKEN ENGLISH வகுப்பும் நடைபெறுகின்றன.

தொடர்பு கொள்க: திர்வாகி
சங்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் அவரை வேலை நிறுத்தத்தை சுமுக மாக தீர்த்து வைக்கப் பலவந்தப்படுத்த வேண்டிய தேவை தொழிற்சங்கத்திற்கு ஏற்படலாம். எனவே இந்நிலையில் தொழிற் சங்கங்கள் மறியல் செய்தல் நடவடிக்கை யில் ஈடுபடுகின்றன. மறியல் செய்தல் என் பது கைத்தொழில் பிணக்குடன் சம்பந்தப் பட்ட தொழில் தாபனத்தின் அங்குமிங்கு மாக பிணக்குடன் தொடர்பான கூற்றுக் களைக் கொண்ட அடையாளங்கள், விளம் பரங்கள், கொடிகள் ஆகியவற்றுடன் அணி வகுத்துச் செல்லுதலைக் குறிக்கும்,

கைத்தொழிற் பிணக்குகளுக்கான காரணங்கள் :

சுதந்திரமான பொருளாதார அமைப் புள்ள நாடுகளில் தொழில் அதிபர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றுவது தவிர்க்க முடி யாததாகும், இப்படியான பிரச்சினைகள் தோன்றுவதற்கு மூன்று முக்கிய காரணங் களைக் கூறலாம்.

1. பொருளாதாரக் காரணம் :

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதற்கேற்ப தொழிலாளரது சம்பளங்கள், கூலிகள் அதிகரிப்பதில்லை. இதனால் தொழிலாளர்க ளது வாழ்க்கைத்தரம் பாதிப்படைகின்றது. இந்நிலையில் சம்பள அதிகரிப்புக் கோரிக்கை யினைத் தொழிலாளர்கள் முன்வைக்க வேண் டிய நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள். இது மட்டுமன்றி போனஸ் (Bonus) மேலதிக நேர வேலை ஊதியம், வேலைநிக்க நட்டஈடு போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளுக்காக வும், தொழிலாளர் வேலை நிறுத்தம் மறி யல் செய்தல், தாமதமாக வேலை செய்தல் போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

2. ஸ்தாபிதற் காரணங்கள் :

தனியார் துறையில் உள்ள தொழில் அதிபர்கள் தொழிற்சங்கம் அமைக்கப்படுவ தனை பொதுவாக விரும்பாதவர்களாகவே காணப்படுகின்றனர். ஒருசில தொழில் தாபனங்களிலேயே தொழிற்சங்கம் அங்கீக ரிக்கப்பட்டு இருக்கின்றது. தொழிலாளர் கள் தொழிற்சங்கத்தினை ஒரு தொழில் ஸ்தாபனத்தில் உருவாக்கும் போது அதனை தொழில் அதிபர்கள் அங்கீகரிக்க பெரும்பா லும் விரும்பாமையினால் கைத்தொழில் பிணக்குகள் தோன்றுவதற்கு இடமுண்டு. தொழிற்சங்கச் சட்டப்படி ஒரு தொழிற் சங்கத்தில் ஏழு பேர் அங்கத்தவர்களாக இருந்தால் தொழிற்சங்கத்தினை உருவாக்க லாம். ஆனால் இதனை தொழில் அதிபன் அங்கீகரிக்க வேண்டுமென்பதில்லை.

3, உளவியல் காரணங்கள் :

தொழிலாளர்கள் தாம் வேலை செய்யும் இடங்கள் பாதுகாப்பானவையாகவும், திருப் திகரமானவையாகவும் இருப்பதனையே விரும் புகின்றார்கள். வேலை ஸ்தலங்கள் பாதுகாப் பற்று அல்லது தொழில் அதிபரினால் தொழிலாளர்கள் சுமுகமாக நடாத்தப் படாத நிலைமை காணப்படுமானால் தொ-ழில் பிணக்குகள் தோன்றுவதற்கு இட முண்டு. இவை பெரும்பாலும் பேச்சு வார்த்தை மூலம் நிவிர்த்தி செய்யப்பட லாம்.

கைத்தொழிற் பிணக்குகளின் பலா பலன்கள் :

கைத்தொழிற் பிணக்குகளின் விளைவாக தொழிற் சங்கங்கள், வேலை நிறுத்தம், மறி யல் செய்தல், தாமதமாக வேலை செய்தல் போன்ற நடவடிக்கைகளிலும், தொழில் அதிபர்கள் கதவடைப்பு நடவடிக்கையிலும் ஈடுபடுவதனால் தொழிலாளர்கள், தொழில் அதிபர்கள் மட்டுமன்றி பொதுமக்கள் அர சாங்கம் பாதிப்படைகின்றன. வேலை நிறுத் தம் போன்ற நடவடிக்கைகளினால் உற்பத்தி பாதிப்படைகிறது. இதனால் பொதுமக்கள் தமக்குத் தேவையான பொருட்களினைப் பெற்றுக்கொள்வது சிரமமாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் கறுப்புச் சந்தை தோன்றவும் இடமேற்படுகிறது. அரசாங்கத்தினைப் பொறுத்து வேலை நிறுத்தம் போன்ற நடவடிக்கைகளினால் உற்பத்தி பாதிப்படைவதனால் பொருளாதாரம் பாதிப்படைகின்றது, மக்களின் வாழ்க்கைத்தரம் பாதிப்படைகின்றது.

கைத்தொழிற் பிணக்குகள் சட்டம்- 1950 (Industrial Disputes Act - 1950)

கைத்தொழிற் பிணக்குகள் தொடர்பான விசாரணைகள், தீர்வுகள், அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் அதனோடு தொடர்பான கைத்தொழில் முரண்பாடுகள் ஆகியன குறித்தே கைத்தொழிற் பிணக்குகள் சட்டம் 1950 ம் ஆண்டு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. பின்னர் வந்த ஆண்டுகளில் தேவைக்கேற்ப இச்சட்டம் திருத்தம் செய்யப்பட்டது.

கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் கீழான நிவாரணங்கள் :

1. தொழில் நியாய சபைகள் (Labour Tribunals)

இச்சட்டத்தின்படி 1957-ம் ஆண்டு தொழில் நியாயசபை என்ற ஒரு விசேட நியாயசபை, நியாயமான காரணமின்றி வேலையினின்றும் நீக்கப்பட்ட தொழிலாளருக்கு நிவாரணம் அளிப்பதற்கென நிறுவப்பட்டது. ஒரு தொழிலாளி வேலைநீக்கம் செய்யப்படுவாராயின் தானே அல்லது தொழிற்சங்கம் மூலம் அத்தகைய வேலை நீக்கம் சம்பந்தமாக தொழில் நியாயசபைகளுக்கு விண்ணப்பிக்கலாம். வேலைநீக்கம் செய்யப்பட்ட திகதியில் இருந்து ஆறுமாதத்துக்குள் இந்த விண்ணப்பம் அனுப்பப்படுதல் வேண்டும். இவ்விண்ணப்பம் பின்வரும் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அ) தொழில் அதிபர், தொழிலாளர் பெயரும் முகவரியும்.

ஆ) வேலையின் தன்மை

இ) கொடுத்த கூலி அல்லது சம்பளம்

ஈ) வேலை தொடங்கிய திகதி

உ) வேலை முடிவுறுத்திய திகதி

தொழிலாளர் தன் விண்ணப்பத்தில் மீள வேலையில் அமர்த்துதல் அல்லது நட்டஈடும், பணிக்கொடையும் (Gratuity) ஆகிய வற்றைக் கோரும் உரிமையுடையவராவர். இவ்விண்ணப்பம் தொழில் நியாய சபையின் செயலாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அது தொழில் அதிபருக்கு அனுப்பப்பட்டு அதற்குப் பதில் அனுப்புமாறு வேண்டப்படுவர். அப்பதிலின் பிரதியொன்று தொழிலாளருக்கு அனுப்பப்படும். நியாய சபை ஒரு திகதியை நிர்ணயித்து இருகட்சியினருக்கும் அறிவித்து அவர்களை அன்று சமூகமளிக்கச் செய்யும். அன்று இருகட்சியினரிடையேயும் ஓர் இணக்கத்தை ஏற்படுத்த நியாயசபையின் தலைவர் முயலுவார். அவ்வாறு செய்ய முடியாவிடின் சாதாரண நீதிமன்றம் போன்று முற்றுகவும் நிறைவாகவும் விசாரணை செய்யப்படும். அதன்பின்னர் நியாய்சபையின் தலைவர் தனக்குமுன் சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகளைக் கருத்திற் கொண்டு நியாயமானதும் நெறிமுறையானதுமான ஒரு கட்டளையினை வழங்குவார்.

இக்கட்டளையினால் மனம் நொந்த எக்கட்சியினரும் உயர் நீதிமன்றத்தில் அக்கட்டளை வழங்கிய திகதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் மேன்முறையீடு செய்யலாம்.

2 சமரசத் தீர்வு (Conciliation)

கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 3-ம் பிரிவு சமரசத் தீர்வுக்கூடாக ஒரு தொழிற்பிணக்கைத் தீர்க்கும் பொறுப்பினை தொழில் ஆணையாளருக்கு வழங்குகிறது. தொழில் ஆணையாளரால் தொழிற் பிணக்கினைத் தீர்த்து வைக்க முடியாத பட்சத்தில் அவரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அதிகாரிக்கு கைத்தொழிற் பிணக்கினைத் தீர்க்கும் பொறுப்பினை வழங்கலாம். தொழில் ஆணையாளர் குறிப்பிட்ட கைத்தொழில் தகராறினை சமரசத் தீர்வு காண்பதன் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ப்பதற்காக எழுத்து வடிவில் யாரை நியமிக்கின்றாரோ அவரே அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாவார்.

தொழில் ஆணையாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஒரு கைத்தொழில் பிணக்கைத் தீர்த்து வைக்க முயலும்போது அது சம்பந்தமாக நுண்ணாய்வு செய்தல் வேண்டும். இவ் ஆய்வு ஒரு மாதத்துக்குள் முடிந்து விட வேண்டும். ஆனால் தேவையேற்படின் தொழில் ஆணையாளர் கேட்டுக் கொள்ளும் பட்சத்தில் இந்த விசாரணைக் கால அளவு நீடிக்கப்படலாம். தொழில் அதிபர் - தொழிலாளர் இடையே இணக்கம் ஏற்படும்பொழுது இணக்கக் குறிப்பொன்று தயாரிக்கப்பட்டு இரு பகுதியினரது கையொப்பங்களும் பெறப்படல் வேண்டும். இணக்கம் ஏற்படமுடியாதவிடத்து இணக்கம் காண்பதற்கான ஆலோசனைகளைக் கொண்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்படும், ஒரு பாரதூரமான கைத்தொழில் முரண்பாடானால் இத்தகைய அறிக்கையானது அரச வர்த்தமானியில் வெளியிடப்படுவது அவசியமாகும். இவ் அறிக்கையை தொழில் ஆணையாளர் சம்பந்தப்பட்ட கட்சியினருக்கு அனுப்பி அதிற் கூறப்பட்ட ஆலோசனைகளை ஏற்றுக் கொள்கின்றார்களோ அல்லது தள்ளுபடி செய்கின்றார்களோ என்பதனை பதினான்கு நாட்களுக்குள் அறிவிக்குமாறு வேண்டுவார். குறிப்பிட்ட காலத்துக்குள் அக்கட்சியினரிடமிருந்து பதில் எதுவும் கிடைக்காவிடின் அவர்கள் அதற்கு இணங்கி விட்டார்கள் எனக் கொள்ளப்படும். இந்நிலையிலும் அறிக்கையைத் தொழில் ஆணையாளர் அரச வர்த்தமானியில் வெளிவரச் செய்வார். சமரசத் தீர்வின்மூலம் இணக்கம் காணப்பட முடியாவிடின் நடுத்தீர்வு மூலம் தீர்ப்பு வழங்கப்படும்

3. நடுத் தீர்ப்பு (Arbitration)

நடுத்தீர்ப்பு இரு வகைப்படும். அவையாவன:

(அ) தன்னிச்சையான நடுத்தீர்ப்பு
(Voluntary Arbitration)

(ஆ) கட்டாய நடுத்தீர்ப்பு
(Compulsory Arbitration)

தன்னிச்சையான நடுத் தீர்ப்பு என்னும் போது ஒரு கைத்தொழிற் பிணக்கு சம்பந்தமாக தொழில் அதிபர், தொழிலாளர் அல்லது தொழிற்சங்கம் ஆகிய இரு பகுதியினரும் தாம் தெரிவு செய்த ஒரு நடுத்தீர்ப்பாளருக்கு அல்லது நடுத்தீர்ப்பாளரை நியமிப்பதில் தம்மிடையில் உடன்பாடு ஏற்படாதவிடத்து தொழில் ஆணையாளரே ஒரு நடுத்தீர்ப்பாளரை நியமித்து அவருக்கு அப்பிணக்கைத் தீர்க்குமாறு அனுப்பிப் பெறப்படும் தீர்ப்பாகும்.

கட்டாயத் தீர்ப்பு என்பது தொழில் அமைச்சர் சம்பந்தப்பட்ட பிணக்கு சிறியதெனக் கருதுமிடத்து அதனை எழுத்திலான ஒரு கட்டளை மூலம் தானே ஒரு நடுத்தீர்ப்பாளரை, பிணக்குடன் சம்பந்தப்பட்ட கட்சிகள் சம்மதிக்காவிடினும் நியமித்து அவருக்கு அல்லது ஒரு தொழில் நியாய சபைக்கு அனுப்பி பெறப்படும் நடுத் தீர்ப்பாகும்.

நடுத்தீர்ப்பு மூலம் தீர்ப்பதற்கிகைய கைத்தொழில் பிணக்குகள் பற்றிய ஒவ்வொரு கட்டளையுடனும் அக்கட்டளை தொழில் ஆணையாளராலோ அல்லது தொழில் அமைச்சராலோ செய்யப்பட்டதாயினும் சம்பந்தப்பட்ட கட்சிகளுக்கிடையில் உள்ளதாகத் தெரிந்த ஒவ்வொரு விடயமும் பற்றி தொழில் ஆணையாளர் தயாரித்த ஒரு கூற்றையும் அனுப்புதல் வேண்டும்.

நடுத்தீர்ப்பாளர் கைத்தொழில் பிணக்கை விசாரணை செய்யும் பொழுது தொழில் நியாய சபையில் பின்பற்றப்படுவது போன்ற ஒரு நடைமுறை பின்பற்றப்படும். நடுத்தீர்ப்பாளரின் தீர்ப்பினை எக்கட்சியினரும் நிராகரிக்கலாம். தொழில் ஆணையாளருக்கும் மற்றைய கட்சியினருக்கும் நடுத்தீர்ப்பினை நிராகரிக்கின்ற நோக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி முறையான அறிவித்தல் கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனையைத் திருப்திப் படுத்துவதன் மூலம் இதனைச் செய்யலாம்.

4. கைத்தொழில் நீதிமன்றம் : (Industrial Court)

கைத்தொழில் நீதிமன்றம் மூலம் கைத் தொழில் பிணக்குகள் தீர்க்கப்படுகின்றன. கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் பிர காரம் 5 நபர்களுக்கு குறையாத ஒரு குழு வினை ஜனாதிபதி நியமிப்பார். இவர்களைக் கொண்டதாகவே கைத்தொழில் நீதி மன் றம் அமையும். இக் கைத்தொழில் நீதி மன்றத்தின் அங்கத்தவர்கள் 3 ஆண்டுகள் பணி புரிவார்கள், ஒருமுறை பணியாற்றிய அங்கத்தவர் மீண்டும் பணிபுரிய நியமிக்கப் படலாம். கைத்தொழில் நீதிமன்றக் குழு வில் இருந்து, ஒரு தொழில் பிணக்கினைத் தீர்ப்பது தொடர்பாக ஒருவரையோ அல் லது மூன்று பேரைக் கொண்ட குழு வினையோ அமைச்சர் நியமனம் செய்வார். 3 பேர் கொண்ட கைத்தொழில் நீதிமன்ற மாயின் அமைச்சரால் நியமிக்கப்படும் அங் கத்தவரே தலைவராக இருப்பார். மூன்று பேர் கொண்ட கைத்தொழில் நீதிமன்றத் தின் விசாரணையில் பெரும்பான்மை அங்கத் தவர்களது தீர்ப்பே கைத்தொழில் நீதிமன் றத்தின் தீர்ப்பாகக் கருதப்படும். கைத் தொழில் நீதிமன்றத்தின் தீர்ப்பு தொழில் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டு அவர் அத் தீர்ப்பினை அரச வர்த்தமானியில் வெளியிடு வார்.

குறிக்கப்பட்ட தொழில் பிணக்கு தொடர்பாக தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் அத்தீர்ப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து சம்பந்தப்பட்ட தொழிற்சங்கம் அல்லது தொழிலாளர்கள், தொழில் தருணர் ஆகி யோரை அத் தீர்ப்பு கட்டுப்படுத்தும். குறிக்கப்பட்ட தீர்ப்பு தொடர்பாக அதி ருப்தி ஏற்படும் கட்சியினர் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

5. கூட்டுப் பேரம் பேசுதலும் கூட்டு உடன்படிக்கைகளும் : (Collective BarGaining and Collective Agreements)

கூட்டுப் பேரம் பேசுதல் என்பது ஒரு தொழில் அதிபன், அல்லது தொழில் அதி பர்களது அமைப்பு, அல்லது தொழில் அதி பர்களது அமைப்புக்கள் ஒரு பக்கமாகவும் தொழிலாளர்களது அமைப்புக்கள் அவர் களின் பிரதிநிதிகள் மறுபக்கமாகவும் இருந்து தொழில் செய்யும் நிலைமைகள். வேலை நிபந்தனைகள் (Workring Conditions) பற்றி ஒரு உடன்பாட்டுக்கு வரும் நோக்குடன் அவர்களுக்கிடையில் நடைபெறும் இணக் கப் பேச்சு வார்த்தை எனக் கூறலாம்.

கூட்டு உடன்படிக்கைகள் இருபகுதி யினரும் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு உடன்பட்டுக் கொண்ட எல்லா விடயங்களை யும் கொண்டிருக்கும். பொதுவாக கூட்டு உடன்படிக்கைகள் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்கும் எனக் கூறலாம்.

(அ) கூலிகள் அல்லது சம்பளங்கள்

(ஆ) வேலை நேரங்கள்

(இ) ஒழுக்காற்று நடைமுறை

(ஈ) தொழிலாளர்களின் வகைகள்

(உ) தொழில் அதிபர்களுக்கும் தொழிலா ளர்களுக்குமிடையில் எழும் பிணக்கு களைத் தீர்ப்பதற்காகிய சாதனம்

(ஊ) விடுமுறைகள்

(எ) தொழில் சங்க உரிமைகள்

(ஏ) இராவேலை நிபந்தனைகள்

இலங்கையில் கூட்டு உடன்படிக்கைகள் தொழில் ஆணையாளரால் ஏற்கப்பட்டு அர சாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வுடன் சட்டப் பலமுடையதாகும். உடன் படிக்கையின் நியதிகளையும் நிபந்தனைக ளையும் மீறும் எச்செயலும் கைத்தொழிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணக்குச் சட்டத்தின்படி ஒரு குற்றச் செயலாகக் கொள்ளப்படும். கூட்டு உடன்படிக்கையிலுள்ள நியதிகளையும் நிபந்தனைகளையும் மாற்றுவதற்காக வேலை நிறுத்தம், கதவடைப்பு போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது குற்றமாகும்.

கூட்டுப் பேரம் செய்வதனால் தொழிலாளர்கள் மூன்று வழிகளில் நன்மையடைகின்றனர்.

அ) கூட்டு உடன்படிக்கையின்படி ஆகக் குறைந்த கூலி, சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளமையினால் அவற்றிற்குக் குறைந்த கூலியில் அல்லது சம்பளத்தில் தொழிலாளர்களை தொழில் அதிபர்கள் வேலைக்குச் சேர்த்துக்கொள்ள முடியாது. எனவே வேலையில்லாப் பிரச்சினை காணப்படும் இடங்களில் வேலையில்லாதவர்களினால் ஏற்படக்கூடிய ஆபத்து தவிர்க்கப்படுகின்றது.

ஆ) தொழில் அதிபர்கள் கூட்டு உடன்படிக்கையிலுள்ள வேலை நிபந்தனைகள், வேலை நியதிகள் ஆகியவற்றை மாற்ற முடியாது. எனவே தொழிலாளர்கள் வேலை செய்யும் சூழல் சிறப்பானதாக அமைந்திருக்கும்.

இ) தொழில் அதிபர்கள் கூட்டு உடன்படிக்கைக்கு புறம்பாக தொழிலாளர்களுக்குப் பாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாட்டார்கள்.

தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு சட்டமுறையான சாதனம் இருப்பதனால் தொழிலாளர்களும் அவர்களுடைய தொழிற் சங்கங்களும் தொழிற்சங்க நடவடிக்கைகளை எடுக்கத் தயங்குவதுடன் தங்களையும் கட்டுப்படுத்திக் கொள்கின்றனர். அதேபோல தொழில் அதிபர்களும் தங்களது பிழையான நடவடிக்கைகள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியுமென்ற காரணத்தினால் தொழிலாளர்களை தேவையற்ற முறையில் வேலை நீக்கம் செய்தல், அவர்களுக்குரிய உரிமைகளை வழங்காதிருத்தல், தொழிலாளர்களது நலன்களுக்கு பாதகமான வேறு எந்த நடவடிக்கைகளையும் எடுத்தல் போன்ற விடயங்களில் கவனமாக இருப்பார்கள். எனவே தொழில் பிணக்குச் சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் தொழிலாளர்களது நிலைமை பெரிதும் பலமடைந்து விட்டது எனலாம்.

வியாபார முத்திரை

TRADE STAMP

தொழில் நிறுவனங்கள் விற்பனை அளவினை அபிவிருத்தி செய்வதற்காக நுகர்வோருக்கு அவர்களின் கொள்வனவுப் பெறுமதிக்கு ஏற்ப வழங்கப்படுகின்ற முத்திரைகளை வியாபார முத்திரைகள் எனப்படும். முத்திரைகளை ஆரம்பத்தில் வழங்கும்போது அதனை ஒட்டிச் சேர்க்கக்கூடிய புத்தகங்களும் வழங்கப்படும். நுகர்வோர் இதனைச் சேகரித்து விசேட காலப்பகுதிகளில் ஒப்படைத்து இலவசமாகப் பொருட்களைப் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்

இலங்கையின் தேசிய முரண்பாடுகளும் - தீர்வுக்கான அடிப்படைகளும்

— வைதிக மார்க்ஸிஸ்டுகளின் நிலைக்கு ஒரு மறுப்பு —

அ. வரதராஜப்பெருமாள்
துணை விரிவுரையாளர்
யாழ். பல்கலைக்கழகம்

சர்வதேச ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் இன்றைய ஏகாதிபத்தியம் சகல முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ அமைப்புக்களையும் அவற்றினுள் எழும் எல்லா முரண்பாடுகளினையும் உள்வாங்கிக் கொண்டுள்ளது. நிலவுடைமையை அழித்துக் கொண்டு தோன்றிய முதலாளித்துவமானது வளர்ச்சி நிலையில் ஏகாதிபத்தியம் ஆகின்றது என்பது வளர்ச்சியடைந்த கைத்தொழில் முதலாளித்துவ நாடுகளுக்கு ஓரளவு பொருந்துமாயினும் காலனித்துவ, நவகாலனித்துவ சுரண்டல் முறைக்கு உட்படுத்தப்பட்ட மூன்றும் மண்டல நாடுகளைப் பொறுத்த வரையில் இப்பரிணுமம் அப்படியே ஏற்படவில்லை. மூன்றும் மண்டல நாடுகளில் புகுத்தப்பட்ட ஏகாதிபத்திய முதலாளித்துவம் இந்நாடுகளில் இருந்த நிலவுடைமை யமைப்பின் மேல் ஏறிக் கொண்டதே தவிர அதனை அழித்து விடவில்லை. இன்று உலகில் முதலாம் மண்டலம் என்று அழைக்கப்படும் ஏகாதிபத்திய முதலாளித்துவம் மூன்றும் மண்டல நாடுகளைத் தொடர்ந்து சுரண்டிக் கொண்டிருக்கக் கூடிய வகையில் அந்நாடுகளின் முதலாளித்துவ நிலவுடைமையமைப்பை உருப்படுத்திக் கொண்டும்; அந்நாடுகள் தம்மீது தங்கியிருக்கும் வகையில் பல்வேறு வடிவங்களினூடாகவும் தம்மோடு இறுக்கமாக இணைத்துக்கொண்டும் இயங்கிவருகிறது. எனவே, இன்றைய ஏகாதிபத்திய அமைப்பு முழுமைப்பட்ட ரீதியில் சர்வதேச ரீதியிலான இராணுவ அரசியல் பொருளாதார மூல உபாயங்கள் தந்திரோபாயங்களுடன் உலக முதலாளித்துவமாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. இன்றைய உலக முதலாளிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் உல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின் சகல நாடுகளின் தேசிய வாதங்களினதும் பின்னணியில் மறைந்து நிற்கின்றனர். எனினும் அவர்கள் எந்தவொரு தனி நாட்டினதும் தேசிய வாதிகளாக இருக்கின்ற நிலையைக் கடந்து விட்டனர். அவர்கள் இன்று எந்தவொரு தனிநாட்டுக்கும் சொந்தக்காரர்களாக இல்லாது சுரண்டல் அமைப்புடைய எல்லா நாடுகளுக்கும் சொந்தக்காரர்களாக உள்ளனர். இதிலிருந்து தொழிலாள வர்க்கத்தினதும் பண்ட உற்பத்தியினதும் சர்வதேச பரிமாணத்தைக் கண்டுகொள்ளக் கூடியதாக உள்ளது.

இவ் உலக ஏகாதிபத்தியத்தின் இயக்கத்தினை விளங்கிக் கொள்ள வைதிக மார்க்ஸிஸ்டுகள் தவறிவிட்டார்கள் என்பதோடு அவர்களின் சிந்தனை முறை அதற்கு இடம் தரவில்லை என்றும் கூறலாம். ஐரோப்பிய முதலாளித்துவ இயக்கம் பற்றிய மார்க்ஸினது விளக்கங்களிலிருந்தும், ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள் தமது மூலதனக் கால்களை உலகம் பூராவும் ஊன்றிக் கொள்ள முயற்சித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் எழுதப்பட்ட லெனினின் விளக்கங்களிலிருந்தும் இன்றைய உலக முதலாளித்துவத்தினை விளங்கிக் கொள்ள முயற்சித்த வைதிக மார்க்ஸிஸ்டுகள் மார்க்ஸியத்தைச் சரியாக விளங்கி உள்வாங்கிக் கொள்ளாமல் வெறுமனே மார்க்ஸினதும் லெனினினதும் வாக்கியங்களை மட்டும் தேடி அலைந்தமையே அவர்களின் தோல்வியின் அடிப்படையாகும்.

> ''உண்மையிலேயே பொதுவான நவீன விஞ்ஞான அறிவுடைய எந்த மார்க்ஸிஸ்டாக இருந்தாலும் தொழிலாள வர்க்க சர்வாதிகாரத்துக்கு பல்வேறு வகைப்பட்ட முதலாளித்துவ நாடுகளினுடைய மாற்றமானது ஒரே மாதிரியாக ஏற்படுமா? அல்லது பொருத்தமாக ஒத்திருக்கின்ற வகையில் ஏற்படுமா? எதுவாக இருக்கும் என்று கேட்கப் பட்டிருந்தால் அவருடைய பதில் சந்தேகத்திற்கிடமின்றி எதிர்மறையானதாகவே இருந்திருக்கும்
>
> முதலாளித்துவ உலகில் வளர்ச்சியானது ஒத்த வகையிலோ அல்லது பொருந்திய தாகவோ என்றுமே இருந்ததுமில்லை இருந்திருக்கவும் முடியாது.....''
>
> — (லெனின் 1919)

என்பதை வைதிக மார்க்ஸிஸ்டுகள் சரியாக உணரவில்லை. இதனாலேயே இன்றைய உலக முதலாளித்துவத்தின் இயக்கம் பற்றியும், அதனை அழித் தொழிப்பது பற்றியும் இவர்கள் முன்வைத்தவையாவும் வெறுமனே சொல்லாடல்களாக உள்ளனவே தவிர நடைமுறையைத் தருபவையாக இல்லை.

இதன் விளைவாகவே, நவமார்க்ஸிஸ்டுகள் வைதிக மார்க்ஸிஸ்டுகளிலிருந்து தம்மைப் புறம்பு படுத்திக் கொண்டு மார்க்ஸ் ஏங்கல்ஸ், லெனின் ஆகியோரின் விளக்கங்களினூடாகவும் மாவோ, ஹோசிமின் மற்றும் நவீன சமூக அரசியற் புரட்சியாளர்களின் அனுபவங்களினூடாகவும் மார்க்ஸிஸ சிந்தனை முறையைச் சரியாக விளங்கிக் கொண்டு அதனடிப்படையில் இவ் ஏகாதிபத்தியத்தின் இயக்கத்தினை முழுமையாகவும் பல்வேறுபட்ட மட்டங்களிலான பகுதி பகுதியர்களாகவும் விளங்கிக் கொள்கின்ற முயற்சியில் மீண்டும் மார்க்ஸிய விஞ்ஞானத்தினை ஒரு திறந்த அறிவியலாக மக்கள் முன் கொண்டு வந்துள்ளனர்.

இவர்களின் மார்க்ஸிய முறைமை அடிப்படையிலான தேடலினால் உலக முதலாளித்துவத்தின் இயக்கம் பற்றிய - குறிப்பிடத்தக்க சில விடயங்களில் - ஓரளவு திருப்திகரமான விளக்கங்களும் பெறப்பட்டுள்ளன. அத்துடன் இன்றைய ஏகாதிபத்திய அமைப்பினைப் பகுதி பகுதியாக அழித்து விடுவதற்கான புரட்சி நடத்தைகள் பல புதிய புதிய வளர்ச்சிகளையும் பெற்று வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான உலக அனுபவம், சரியான மார்க்சிய சிந்தனை முறை, மார்க்சியத்தின் பிரதான நோக்கம் என்பனவற்றின் அடித்தளத்தில் நின்று இன்றைய உலகின் தேசிய ஒருமைப்பாட்டுவாதங்கள், தேசிய வாதங்கள் தேசிய விடுதலைப் போராட்டங்கள் என்பனவற்றினை மதிப்பீடு செய்வது ஒடுக்கப்படும் மக்களுக்கான முக்கிய சமூக விஞ்ஞான அறிவுப்பங்களிப்பாகும்.

1.1 - மார்க்சியம் ஒரு விஞ்ஞான முறைமை :-

நிலையியல் கண்ணோட்ட நோக்குடன், தனிப்பட்ட அல்லது குழு நிலைப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு ஆட்பட்டு நின்று சமூகத்தின் விதிகளையும் கோட்பாடுகளையும் நடைமுறையையும் வகுப்பது மார்க்சிய விஞ்ஞான முறைக்கு முற்றிலும் முரணான விடயமாகும். சமூக நோர்வுகளின், நிகழ்ச்சிகளின் அனுபவ பூர்வமான தரவுகளைத் தொகுத்துப் பகுப்பாய்வு செய்து அவற்றை இயங்கியல் வரலாற்றியற் பொருள் முதல்வாத அணுகு முறையில் நோக்குவதின் மூலம் சமூக பரிணம விதிகளையும் கோட்பாடுகளையும் கண்டு பிடித்து சமூக மாற்றத்துக்கான நடைமுறைகளை வகுப்பதே மார்க்சிய விஞ்ஞானமாகும்.

> "ஒவ்வொரு கருத்துரையையும் (அ) வரலாற்று ரீதியாக மட்டுமே (ஆ) மற்றவற்றின் தொடர்பாக மட்டுமே (இ) வரலாற்றின் ஸ்தூலமான அனுபவம் சம்பந்தமாக மட்டுமே, பரிசீலிக்க வேண்டும் என்று மார்க்சிகியத்தின் முழு சாராம் சமும், அதன் முழு அமைப்பும் கோருகின்றது"

என லெனின் குறிப்பிடுவது இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. ஒரு மார்க்சிஸ்டு மார்க்சியத்திலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய அடிப்படைக் கல்வி மார்க்சிய முறைமையியலே தவிர, மார்க்சின் வாக்கியங்களையல்ல மார்க்சின், லெனினின் மற்றும் புரட்சிச் சிந்தனையாளர்களின் வாக்கியங்களை மட்டும் சப்பித்துப்ப முற்பட்டதன் மூலம் பல மார்க்சிஸ்டுகள் மக்கள் விரோதிகள் ஆனதை; மார்க்சிய விரோதிகள் ஆனதை; ஏகாதிபத்திய, முதலாளித்துவ, நிலவுடைமை சமூக அமைப்புக்களை அழித்தொழிப்பதற்கு மாறாக அவ் அமைப்புக்களுக்கும் அதன் ஆட்சியாளர்களுக்கும் துணையாக நின்று அவை மேலும் பல நாட்கள் நீடித்து வாழ்வதற்கு வழி வகுத்துக் கொடுத்ததை – கடந்த கால வரலாற்றைப் புரட்டி நுணுக்கமாக நோக்குபவர்கள் கண்டு கொள்ள முடியும்.

1.2 - ஈழத்தேசியவாத விடயத்தில் வைதிக மார்க்சிஸ்டுகள் :-

ஈழத் தமிழ் மக்களிடையே எழுச்சி பெற்றிருக்கும் தேசிய வாதம் சர்வதேச அமைப்பின் எந்த நிலையிலிருந்து எழுகின்றது; உலகின் எந்தப்பகுதி மக்களின் என்ன தேவைகளின் வழியாகத் தோற்றம் பெற்றுள்ளது; ஈழத் தேசிய விடுதலைப்போராட்டம் உலக முதலாளித்துவத்தோடும் இலங்கையில் நிலவும் ஏகாதிபத்தியத் தரகு முதலாளித்துவ நிலவுடைமை ஆட்சியமைப்போடும் எவ்வாறான உறவினைக் கொண்டிருக்கின்றது என்பவற்றினை விளங்கிக்கொள்வதற்கான முயற்சியில் வைதிக மார்க்சிஸ்டுகள் தமது வேதாந்த மார்க்சிய எல்லைகளுக்குள் அவற்றை அடக்க முனைந்து திக்கு முக்காடிக் கொண்டிருக்கின்றனர். மார்க்சியத்தை வேதமாகவும், விடயங்களை நிலையானதாகவும் கொள்ளும் இக் குருட்டுப் பார்வையாளர்கள் மேற் கண்டவற்றை விளங்கிக் கொள்வதில் இதுவரை தோல்வியையே கண்டனர். இவ்வாறான வர்கள் இனியும் தோல்வியையே தழுவுவார்கள்.

இவ்வாறான வைதிக மார்க்சிஸ்டுகள் அனைவரும் ஒரே மாதிரியானவர்கள் அல்லர். ஈழத் தேசிய வாதம், இலங்கைத் தேசிய ஒருமைப்பாட்டு வாதம் தொடர்பாக பிரதானமாகப் பின்வரும் இருவகையினரைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஈழத் தேசிய வாதத்தைத்தவறு என்றும் அது மார்க்ஸியத்துக்கு முற்றிலும் முரணானது என்றும் கூறிக்கொண்டு, அதன் இயக்க நிலையைப் புரியாது, புரியமறுத்து விடாக் கண்டாகளாக இலங்கைத் தேசிய ஒருமைப்பாட்டு வாதம் தோற்றுப்போனதை ஒப்புக் கொள்ளாது அதனை இன்றும் கட்டாயப் படுத்தும் மார்க்ஸிஸ்டுகள்.

2. இலங்கையின் கடந்த கால அனுபவங்களிலும் இலங்கைத் தேசியவாதம் தோல்வியுற்றுப் போனதை ஒப்புக் கொள்கின்ற போதிலும் - விரக்தியடைந்திருக்கின்ற போதிலும் - ஈழத் தேசிய வாதம் மார்க்ஸியத்துக்கு முற்றிலும் முரணானது என்று கருதி அதனை அங்கீகரிக்கத்தயங்கும், - வரலாற்றோட்டத்தின் தவிர்க்கமுடியாத விளைவுகளை விளங்கிக் கொள்ளத்தயங்கும் - மார்க்ஸிஸ்டுகள்;

இவர்கள் எவரும் சரியான முறையில் இலங்கையின் தேசிய இன முரண்பாடுகள் வர்க்க முரண்பாடுகள் ஆகியவற்றின் வேறுபட்ட தன்மைகளினையும் அவை வேறுபட்ட முறையில் தீர்க்கப்பட வேண்டியதனையும் இனம் கண்டு கொள்ளவில்லை. இவ்வாறான வர்களுக்கு மாவோவின் முரண்பாடுபற்றிய விளக்கத்தின் ஒரு பகுதியினை இங்கு காட்டிக் காட்ட வேண்டியது அவசியமாகவுள்ளது.

''தன்மையில் வேறுபட்ட முரண்பாடுகள் தன்மையில் வேறுபட்ட முறைகளாற் தான் தீர்க்கப்பட முடியும். உதாரணமாக, பாட்டாளி வர்க்கத்திற்கும் பூர்ஷுவா வர்க்கத்திற்கும் இடையிலுள்ள முரண்பாடு சோசலிசப் புரட்சி முறையாற் தீர்க்கப்படுகிறது; பரந்துபட்ட மக்களுக்கும் நிலப்பிரபுத்துவ அமைப்புக்கும் இடையிலுள்ள முரண்பாடு ஜனநாயகப் புரட்சி முறையால் தீர்க்கப்படுகிறது; காலனிகளுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலுள்ள முரண்பாடு தேசியப் புரட்சி யுத்த முறையாற் தீர்க்கப்படுகிறது. சோசலிச சமுதாயத்தில் தொழிலாளி வர்க்கத்திற்கும் விவசாயி வர்க்கத்திற்கும் இடையிலுள்ள முரண்பாடு விவசாயத்தைக் கூட்டுறவு மயமாக்கி, யந்திரமயமாக்கும் முறையால் தீர்க்கப்படுகிறது: கம்யூனிஸ்ட் கட்சிக்குள் நிலவும் முரண்பாடு விமர்சனம், சுயவிமர்சனம் என்ற முறையால் தீர்க்கப் படுகிறது: சமுதாயத்திற்கும் இயற்கைக்கும் இடையிலுள்ள முரண்பாடு உற்பத்தி சக்திகளை விருத்தியாக்கும் முறையால் தீர்க்கப்படுகிறது. ..... வேறுபட்ட முரண்பாடுகளைத் தீர்க்க வேறுபட்ட முறைகளை உபயோகிக்கும் கோட்பாடு மார்க்ஸிஸ லெனினிச வாதிகள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு கோட்பாடு. எமது வரட்டுத் தத்துவவாதிகள் இந்தக் கோட்பாட்டை அனுஷ்டிப்பதில்லை; வெவ்வேறு வகையான புரட்சியில் நிலைமைகள் வேறுபடுகின்றன என்பதை அவர்கள் புரிந்து கொள்வதில்லை; அதற்குப் பதிலாக மாற்ற முடியாத சூத்திரம் எனத்தாம் கற்பனை செய்யும் ஒன்றை எப்போதும் கடைப்பிடித்து அதைத் தம் மனம் போனபடி எதிலும் பிரயோகிக்கின்றனர்.''

(மாவோ - முரண்பாடுபற்றி 1937)

மாவோவின் மேற்கண்ட கூற்றுக்களை ஒவ்வொரு மார்க்ஸிஸ்டும் தான் தொடர்புபட்டு நிற்கும் விடயங்களிலும் அதனைத் தீர்ப்பதற்கான புரட்சியிலும் மனம் கொள்வது அவசியமாகும்.

இலங்கைத் தேசிய ஒருமைப்பாட்டு வாதம், ஈழத் தேசிய வாதம், ஈழத்தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பாக பலரால் குறிப்பாக வைதிக மார்க்ஸிஸ்டுகளால் முன்வைக்கப்படும் அடிப்படையான வாதங்களுக்கு சரியான மார்க்ஸிய நோக்கு நிலையில் நின்று விடையளிக்கும் அடிப்படை நோக்கத்துடன் இங்கு விளக்கங்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ் விளக்கங்களும் விமர்சனங்களும் வைதிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்ஸிஸ்டுகளே மட்டுமல்லாது ஈழப்போராளிகளையும் ஈழத்தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒரு முறை தெளிவாக உற்றுநோக்கும்படி கேட்டுக்கொள்கின்றன.

1.3 ஈழப் போராளிகள் விடயத்தில் வைதிக மார்க்ஸிஸ்டுகள் :

இலங்கைத் தேசிய ஒருமைப்பாடும், ஈழத் தேசிய விடுதலைப் போராட்டமும் இங்குள்ள பல மார்க்ஸிஸ்டுகளினால் தனிப்பட்ட அல்லது கட்சி நிலைப்பட்ட விருப்பு வெறுப்பு, நிலையியல் கண்ணோட்டத்திலேயே நோக்கப்படுகின்றன. இன்றைய பெரும்பாலான மார்க்ஸிஸ்டுகள் மார்க்ஸியத்தின் ஆய்வு முறையையும், அணுகு முறையையும், அதன் அடிப்படை நோக்கத்தினையும் அவதானத்திற் கொள்ளத் தவறி விட்டவர்களாகவும்; சர்வதேச மார்க்ஸியக் கட்சிகளின் கோட்பாட்டுமுரண்பாடுகள், சோசலிச நாடுகட்கிடையேயுள்ள (புரட்சிக்குப் பிற்பட்ட சமுதாயங்கட்கிடையேயுள்ள) முரண்பாடுகள் ஆகியவற்றின் அடிபாடுகளின் அலைகளினால் மூழ்கடிக்கப்பட்டு விட்டவர்களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நிலவுகின்ற ஏகாதிபத்திய முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ அமைப்புக்களுக்கும் அதன் பாதுகாவலர்களுக்கும் எதிராக வெவ்வேறு நிலைகளினின்று ஆயுதங்களையும், சுலோகங்களையும் உயர்த்துகின்ற சக்திகள் அனைத்திலும் இருக்கும் முற்போக்கு சக்திகளுக்குக் கைகொடுப்பதன் மூலம் சுரண்டும் வர்க்கத்தின் நிலைகளைப் பலவீனப்படுத்த வேண்டிய இந்த மார்க்ஸிஸ்டுகள் அதற்கு மாறாக தமது கட்சி நலன் சார்ந்த தத்துவக் கோல்களினால் முற்கூறப்பட்ட சக்திகளின் சுலோகங்களையும், நடவடிக்கைகளையும், அளந்து பார்க்க முற்படுபவர்களாகவும்; அவை அக்கோல்களுக்குச் சம அளவுடையவையாக இல்லையென்பதற்காக நட்புக் கொண்டு நெறிப்படுத்தப்பட வேண்டிய முற்போக்கு சக்திகளை எதிரிகளாக்கிக் கொண்டும் இருக்கிறார்கள்.

மக்கள் மத்தியில் கூர்மையடைந்திருக்கும் பிரச்சினைகளையும், அப்பிரச்சினைகளைச் சார்ந்திருக்கும் புரட்சிகர சக்திகளின் முற்போக்குக் குணவியல்புகளையும் விளங்கிக் கொள்ளத் தவறி விடுவதனால் இவ்வாறான மார்க்ஸிஸ்டுகள் மக்கள் மத்தியில் இருந்து அந்நியப்படுத்தப்படுவது தவிர்க்கப்பட முடியாததாகின்றது. இதன் காரணமாகவே முற்கூறப்பட்ட புரட்சிகர சக்திகள் மக்கள் விரோத பூர்ஷுவா, குட்டி பூர்ஷுவா சக்திகளினால் பிழையான முறையில் வழிப்படுத்தப்பட்டு அழிக்கப்படும் நிலையும் ஏற்படுகின்றது.

இந்நிலையில் ஓர் உண்மையான மார்க்ஸிஸ்டின் கடமையென்னவெனின் ஏகாதிபத்திய முதலாளித்துவ நிலவுடமை, அமைப்பினுள் எழும் எந்தவொரு முரண்பாட்டையும் அவை தொடர்பாகத் தோற்றம் பெறும் புரட்சிகர சக்திகளையும் அவ் அமைப்பை அழித்தொழிக்கும் வகையில் பயன்படுத்திக் கொள்வதேயாகும். அதை விடுத்து முதலாளி - தொழிலாளி முரண்பாடு கூர்மையடையும்வரை பொறுமையோடு ஒரு மார்க்ஸிஸ்டு காத்திருப்பானையின் அவன் இன்றைய நவீன ஏகாதிபத்தியத்தினால் ஏமாற்றப்படுபவனாகவே இருப்பான்.

1.4 நவீன ஏகாதிபத்தியத்தின் புதிய இயல்புகள்

முதலாளித்துவத்தின் வளர்ச்சி, முதலாளித்துவத்தின் காலனித்துவ ஊடுருவல் என்பன நிலவுடமை சமூக அமைப்பின் அத்தனை குணம்சங்களையும் அழித்துவிடும்; முதலாளி - தொழிலாளி தவிர்ந்த ஏனைய முரண்பாடுகள் யாவும் தன்னியல்பாகவே படிப்படியாக இல்லாதொழிந்து விடும்; இறுதியில் முதலாளி - தொழிலாளி முரண்பாடு மட்டுமே எஞ்சி நின்று, அது வளர்ச்சி நிலையில் தன்னியல்பாகவே புரட்சிக்கு வழிவகுத்து நிற்கும் என்றுதான் மார்க்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியிருந்தார். ஆனால் அது உலக முதலாளித்துவத்தின் வரலாற்றியக்கத்தில் தவறி விட்டது என்றுதான் கூறவேண்டும்.

இன்று வளர்ச்சியடைந்து நிற்கும் நவீன ஏகாதிபத்தியமானது தேசங்களிற் கிடையேயான முரண்பாடுகள்; தேசங்களின் உள் நிலைப்பட்ட காலனித்துவ முரண்பாடுகள்; தேசிய இனங்களுக் கிடையேயான முரண்பாடுகள்; சாதி, சமய, நிற, பிரதேச முரண்பாடுகள்; கிராம - நகர முரண்பாடுகள்; விவசாயி - தொழிலாளி முரண்பாடுகள்; அரசாங்கத்துறை - தனியார் துறை முரண்பாடுகள்; பணித்துறை ஆட்சியில் உயர் அதிகாரிகள் - சேவைத்தொழிலாளர் முரண்பாடுகள் போன்ற சகல முரண்பாட்டு வடிவங்களையும் உள்வாங்கி, பாதுகாத்து, தூபமிட்டு வளர்த்து வருகின்றது. இதன் மூலம் முதலாளி, நிலப்பிரபு - தொழிலாளி, விவசாயி முரண்பாட்டினைக் கூர்மையடைய விடாது தணித்துக் கொண்டு அல்லது மறைத்துக் கொண்டே உயிர் வாழ்ந்து வருகின்றது.

எனவே, இன்று சுரண்டல் அமைப்பை அழித்தொழிக்க வேண்டுமாயின்; பாட்டாளி வர்க்க சர்வாதிகார அமைப்பை ஏற்படுத்த வேண்டுமாயின் தேசங்களினதும் மக்களினதும் வெவ்வேறுபட்ட நிலைகளைத் தெளிவாக உணர்ந்து, அவைகளுக்கிடையே கூர்மையான வகையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பிரதான முரண்பாடுகளைக் கையாள வேண்டும்.

எந்தவொரு சுரண்டல் அமைப்பினதும் எல்லா முரண்பாடுகளும் முதலாளி - தொழிலாளி, நிலப்பிரபு - விவசாயி முரண்பாட்டின் அடித்தளத்தைக் கொண்டவையேயாகும். ஆனால் எல்லா வேளைகளிலும் இதே வடிவத்தில்தான் கட்டாயமாக முரண்பாடு கூர்மையடைந்து வெளிப்படுமென்றில்லை. இன்றைய நவீன ஏகாதிபத்திய அமைப்பின் கீழ் வெவ்வேறுபட்ட வடிவங்களிலேயே அவை வெளிப்படுகின்றன அல்லது திசை திருப்பப்பட்டிருக்கின்றன.

ஆகவே கூர்மையடைந்து வெளிப்பட்டு நிற்கும் பிரதான முரண்பாடுகளைக் கையாள்வதன் ஊடாகவே அடிப்படை முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பது சாத்தியமாகும். இதை விடுத்து வான வெளியில் தொழிலாள வர்க்க இயக்கத்தைக் கட்டியெழுப்பிப் புரட்சி செய்வதென்பது சாத்தியமில்லை.

1.5 - மக்களைக் கூறுபோடுதல்:-

மக்களிடையேயுள்ள குழு நிலைப்பட்ட-இனநிலைப்பட்ட அல்லது பிரதேசநிலைப்பட்ட அல்லது மற்றும் அவை போன்ற வகைப்பட்ட - முரண்பாடுகளினூடாக மக்களை அரசியல் ஸ்தாபனமயப்படுத்துவதன் மூலம் அமையும் உண்மையான மக்கள் ஐக்கியத்தை ஏற்படுத்தத் தவறுவதனால் - அர்த்த மற்ற வகையில் சர்வதேச ஒருமைப்பாட்டு வாதத்தை பிழையான முறையில் முன்வைப்பதனால் - மக்கள் விரோத, சுரண்டும் சக்திகள் மக்களைப் பிரித்துவைத்து மோதவிட்டு தங்கள் நலனைச் சுலபமாக அடைந்து கொள்கின்றன. இன்றைய ஏகாதிபத்தியம் ஆனது தேசிய முதலாளிகட்கிடையேயும், நிலவுடைமையாளர்கட்கிடையேயும் உள்ள போட்டிக் குணவியல்புகளைப் பயன்படுத்தி அவர்களைக் கூறுபோடுவதன் மூலமே தன்னை நிலை நிறுத்திக் கொள்கின்றது. அதன் தொடர்ச்சியாக தேசிய முதலாளிகளும் நிலவுடைமையாளர்களும் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஏதோ ஓர் அடிப்படையில் கூறு போடுவதன் மூலமே தமது சந்தைகளையும், இலாபங்களையும், நிலங்களையும் பாதுகாத்துக் கொள்கின்றனர். அதிலும் ஏகாதிபத்தியம் 1930 களில் எதிர் நோக்கிய பெரும் மந்தத்தைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட அரச ஏகபோக முதலாளித்துவம் பெரும்பான்மை - சிறுபான்மை வடிவில் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் கூறுபோடுவதன் மூலமே தனது அதிகாரத்தையும், ஏகாதிபத்திய உறவுகளையும் பாதுகாத்துக் கொள்கிறது.

ஆகவே மொத்தத்தில் சகல சுரண்டும் சக்திகளும் இன்று சுரண்டப்படும் சக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கூறுபோடுவதன் மூலமே தமது சுரண்டல் அமைப்பைப் பாதுகாத்துக் கொள்ள முற்படுகின்றன.

இவ்வாறான நிலையில் மார்க்ஸிஸ்டுகளின் சரியான நடைமுறை என்னவெனில், மக்கள் மத்தியில் கூர்மையடைந்து வெளிப்பட்டு நிற்கும் பிரதான முரண்பாடுகளின் வீச்சாக மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் மனோபாவங்களினையும், விருப்பங்களினையும், தொழிலாள விவசாயி வர்க்கம் கூறுபடுத்தப்பட்டிருக்கும் நிலைகளினையும் தெளிவாக அறிந்து அதற்கூடாக மக்கள் சக்தியை வென்றெடுக்கும் வகையில் தீர்வுகளையும் நடைமுறை வேலைத்திட்டங்களையும் முன் வைத்துச் செயற்படுவதன் மூலம் மக்கள் சக்தியை அரசியல் ஸ்தாபனமயப்படுத்தி மக்கள் விரோத சக்திகளினை முறியடிப்பதுவும், சுரண்டல் அமைப்புக்களைத் தகர்த்தெறிவதுமே ஆகும்.

மக்களின் குழு நிலைப்பட்ட முரண்பாடுகளையும் மனோபாவங்களையும் கையாளுதல் எனும் விடயத்தினை ''மக்களைப்பிரித்து மோதவிடல்'' என அர்த்தம் கொள்வதானது அக்கையாள்கை எந்தச் சக்திகளினால்; எந்த நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை இனம் கண்டு கொள்வதிலேயே தங்கியுள்ளது.

2 - தேசிய வாதமும் வர்க்கப் புரட்சியும்

2.1 - தேசியமும் புரட்சியும்:-

நிலப்பிரபுத்துவத்தை உடைத்தெறிந்து கொண்டு அதற்குள்ளேயிருந்து முகிழ்த்த முதலாளித்துவத்தின் முதலாளிகள் தமக்கான விரிவான சந்தையினைப் பெறுவதற்காக முயல்கையில் ஏற்பட்ட போட்டிகள் யுத்தங்களாகின. இவ் யுத்தங்களின் மூலமே நவீன உலகின் அரச எல்லைகள் வரையறுக்கப்பட்டன. அவ்யுத்தங்களின் போதும், பின்னர் உருவாக்கப்பட்ட அரச எல்லைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஒவ்வொர் அரசினதும் பூர்ஷுவாக்கள் தேசிய வாத, தேசிய ஒருமைப்பாட்டுவாத உணர்வுகளை மக்களுக்கு ஊட்டினர். இவ்வாறாக உருப்படுத்தப்பட்ட தேசிய எல்லைகளைப் பயன்படுத்தி அதற்குள்ளேயே வைத்து முதலாளித்துவத்தைச் சாகடித்து விட கார்ல் மார்க்ஸ் முயற்சித்தார்.

> ''பூர்ஷுவாக்களை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டம், உள்ளடக்கத்தில் இல்லையேனும் எப்படியும், வடிவத்தில், ஆரம்பத்தில் தேசியப் போராட்டமாகவே இருக்கின்றது. ஒவ்வொரு நாட்டின் பாட்டாளி வர்க்கமும் தனது நாட்டின் பூர்ஷுவாக்களுடன் தான் முதலில் கணக்குத் தீர்த்துக் கொள்ள வேண்டியதாகவிருக்கின்றது.
>
> (மார்க்ஸ் 1847)

மார்க்ஸின் இவ்வெண்ணம் அவரால் நடைமுறைப்படுத்தப்படாது போன போதிலும் லெனின் அவர்கள் மார்க்ஸிய ஆயுதத்தைத் தாங்கிக்கொண்டு, முதன்முதலாக றஷ்ய சாம்ராஜ்ய எல்லைக்குள் வாழ்ந்த முதலாளித்துவத்தைச் சாகடித்து புவியின் ஆறில் ஒரு பங்கு நிலப்பரப்பின் முதலாளித்துவத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் மியூசியத்திற்கு அனுப்பினர்.

இதைத் தொடர்ந்து உலகின் பல்வேறு பாகங்களில் முதலாளித்துவமும் நிலப்பிரபுத்துவமும் துடைத்தழிக்கப்பட்டன. இவ் வேளைகளில் மார்க்ஸினதோ, லெனினினதோ அல்லது ஏனைய மார்க்ஸிஸ்டுகளினதோ செயற்பாடு தேசிய அரசுகளின் எல்லைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்கான ''தாய்நாட்டு அல்லது தந்தையர் நாட்டு''க்கு சேவகமாக இருக்கவில்லை. அதற்கு மாறாக அவ்வெல்லைக்குள், வைத்து முதலாளித்துவத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும் துடைத்தழித்து அதன் மீது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்தும் நோக்குடையதாகவே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் உலக மகாயுத்தத்தின் போது லெனின் அனைத்து நாடுகளினதும் தொழிலாள வர்க்கத்தை நோக்கி,

"இப்போதைய ஏகாதிபத்திய யுத்தத்தை ஓர் உள்நாட்டு யுத்தமாக மாற்றவேண்டும் என்பதே ஒரே சரியான பாட்டாளி வர்க்கக் கோஷமாகும்...."

"சந்தர்ப்ப வாதத்திடமிருந்து தீர்மானமான முறையில் துண்டித்துக் கொண்டாலொழிய, அது படுதோல்வியுறுவது தவிர்க்க முடியாதது என்பதை வெகு ஜனங்களுக்கு விளக்கிக் கூறினாலொழிய, இன்றைய கட்டத்தின் சோசலிசத்தின் குறிக்கோள்களை நிறைவேற்ற முடியாது; தொழிலாளர்களின் மெய்யான சர்வதேச ஒற்றுமையை எய்த முடியாது..."

"இந்தப் பாதையின் மூலம் மட்டும்தான் பாட்டாளி வர்க்கமானது தேசியவெறி கொண்ட பூர்ஷுவாக்களைச் சார்ந்திருக்கும் நிலையை உதறியெறிய முடியும்; தேசங்களின் மெய்யான சுதந்திரம் நோக்கியும், சோசலிசம் நோக்கியும் ஏதேனும் ஒரு வடிவத்தில், ஏறத்தாழ துரிதமாக, தீர்மானமாக அளவுகள் எடுத்து வைக்க முடியும்."

(லெனின் 1914)

என்று கூறியவற்றிலிருந்து இதனைத் தெளிந்து கொள்ள முடியும்.

ஆனால், புரட்சியில் முகிழ்த்த புதிய சோசலிச அமைப்புக்களை அழித்துவிட ஏகாதிபத்திய முதலாளித்துவ சக்திகள் பல்வேறு வழிகளிலும் முற்பட்ட வேளைகளில் மார்க்ஸிஸ்டுகள் அச்சோசலிச அமைப்புக்களின் மக்களிடம் தேசிய ஒருமைப்பாட்டைக் கோரினர்; தேசியவாதப் பதாகைகளையுயர்த்தினர். இவற்றிற்குக் காரணம் ஏகாதிபத்திய முதலாளித்துவத்தினால் உருவாக்கப்பட்ட எல்லைகளைப் பாதுகாக்க வேண்டுமென்பதாகவல்லாமல், ஏற்படுத்தப்பட்டிருந்த பாட்டாளி வர்க்க சர்வாதிகார அமைப்பைப் பாதுகாக்க வேண்டும் என்பது பிரதான நோக்கமாக இருந்தமையேயாகும். ஏனெனில் இதே சிந்தனையாளர்கள் தான், முன்னர் பார்த்தபடி, பூர்ஷுவாக்கள் தேசியவாதம் தேசிய ஒருமைப்பாட்டு வாதத்தை மக்கள் முன்வைத்து யுத்தத்தில் ஈடுபட்டபோது தொழிலாள வர்க்கத்திற்கு "தேசியம்" என்ற ஒன்று இல்லையென்று வாதிட்டவர்கள் ஆவர்.

எனவே தேசியவாதமும் தேசிய ஒருமைப்பாட்டு வாதமும் எந்தக் கட்டத்தில், எந்தத் தேவைகளுக்காக தொழிலாள வர்க்கத்துக்கு அவசியம் என்பதை மார்க்ஸிஸ்டுகள் தெளிவாக விளங்கிக் கொண்டால்தான் அவர்கள் உண்மையான மார்க்ஸிஸ்டுகளாக இருப்பது சாத்தியமாகும்.

2.2 தேசிய வாதமும் தேசிய ஒருமைப்பாட்டு வாதமும் :

தேசிய வாதம், தேசிய ஒருமைப்பாட்டு வாதம் என்பவற்றின் வரலாற்றிபக்கத்தினையும்; அவை யார் யாரினால் எந்தெந்த கட்டங்களில், எந்தெந்த மட்டங்களில், எந்தெந்த நோக்கங்களுக்காக எழுப்பப்பட்டன-எழுப்பப்படுகின்றன என்பதையும்; நவீன உலக முதலாளித்துவம் எவ்வாறு இயங்குகின்றது என்பதையும் விளங்கிக் கொள்வதன் மூலமே இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்கள் விடயம் சார்பாக இலங்கைத் தேசிய ஒருமைப்பாட்டு வாதம், ஈழத் தேசிய வாதம் என்பனவற்றுள் எதனை மார்க்ஸிஸ்டுகள் தெரிவு செய்வது என்பதனைத் தெளிவு படுத்திக் கொள்வது சாத்தியமாகும்.

தேசிய வாதம், தேசிய ஒருமைப்பாட்டு வாதம் என்பன பெரும்பாலும் பலரால் ஒரே அர்த்தத்தையுடைய இரு சொற்றொடர்களாகவே கருதப்படுகின்றன. ஆனால் அவையிரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடையவையாயினும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவையாகும். இவையொவ்வொன்றினதும் இயக்கத்தையும்; இவ்விரண்டுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிடையேயுள்ள தொடர்புத் தன்மையையும்; வேறுபட்ட உள்ளடக்கங்களினையும் விளங்கிக் கொள்ளத் தவறுவதனாலேயே பலர் இலங்கைத் தேசிய ஒருமைப்பாட்டு வாதத்திற்கும், ஈழத்தேசிய வாதத்திற்கும், ஈழத் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் இடையிலான தொடர்பினை விளங்காது ஈழத் தேசிய வாதம் பற்றிக் கதைக்கையில் தம்மைக் குழப்பிக் கொள்கின்றனர்.

தேசிய வாதம், தேசிய ஒருமைப்பாட்டு வாதம் எனுமிரண்டும் நவீன வரலாற்றில் உருவான நிலைகளினின்று அவதானிப்பின் தேசிய வாதம் ஆனது வெளிநோக்கியதொரு வெளிப்பாடு ஆகவும் தேசிய ஒருமைப்பாட்டு வாதம் ஆனது உள்நோக்கியதொரு வெளிப்பாடு ஆகவும் தொழிற்பட்டதைக் காணலாம். ஒரு முதலாளித்துவ அரசானது தனது அரச எல்லைக்குட்பட்ட சந்தையைத் தொடர்ந்தேர்ச்சியாகப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு; ஏனைய முதலாளித்துவப் போட்டியாளர்கள் அபகரித்துக் கொள்ளாதிருக்கும் பொருட்டு அவர்களுக்கெதிராகத் தேசிய வாதத்தை எழுப்புகிறது. அதேவேளை முதலாளித்துவம் தன்னுட்சிக்கு உட்பட்ட சந்தை ஏதாவது காரணங்களினால் பிளவுபட்டுப் போகும் நிலையேற்படும் போது தேசிய ஒருமைப்பாட்டு வாதத்தை வலியுறுத்துகின்றது. எனவே தேசிய வாதமும் தேசிய ஒருமைப்பாட்டு வாதமும் எங்கு நோக்கித் தொழிற்படுகின்றன என்னும் வகையால் வேறுபடுகின்றன. எனினும் அவையிரண்டும் பூர்ஷுவாக்களின் நலன்களையே மையமாகக் கொண்டுள்ள வகையால் ஒற்றுமைப்படுகின்றன.

சுரண்டல் உலக அமைப்பில் தேசிய வாதம், தேசிய ஒருமைப்பாட்டு வாதம் ஆகிய இரண்டிற்குமிடையேயுள்ள இயங்கியல் தொடர்பினை முதலில் இனம் காண்பதும் அவசியமாகும். ஒரு தேசிய வாதம் ஆனது அதன் எதிர் முனைப்பட்ட மற்றொரு தேசிய வாதத்தோடு முரண்பாடு கூர்மையடையக் கூர்மையடைய அவை ஒவ்வொன்றினுள்ளும் தேசிய ஒருமைப்பாடு வலுவடைகின்றது. மாறாக, தேசிய வாதங்கட்கிடையேயான முரண்பாடுகள் நலிவடைய நலிவடைய அவை யொவ்வொன்றினுள்ளும் உள்ள தேசிய ஒருமைப்பாடு சிக்கலுக்குள்ளாகின்றது. ஒரு தேசிய வாதம் வலுவடைந்து செல்கையில் அதன் இடைக்கட்டத்தில் அதனுள்ளீடியான தேசிய ஒருமைப்பாட்டில் காணப்படும் சில சிக்கல்கள் குறைபாடுகள் என்பன அத்தேசிய வாதத்தின் வலுவடையும் போக்கினை மறுத்துவிடப் போதிய நியாயங்களாகா. ஆனால் எதிர் முனைப்பட்ட தேசியவாத முரண்பாடுகள் நலிவடைந்து செல்லும் போது அவையொவ்வொன்றினுள்ளும் தேசிய ஒருமைப்பாடு நலிவடைந்து நலிவடைந்து ஒரு கட்டத்தில் அவற்றினுள்ளேயிருந்து புதிய தேசிய வாதங்கள் தோற்றம் பெறுதல் கூடும். ஒவ்வொரு தேசிய வாதத்தினதும் அடிப்படை வடிவம் ஒடுக்குதல் ஒடுக்கப்படுதல் என்பன என்ன அடிப்படையில் நிகழுகின்றன என்பதனால் நிர்ணயிக்கப்படுகின்றனவே தவிர ஏற்கனவே வேறு சூழ்நிலைகளில் வரையறுக்கப்பட்ட வரைவிலக்கணங்களினால் நிர்ணயிக்கப்படுவதில்லை.

மேலும், தேசிய வாதம், தேசிய ஒருமைப்பாடு, ஆகியவற்றோடு வர்க்கப் புரட்சி எனும் விடயத்தையும் தொடர்பு படுத்தி நோக்கும்போது அவற்றின் தொடர்பியக்கத்தினைப் பின்வருமாறு எளிமையான முறையில் பொதுமைப்படுத்தி வகைப்படுத்திக் கண்டு கொள்ளலாம்.

1. இரு பூர்ஷுவா ஆட்சியமைப்புக்கட்கிடையேயான போட்டியானது முரண்பாடுகளாகி யுத்தமாக உருவெடுக்கும் நிலையில் இருபுறமும் தேசிய வெறி ஊட்டப்படும். அவ்வேளை ஒவ்வொரு தேசிய அமைப்பினுள்ளும் தொழிற்படும் தேசிய ஒருமைப்பாடு தேசிய இனங்களின் வடிவில் நலிவடைவது தடைப்படினும் யுத்தச் செலவுகள், யுத்த இழப்புக்கள் ஒவ்வொரு தேசிய அமைப்பினுள்ளும் உள்ள பெரும்பான்மை மக்களான தொழிலாளி விவசாயி வர்க்கத்தின்மீதே இன வேறுபாடுகளுக்கப்பால்– நேரடியாகவோ, மறைமுகமாகவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமத்தப்படும். ஆகையால் ஒவ்வொரு பூர்ஷுவாத் தேசிய அமைப்பினுள்ளும் இன முரண்பாடுகளை விட வர்க்க முரண்பாடுகள் கூர்மையடைந்து, பூர்ஷுவா ஆட்சியின் உண்மையான பலம் நலிவடைந்து வர்க்கப் புரட்சிக்குச் சாதகமான நிலைமைகள் மேலும் மேலும் வளர்ச்சியடையும்.

2. ஒரு பூர்ஷுவா அரசு எதிர்முனைப்பட்ட ரீதியில் மற்றொரு பூர்ஷுவா அரசுடன் போட்டி முரண்பாட்டிலான யுத்தத்தில் ஈடுபட்டிருக்காதபோது அதன் உள்ரீதியில் தேசிய வாதங்கள் எழுச்சி பெறுவதும் அல்லது வர்க்க முரண்பாடு கூர்மையடைவதும் இடம் பெறும். ஆனால் இதில் எது முதன்மை பெறும் என்பது அத்தேசிய அமைப்பின் அரசியல் பொருளாதார சமூக இயக்கத்தினால் நிர்ணயிக்கப்படுகின்றது. காலனித்துவத்திலிருந்து அரசியல் விடுதலை பெற்ற பெரும்பாலான நாடுகளில் – குறிப்பாக ஆசிய நாடுகளில் – உள்ரீதியில் தேசிய வாதங்களே எழுச்சி பெற்றன.

பூர்ஷுவா அரசுகள் யுத்தத்தில் ஈடுபட்டபோது அவ்யுத்தத்தைப் பாட்டாளி வர்க்கம் புரட்சியாக மாற்றி தொடர்ந்து தேசியப் பிரச்சினைகள் யாவற்றிற்கும் தீர்வு கண்டு கண்ட அமைப்புக்களில் உள்ரீதியில் தேசிய வாத முரண்பாடுகள் எழவில்லை:

யுத்தங்களின்போது அல்லது காலனித்துவ விடுதலைப் போராட்டத்தின் போது உழைக்கும் வர்க்கத்தின் புரட்சியைத் தவிர்த்துக் கொண்ட பல்லினங்களைக் கொண்ட அரச அமைப்புக்களில் பின்னர் தேசிய இன வடிவிலான தேசியவாத முரண்பாடுகள் அத்தேசத்தின் வர்க்க முரண்பாட்டினை விழுங்கிக் கொண்டு வெளிக்கிளம்பி வளர்ச்சியடைகின்றன.

3. பல்தேசிய இனங்களைக் கொண்ட ஒரு பூர்ஷுவா அரசமைப்பினுள் தேசிய வாத முரண்பாடுகள் தேசிய ஒருமைப் பாட்டைச் சீர்குலைக்கின்றன. அடிப்படையில் சர்வதேசிய ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கும் காரணிகளே தேசிய ஒருமைப்பாட்டைச் சீர்குலைப்பதிலும் செயற்படுகின்றன.

மக்கள் அளிக்கும் வாக்கின் எண்ணிக்கையில் பெரும்பான்மையென்பதே பூர்ஷுவா ஜனநாயகத்தின் ஆட்சி அதிகாரம் நிர்ணயிக்கப்படும் அடிப்படையாகும். பண்டச் சந்தையில் போட்டியடிப்படையில் இயங்கும் பூர்ஷுவா வர்க்கம் தனது இலாபம் சார்ந்த வகையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதில் போட்டி போடுகிறது. பல்தேசிய இனங்களைக் கொண்ட அரசமைப்பில், இதன் விளைவாக, தேசிய இன முரண்பாடுகள் எழுச்சி பெறுகின்றன. அதிலும் பிரதானமாக மொழி, வரலாறு, பண்பாடு, பொருளாதாரம் ஆகியவற்றின் தனித்துவத்தால் நன்கு நிலையூன்றிக் கொண்டுள்ள இருபெருந் தேசிய இனங்களைக் கொண்ட அரசமைப்பில் தேசிய இன முரண்பாடு கூர்மையான வகையில் பிரதான முரண்பாடாக வலுப்பெறுவது மிகவும் சாத்தியமாகவுள்ளது.

மேலும் பூர்ஷுவாக்கள் தமக்கெதிராக வர்க்க முரண்பாடு கூர்மையடைவதைத் தடைசெய்யும் பொருட்டு, பெருந் தேசிய வாத இனவெறியைக் கிளப்பி சிறுபான்மையான தேசிய இனங்களின் மீது இன ஒடுக்குதலை மேற்கொள்வதும் அவசியமாகின்றது.

இவ்வாறான நிலைமைகள் தவிர்க்க முடியாதபடி சிறுபான்மை அளவான தேசிய இனங்கள் பக்கமிருந்து தேசிய வாதம் வேகமாக வளர்ச்சியடையும் நிலையை உருவாக்குகின்றன.

சிறுபான்மைத் தேசிய இனங்கள் மீது மேற்கொள்ளப்படும் இன ஒடுக்குதல் ஆனது பெரும்பான்மைத் தேசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன மக்கள் அனைவருக்கும் நன்மைய ளிப்பது போலப் பொய்த்தோற்றமளிக் கின்றது. இப்பொய்த்தோற்றத்தைப் பெரும்பான்மைத் தேசிய இனத்தைச் சேர்ந்த தொழிலாள விவசாய வர்க்கத் தினர் இனம் கண்டு; தம் இனத்தேசிய வெறியை மீறிக்கொண்டு வர்க்க முரண் பாட்டை வெளிக் கொணரவில்லையெ னின் தேசிய இன ரீதியில் தொழிலாள விவசாயி வர்க்க ஒருமைப்பாடு நலி வடைவதும் சிறுபான்மைத் தேசிய இனத்தவர் மத்தியில் தேசிய வாதம் கூர்மையாக முனைப்படைவதும் தவிர்க் கப்பட முடியாதவையாகின்றன.

4. ஒரு பூர்ஷுவா அரசமைப்பினுள் தேசியவாத முரண்பாடுகள் கூர்மை யாக முனைப்படைந்து விடின் அது இரண்டு பூர்ஷுவாத் தேசிய அரசுக ளுக்கிடையிலான போட்டி முரண்பாட் டினைக் குறிப்பிடத்தக்க அளவு ஒத்திருக்கும். இதன் பின்னர் அவ் அரச எல்லைக்குட்பட்ட முழு மக் களையும் இணைத்த வகையான தேசிய ஒருமைப்பாட்டைப் பேணுவது இலகு வான விடயமல்ல. தவிர்க்க முடியாத படி யுத்தம் போன்ற புறநிலைக் கார ணிகள் மிகத் தாக்கமான முறையில் செயற்பட்டாலொழிய அது சாத்திய மில்லை.

மூன்றும் உலகு நாடுகளில் ஊடுரு வும் பல்தேசியக் கம்பனிகளின் மூலத னத்தின் அதிகரிப்பு அந்நாடுகளில் உள் ரீதியாக நிலவும் தேசிய இன முரண் பாடுகளை அழித்து பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டை உருவாக்கும் என இன்றைய சில புத்தி ஜீவிகளிடம் நம் பிக்கை காணப்படுகிறது. இதில் எள் ளளவுக்கும் சாத்தியமிருப்பதாகத் தென் படவில்லை. ஏனெனில் அம்மூலதனங் கள் பாரிய கைத்தொழில் முதலாளித் துவ பாட்டாளி வர்க்கத்தை உருவாக்கு கின்றதா என்பது முதற் கேள்வியாக உள்ளது. அது மட்டுமல்லாது பல்தேசி யக்கம்பனிகளின் மூலதனத்தைப் பரா மரிக்கும் ஆட்சியதிகாரம் தேசிய இன வெறியைப் பராமரிப்பதன் மூலமே பாதுகாக்கப்படுகின்றது. அத்துடன் பல்தேசியக் கம்பனிகளின் தொடர்பின் நன்மையை அனுபவிக்கும் தரகு முத லாளி வர்க்கமும தமக்கிடையே போட் டியிட்டுக் கொள்கின்றன. இவ்வாறான பல உண்மைகள் நவீன உலகின் தேசிய வாத முரண்பாடுகளைத் தவிர்த்துவிட முடியாத நிலைமைகளை உணர்த்துகின் றன.

எனவே தேசியவாத முரண்பாடுகள் மூனைப்படைந்து விட்ட நிலையில் வர்க் கப் புரட்சி அத்தேசிய வாத அம்சங் களை ஏற்றுக்கொண்டே செயற்பட வேண்டியுள்ளது. ஒரு பூர்ஷுவா அரச அமைப்பினுள் உள்ள தேசியவாத முரண்பாடு யுத்தமாகத் தோற்றம் பெறுவதை தொழிலாள வர்க்கப் புரட் சியாக மாற்றியமைக்க வேண்டியது ஒவ்வொரு தேசிய வாதத்தினுள்ளும் உள்ளடங்கியுள்ள தொழிலாள விவசாய வர்க்கத்தின் கடமையாகும்.

இத் தேசியவாத முரண்பாட்டின் விளைவான யுத்தத்தினுல் பெரும்பான் மைத் தேசிய இனத்தினுள் வர்க்க முரண்பாடுகள் கூர்மையடைந்து புரட் சிக்குரிய வாய்ப்புக்கள் உருவாகும். இதனை பெரும்பான்மைத் தேசிய இன தொழிலாள விவசாய வர்க்கம் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். ஆனால் இவ்யுத்தத்தின் போது சிறுபான்மைத் தேசிய இனத்தவர் மத்தியில் உள்ளீதி யில் இன முரண்பாடு, மத முரண்பாடு, வர்க்க முரண்பாடு என்பன மறைக்கப் பட்டு இனச் சமரசமும் வர்க்க சமரச முமே ஏற்பட்டிருக்கும். இதனுல் இப் போராட்டத்தின் போது பூர்ஷுவா, குட்டி பூர்ஷுவா வர்க்கம் தலைமை தாங்குவது வழமையாகும். இதற்கு மாறாக, சிறுபான்மைத் தேசிய இனத் தவர் மத்தியில் உள்ள உழைக்கும் வர்க்கம் இத்தலைமையை முறியடித்து, அப்போராட்டத்திற்கான தலைமையைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் ஏற்று அப்போராட்டத்தைச் சோசலிசப் புரட்சியாக மாற்றுது விடின் அதன் தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றியடைந்தாலும் கூட, அதனுள் எழக்கூடிய வர்க்க முரண்பாடு, இன முரண்பாடு என்பன உள்ரீதியில் மீண்டும் கூர்மையடைந்து ஏற்கனவே கூறப்பட்டவாறு தொடர்ந்தும் இயங்குவது தவிர்க்கப்பட முடியாததாகும்.

இவ்வாறுக தேசிய வாதம் தேசிய ஒருமைப்பாட்டு வாதம் என்பன வரலாற்றில் கொண்டிருக்கும் பொது இயக்கத்தைச் சார்வ தேச அனுபவங்களின் அடிப்படையில் குறிப்பாக ஆசிய, ஐரோப்பிய அனுபவங்களிலிருந்து இனம் கண்டு கொள்ளலாம். மேற்கண்டவாறுன வரலாற்றியக்கத்தினைக் கொண்டிருக்கும் இவ்வாதங்களின் தோற்றுவாய், வரலாற்றில் இவற்றைத் தாங்கி நின்ற வர்க்கம் என்பவை தொடர்பாக நோக்கும்போது வரலாற்றின் பெரும்பாலான கட்டங்களில் இவை முதலாளிகளின் இலாப நோக்கத்தையே அடித்தளத்தில் தாங்கி நின்றன. ஆயினும் மாறுக, 20-ம் நூற்றாண்டின் பெரும்பாலான கட்டங்களில் முற்போக்குப் பாத்திரத்தையும் வகித்திருக்கின்றன. இவ்வாதங்கள் வரலாற்றில் ஏகாதிபத்திய காலனித்துவ நவகாலனித்துவ சுரண்டல் ஒடுக்கு முறைக்கெதிராகவும் நாசிச பாசிச சக்திகளுக்கெதிராகவும் தொழிற்பட்டிருக்கின்றன. அத்துடன் இன நிற, மத, சாதி, கலாச்சார ஒடுக்குமுறைகளுக்கெதிராகவும் இவை செயற்பட்டிருக்கின்றன. இன்னும் நுணுக்கமாக நோக்கிலை இயற்கை அழிவுக்கு எதிரான மக்கள் சக்தியாகவும் இவை இயங்கியிருப்பதைக் காணலாம்.

2.5 உலக மார்க்ஸிஸ்டுகளின் அனுபவம்

மார்க்ஸிஸ்டுகள் தேசிய வாதம், தேசிய ஒருமைப்பாட்டு வாதம் என்பவற்றைப் பயன்படுத்திய வரலாற்று நிலைமைகளைப் பின்வருமாறு பொதுமைப்படுத்திக் கொள்ளலாம்.

(I) ஏகாதிபத்திய பாசிச நாசிச சக்திகள் சோசலிச அமைப்புக்களை அழித்துவிட முற்பட்டபோது மார்க்ஸிஸ்டுகள்மக்கள் சக்தியை அப்பிற்போக்கு சக்திகளுக்கு எதிராக உசுப்பிவிடும் பொருட்டு தேசிய வாதப் பதாகைகளை உயர்த்தினர். அப்பிற்போக்கு சக்திகளை மக்கள் ஒரணி திரண்டு எதிர்க்கும் பொருட்டு அச் சோசலிச அமைப்பிற்குட்பட்ட மக்கள் மத்தியில் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தினர்.

(II) ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகள் மூன்றும் மண்டல நாடுகளின் காலனித்துவ, நவகாலனித்துவ சுரண்டலை மேற்கொண்டபோது – ஊடுருவ முற்பட்டபோது அந்நாடுகளின் மார்க்ஸிஸ்டுகள் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக தேசிய வாதத்தை ஊட்டினர். அவ் எதிர்ப்புப் போராட்டத்தில் மக்களை ஒன்று திரட்ட தேசிய ஒருமைப்பாட்டை வேண்டினர்.

(III) முதலாளித்துவ, நிலவுடமை அமைப்பினை – ஆட்சியினை அழித்துவிடும் பொருட்டு உழைக்கும் வர்க்கம் திரண்டெழுந்து உக்கிரமாகப் போராடிக் கொண்டிருக்கும் வேளையில் முதலாளித்துவ நிலப் பிரபுத்துவ வர்க்கங்கள் உழைக்கும் மக்கள் சக்தியைக் கூறு போட முயல்கையில் மார்க்ஸிஸ்டுகள் தேசிய ஒருமைப்பாட்டைக் கோரி நின்றனர்.

இவ்வாறுன வரலாற்றின் அனுபவத்திலிருந்து மார்க்ஸிஸ்டுகள் தேசிய வாதம் தேசிய ஒருமைப்பாட்டு வாதம் என்பவற்றை வலியுறுத்துவதற்கான நோக்கத்தையும், காலகட்டத்தையும், அவற்றின் புற நிலைமைகளையும் இனம் கண்டு ; அவை எந்தெந்த மட்டங்களில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதனைக் கற்றுக்கொள்ளுதல் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.6- இலங்கையில் புரட்சியும் அரச எல்லையும் :

இலங்கைத் தீவின் முதலாளித்துவ அரச எல்லைக்குட்பட்ட மக்கள் மீது மேற் கொள்ளப்படும் ஏகாதிபத்திய முதலாளித் துவ நிலப்பிரபுத்துவச் சுரண்டலை, ஒடுக்கு முறையை ஒழித்து அதன் அமைப்பு; ஆட்சிக்குப் பதிலாக தொழிலாள வர்க்க சர் வாதிகாரத்தை ஏற்படுத்துவதற்கான வர்க் கப் புரட்சிக்கு இலங்கை முழுவதிலுமுள்ள மக்கள் ஒரே அணியில், ஒரே தலைமையின் கீழ் திரட்ட முடிந்தால் அதை வரவேற்பதில் தவறேதுமில்லை. ஆனால் இலங்கையிலுள்ள புறநிலையான யதார்த்தங்கள் - மக்கள் மத் தியில் தேசிய இன வடிவில் கூர்மையடைந் திருக்கும் முரண்பாடுகள் – அவ்வாறான ஒரு மு ய ற் சி க் கு சாத்தியமளிக்கின்றனவா ? எனும் கேள்வியை மார்க்ஸிஸ்டுகள் எழுப்பு வது அவசியமானதாகும்.

மக்கள் சக்தியை எவ்வளவு விரிவான பரந்த அளவில் ஒன்று திரட்ட முடியுமோ அவ்வளவு விரிவாக, பரந்த ரீதியில் அணி திரட்டுவது மார்க்ஸிஸ்டுகளின் கடமையேயா கும். ஆனால் அதன் விரிவும் பரப்பும் மக் கள் மத்தியில் நிலவும் புறநிலையான சமூக முரண்பாடுகளின் – ஒருமைப் பாடுகளின் ய தா ர் த் த த் தி னூல் நிர்ணயிக்கப்படு கின்றனவே தவிர ஏகாதிபத்திய முதலாளித் துவம் த ன து சந்தைத் தேவைக்காக உரு வாக்கிய அரச எல்லைகளினால் நிர்ணயிக்கப் படுவதில்லை.

தொழிலாள வர்க்கத்துக்கு ''தேசியம்'' என்ற ஒன்று இல்லை என்று வ ர தி ட் ட கார்ல்மார்க்ஸின் சமூக தத்துவ விளக்கங் களினால் ஆளப்பட்டிருக்கும் மார்க்ஸிஸ்டுக ளின் நோக்கம் ஏகாதிபத்திய முதலாளித் துவம் உருவாக்கிய தேசங்களின் எல்லைகளைப் பாதுகாப்பதாக இருக்க முடியாது. மாறாக அத்தேசங்களின் எல்லைக்குள் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் முதலாளித்துவ நிலவுடமை அமைப்பைச் சாகடிப்பதாகவே இருக்க முடியும்.

முதலாளித்துவத்தினால் உ ரு வா க் க ப் பட்ட எல்லைக்குள் வாழும் பாட்டாளி வர்க் கம் முதலில் அவ்வெல்லைக்குட்பட்ட முத லாளிகளுடனேயே முதலில் கணக்குத் தீர்த் துக்கொள்ள வே ண் டி யு ள் ள து என்று மார்க்ஸ் கூறினார். ஆனால் இது 19-ம் நூற் றாண்டில் ஐரோப்பாவின் தே சி ய அரசுக ளுக்கு மிகவும் பொருத்தமாகவும், எளிமை யாகவும், ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக வும் இருந்தது. ஆனால் 20-ம் நூற்றாண்டில் ரஷ்ய சாம்ராஜ்ய எ ல் லை க் கு ள் வைத்து அதன் முதலாளிகளுடனும் நிலப்பிரபுக்களு டனும் கணக்குத் தீர்த்துக் கொண்ட ரஷ்ய சாம்ராஜ்யத்தின் தொழிலாள வ ர் க் க ம் வெறுமனே தொழிலாள வர்க்கம் என்பதால் மட்டுமல்லாது தேசிய இனங்களின் சுய நிர் ணய உ ரி மை என்பதினாலும் பிணைக்கப் பட்டது. ஐரோப்பிய தேசிய அரசுகளிலி ருந்து ரஷ்ய சாம்ராஜ்யத்தின் வேறுபட்ட நடைமுறைச் சூழ்நிலையை ம ா மே தை லெனின் அவர்கள் நன்கு விளங்கிக் கொண் டிருந்தபடியினால் தான் அவர் நவீன சமூக வரலாற்றின் திருப்பு முனையின் ஒரு மாபெ ரும் நாயகனாக விளங்குகின்றார்.

எனினும், 20-ம் நூற்றாண்டின் இரண் டாவது அரைப்பகுதியில் உலகில் குறிப்பாக மூன்றாம் உலகில் நிலைமைகள் மேலும் வேறு படுகின்றன. ந வீ ன ஏகாதிபத்தியத்தின் இயக்கம், அதற்குரியதான நிறுவனங்களின் தொழிற்பாடு ஆகியவற்றினால் வ ர் க் க ப் புரட்சிக்கான அணுகு முறைகள், மூலோபா யங்கள், தந்திரோபாயங்கள் மேலும் வேறு படவேண்டியுள்ளன. முதலாளிகளுடனும் நிலப்பிரபுக்களுடனும் கணக்குத் தீர்த்துக் கொள்வதற்கான தேச எல்லைகளும், அதற் காக உழைக்கும் வர்க்கத்தினை அணிதிரட்டு வதற்கான அடிப்படைகளும் புதிய அணுகு முறையில் தெ ரி வு செய்யப்பட வேண்டி யுள்ளன.

இந்த வகையில் வர்க்கப் புரட்சிக்கான வேலைகளை நிலவும் தேச அடிப்படையாகக் கொண்டும் மேற்கொள்ளலாம் அ ல் ல து புதிய உல்லைகளை உருவாக்கியும் மேற்கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளலாம். எனவே இலங்கையைப் பொறுத்த வரையில் கடந்த கால அனுபவங்களும் நிலவும் யதார்த்தச் சூழ்நிலைகளும் இலங்கை முழுவதற்குமான வர்க்கப் புரட்சியை ஒரே நேரத்தில் ஒரே அணியில் மக்களைத் திரட்டி மேற்கொள்வதற்கான சாத்திய நிலைமைகளைத் தராமையினால் இலங்கையை ஈழம், ஸ்ரீலங்கா என இரண்டு பகுதிகளாக்கி நிலவும் சுரண்டல் அமைப்பைச் சாகடிக்க முயற்சிப்பதில் தவறே - முரணே ஏதுமில்லை. அவ்வாறான ஒரு முயற்சிக்குரிய வகையிலேயே இலங்கையின் வரலாற்று வளர்ச்சி சாத்தியமளிக்கின்றது.

முதலாளித்துவ நிலவுடமை அமைப்பை அழித்தொழிப்பதனை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பது அதனை எவ்வாறு சாத்தியப்படுத்திக் கொள்ளலாம் என்பதற்கான மூல உபாயத்தினை வகுப்பதிலேயே தங்கியுள்ளது.

ஏகாதிபத்திய முதலாளித்துவ இராணுவ அரசியற் பொருளாதார சக்திகளும் அவற்றின் மூலோபாய தந்திரோபாயங்களும் புதிய பரிணாம மாற்றங்களை நோக்கி இயங்கியபோது புரட்சிக்குரிய மூலோபாயங்களும், தந்திரோபாயங்களும் நடைமுறைகளும் புதிய புதிய பரிணாம மாற்றங்களை நோக்கி இயங்கியதை சோவியத் அக்டோபர் புரட்சி, சீன மக்கள் புரட்சி, கியூபா புரட்சி, வியட்நாம் மக்கள் புரட்சி ஆகியவற்றை எடுத்துக்காட்டுகளாகக் கொண்டு அவற்றை வேறுபடுத்தியும் தொடர்புபடுத்தியும் நுணுகி அணுகுவதன் மூலம் புரிந்துகொள்வது சாத்தியமாகும்.

''காலுக்களவாகவே செருப்பைத் தைக்க வேண்டும்'' எனும் பழமொழியை இங்கு நினைவுபடுத்த வேண்டியுள்ளது. உலகின் பல்வேறு கால கட்டங்களினது பல்வேறுபட்ட அனுபவங்களை அவதானிப்பதன் நோக்கம் அவற்றைப் புதிய தேவைகளுக்கான வழிகாட்டியாகக் கொள்வதற்கேயாகும். செருப்புக்களவாகக் காலை வெட்ட முனைந்தவர்கள் அனைவரும் வரலாற்றில் மக்கள் விரோதிகளர்க்ப் பாத்திரம் வகித்து வந்துள்ளதை மார்க்ஸிஸ்டுகள் மறந்துவிடக் கூடாது.

3. இலங்கையில் இன ஒற்றுமை: சுலோகமும் அனுபவமும்

இலங்கையில் தேசிய ஒருமைப்பாட்டு வாதம் கடந்த காலத்தில் பெற்றுக்கொண்ட அனுபவத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ளும் பொருட்டு அவ்வாதத்தை யார் யார் உயர்த்தினர்கள் என்பதையும் அவர்கள் பெற்றுக் கொண்ட அனுபவத்தையும் விளங்கிக் கொள்வதும் அவசியமாகும்.

இதங்கைத் தேசிய ஒருமைப்பாட்டு வாதம் பேசும் – பேசுகின்ற பூர்ஷுவா, ஆளும் வர்க்கக் கும்பலை பிரதானமாக இரு விதமாக இனம் காணலாம்.

1. கொழும்பை மையமாகக் கொண்டு இலங்கை முழுவதையும் சந்தையாக்கிக் கொண்டு இலாபத்தைக் குவித்துக் கொண்டிருக்கும் தமிழ் - சிங்கள முதலாளிகள்.

2. அரசியல் பொருளாதார இராணுவ அதிகாரத்தைக் குவித்து வைத்துக் கொண்டிருக்கும் அரச ஏகபோக முதலாளித்துவத்தினுள் எழும் ஆதிக்கப் போட்டியினால் சிங்களப் பெருந்தேசிய இனவெறியைக் கிளப்பி தமிழ் மக்களின் உடமைகளைப் பறித்து, உயிர்களைக் குடிப்பதன் மூலம் சிங்கள மக்களை ஏமாற்றி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் சிங்கள முதலாளிகள், நிலவுடமையாளர்கள், அவர்களின் ஏஜன்டுகள்.

மேற்கண்ட இரு நிலைமைகளையும் உற்று அவதானிப்பின் அரச ஏகபோக முதலாளித்துவ ஆட்சியைக் கைப்பற்றும் பொருட்டு இனவெறி கிளப்பப்படுகின்றது. அதேவேளை ஆட்சி பிரதிநிதித்துவப்படுத்தும் முதலாளிகளின் சந்தையைப் பிளவுபடாது பாதுகாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதற்கு தேசிய ஒருமைப்பாடு கோரப்படுகின்றது. இது இலங்கையில் மட்டுமல்லாது ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் வாழும் அரச அமைப்புக்களில் இம்முரண்பாடு குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

இம்முரண்பாட்டின் விளைவாக, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள பெருந்தேசிய இனவெறி கிளறப்படுகிறது. இதனால் சிறுபான்மைத் தேசிய இனங்கள் பக்கமிருந்து தேசியவாதம் தோற்றம் பெறுகின்றது. இத்தேசியவாதம் நிலவும் விரிந்த சந்தையைப் பிளவுபடுத்தும் என்பதனால் இராணுவ அடக்குமுறைகளை முதலாளித்துவம் அதிகரிக்கின்றது. இவ் இராணுவ அடக்குமுறைகளை நியாயப்படுத்த மேலும் பெருந்தேசிய இனவெறி ஊட்டப்படுகிறது. இதனால் மேலும் சிறுபான்மைமக்களின் தேசியவாதம் வலுப்பெற்று வளர்ச்சியடைகின்றது. இவ்வாறான முரண்பாட்டுச் சக்திகளின் தாக்கத்தின் விளைவுகள் நிலவும் தேசிய ஒருமைப்பாட்டைப் படிப்படியாக சீர்குலைத்து அது புதிய எல்லைகளையும், புதிய அர்த்தத்தையும் எதிர்நோக்கும் நிலையை உருவாக்குகின்றன.

இலங்கைத் தேசிய ஒருமைப்பாட்டு வாதத்தை வலியுறுத்துவோர்களில் மேற் கூறப்பட்ட இருவகையினரை விட மேலும், சிங்கள, தமிழ்தேசிய இனங்களின்மீது தமது அதிகாரக்குதிரையைச் செலுத்திக் கொண்டிருக்கும் அரசாங்க உயர்பதவி வகிக்கும் தமிழ் உத்தியோகத்தர்களும் காணப்படுகின்றனர். இவர்களில் ஒரு பகுதியினருக்கு உத்தியோகங்களும் பதவி உயர்வுகளும், உத்தியோகத்தினால் கிடைக்கும் ஏனைய நலன்களும் இங்கு நிலவும் தேசிய இன முரண்பாடுகளின் காரணமாக தடைப்படுவதனால் அவர்கள் ஈழத் தேசிய வாதத்தை அங்கீகரிப்பவர்களாகவும், நலன்பெறும் வகையினர் தொடர்ந்தும் ஒருமைப்பாட்டு வாதத்தைக் கோஷமிடுகின்றனர். இவ்விரு வகையினரைப் பொறுத்தவரையிலும் இவர்கள் ஏந்தும் எந்த வாதமும் சுயநலத்தின் வெளிப்பாடாகவே உள்ளது.

மேலும், இலங்கைத் தேசிய ஒருமைப்பாட்டைச் சீர்குலைத்த சிங்களப் பெருந்தேசிய இனவெறி; ஈழ, தமிழ்த் தேசியவாதம் ஆகியவற்றின் செல்வாக்கினைக் கீழ்வரும் சில முக்கிய விடயங்களிலிருந்து தெளிவாக இனம்கண்டு கொள்ளலாம்.

1. சிங்களப் பெருந்தேசிய இனவெறியை மறுத்து இலங்கைத் தொழிலாள வர்க்கத்தின் தேசிய ரீதியான ஒருமைப்பாட்டைக் கருத்திற்கொண்டு செயற்பட முற்பட்ட சிங்கள மொழி பேசும் இடதுசாரிகள் பலர் சிங்கள மக்களினால் நிராகரிக்கப்பட்டார்கள்.

2. சிங்கள - தமிழ் மக்களை இணைத்து நின்று தலைமை தாங்கிய தமிழ்பேசும் இடதுசாரித் தலைவர்கள் சிங்கள தொழிலாள வர்க்கத்தினால் வெறுத்தொதுக்கப்பட்டார்கள்.

இந்த நிலைமை அரச ஏகபோக முதலாளித்துவப் பாராளுமன்ற அங்கத்துவத்துக்காக செயற்பட முற்பட்ட இடதுசாரிகளுக்கு மட்டுமல்லாது, பாராளுமன்றப் பாதைக்கு அப்பால் நின்று செயற்பட்டுக் கொண்டிருந்த இடதுசாரிகளுக்கும் இதே நிலைதான் கிடைத்தது. மேலும்,

3. தமிழ்த் தேசியவாதம் பேசித் தலைவர்களான பாராளுமன்றத்தின் தமிழ் உறுப்பினர்கள் சிலர் தமக்குப் பதவி கிடைத்த பின்னர் பெரும் பணக்காரர்களான கொழும்பு வர்த்தக முதலாளிகளின் ஏஜண்டுகளாகத் தாம் மாறுவதன் மூலம் நன்மை பெறும் பொருட்டு இலங்கைத் தேசிய ஒருமைப்பாட்டு வாதம் பேச முற்பட்டபோது அவர்கள் பெரும்பான்மைத் தமிழ் மக்களினால் தூக்கியெறியப்பட்டார்கள்.

4. பாராளுமன்றத்தின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட பூர்ஷுவா ஆட்சியாளரிடம் இருந்து தமக்காகவும் தமது சகாக்களுக்காகவும் சில நலன்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைப் பெற்று அனுபவிக்கும் பொருட்டு இலங்கையில் ஐக்கியம் பேசிய அரசியல் வாதிகள் தமிழ் மக்களினுல் துரோகிக ளெனக் கருதப்பட்டார்கள்.

5. இலங்கைத் தேசிய ஒருமைப்பாட்டு வாதம் பேசிக்கொண்டு தமிழ் மக்கள் மத்தியில் வந்த இடதுசாரிகள் (பாராளு மன்ற அரசியல் வாதிகளாயினும் சரி, அல்லது அல்லாதோராயினும் சரி) பெரும்பாலான தமிழ் மக்களிடையே அங்கீகாரம் பெறுவது இதுவரை சாத் தியமாகவில்லை.

இவ்வாருன உண்மைகள் இலங்கையின் தேசிய இன முரண்பாட்டின் கூர்மையான உணர்வுகளினையே வெளிப்படுத்தி நிற்கின் றன. ஆகவே, இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக இயக்கத்தின் வர லாற்று அனுபவம், நோக்கு; சமூக இயக் கத்தின் காலரீதியிலான பரிணும மாற்றங் கள் என்பன பற்றி ஆய்வு நோக்கின்றி, புதிய கண்ணோட்டமெதுவுமின்றி வெறு மனே மொட்டையான வகையில் இலங் கைத் தேசிய ஒருமைப்பாட்டு வாதத்தைத் தாங்கி நிற்பது தவருனதேயாகும்.

கால ஓட்டத்தில் இலங்கைத் தேசிய ஒருமைப்பாடு சிதைவடைந்ததற்கான கார ணங்களைத் தெளிவாக ஆராய்ந்தறியாமல்; சமூக மாற்றத்திற்கு ஏற்ப புதிய நடைமு றைகளைக் கடைப்பிடிக்காமல், தாம் ஏற்க னவே கொண்டிருந்த கருத்துக்களையே இலங்கை வைதீக மார்க்ஸிஸ்டுகள் எந்நா ளும் கடைப்பிடித்தமுது கொண்டிருந்தமை யினுல் அவர்கள் மக்கள் மத்தியில் இருந்து அந்நியப்படுத்தப்படவும்; 'தேசிய விருதலை' பற்றிய முழக்கங்களை மேற்கொண்ட முத லாளி, நிலவுடமை வர்க்க நலன் சார்ந்த கட்சித் தலைவர்களோடு மக்கள் ஒன்று சேர்ந்து கொள்ளவுமான நிலை மேலும் வலுப்படவும் நேர்ந்தது.

4. தேசிய இனங்களின் ஒற்றுமைக்கான சரியான நடைமுறை:

இலங்கைத் தேசிய வாதம் ஆனது 1930 களின் பின் பெரும்பாலும் சிங்களப் பெருந் தேசிய இனவெறி வாதமாகவே இயங்கி வந்திருக்கின்றது. இதற்கெதிராக இடது சாரிகள் கடந்த காலத்தில் எந்த வேளையி லும் புரட்சிகரமாக இயங்கவில்லை; இடைக் கிடை பாராளுமன்றத்தில் சில வாக்கியங் களை உதிர்ப்பதுவும், கட்சித் தீர்மானங்களை நிறைவேற்றுவதுமே இடம்பெற்றன. அதி லும் 1970 - 77 இன் ஐக்கிய முன்னணி அர சாங்கத்தில் லங்கா சமசமாஜக் கட்சியும், இலங்கை மாஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியும் தாமே சிங்களப் பெருந்தேசிய இன வெறியின் பிரதிநிதிகள் என்பதுபோல் நடந்து கொண்டார்கள். இதன் விளைவாக இக்கால கட்டத்தில் பெரும்பாலான சாதா ரண தமிழ்மக்கள் மார்க்ஸின் கம்யூனிசக் கோட்பாட்டையே சந்தேகிக்கும் நிலைமை உருவாக்கப்பட்டது. மார்க்ஸிஸ்டுகள் அனை வருமே சிங்களப் பெருந்தேசிய வாதத்துக் குத் துணை போகின்றவர்கள் என அவர்கள் கருதும் நிலை பெரும்பாலான மார்க்ஸிஸ்டு களினுல் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இலங்கை பிரித்தானியாவிடமிருந்து அரசியற் சுதந்திரத்தையடைந்த பின்னர் அதிலும் 1956-ன் பின்னர் அதுவரை தொழி லாள வர்க்கம் நம்பியிருந்த மார்க்ஸிஸ்டுகள் பெரும்பாலோர் சிங்களப் பெருந்தேசிய வாதத்தினுலை முழுமுக முழ்கடிக்கப்பட்டார் கள்.

தமிழ்மக்கள் பக்கமிருந்து வெளிப்பட்ட தேசியவாதத்தின் முற்போக்குக் குணம் சத்தை இவர்கள் உணராமல் அதனை வகுப்பு வாதம் என்று பரிகசித்துக் கொண்டும்; பெருந்தேசிய இன வெறியர்களுக்கு எதி ராகக் கடுமையாகப் போர் தொடுக்காமலும் இவர்கள் நடத்திய பாராளுமன்ற அரசிய லும், பொய்த்தனமான தேசிய ஒருவைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டைக் கூக்குரலிட்டமையும் இங்குதேசிய ஒருமைப்பாட்டைப் பேணும் வகையில் எந்தவித தாக்கத்தையும் மக்கள் மத்தியில் விளைவிக்கவில்லை.

தேசிய ஒருமைப்பாடு எந்தப் பக்கத்திலிருந்து பேணப்பட வேண்டிய விடயம் என்பது மிகமுக்கியமான விடயம் ஆகும். இதனை மார்க்ஸிடமிருந்தும், ஏங்கெல்ஸிடமிருந்தும் லெனினிடமிருந்தும் கற்றுக் கொள்வதற்கு மார்க்ஸிஸ்டுகளுக்குப் பல வாய்ப்புக்களிருந்தன.

போலந்தை ஜேர்மனி அடக்கியாண்ட போது ஏங்கெல்ஸ்,

"ஜேர்மனியர்களாகிய நாங்கள் தான், ஜேர்மன் ஜனநாயகவாதியான நாங்கள் தான் எங்கள் தேசத்தின்மீது படிந்துள்ள இந்தக் கறையைத் துடைத்தழிக்கும் முதல் நபர்களாக இருக்கவேண்டும். இதர தேசங்களை ஒடுக்கி வரும் எந்தத் தேசமும் சுதந்திரமாக இருக்க முடியாது. அதேபோல் ஜேர்மன் ஒடுக்கு முறையிலிருந்து போலந்து விடுதலை பெறுமல் ஜேர்மனியின் விடுதலை சாத்தியமில்லை.

(ஏங்கெல்ஸ் 1847)

என்சிறூர்.

ஐரிஷ் பிரச்சினை பற்றி குகல்மானுக்கு கால்மார்க்ஸ் கடிதம் எழுதுகையில்,

"……ஆங்கிலேயப் பாட்டாளி வர்க்கம் அயர்லாந்து சம்பந்தமான தனது கொள்கையை ஆளும் வர்க்கங்களின் கொள்கையிலிருந்து மிகவும் திட்டவட்டமாகப் பிரிக்காத வரையில், ஐரிஷ் மக்களை ஆதரித்து உதவுவது மட்டுமன்றி,…… ஒரு சுதந்திரமான சமஷ்டி உறவை நிறுவுவதற்கும் உண்மையில் முன்முயற்சி எடுத்துக் கொள்ளாத வரையில் அது இங்கு இங்கிலாந்தில் தீர்மானமான எதையும் ஒருபோதும் செய்ய முடியாது என்பதை மென்மேலும் உணர்ந்து வருகிறேன். இதனை ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கத்தின் மனதில் எப்படிப் பதிய வைப்பது என்பதுதான் பிரச்சினை. அயர்லாந்தின்பால் அனுதாபம் காட்டும் விஷயமாக இதைச் செய்யக் கூடாது : மாறுக, ஆங்கிலேய பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கு இது அவசியம் என்ற முறையில் இதனைச் செய்ய வேண்டும்……"

(மார்க்ஸ் 1869)

என்று குறிப்பிட்டார்.

ஜாரின் ரஷ்ய சாம்ராஜயத்தினுள் போலந்து அடிமைப்படுத்தப்பட்டிருந்த வேளையில் லெனின்,

"…வர்க்கப் பகைமைத் தற்போது சந்தேகத்துக்கு இடமில்லாமல், தேசியப் பிரச்சினைகளை வெகுதூரம் பின்னணிக்குத் தள்ளி விட்டது ; ஆனால் ஏதேனும் சில குறிப்பிட்ட தேசியப் பிரச்சினை தற்காலிகமாக அரசியல் அரங்கில் முன்னணிக்கு வராது என்று உறுதியாகக் கூறமுடியாது ; அப்படிக் கூறுவது வரட்டுத் தத்துவ வாதத்தில் போய் வீழ்வதற்கர்கத்தான் இருக்கும். முதலாளித்துவம் வீழ்ச்சியுறுவதற்கு முன்னர் போலந்தை மீட்பது பெரிதும் நடவாத காரியம் என்பதில் ஐயமில்லை; எனினும் இது முற்றிலும் சாத்தியமல்ல, என்றோ அல்லது போலந்து பூர்ஷுவாக்கள் சுதந்திரத்தை ஆதரிக்கும் சந்தர்ப்பங்கள் எழமாட்டா என்றோ கூறமுடியாது. இதனால் தனது சொந்தக் கைகளைக் கட்டிப் போட்டுக் கொள்ளும் உத்தேசம் றஷ்ய சமூக – ஜனநாயகவாதத்துக்குச் சிறிதளவும் இல்லை. தேசங்களுக்குள்ள சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதைத் தனது வேலைத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளும்போது, அது எல்லாச் சாத்தியமான, இன்னும் சொல்லப் போனால் எல்லா எதிர்பார்க்கக்கூடிய கூட்டுக்களையும் கணக்கிலெடுத்துக் கொள்கிறது.."

(லெனின் 1903)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறினர். மேலும் லெனின் அவர்கள் தமது "சோசலிசப் புரட்சியும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையும்" எனும் கட்டுரையில்,

"... ஒரு குறிப்பிட்ட அரசின் எல்லைகட்குள் ஒடுக்கப்பட்ட தேசங்கள் பலவந்தமாகப் பிடித்து வைத்துக் கொள்ளப்பட்டிருப்பதற்கு எதிராகப் பாட்டாளி வர்க்கத்தால் போராடாமல் இருக்க முடியாது. "தங்களது" தேசத்திலுள் அரசியல் வழியில் பிரிந்துபோகும் சுதந்திரம் தரப்பட வேண்டும் என்று பாட்டாளி வர்க்கம் கோரவேண்டும். இல்லாவிட்டால் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்பது வெற்று வார்த்தையாக இருக்கும்; ஒடுக்கப்பட்ட தேசத்தின் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கும் தேசத்தின் தொழிலாளர்கட்கும் இடையில் நம்பிக்கையோ அல்லது வர்க்க ஒருமைப்பாடோ சாத்தியமில்லை ..."

(லெனின் 1916)

என்று குறிப்பிடுகின்றார்.

இவையெல்லாம் எதற்காக இங்கு விரிக்கப்படவேண்டியுள்ளதெனில், இலங்கையின் வைதிக மார்க்ஸிஸ்டுகள் இலங்கையின் தேசிய இன முரண்பாடுகளை சரியாக விளங்கிக்கொள்ளாமைக்கும் அது தொடர்பாக சரியான நிலைப்பாட்டினை எடுக்காமைக்கும் காரணம் அவர்கள் மார்க்ஸியத்தை நன்கு கற்றுக் கொள்ளவில்லை என்பதனையும்; அத்துடன் தேசிய இன முரண்பாடுகளின்போது தொழிலாள வர்க்கத்தின் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது எல்வாறு சாத்தியமாகும் என்பதையும் பிரதானமாகச் சுட்டிக்காட்டும் பொருட்டேயாகும்.

பெரும்பாலான இலங்கையின் இடதுசாரிகள் இலங்கையில் தேசிய ஒருமைப்பாடு சீர்குலைந்தமைக்கு தமிழ் மக்களையே பிரதான குற்றவாளிகளாக்குகின்றனர். இவ்வாறுனவர்கள், தமிழ் மக்கள் இடதுசாரிக் கட்சிகளை கடந்த காலத்தில் ஆதரிக்காமல் வகுப்புவர்த்தக் கட்சிகளையே கடந்த காலத்தில் ஆதரித்தனர். இதனாலேயே இலங்கையின் தேசிய ஒருமைப்பாடு சீர்குலைந்தது எனக் குற்றம் சாட்டுகின்றனர். இவ்வாறுனவர்கள், இதுவரை ஒடுக்கும் இனத்துக்கும் ஆளும் வர்க்கத்திற்கும் துணைநின்று ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் துரோகம் இழைத்தது மட்டுமல்லாது; ஒடுக்கப்பட்ட மக்களின் நியாயமான போராட்டத்தைப் பலவீனப்படுத்துவதில் எந்த நேரத்திலும் அக்கறையாக இருந்திருக்கின்றார்கள்.

தேசிய ஒருமைப்பாட்டைப் பேணுவதில் ஒடுக்கும் வர்க்கத்திற்கே பிரதான பங்குண்டு என்பதை மார்க்ஸிய கர்த்தார்கள் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆனால் அது இலங்கையில் எக்காலத்திலும் எந்த அளவிலும் சரியான முறையில் ஆற்றப்படவில்லை.

ஆனால் இலங்கையில் ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்தைச் சேர்ந்த தொழிலாள வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்திய மார்க்ஸிஸ்டுகள் அனைவரும் மிக அண்மைக்காலம் வரை – பலர் இன்றும் வரை —

"ஒடுக்கப்பட்ட தேசத்தின் தொழிலாளர் கட்சும் ஒடுக்கும் தேசத்தின் தொழிலாளர்கட்கும் இடையிலான முழுமையான, நிபந்தனையற்ற ஒற்றுமையை – நிறுவன ஒழுங்கமைப்பு, ஒற்றுமை உட்பட – ஆதரித்துக் காத்து செயற்படுத்துவது ஒடுக்கப்பட்ட தேசத்தைச் சேர்ந்த சோசலிஸ்டுகள் குறிப்பாகச் செய்ய வேண்டும்"

என்று லெனின் (1916) அவர்கள் கூறிய கடமையைத் தவறுமற் செய்தார்கள். ஆனால் 'ஒரு கை தட்டி ஓசை வராது' என்னும் ஏன்னும் பழமொழிக்கேற்ப ஒடுக்கும் இனத்தின் பக்கமிருந்து செயன்முறை எதுவும் சரியாக ஆற்றப்படாமையினால் ஒடுக்கப்பட்டவர்கள் பக்கமிருந்து மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு கடமையும் பலனளிக்காது போனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழினத்தைச் சேர்ந்த மார்க்ஸிஸ்டுகள் சிலர் அவ்வப்போது தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையையும், தமிழ் மக்களின் போராட்டத்தையும் பற்றி வற்புறுத்தியபோது அவர்கள் பரிகசிப்புக்கு உள்ளாக்கப்பட்டார்கள்; அது குட்டி பூர்ஷுவாச் சிந்தனையின் வெளிப்பாடு என வர்ணிக்கப்பட்டார்கள்; தமிழ் மக்களின் பிரச்சினை என்று சொல்லப்படுவது மத்தியதர வர்க்க வெள்ளாளரின் பிரச்சினையே என்று விளக்கம் தரப்பட்டது; தமிழர்களின் தனிநாட்டுப் போராட்டம் என்பது ஆண்ட வெள்ளாளர் பரம்பரை மீண்டும் ஆள நினைக்கும் போராட்டமே என சுலோகமிடப்பட்டது. ஒடுக்கு முறையின் பல்வேறுபட்ட வடிவங்களையும் அவை படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்ததனையும் வைதிக மார்க்ஸிஸ்டுகள் சரியாக கவனத்தில் கொள்ளவில்லை.

இன்றும்கூட பெரும்பாலான வைதிக மார்க்ஸிஸ்டுகளைப் பொறுத்த வரையில் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை என அண்மைக் காலத்தில் இடம்பெற்று வரும் இராணுவ, பொலிஸ் அட்டூழியங்களை விளங்கி வைத்திருக்கின்றனரே தவிர அதன் முழுப் பரிமாணத்தையும் அவற்றின் பரிணாம வளர்ச்சியையும் தெளிவாக விளங்கியிருக்கின்றார்கள் என்று கூறமுடியாது.

மேலும் தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்கு முறையை ஒப்புக்கொள்கின்ற, தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டம் நியாயமானது என ஏற்றுக் கொள்கின்ற மார்க்ஸிஸ்டுகள் கூட இன்று வரையும் அவதானிகளாகவும் அநுதாபிகளாகவும் உள்ளனரே தவிர அதன் பேராளிகளாக இருப்பதாகத் தெரியவில்லை.

மேலும், சிங்களத் தேசிய இனவெறியர்கள் சிங்களத் தேசிய வாதத்தின் பேரால் தமிழ்த்தேசிய இனத்தின் மீது தொடர்ச்சியான ஒடுக்குமுறைகளை மேற்கொண்டபோது அதற்கெதிராக சிங்கள இனத்தைச் சேர்ந்த முற்போக்கு சக்திகள் சரியான முறையில் வெகுஜனப் போராட்டத்தைத் தொடுக்காமைக்கு வெறுமனே சிங்கள முற்போக்கு சக்திகளை மட்டும் குற்றம் சாட்ட முடியாது. அவர்களோடு அன்று கைசேர்த்து நின்ற தமிழ்பேசும் மார்க்ஸிஸ்டுகளும் முக்கிய காரணம் ஆவர். ஏனெனில் மிக அண்மைக்காலம் வரை தமிழ்ப்பேசும் மார்க்ஸிஸ்டுகள் பலர் தமிழ்த்தேசிய வாதத்தை வகுப்பு வாதம் என்றே அவர்களுக்கு இனம் காட்டி வந்துள்ளனர். அத்துடன் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளை மறைப்பதன் மூலமும், அவற்றைத் தவறான முறையில் விளக்குவதன் மூலமும் தமிழ்-சிங்கள இன ஒற்றுமையை ஏற்படுத்தமுனைந்திருந்திருக்கின்றனர். இதனால் சிங்கள முற்போக்கு சக்திகள் அண்மைக் காலம் வரை தமிழ் மக்களின் உண்மையான நிலையைப் புரிந்து கொள்ளவோ; அது தொடர்பாக அவர்கள் நெறிப்படுத்தப்படவோ வாய்ப்புக்கள் ஏற்படாது போயின.

ஆயினும், 1976 இன் பின் படிப்படியாக குறிப்பாக 1978-இன் பின் சற்றுத் தீவிரமாக தமிழ்த்தேசிய வாத இளைஞர் சக்திகளுக்கும், புத்திஜீவிகளுக்கும் சிங்கள முற்போக்கு சக்திகளுக்குமிடையே வளர்ச்சியடைந்து வந்துள்ள நேரடித் தொடர்புகள் நல்ல பல பயன்களை விளைவித்துள்ளன. அத்துடன் 1977-ல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தமையும் பாராளுமன்றவாத சோசலிசக் கட்சிகள் (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட) அனைத்தும் சிதறடிக்கப்பட்டமையும் இதுகாலவரை தேசிய இன முரண்பாடு தொடர்பாக முற்போக்கு சக்திகளிடம் நிலவிய வரட்டுவாத திரிபு வாதக் கருத்துக்கள் நலிவடையத் தொடங்கக் காரணமாயிற்று. அடிக்கடி தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் இராணுவ பொலிஸ் அட்டூழியங்கள்; தமிழர் கூட்டு முன்னணியினர் ஐ.தே. கட்சியுடனும் ஏகாதிபத்தியத் தரகு முதலாளிகளுடனும் கொண்டுள்ள வர்க்க உறவு; இதனால் ஈழத் தேசியப் போராளிகள் குறிப்பாக இளைஞர்கள் தமிழர் கூட்டணி மீது மேற்கொண்ட விமர்சனங்களும், அச்சக்திகள் தமிழர் கூட்டணித் தலைமையை உதறியெறிந்து தமக்குரிய அமைப்பையும் தலைமையையும் தாமே உரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட இலங்கையில் பிரசித்தி பெற்ற
பிடவை ஸ்தாபனம்

க. நாகமுத்து அன் சன்ஸ்

48 - 50, பெரிய கடை :: யாழ்ப்பாணம்

வட இலங்கையில் பெயர் பெற்ற
நகைகள், வைர வியாபாரிகள்

ஹரன்
ஜூவல்லர்ஸ்
"R. G. பில்டிங்"
30, கன்னுதிட்டி,
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

"கெயின்ஸ்"
நெல்லியடி

பரீட்சையில் சித்தி அடைய
நாட வேண்டிய
கல்வி நிலையம்

"கெயின்ஸ்"
நெல்லியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கிகள்	கொழும்பில் செயற்படத் தொடங்கிய ஆண்டு
இலங்கையின் சுதேச வங்கிகள்	
மக்கள் வங்கி	1961
இலங்கை வங்கி	1939
இலங்கை கொமர்சியல்வங்கி லிமிட்.	1969
ஹட்டன் நேஷனல் வங்கி லிமிட்.	1970
இந்திய, பாகிஸ்தானிய வங்கிகள் :	
இந்தியன் வங்கி	1948
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி	1946
இந்திய ஸ்டேட் வங்கி	1864
ஹபீப் வங்கி லிமிடெட்	1951
ஐரோப்பிய, அமெரிக்க மேற்கு ஆசிய வங்கிகள் (புதியன) :	
1. பாங்க் டீ எல் இந்தோசீனை எட் டீ ஸியூஸ் (இந்தோ-ஸியூஸ்)	1980
2. பாங்க் ஒப் கிறெடிட் அன்ட் கொமர்சியல் இன்டர்நேஷனல் (ஓவர்சீஸ் லிமிட்டெட்)	1979
3. சிட்டி பாங்க் என். ஏ.	1980
4. அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் இன்டர் நேஷனல் பாங்கிங் கார்ப்பரேஷன்	1980
5. பாங்க் ஒப் ஓமான் லிமிடெட்	1980
6. ஓவர்சீஸ் டிரஸ்ட பாங்க் லிமிடெட்	1980
7. பாங்க் ஒப் அமெரிக்கா	1980
8. ஐரோப்பிய ஆசிய வங்கி	1980
9. அல்ஜி மெனி பாங்க் ஒப் நெதர்லன்ட்	1980
10. ஹபீப் வங்கி என். ஜி.	1980
11. சேஸ் மன்ஹட்டன் வங்கி	1981
12. யூனியன் பாங்க் ஒப் மிடில் ஈஸ்ட்	1981
13. துபாய் வங்கி லிமிடெட்	1981
14. ஆம்ஸ்டர்டாம் ரோட்டர் டாம் வங்கி	1981
அந்நிய வங்கிகள் (பழையன)	
1. ஹொங்கொங் ஷாங்கை பாங்கிங் கார்ப்பரேசன்	1892
2. கிறின்லேய்ஸ் வங்கி	1881

SPACE DONATED BY

Popular Motors

276, Stanley Road,

JAFFNA.

Dealers in:
All Kinds of
Tyres Tubes for Vechicles.

Phone: 23669

சகல விதமான கடிகாரங்களையும்
திருத்திக் கொள்வதற்கும்,
புதியனவாகப் பெற்றுக்கொள்ளவும்
நாடவேண்டிய இடம்

டில்கா
வோச் வேக்ஸ்

404- 1/1, ஆஸ்பத்திரி வீதி

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கிக் கொண்டு போராடி வருகின்றமை (இதன் காரணமாக ஈழத் தேசியப் போராளிகள், ஆதரவாளர்களிடையேயும் குறிப்பிடத்தக்க அளவு தத்துவார்த்த சிந்தனை வளர்ச்சி ஏற்பட்டுள்ளது); ஈழத் தேசிய வாத இளைஞர் தொடர்ச்சியாக பல்வேறு வடிவங்களிலும் போராடி வருகின்றமை; இனங்களுக்கிடையேயான நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம், மனித உரிமைகள் இயக்கம் போன்றவற்றின் செயற்பாடுகள் போன்ற பல்வேறு நிலைமைகள் இன்று சிங்கள முற்போக்கு சக்திகளுக்கும் தமிழ்த் தேசிய வாதத்துக்கும் இடையே உள்ள வெளியின் அளவைக் குறைத்து வருகின்றன இன்று அவர்கள் தமிழ்த்தேசிய இன ஒடுக்கு முறைக்கெதிரான, ஈழத்தேசிய விடுதலைக்கான தமது கடமையைப் படிப்படியாக உணர்ந்து வருகின்றனர். எனினும் இன்று வரை, சிங்கள முற்போக்கு சக்திகளின் நிலை தமிழ்த்தேசிய இனத்தின் மீதான ஒடுக்கு முறையை அநுதாப வடிவில் அணுகுகின்றதே தவிர போராட்ட வடிவங்களை அது இன்னும் பெறவில்லை.

இந்நிலைமை படிப்படியாக வளர்ச்சியடைந்து தமிழ்த்தேசிய இனத்தின் மீதான ஒடுக்கு முறைக்கு எதிராக; ஈழத்தேசிய விடுதலைக்காக சிங்கள முற்போக்கு சக்திகள் ஆளும் வர்க்கத்துக்கெதிராக வெகுஜனப் போராட்டங்களை தொடுக்கும்போது தான் தமிழ் – சிங்கள ஒற்றுமைக்கான சுலோகங்களை உயர்த்துவதும் சாத்தியமாகும். மேலும் ஒற்றுமைக்கான அச்சுலோகங்கள் எதுவும் பழைய அர்த்தங்களிலாக அல்லாமல் புதிய அர்த்தங்களுடன் எழ வேண்டும். அப்போதுதான் சுலோகமானது படிப்படியாக நடைமுறையாக மாறும்.

அத்துடன் தமிழ்த்தேசிய இனத்தைச் சேர்ந்த தொழிலாளி விவசாயி வர்க்கம் சிங்களத் தேசிய இனத்தின் தொழிலாள விவசாயி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்திற்கு கைகொடுத்து நிற்பதுவும் அவசியமாகும். இவ்வாறான ஒற்றுமையை சிங்கள இனத்தோடு ஒரே அணியின் ஒரே குறிப்பிட்ட தலைமையின் கீழேயிருந்துதான் பேணவேண்டுமென்றில்லை. தமது தனித்துவத்தையும் அமைப்பையும் பேணிக் கொண்டே நடைமுறைப்படுத்தலாம். இவ்வாறான ஒருமைப்பாடு சிங்கள தேசிய இனத்தைச் சேர்ந்த உழைக்கும் வர்க்கத்தின் மீதான அநுதாபத்தின் பேரால் வெளிப்படவேண்டாம். மாறாக ஈழத்தின் தேசிய விடுதலைக்கும், அதன் வர்க்கப் புரட்சிக்கும் இது அவசியமாகும்.

இதேபோல் மறுபுறமாக சிங்கள தேசிய இனத்தின் உழைக்கும் வர்க்கம் தமிழ்த் தேசிய தனித்துவத்தையும் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்து ஈழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் தொழிலாள வர்க்கத்துடன் கைகோர்க்க வேண்டும். இதுவும் தமிழ்த் தேசிய இனத்தின் மீதான அநுதாபத்தின் பேரால் இருக்க வேண்டாம். மாறாக சிங்கள தொழிலாள விவசாய வர்க்கத்தின் விடுதலைக்கு இது அவசியமாகும்.

இந்நடைமுறையை இரு தேசிய இனத்தினதும் தொழிலாளவர்க்கம் கட்டாயமாகக் கடைப்பிடித்தால் தான் இரு தேசிய இனங்களினதும் தொழிலாள வர்க்க ஒற்றுமையும் அவ்வவற்றினது விடுதலையும் சாத்தியமாகும்.

ஈழம் = தமிழீழம்

இக்கட்டுரையில் ஈழம் என்னும் பதம் தமிழீழம் என்னும் பதத்துக்கு சம அர்த்தமுடையதாகவே பிரயோகிக்கப்படுகின்றது. நீண்டகாலமாக ஈழம் என்னும் பதம் இலங்கை முழுவதையும் குறித்தே பிரயோகிக்கப்பட்டு வந்துள்ள போதிலும், அண்மைக்காலமாக குறிப்பாக கடந்த ஆறு - ஏழு ஆண்டுகளாக அப்பதம் பலராலும் – இலங்கையிலும் சர்வதேசரீதியிலும் – இலங்கைத்தீவில் உள்ள தமிழ்த்தேசிய இனத்தினுடைய பாரம்பரிய தேசிய பிரதேசத்தையே குறிக்கும் வகையில் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல் :

வெளிநாட்டு உதவியும் 3ஆம் மண்டல நாடுகளும்

யசோதா கணபதிப்பிள்ளை

பொருளியல் சிறப்பு

4-ம் வருடம்

இன்யைய 3-வது மண்டல நாடுகளில் 'வெளிநாட்டு உதவி' என்பது பலரது கவனத்தையும் திருப்பியுள்ள முக்கிய பிரச்சனையாகக் காணப்படுகிறது. வெளிநாட்டு உதவி என்பது குறைவிருத்தி நாடுகளில் ஏற்படுத்துகின்ற தாக்கங்களும் பிரச்சனைகளும் என்ன வகையாக அமைகின்றன என்றும், எதிர்காலத்தில் இதனது செயற்பாட்டின் விளைவுகள் எவ்வாறானவை யென்றும் பல பொருளியல் அறிஞர்களால் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகிறது, குறைவிருத்தி நாடுகளின் 'நிதிவள இடைவெளி' பெருமளவு 'வெளிநாட்டு உதவி' கொண்டே நீக்கப்படுகிறது. இத்தகைய நிலையில் குறைவிருத்தி நாடுகளில்,

- வெளிநாட்டு உதவியின் பங்களிப்பு.
- அதனுலான சலுகைகள்.
- பொருளாதார அபிவிருத்தியில் அவற்றின் செயற்பாடு.
- அவை ஏற்படுத்தும் தாக்கங்கள்.
- அதுபற்றிய செயற்பாட்டின் மதிப்பீடு.

என்ற ரீதியில் 'வெளிநாட்டு உதவியினை' விளங்கிக் கொள்ளல் முக்கியமானதாகும்.

இந்த வகையில் 'வெளிநாட்டு உதவியினை விளங்கிக் கொள்வதற்கு முன்னர், 3-ம் மண்டல நாடுகளில் வெளிநாட்டு உதவி' வேண்டப்படுவதற்கான காரணத்தினை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இதற்கு முக்கியமான காரணம் இந்நாடுகள் பெருமளவு முதலாளித்துவ சூழலுள் அகப்பட்டதே பிரதான காரணமாகும். 17-ம், 18-ம் 19-ம் நூற்றாண்டுகளில் வளர்ந்து வந்த,

- வணிக முதலாளித்துவம்.
- கைத்தொழில் முதலாளித்துவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றின் ஊடுருவல் பெருமளவு இந் நாடுகளைத் தாக்கியதன் காரணமாக, இன்று குறைவிருத்தி நாடுகள் ஒரு வளர்ச்சி பெறுத ஒரு தேங்கிய பொருளாதார அமைப்பினைப் பெற்றன. எனவே இந்நாடுகள் முதலாளித்துவ ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட போதிலும், காலனித்துவ ஆட்சியின் விளைவாகப் பெற்ற தேங்கிய பொருளாதார அமைப்பில் இருந்தே, தமது வளர்ச்சியினை ஏற்படுத்த வேண்டிய நிலைஏற்பட்டது. காலனித்துவ ஆட்சியானது,

- ஒருபுறம் உள்நாட்டு முதலீடு அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தா நிலையினையும்
- நாட்டினை ஒரு வெளிநாட்டு வர்த்தகத்தில் தங்கியிருக்கும் அமைப்பினையும்,

பெற்றுக்கொடுத்தது. இத்தகைய நிலையில் குறைவிருத்தி நாடுகள் காலனித்துவ சூழலுள் இருந்து விடுபட்ட பின்னர் தமது நாட்டினை அபிவிருத்தி நோக்கி நடவடிக்கைகள் எடுக்கும் போது, உள்நாட்டு முதலீட்டு மட்டம் குறைவாகவும், வெளிநாட்டு வர்த்தகத்திலுலான 'சென்மதி நிலுவை' பிரச்சினை அதிகரித்து சென்ற போது இவற்றின் இடைவெளிகளை நீக்குவதற்கு 'வெளிநாட்டு உதவியினையே நாட வேண்டிய கட்டம் ஏற்பட்டது. எனவே இவ்வாறுக அமைந்த வெளிநாட்டு உதவியானது இன்றைய கட்டத்தில் 3-ம் மண்டல நாடுகளைப் பொறுத்தவரை, ஒரு முக்கியமான நிதி பெறல் ஊடகமாக விளங்குவதோடு, நாடு வெளிநாட்டு உதவியிலேயே தங்கியிருக்கின்ற தன்மையினைப் பெற்றுள்ளதற்குக் காரணமாகவும் அமைகின்றன.

எனவே இவ்வாறுக அதிகரித்து வரும் வெளிநாட்டு உதவி என்னவகையில் 3-ம் மண்டல நாடுகளைப் பொறுத்து அமைகின்றது என்பதை விளங்குதல் அவசியமாகும். இதற்கு முன்னர் 'வெளிநாட்டு உதவி' என்ற பதம் என்னவகையாக அமைகிறதென்றும், வெளிநாடுகளில் இருந்து பெறும் முதல் அல்லது கடனினை இப்பதத்திற்குள் உள்ளடக்கலாமா ? என்றும் விளங்குதல் வேண்டும். அண்மைக்காலங்களில் இது பற்றிய உரையாடல்கள் முக்கியம் பெற்றன. குறிப்பாக 1950-ம் ஆண்டின் பின்னர் இத்தகைய ரீதியில் வெளிநாட்டு உதவியினை மதிப்பிடுதல் முக்கியம் பெற்றது. வெளிநாட்டு உதவிக்கும், வெளிநாட்டு முதலுக்குமிடையே வேறுபாடு உண்டு. வெளிநாட்டு உதவியின் மூலம் பெறும் நாடுகள் சலுகை அடையின் 'வெளிநாட்டு உதவி' என்ற பதத்திற்குள் உள்ளடக்கலாம். உதாரணமாக 'நன்கொடையினை' இதற்குள் உள்ளடக்கலாம். இதனை விட சில முதல்கள் வட்டிவீதம் என்பவற்றைப் பொறுத்து சலுகை அடிப்படையில் வழங்கப்படின் அதனையும் 'உதவி' என்ற பெயரில் எடுக்கலாம். மற்றவற்றை இவ் 'உதவி' என்பதில் இருந்து வேறுபடுத்தப்படும் முறை அண்மைக் காலங்களில் முக்கியம் பெற்றது. எனவே 'இவ் உதவியினை, வேறுபடுத்தி நோக்கும் முறை அண்மைக்கால உரையாடல்களில் முக்கியம் அடைந்தது.

இவ்வாறுக 'இவ் உதவி' வழங்கப்படும் போது அதனைப் பெறும் நாடுகளாக குறைவிருத்தி நாடுகளே முக்கியம் பெறுகின்றன. இந்நாடுகள் இவ்வுதவியினைப் பெறும்போது,

- இந்நாடுகளில் 'வெளிநாட்டு உதவி' வாங்கப்படவேண்டிய அளவு.
- வெளிநாட்டு உதவி பெறுவதிலுலான சலுகையும், பயனும்.
- அதனுடைய இன்றைய நிலை.
- அதுபற்றிய எதிர்க்கருத்துக்களும் மதிப்பிடுகளும்

இது பற்றி ஆராய்ந்து அவை பற்றிய பூரண செயற்பாட்டின் தர்க்கம் வழங்கப்படுதல்சிறந்ததாகும்.

குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்தவரை எந்த அளவில் வெளிநாட்டு உதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டப்படுகிறதென்பதை ''இரு இடை வெளி அணுகுமுறை'' (Two gap approach) கொண்டு அறியலாம். ஒரு குறிப்பிட்ட அபிவிருத்தியினைச் செய்வதற்கு முதலீடு தேவைப்படலாம். முதலீடு என்பது சேமிப்பின் மூலமே ஏற்படுத்தப்படுகிறது. எனவே இம் முதலீடு, சேமிப்பு என்பவற்றிலே இடைவெளி காணப்படும் போது அதற்கு ஏற்ப உதவி தேவைப்படுகிறது. எனவே எவ்வளவு ''உதவி'' தேவைப்படுகிறதென்பதை 'முதலீட்டு, சேமிப்பு அணுகுமுறை'' மூலம் அறியலாம். முதலீட்டினுல் வெளியீட்டு அதிகரிப்பு ஏற்படும். இது இரண்டினுலான செயற்பாட்டு வீதத்தினை ''முதல் வெளியீட்டு வீதம்'' எனலாம். முதல் வெளியீட்டு வீதம் என்பது குறிப்பிட்டளவு முதலீடானது எவ்வளவு வெளியீட்டினை அதிகரிக்கும் என்பதை எடுத்துக்காட்டும் உதாரணமாக முதல் வெளியீட்டு விகிதம் 3;1 ஆகவும், உள்நாட்டு சேமிப்பானது 12% ஆகவும் இருப்பின் வெளியீட்டு அதிகரிப்பு வீதம் 5% மாக அமைய வேண்டுமாயின், சேமிப்பு அதிகரிப்பு மேலும் 3% தேவையானது. அதாவது $0.12+0.03=0.05X3=0.15$ இவ்வாறு அமையும். எனவே இப்போது தேவைப்படும் முதலீட்டு இடைவெளி 3% மாகும். எனவே இதற்கு உதவியினைப் பெற்று நிரப்ப வேண்டியிருக்கிறது.

இதனைவிட ஏற்றுமதிக்கும், இறக்குமதிக்கும் இடையேயும் இடைவெளி இருக்கும். எனவே இந்த இரண்டு 'இடைவெளியினையும்' சேர்த்து மொத்தமாக எவ்வளவு 'வெளிநாட்டு உதவி' தேவை என்பதை அறியலாம். இவற்றில் சில காலங்களில் ஒன்றினது தாக்கம் மேலாதிக்கத்தினை உடையதாகவும் இருக்கலாம். இந்த 'இடைவெளி ஆய்வு' மூலம் ஒரு நாட்டிற்கு எல்லாவளவு உதவி தேவை என்பதை அறியலாம், அண்மைக்கால அனுபங்களின்படி குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்தவரை

(1) தேவையான அளவு வெளிநாட்டு உதவி கிடைக்க வில்லை என்றும்,

(2) கூடுதலாக, இறக்குமதி ஏறுறுமதியிலுலான இடைவெளியின் தாக்கம் கூடியதாகவும் அமைகிறது

இன்னவகையில் குறைவிருத்தி நாடுகளின் வெளிநாட்டு உதவியின் அளவு அமையும் போது, பெறப்பட்ட உதவியின் பயனினை அளவிடல் அடுத்த அம்சமாகும்.

பயனினை அளவிடும் போது உதவி வழங்கப்படுகின்ற வகையினைப்பொறுத்து அது வழங்கும், பெறும் நாடுகளின் பயனினையும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

உதவி என்பது

- திட்ட உதவி
- அபிவிருத்தி திட்டத்திற்கான உதவி
- பண்ட உதவி

என பல வகையாக வழங்கப்படுகிறது. இவற்றில் வழங்கும், பெறும் நாடுகளைப் பொறுத்து இவ் ஒவ்வொரு உதவியினைப் பொறுத்தும் நன்மை, தீமை ஏற்படலாம்.

பெறும் நாடுகள் பண்ட உதவியினைப் பெறும் போது, உண்மையான விலையினை விட, திணிக்கப்படுகின்ற விலையினைப் பெற முடிகிறது, இதனுல் கூடுதலான செலவு பெறும் நாடுகளைப் பொறுத்து ஏற்படுகிறது அபிவிருத்தி திட்டத்திற்கான உதவி பெறும் போது முன் கூட்டியே திட்டத்தின் பயன் நோக்கி வாங்கப்படுவதால் அது நன்மையினை ஏற்படுத்தும். எனவே குறைவிருத்தி நாடுகளின் 'உதவி' பற்றி ஆராயும் போது உதவி என்பது என்ன வகையாக வழங்கப்படுகிறதென்றும் அதனுல் என்ன விளைவு பெறும் நாடுகளுக்கு ஏற்படுமெனவும் நோக்குதல் வேண்டும். இலங்கையின் கடந்த காலத்தின் அனுபவத்தினை எடுத்து நோக்கும் போது உதவிக் கடப்பாடுகள் பண்ட உதவியிலிருந்து திட்ட உதவிக்குப் பெருகும் அம்சம் காணப்பட்டுள்ளது. 1979 ம் ஆண்டுக்கும் 1980 ம் ஆண்டுக்குமிடையே ஏற்பட்ட உதவியின் ஒப்பீட்டினை நோக்கின் இவ் அம்சம் புலனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு	1979	1980
திட்ட உதவி ;-	688.3	836.7
பண்ட உதவி :-	200.0	167.7
உணவு உதவி :-	56.8	54.2

(ஆதாரம் :- செயற்பாடு திட்ட அமைச்சு)

எனவே இத்தகைய அம்சங்களையும் கவனத்தில் கொண்டே உதவியினை வளங்குதல் வேண்டும்.

அடுத்ததாக உதவிபற்றியும் அதன் தாக்கத்தினை அறியும் போது அவ் உதவியினுலான சலுகை எவ்வளவு? என்பதை கணக்கிட்டு அதன் நன்மையினையும், தீமையினையும் மதிப்பிடுதல் வேண்டும். இந்நிலையில் 'நன்கொடையினை' 100க்கு 10% மான 'சலுகை' யினைத்தரும் அளவீடாகக் கொள்ளலாம். நன்கொடை தவிர்ந்த ஏனைய முதல்களில் 'சலுகையினை' அறிவதற்கு பின் வரும் அம்சங்களை கலனத்தில் கொள்ளல் வேண்டும்.

(1) உதவியின் அளவு
(2) வட்டி வீதம்
(3) திருப்பிக் கொடுக்கும் கால அளவு

இவற்றினைக் கொண்டு குறிப்பிட்ட 'வெளிநாட்டு உதவியின்' பருமண எவ்வளவு என்பதை அறியலாம். இதற்கு கழிவு வீதம் வழங்கப்பட்டிருக்கலாம். எனவே இந்தப் பெறுமதியினை உண்மையான சந்தை வீலையினுலான வட்டி வீதத்துடன் ஒப்பிட்டு அதில் எவ்வளவு 'சலுகை' வழங்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம். இச் சலுகையானது கூடியுல் வெளிநாட்டு உதவியினுல் கூடிய சலுகை கிடைக்கிறதென்பது அர்த்தமாகும். இந்தநிலையில் உதவிக்கான

(1) வட்டி வீதம் உயர்ந்தும்
(2) காலம் குறைந்தாலும்

'சலுகை' குறையும். குறைவிருத்தி நாடுகளில் இத்தகைய சலுகை என்பது பெருமளவு குறைந்து காணப்படுகிறது. முக்கியமான அம்சமாக அண்மைக்காலத்தில் விளங்குமின்றது. எனவே,

இவ்வாருக உதவியின் 'சலுகை' பற்றி தனிய நோக்காது அவ் உதவியுடன் வரும் தொழில் நுட்பம் என்ன வகையில் பெறும் நாடுகளைப் பொறுத்து பாதிப்பினை ஏற்படுத்துகிறதென விளங்குதல் வேண்டும். கடனுடன் இணைந்ததான 'தொழில் நுட்ப இடமாற்றம்' என்பது முக்கியம் பெறுகிறது. இறக்குமதி வடிவிலாக இது ஏற்படலாம். இந்த தொழில் நுட்ப மாற்றம் எந்த வகையில் பெறும் வழங்கும் நாடுகளைப் பாதிக்கிறதென்றும் நோக்க வேண்டும். என்ற கருத்து அண்மைக்காலத்தில் முக்கியம் பெற்றது.

இத் தொழில் நுட்ப இடமாற்றம் என்பது பெறும் நாடுகளைப் பொறுத்து,

- உள்நாட்டு மட்டத்தில் அபிவிருத்தியினைத் தடுப்பதாகவும்
- நாட்டை சர்வதேச வர்த்தகத்தில் சிக்கலைப்பதாகவும் குறிப்பாக குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்து அமைகிறது.

ஆனுல், வழங்கும் நாடுகளைப் பொறுத்து

- தொழில் நுட்பம் வளர்ச்சி அடைவதற்கு துணை புரிவதாகவும்,
- இலாபத் தன்மையினை வளர்ப்பதாக அமைகிறது.

எனவே குறைவிருத்தியில் இதனது ஊடுருவல் பெருமளவு பாதக விளைவினைத் தருவதாகவும் சில அண்மைக்கால ஆய்வாளர்கள் நோக்கியுள்ளனர். எனவே இதனையும் கருத்தில் கொண்டே 'சலுகை' என்ற அம்சம் கவனித்தல் வேண்டும்.

அடுத்ததாக இவ் உதவியின் சலுகை எவ்வளவு என்பதை நோக்கிய பின்னர் குறைவிருத்தி நாடுகளில் எவ்வளவு கடன் படுகை காணப்படுகிறதென நோக்குதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கடன் படுகையின் அளவு
2. திருப்பிக் கொடுக்கும் ஆற்றல்
3. எதிர்காலத்தில் பெறக்கூடிய ஆற்றல்
4. அபிவிருத்தியில் அதன் செயற்பாடு

என்பனவும் அடுத்து நோக்குதல் வேண்டும். இலங்கையின் அனுபவத்தை நோக்கும் போது 1979-ல் 15% மாகவும், 1980-ல் 12% மாக கடன் திருப்பிக் கொடுக்கும் ஆற்றல் குறைந்துள்ளது.

இத்தகைய ரீதியில் குறைவிருத்தி நாடுகளின் அனுபவத்தினை நோக்கின் கடன்படுகையின் அளவு அதிகரிப்பது முக்கியமாக அமைகிறது.

எனவே இத்தகைய நிலையில் வெளி நாட்டு உதவியினை நோக்கும் போது அண்மைக் காலத்தில் வெளிநாட்டு உதவியிலுலான சலுகை குறைந்தும், திருப்பிக் கொடுக்கும் ஆற்றல் குறைந்தும் காணப்படுகிறது. கடன்படுகையின் அளவும் அதிகரித்து வருகிறது.

இத்தகைய ரீதியில் குறைவிருத்தி நாடுகள் மீண்டும் மீண்டும் 'வெளிநாட்டு உதவியிலே தங்கியிருக்க வேண்டிய தன்மை காணப்படுகிறது.

கடன் அட்டை Credit Card

குறிப்பிட்ட தொழில் நிறுவனங்களில் பொருட்கள் அல்லது சேவைகளைக் கடன் அடிப்படையில் வாங்குவதற்காக வங்கிகளால் ஒருவித அட்டையே கடன் அட்டை எனப்படும். வங்கியில் வாடிக்கையாளர் அல்லது வேறு நபர்களுக்கு உத்தரவாதத்தின் பேரில் இவ் அட்டை வழங்கப்படும். இவ் அட்டை முதன்முதலாக இங்கிலாந்து Barclays Bank 1972-ல் அறிமுகப்படுத்தியது.

வங்கியால் ஒவ்வொரு மாத முடிவிலும் கடன் அட்டை வைத்திருப்பவருக்கு இதுபற்றிய கூற்று அனுப்பப்படும். குறிப்பிட்ட காலத்துக்குள் பணம் செலுத்தாவிடில் 1·5% மாதாந்த வட்டி போன்ற கட்டணம் அறவிடப்படும்.

இக் கடன் அட்டை ஒரு விதத்தில் உத்தரவாதப் பத்திரமொன்றே. இதனைக் காட்டி வங்கியில் காசோலையையும் மாற்றலாம்,

இலங்கையில் தீர்வையற்ற கடையில் இதனைக் கொடுத்துப் பொருட்களைக் கொள்வனவு செய்யலாம். தற்பொழுது இதனை ஒத்த கடன் அட்டை முறையை The Finance Company Ltd, அறிமுகப்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல்

தாராள வர்த்தகக் கொள்கையும் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகமும்

பொன்னம்பலம் - சூரியகாந்தன்
பொருளியல் சிறப்பு
3-ம் வருடம்

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் 1978ம் ஆண்டிலிருந்து குறிப்பிடக் கூடிய அளவுக்கு பலவித மாற்றங்களுக்கும், தாக்கங்களுக்கும் உட்பட்டு சென்றது. குறிப்பாக இக்காலப் பகுதியில் என்றுமில்லாத வகையில் வெளிநாட்டு வரத்தகம் மோசமடைந்து சென்றதுடன் இன்றுவரை நீடித்திருப்ப தொன்றுகவும் காணப்படுகின்றது. இத்தகைய பாதக நிலை 1977 நவம்பரில் புதிய அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட தாராள வரத்தகக் கொள்கையின் நேரடி விளைவில் இருந்து தோன்றிய தொன்றுகும். பொருளாதாரத்தினைப் பொறுத்த வரை அதுவரை காணப்பட்ட சகல கட்டுப்பாடுகளையும் நீக்கி தனியார் முயற்சினடிப்படையில் அமைந்த தாராண்மைப் பொருளாதாரம் ஒன்றினை ஏற்படுத்திய அரசாங்கம் வெளிநாட்டு வர்த்தகத்தினைப் பொறுத்தவரை கட்டுபாடுகளற்ற தாராள வர்த்தகக் கொள்கையினை கையாண்டது. இதற்கு முன்னரும் வெளிநாட்டு வர்த்தகம் இலங்கைக்கு பாதகமாக இருந்த போதும் குறிப்பாக 1978 இல் இருந்து இது ஓர் முற்றிய நிலையினை அடைந்ததினால் இதன் மாற்றங்களுக்கும் தாக்கங்களுக்கும் தாராள வர்த்தகக் கொள்கையே பெருமளவுக்கு பொறுப்பாக இருக்கிறது எனலாம். இம் மாற்றங்களில் முக்கியமானது இறக்குமதிச் செலவு பன் மடங்கு அதிகரித்தமையாகும். அத்துடன் ஏற்றுமதி வருமானம் சார்பு ரீதியாக குறை வடைந்தமையினால் வர்த்தகப் பற்றுக் குறையும் பன் மடங்கு அதிகரித்ததோடு தீர்க்கப்படாத ஓர் நிலையினையும் ஏற்படுத்தியிருந்தது. இதற்கு ஏற்ப வர்த்தக மாற்று விகிதமும் பாரியதோர் வீழ்ச்சியினை காட்டியது. உண்மையில் இவ் வர்த்தகத் திட்டம் ஏற்கனவே உயரந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்ட இறக்குமதிச் செலவுகளின் அளவுக்கு ஏற்றுமதி வருமானத்தினை அதிகரிக்கும் நோக்கமாக கொண்டு வரப்பட்ட போதும் இத்திட்டம் குறுகிய காலப்பகுதியில் ஏற்றுமதித் துறையினை விட இறக்குமதித் துறை கூடியளவு வருமானத்தினை கொடுத்ததினால் பலர் ஏற்றுமதித்துறையில் இருந்து இறக்குமதித்துறைக்கு சென்றமையும் இப்பாதக போக்குக்கு முக்கிய காரணமாகும். இவற்றுடன் இணைந்த வேறு பல சக்திகளும் குறிப்பாக பண வீக்கம் என்பனவும் நிலமையினை மோசமாக்கின. இது இறுதியில் கூடுதலான வர்த்தக இடைபீடு நிரப்பப்படுவதற்கு கூடுதலான வெளிநாட்டு உதவியினை வேண்டி நிற்ப்பதற்கும் அத்துடன் வெளிநாட்டு சொத்துக்களை பாரிய அளவில் குறைக்கவும் தான் வழிவகுத்தது.

எந்த வொரு பொருளாதாரத்திலும் தாராள வர்த்தகக் கொள்கை பின்பற்றப்படும் போது இத்தகைய விளைவுகள் ஏறப்படுவது ஒன்றும் புதிதல்ல. அதாவது ஆரம்ப காலங்களில் இறக்குமதிச் செலவு அதிகரிப்பதும் அதனுடன் இணைந்த வகையில் வர்த்தகப் பற்றுக் குறை கூடுதல் நிலை அடைவதும் ஏற்ப்படவே செய்யும். எந்தவொரு தாராள பொருளாதாரக் கொள்கையின் வெற்றியும் அதிகரித்து செல்லும் இறக்குமதிச் செலவுகளை சமாளிக்கும் வகையில் ஏற்றுமதி வருமானத்தினை அதிகரிப்பதில் தான் தங்கியுள்ளது. அதாவது இறக்குமதிச் செலவுகளின் அதிகரிப்பினைத் தொடர்ந்து ஏற்றுமதி வருமானமும் படிப்படியாக அதிகரிக்கப்பட வேண்டும். இவ்வாறு ஏற்றுமதி வருமானத்தினை அதிகரிப்பதற்கான இடைவெளி எந்தளவுக்கு நீண்டு செல்கிறதோ அதற்கு ஏற்ப இக் கொள்கையின் வெற்றியும் மட்டுப் படுத்தப்பட்டிருக்கும். எனவே இக்கால இடைவெளியினை எந்தளவுக்கு குறைக்க முடியுமோ அதனைப் பொறுத்து தான் இத்திட்டத்தில் இருந்து பூரண பலனைப் பெறமுடியும்

எவ்வாறுயினும் மேற்க்கூறிய கருத்துக்களுடன் 1977க்கு பின் ஏற்ப்பட்ட வர்த்தக நிலையினை ஒப்பிடுவோமாயின் அது எந்த வகையிலும் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நிலையினைத்தான் அடைந்திருக்கிறது எனலாம். வெளிநாட்டு வர்த்தகத்தின் மோசமான நிலையினை ஏற்றுமதி, இறக்குமதி, வர்த்தக நிலுவை வர்த்தக மாற்று விகிதம் போன்ற பல்வேறு தரவுகளும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இதனை அட்டவனை I காட்டுகிறது. குறிப்பாக 1978ம் ஆண்டு 1468.7 கோடி ரூபாவாக இருந்த இறக்குமதிச் செலவினம் 1981 இல் 3458.5 கோடியாக அதிகரித்தது. இது சராசரி 36% அதிகரிப்பாகும். ஆனால் அதற்கு முன்னர் உள்ள இரு ஆண்டுகளிலும் சராசரி 50% அதிகரிப்பு ஏற்ப்பட்டிருந்தது என்பதும் முக்கியமானது அதேவேளை ஏற்றுமதி வருமானம் பாரிய வகையில் அதிகரிப்பினை காட்டவில்லை. 1978 இல் 1320.6 கோடி ரூபாவாக இருந்த ஏற்றுமதி வருமானம் 1981 இல் 1974 கோடியாக மட்டுமே அதிகரித்தது. இது சராசரி 15% அதிகரிப்பேயாகும். ஆனால் 1978 இல் ஏற்றுமதி, இறக்குமதி ஆகிய இரண்டிலும் பாரிய அதிகரிப்புக்கள் காணப்பட்டாலும் இது நாணய மாற்று விகிதத்தினால் தோன்றியிருந்த பண வீக்கத்தின் பிரதிபலிப்பு என்பதனை S. D. R பெறுமதி மூலமான தரவுகள் தெளிவு படுத்துகின்றன. எவ்வாறுயினும் இத்தகைய இறக்குமதிச் செலவுகளின் ஆரம்ப இவ்வாண்டிலேயே தொடங்கி விட்டபோதும் 1980 களில் தான் இது உத்வேகம் பெற்றது எனலாம். இவ்விதம் இறக்குமதிச் செலவுகள் ஆரம்பத்தில் அதிகரிக்காமைக்கு பலர் இதில் ஆரம்பத்தில் பங்கு கொள்ளாததன் காரணமாக ஏற்ப்பட்டதாக இருக்கலாம். பின்னர் விளைவுகள் சாதகமாக அமையவே பலரும் இறக்குமதி வர்த்தகத்தில் இறங்கவே 1980 களில் இறக்குமதிச் செலவு அதிகரித்து இருக்கலாம். இது இறுதியில் வர்த்தக நிலுவையிலும் பாரிய அதிகரிப்பினை காட்டியது. குறிப்பாக 1978 இல் 148 கோடி ரூபாவாக இருந்த வர்த்தக பற்றுக்குறை 1980 இல் 1636.4 கோடியாக அதிகரித்தது. இது ஏறக்குறைய 11 மடங்கு அதிகரிப்பாகும். பின்னர் 81 இல் கூட இது பாரிய மாற்றமின்றி 1484.5 கோடி ரூபாவாக காணப்பட்டது. இது சென்ற ஆண்டினை விட 9% வீழ்ச்சியினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிய போதும் நிலமை திருந்தியதாக இல்லை. இவ்வாத்தக நிலுவை 1976, 77 இவ் சாதகமாக இருந்தது என்பதுவும் குறிப்பிடத்தக்கதாகும். வர்த்தகத்தின் இத்தகைய வீழ்ச்சி வர்த்தக மாற்று விகிதத்திலும் பிரதிபலித்தது. குறிப்பாக 1978 ஐ அடியாண்டாகக் கொண்ட வ. மா. விகிதம் 1977 இல் 102 ஆக இருந்து 1981 இல் 46 ஆக வீழ்ச்சி கண்டது. எனவே எல்லா வகையிலும் வர்த்தக தாராண்மைக் கொள்கை கையாண்டதன் பின்னர் வெளி நாட்டு வர்த்தகம் பாதகம் நிறைந்ததொன்றாக சென்றிருக்கிறது என்பது புலனாகிறது.

இவ்வாறு இறக்குமதிச் செலவுகள் அதிகரித்தமைக்கு இரண்டு காரணங்கள் முக்கியமாக உள்ளன. ஒன்று இறக்குமதிப் பண்டங்களின் விலை அதிகரிப்பு மற்றது. அவற்றின் அளவு அதிகரிப்பு என்பதாகும். இதனை அட்டவணை II காட்டுகிறது. இதில் இறக்குமதிப் பொருள்களின் விலைகள் 1978 – 81 காலப்பகுதியில் 182% ஆல் அதிகரிக்க அவற்றின் அளவுகள் 45% ஆல் அதிகரித்தன. இது ஓர் உயர்ந்த அதிகரிப்பேயாகும். ஆனால் ஏற்றுமதி வருமானம் இதற்கு மாறாக அவற்றின் விலை அதிகரிப்பு ஏற்பட்டதன் காரணமாக மட்டுமே அதிகரிப்பினை காட்

அட்டவணை I

ஏற்றுமதி – இறக்குமதி புள்ளி விபரங்கள் (மில்லியன் ரூபா)

ஆண்டு	ஏற்றுமதி	இறக்குமதி	வ. நிலுவை	வ. மா. விகிதம்
1976	4815	4646	+ 169	78
1977	6638	6007	+ 631	102
1978	13206	14687	– 1481	100
1979	15293	22560	– 7267	72
1980	17273	33637	16364	58
1981	19740	34585	14845	46

அட்டவணை II

ஏற்றுமதி - இறக்குமதி விலை அளவுச்சுட்டெண்கள் (1978 - 100)

ஆண்டு	விலை		அளவு	
	ஏற்றுமதி	இறக்குமதி	ஏற்றுமதி	இறக்குமதி
1977	55	55	94	73
1978	100	100	100	100
1979	109	152	101	123
1980	126	217	99	140
1981	129	282	102	145

(இலங்கை ம. வங்கி அறிக்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியது. அவற்றின் அளவுகளில் எந்த வித அதிகரிப்பும் ஏற்படவில்லை. அதாவது ஏற்றுமதி விலைகள் 29% ஸில் மட்டும் அதிகரிக்க அவற்றின் அளவுகள் 2% மட்டும் அதிகரித்தன. இது பெருமளவுக்கு வேறுபட்டதோர் நிலையாகும். இறக்குமதி விலை அதிகரிப்பு முன்பிருந்தே காணப்பட்டாலும் அவற்றின் அளவுகள் அதிகரித்ததன் விளைவாக இறக்குமதிச் செலவுகள் அதிகரித்தமையே தாராளக் கொள்கையின் நேரடி விளைவாகும். குறிப்பாக 1970 - 77 காலப் பகுதியில் பலவித இறக்குமதிக்கட்டுப் பாடுகளினால் இறக்குமதி அளவுகள் குறைவடைந்ததன் மூலம் இறக்குமதிச் செலவும் குறைவடைந்திருந்தது. எனவே இறக்குமதி அளவுகள் கூடியமையே இறக்குமதிச் செலவு உயர்வுக்கு காரணமாகிறது. இதற்கு ஏற்ப ஏற்றுமதி அளவுகளிலும் அதிகரிப்பு காணப்பட்டிருந்தால் இந்தப் பிரச்சனைக்கு ஓரளவு தீர்வு கண்டிருக்க முடியும். ஆனால் அது கூட எந்த வகையிலும் ஏற்படாத காரணத்தினால் இதன் தாக்கம் பொருளாதாரத்திலும் பெருமளவு பிரதிபலிக்கவே செய்தது. குறிப்பாக G. N. P. எந்தவகையான உயர்ந்த வளர்ச்சி எதனையும் காட்டவில்லை. இலங்கைப் பொருளாதாரத்தில் வெளி நாட்டு வர்த்தகம் இன்னமும் முக்கியமான தோர் இடத்தினை வகிப்பதினால் இத்தகைய தாக்கம் தவிர்க்க முடியாததொன்றாகும்.

இவ்வாறு இறக்குமதிச் செலவு அதிகரித்துச் செல்லும்போது இறக்குமதி அமைப்பு என்பதுவும் முக்கியமானதாகும். அதிகரித்த இறக்குமதி மொத்தமாக எல்லா பொருள்களிலும் அதிகரிப்பினை காட்டிய போதும் விகிதாசார ரீதியாக முதலீட்டு, இடை நிலைப்பொருள்களில் அதிகரிப்பினை காட்டி பாவனைப் பொருள்களில் வீழ்ச்சியினைப் பதிவு செய்தது. 1977ம் ஆண்டு மொத்த இறக்குமதியில் 43% மாக இருந்த இப் பொருள்கள் 81 இல் 26% மாக குறைவடைந்தன. இதிலும் உடைக்கு பெருமளவு பணம் செலவு செய்யப்பட உணவுப்பொருள் இறக்குமதி பெருமளவு குறைக்கப்பட்டது. இதிலும் குறிப்பாக அரிசி மீதான செலவுகள் ஒப்பீட்டு ரீதியில் குறைவடைந்திருந்தன. இது உள்நாட்டு விவசாயத்தின் செழிப்பினால் ஏற்பட்டதொன்று எனலாம். எவ்வாறாயினும் பாவனைப் பொருள் மீதான மொத்தச் செலவு அதிகரிக்கவே செய்தது. இடைநிலைப் பொருள்கள் 1978 இல் 38% மாக இருந்து 81இல் 50%மாக மாறியது. இது பெருமளவுக்கு பெற்றோலியப் பொருள்களின் இறக்குமதியினால் ஏற்பட்டதோர் அதிகரிப்பாகும். முதலீட்டுப் பொருள்கள் இக்காலத்தில் அதிகரித்தவேளை விகிதாசார ரீதியாக 1981 இல் வீழ்ச்சியடைந்திருந்தது. குறிப்பாக 1980 வரை அதிகரித்து வந்த முதலீட்டுச் செலவு இக்காலத்தில் மொத்த இறக்குமதிச் செலவில் 24% மாக இருந்து 1981 இல் 23% மாக குறைந்தது. இவ் முதலீட்டுப் பொருள் வீழ்ச்சிக்கு ஏற்கனவே காணப்பட்ட வர்த்தகப் பற்றுக்குறையும் ஒரு காரணமாக இருக்கலாம். இத்தகைய முதலீட்டுப் பொருள்களில் ஏற்பட்ட குறைவு பொருளாதாரத்தினை பெருமளவுக்கு பாதிப்பதொன்றாகும். இறக்குமதிப் பொருள்களை வழங்கும் நாடுகளில் யப்பான் முதல் இடத்தினைப் பிடித்துக் கொண்டது. இது இலங்கையின் தாராள கொள்கை மூலம் ஏற்பட்ட வாய்ப்பினை யப்பான் சிறப்பாக பயன் படுத்தியமையினைப் புலப்படுத்துகின்றது. குறிப்பாக 1980 இல் யப்பான், சவுதி அரேபியா, பிரிட்டன் என்பன இறக்குமதிப் பொருள்களை வழங்குவதில் முதல் மூன்று இடத்தினையும் பிடித்துக் கொண்டன.

ஏற்றுமதிகளில் பெருமளவு அரசாங்கம் தங்கியிருக்க முற்படும் வேளை ஏற்றுமதி அமைப்பினை நோக்குவதும் முக்கியமானதாகும் இதில் மரபு ரீதியான ஏற்றுமதிகள் பெருமளவுக்கு வீழ்ச்சியடைந்து காணப்பட்டன. குறிப்பாக 77 இல் 72% மாக இருந்த இவ் ஏற்றுமதிகள் படிப்படியாக குறைந்து 81 இல் 52.4% மாக வீழ்ச்சியினைக் காட்டியது. இது ஒரு வகையில் பெரியதோர் வீழ்ச்சியாகும். குறிப்பாக தேயிலை, றப்பர் என்பன 81 இல் அளவுகளில் வீழ்ச்சியினை காட்டிய போதும் உயர்ந்த விலையின் காரணமாக கூடுதல் வருமானத்தினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தன. தெங்கு அளவு, வருமானம் என்ற இரண்டிலுமே வீழ்ச்சியினைக் காட்டியது. எவ்வாருயினும் மரபு ரீதியான மூன்று பயிர்களும் தமது செல்வாக்கினை இழந்து விட்டமையினை அட்டவணை III காட்டுகிறது. ஆனால் இவ் ஏற்றுமதிகள் இன்னமும் 1/2 பங்குக்கு மேல் இருக்கின்றன என்பது இவை தமது செல்வாக்கினை முழுமையாக இழக்கவில்லை என்பதனைக் காட்டுகிறது. இத்துறையில் ஏற்ப்பட்ட குறைவு இத் துறை நன்கு பேணப்படாத நிலையினைத் தான் புலப்படுத்துகிறது.

வாண்டு கை. தொ. பொருள்கள் பிடித்து விட்டன. அதாவது தேயிலை 31.3% மாக இருக்க கை. தொ. பொருள்கள் 34.3 % மாக இருந்தது இவை மூலம் பெறப்பட்ட வருமானமும் 1979 இல் 360 கோடி ரூபாவாக இருந்து 1981 இல் 706 கோடியாக உயர்ந்தது. இது ஏறக்குறைய 96% அதிகரிப்பாகும். கை. தொ. ஏற்றுமதியில் துணிகளும், ஆடைகளும். பெற்றோலியப் பொருள்கள் என்பனவே முக்கிய இடம் வகிக்கின்றன. இவையும் தமது ஏற்றுமதி உழைப்புகளில் அதிகரிப்பினை காட்டி வருகின்றன.

அட்டவணை III

மொத்த ஏற்றுமதியில் அடங்கும் பொருள்களின் விகிதாசார ரீதியானபங்கு

	1979	1980	1981
1. வேளாண்மைப் பொருள்கள்	70.3	61.6	58.7
1.1 தேயிலை	37.5	35.1	31.3
1.2 றப்பர்	16.3	14.7	14.1
1.3 தெங்கு	11.1	7.0	7.0
1 4 சிறு வேளாண்மைப் பொருள்கள்	5.4	4.8	6.3
2. கை. தொ. பொருள்கள்	23.6	31.2	34.3
2.1 புடவை அடைகள்	7.3	10.3	14 6
2.2 பெற்ரோலியப் பொருள்கள்	12.6	17.7	16.4
2.3 ஏனையன	3.7	3.2	3.3
3. கனிப்பொருள்	4.1	4.5	3.7
3.1 இரத்தினக்கற்கள்	3.2	3.8	3.1
3.2 ஏனையன	0.9	0.7	0.6
4. ஏனைய ஏற்றுமதிகள்	2.0	2.7	3.3

(இலங்கை ம. வங்கி அறிக்கை)

மரபு ரீதியான ஏற்றுமதிகள் வீழ்ச்சியடையும் அதே சமயம் கைத்தொழில் ஏற்றுமதிகள் அதிகரித்து வந்திருக்கிறன. குறிப்பாக 1979 இல் 23.6% இருந்த இவ் ஏற்றுமதிகள் 81 இல் 34 3 % மாக உயர்ந்து விட்டன. இதிலும் ஓர் முக்கிய மாற்றம் 1981 இல் இடம் பெற்றுள்ளது. அதவாது இதுவரை ஏற்றுமதியில் முதல் இடத்தினைப் பிடித்து வந்த தேயிலையின் இடத்தினை இவ் இவ்வாறு இவ் ஏற்றுமதிகள் அதிகரிப்பது நல்லதோர் நிலை எனலாம். ஆனலும் இவ் ஏற்றுமதிகளை எதிர்காலத்திலும் அதிகரிக்க முடியுமா என்ற சந்தேகம் எழுகிறது. ஏனெனில் எமது ஆடைகளுக்கு அவற்றினை இறக்குமதி செய்யும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் அனுமதிப்பங்கு முறையினை விதித்துள்ளன. குறிப்பாக நோர்வே, சுவிடன் என்பன அவ்வாறு செய்துள்ளன. U.S.A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபற்றி இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்தது மாத்திரமன்றி சில ஆடைகளுக்கு கட்டுப்பாடும் விதித்துள்ளது. எனவே எமது கை. தொ. பொருள்களில் முக்கிய இடம் வகிக்கும் ஆடைகளும் துணிகளும் எதிர் காலத்தில் நிச்சயமற்ற சந்தை வாய்ப்புக் களையே கொண்டுள்ளன. இன்னொரு முக்கிய பங்கு வகிக்கும் பெற்றோலியப் பொருள்கள் பெருமளவு வெளிநாட்டு மூலப் பொருள்களையே கொண்டுள்ளன். அதாவது பெற்றோலிய ஏற்றுமதிகளை ஒரு வகையில் மறு ஏற்றுமதி என்றும் கூறமுடியும். இதிலும் பெற்றோலியப் பொருள்கள் 1981 இல் சென்ற ஆண்டினை விட குறைவினை காட்டியுள்ளது. அதிலும் ஆடைகள், துணிகள், பெற்றோலியப் பொருகள் என்பன பெரு மளவுக்கு வெளிநாட்டு மூலப் பொருள்களையே பயன்படுத்துகின்றன. குறிப்பாக 90% வெளிநாட்டு மூலப் பொருள்கள் ஆகும் எனவே இவற்றில் இருந்து கிடைக்கும் தேறிய நன்மைகளும் மிகவும் குறைவான தேயாகும். எனவே கைத்தொழில் பொருள்கள் அதிகரித்தாலும் அவற்றில் இருந்து கிடைக்கும் நன்மை குறைவானதேயாகும். இவற்றினைவிட கை. தொ. பொருள்களின் இன்னொரு அங்கமான ஏனையன என்பதுவும் எந்த வகையிலும் மாற்ற மின்றியே காணப் படுகிறது. இரத்தினக் கற்கள் ஏற்றுமதி 1970 - 77 வரை அதிகரித்து வந்த போதும் 78 க்கு பின் பலத்த வீழ்ச்சியினைத் தான் காட்டி வருகிறது. இரத்தினக் கற்கள் பெரு மளவுக்கு வெளிநாடுகளுக்கு கடத்தப்படுவ தாக சுங்கப்பகுதியினர் கூறியும் நிலைமை திருந்தவில்லை என்பதற்கு அறிகுறியாக இரத்தினகல் ஏற்றுமதி வருமானம் குறைந்து வருகிறது. இவற்றினை விட சிறுபயிர் ஏற்று மதி இக்காலப்பகுதியில் ஓரளவு அதிகரிப் பினை காட்டியுள்ளது. ஏற்றுமதி அமைப் பினை தொகுத்து நோக்கின் மரபு ரீதியா னவை தமது செல்வாக்கினை இழந்து வரும் போது அதிகரித்து வரும் ஏனைய ஏற்றுமதி களும் பெரும் வரையறைக்குட்பட்டவை யாகவே காணப்படுகின்றன. எமது ஏற்று மதிப் பொருள்களை வாங்கும் நாடுகளில் 1980 இல் அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி என்பன முதல் மூன்று இடத்தி னையும் பிடித்துள்ளன.

இவ்வாறு ஏற்றுமதித்துறை வளர்ச்சி யடையாத நிலையில் இலங்கையின் வர்த்தக இடையீட்டினை பூர்த்தி செய்வதற்கு உல் லாசப் பயணத்துறை வருமானங்கள், இலங் கையர் வெளிநாடுகளில் இருந்து அனுப்பும் வருமானங்கள், அந்நிய தனியார் முதலீடு கள் என்பனவையே உதவ முன்வந்துள்ளன. இவை இக்காலப் பகுதியில் கணிசமான அதிகரிப்பினை காட்டியபோதும் அவற்றின் வருமானங்கள் அதிகரித்துச் செல்லும இறக்குமதிச் செலவுகளை பூர்த்தி செய்ய எந்த வகையிலும் முடியவில்லை. குறிப்பாக இவ்வருமானங்கள் வர்த்தக இடையீட்டில் ஏறக்குறைய 1/5 பகுதியினை மட்டும் தான் பூர்த்தி செய்ய முடிந்தது. எனவே மிகுதிப் பகுதி வெளிநாட்டுக் கடன்கள் மூலம் தான் பூர்த்தி செய்யப்பட்டது. இதற்கு ஏற்ப கடன் தொகையும் பெருமளவுக்கு பெருகி யுள்ளது. குறிப்பாக 1978 இல் 17276 மில் லியன் ரூபாவாக இருந்த கடன் 1981 இல் 34824 மில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது. ஆனால் இத்தகைய பற்றுக்குறை இக்காலப்ப குதியில் உலகின் பெரும்பாலான நாடுகளில் குறிப்பாக சிங்கப்பூர், பிலிபைன்ஸ் போன்ற பல நாடுகளிலும் காணப்பட்டதாகக் கூறப் படுகிறது. உண்மையில் இலங்கையின் தாக் கம் இவை எல்லாவற்றினையும் விட கூடிய தொன்றுகவே காணப்பட்டது. அத்துடன் பொருளாதாரத்தில் அபிவிருத்தி திட்டங் கள் அமுல் செய்யப்படும் போது இத்த கைய செல்மதி நிலுவைப் பிரச்சினை ஏற்ப் படுவது ஒன்றும் புதிதல்ல என்றும் வாதிக் கப் படுகிறது. இதன் மூலம் தான் வெளி நாட்டு வளங்களை திரட்ட வாய்ப்பு ஏற்ப் படுவதாக கருதப்படுகிறது. இது ஓரளவுக்கு சரியான வாதமாக இருந்தாலும் பற்றுக் குறைக்கு ஏற்ப நிதி திரட்டப்பட்டால் அது ஓர் நல்ல நிலைதான். குறிப்பாக 78, 79 காலப்பகுதி பற்றுக்குறைகை தேவை யான வெளிநாட்டு மூலதனம் திரட்டப் படக் கூடிய ஓர் அதிஷ்டம் நிறைந்த ஆண் டுகளாக காணப்பட்டபோது இது ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS

OF

SOLE DISTRIBUTER FOR

Arpico Products

M/S. Translanka Marketing Ltd.

No: 1, 1st Floor, New Model Market Building,

Jaffna.

23027

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS

FROM

CANTABIA INSTITUTE

21. MAIN STREET,

JAFFNA.

TEL: 24201

SPACE DONATED

BY

SCIENCE ACADEMY

310, Clock Tower Road,

JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS

FROM

Sunlight Dry Cleaners

for

QUICK PHOTOSTATE SERVICE

✣ RELIABLE ✣ MODERATE CHARGE ✣ PUNCTUALITY

SUNLIGHT DRY CLEANERS

OPPOSITE BUS STAND, JAFFNA.

தங்கப்பவுண் வைர,
நகைகளுக்கு



பொ. அம்பலவாணர்

119, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

போன்: 23199

With the best Compliments

from



SHANKAR HARDWARES

Whole Sales Retail Dealers in
Paints & Hardwares Distributors
for M. S. Industries Bolt Nuts,
Wire Nuts, Tower Belts Etc.

262/2, STANLEY ROAD,

JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு



உங்கள் நினைவில் நிறைந்த

மலாயன் கபே

யாழ்ப்பாணம்.

24074

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பான நிலையாக இருந்தது. ஆனால் 80 களின் பின்னர் ஏற்பட்ட பற்றாக் குறைக்கு நிதியீட்டம் செய்ய வெளிநாட்டு மூலதனங்கள் பொதியளவு கிடைக்கவில்லை. எனவே இந்நிலையில் தான் செல்மதி நிலுவை தாக்கத்தினை விளைவிக்கத் தொடங்கிறது. இது உண்மையில் அளவுக்கு மீறிய இறக்கு மதிச் செலவின் விளைவாகும். இந்நெருக் கடியினால் வெளிநாட்டு சொத்தும் இக் காலப் பகுதியில் பெருமளவு குறைந்திருந் தது. எவ்வாறாயினும் அதிகரித்த இறக்கு மதிச் செலவீனங்களைக் குறைப்பது அல்லது ஏற்றுமதி வருமானங்களை அதிகரிப்பது என் பவையே இதற்குரிய உண்மையான பரிகா ரங்கள் ஆகும். ஆனால் அரசாங்கத்தின் தாராள பொருளாதாரக் கொள்கையின் படி இறக்குமதிச் செலவு குறைய வாய்ப் பில்லை. எனவே ஏற்றுமதி வருமானங்களை பன்மடங்கு அதிகரிப்பதன் மூலம் தான் இதற்குரிய உண்மையான பலனைப் பெற முடியும். இது விடயத்தில் மத்திய வங்கி மிக விரைவில் பாரம்பரிய, பாரம்பரிய மற்ற ஏற்றுமதிகளை அதிகரித்து இதற்கோர் பரிகாரம் காணவிட்டால் நிலமை இன்னும் மோசமடையும் என எச்சரித்துள்ளது. ஆனால் நிலமை திருத்தியதாக இல்லை. எனினும் ஏற்றுமதி வருமானம் இனியும் அதிகரிக்க உண்டு என்று வாதிட்டாலும் தாராள வர்த்தகக் கொள்கையினை பின் பற்றிய தென்கொரியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுடன் ஒப்பிடும் இடத்து சிறப்பான தாக இருக்கும். குறிப்பாக சிங்கப்பூர் தாராள கொள்கை பின்பற்றிய ஒரு சில ஆண்டுகளிலேயே நல்ல நிலையினை அடைந் திருந்தது. அங்கு அக்கொள்கை பின்பற்றிய 1967 - 72 காலப்பகுதியில் ஏற்றுமதி அளவு கள் 11% னால் சாராரியாக அதிகரித்தன. இதேபோல் தென்கொரியாவிலும் ஆதன் ஆரம்ப காலமான 1964 - 70 களில் ஏற்று மதி வருவானங்கள் 38% னால் அதிகரித்தன இவ்வாறான அதிகரிப்புக்கு இங்கெல்லாம் மின் அனுக்கருவிகளின் ஏற்றுமதி தான் பெருமளவுக்கு காரணமாகும். ஆனால் இலங் கையில் இத் தொழில் இது வரை வளர வில்லை. எதிர்காலத்திலும் இது வளர்வதற் கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே உள்ளன.

எனவே மேற்க் கூறிய ஒப்பீடுகளைக் கொண்டு நோக்குமிடத்து எதிர்காலத்தில் இலங்கையில் ஏற்றுமதிகள் அதிகரிக்க வாய்ப்பில்லை. ஆனால் இறக்குமதிச் செலவு உயரத்தான் வாய்ப்பு காணப்படுகிறது. தாராள கொள்கையின்படி இலங்கை பயன் பெற வேண்டுமாயின் இலங்கையின் பொரு ள்கள் யப்பான் பொருள்கள் போல் தரத் தில் உயர்த்தலையாக இருக்க வேண்டும். ஆனால் பெருமளவுக்கு முதல் வீழ்வு ப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் இலங்கைப் பொருள்கள் தரரீதியாக முன்னுரிமை பெற முடியாது. தரரீதியாக முன்னுரிமை பெறும் பொருள்களுக்கே இத்திட்டம் வாய்ப்பளிக் கக் கூடிய தாகையால் இலங்கை இது விட யத்தில் நேர்மாறான விளைவினையே எதிர் நோக்க வேண்டியிருக்கும்.

இன்றைய தேவை

எழிதானதும், செலவு குறைந்ததும், உள்நாட்டில் உற் பத்தி செய்யக்கூடியதும், தொழில்களைப் பறித்துக் கொள் வதற்குப் பதிலாக கூடிய வேலைவாய்ப்புக்களை வழங்க வல்லது மான தொழில்நுட்பமே வறிய நாடுகளின் இன்றைய தேவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகம் :

இலங்கையின் கைத்தொழில் வர்த்தக வளர்ச்சிக்கு அரச கூட்டுத்தாபனங்களின் அவசியம்

சரீப் வெள்ளத்தம்பி
வணிகமாணி
2–ம் வருடம்

சேவை நோக்குடன் இலாபத்தையும் ஒரு நோக்காகக் கொண்டு மூலதனத்தின் முழுப் பொறுப்பையும் அரசு பொறுப்பேற்று அல்லது மூலதனத்தின் ஒரு பகுதிப் பொறுப்பை அரசும், ஒரு பகுதிப் பொறுப்பைத் தனியார் துறையும் பொறுப்பேற்று அரசின் கண்காணிப்பின்கீழ் நடாத்தப்பட்டு வரும் தொழில் முயற்சி அமைப்பே கூட்டுத்தாபன அமைப்பாகும். இலங்கையில் கூட்டுத்தாபனங்கள் 1957–ம் ஆண்டு அரசினால் பிரகடனம் செய்யப்பட்ட கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்திற்கு அமைவாக அல்லது 1972 - ம் ஆண்டு பிரகடனம் செய்யப்பட்ட வியாபாரக் கூட்டுத்தாபனச் சட்டத்திற்கு அமைவாக உருவாக்கப்படுகின்றன இவற்றுடன் ஒவ்வொரு கூட்டுத்தாபனமும் ஸ்தாபிக்கப்படும் பொழுது பிரத்தியேகமான சட்டமும் பிரகடனம் செய்யப்படுகின்றது.

இன்று உலகிலுள்ள வளர்ச்சியடைந்த நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்கு ஜேர்மன், போன்ற நாடுகளில் காணப்படும் கைத்தொழில் வர்த்தக முயற்சிகளின் பெரும் பொறுப்பு தனியார் தாபனங்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதேபோல் சீனா, ருஷ்யா, கிழக்கு ஜேர்மனி போன்ற நாடுகளில் காணப்படும் கைத்தொழில் வர்த்தக முயற்சிகளின் பெரும் பொறுப்பு அரச தாபனங்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது இதன் அர்த்தம் என்னவெனில் நாடுகளின் பொருளாதார அமைப்புக்கேற்ப உற்பத்தி வியாபாரங்கள் மேற்கொள்ளப் படுவதேயாகும். இந்நிலமையில் இலங்கையில் கலப்புப் பொருளாதார அமைப்பு முறை காணப்படுவதனால் கைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில், வர்த்தக முயற்சிகளை முழுக்க முழுக்க அரசோ, தனியாரோ ஏற்று நடாத்த முடியாமல் இருக்கின்றது. உலகில் உள்ள ஏனைய நாடுகளைப் போல் இலங்கையிலும் தனியார்துறை வளர்ச்சி அடைந்தால் என்ன? அதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்து சென்றால் என்ன? என்பதைப் பார்க்கும் போது இலங்கையின் பொருளாதார அமைப்பு முறை அதற்கு தடைக்கல்லாக அமைவதை காணலாம். எனவே இலங்கையில் அரச கூட்டுத்தாபனங்கள் உருவாக வேண்டியதன் அவசியத்தையும்; அவை ஏன் வளர்முக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்படும் அமைப்பாகவும் காணப்படுகின்றது என்பதைச் சற்று அவதானிப்போம்.

கூட்டுத்தாபனங்கள் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுஅவைசெயற்படத்தொடங்காதகாலம் வரையும் திணைக்கள அமைப்பு முறையே அரசின் சார்பில் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்துள்ளது. அக்காலகட்டத்தில் உற்பத்தி, வியாபார முயற்சிகளை அரசின் சார்பில் மேற்கொண்டு நடாத்துவதற்கு திணைக்கள அமைப்புமுறை தகுதியற்றதாகக் காணப்பட்டது. இதன் எதிரொலியாக கூட்டுத்தாபன அமைப்பு முறை அரசினால் உருவாக்கப்பட்டு உற்பத்தி வியாபாரம் ஆகிய பொறுப்பு அவற்றிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் விளைவாக இன்று இலங்கையில் பெரும்பாலான திணைக்களங்கள் (Department) அரசின் நிர்வாகச் செயல்களை மேற்கொள்வதாகவும், பெரும் பாலான கூட்டுத்தாபனங்கள் (Corporation) உற்பத்தி வியாபார முயற்சிகளை மேற் கொள்வதாகவும் காணப்படுகின்றன.

கடந்த 1948-ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த சந்தர்ப்பத்தில் சுதேச தனியார் துறையானது பின்தங்கிய நிலையில் காணப்பட்டது. இலங்கையில் தனியார் துறை ஓரளவிற்கேனும் வளர்ச்சியடைந் திருந்தால் கைத்தொழில் வளர்ச்சியின் ஒரு பகுதியையேனும் அரசாங்கம் தனியார் துறையினரிடம் ஒப்படைத்திருக்கலாம். ஆனால் தனியார்துறையானது பின்தங்கிய நிலையில் காணப்பட்டது! இதனால் அரசாங்கமே கைத்தொழில் வளர்ச்சியின் பெரும் பொறுப்பை ஏற்று நடாத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. இதன் விளைவாக அரச கூட்டுத்தாபனங்கள் இலங்கையில் உருவாக்கப்பட்டது. மேலும் உருவாக்கப்பட்டு வருகின்றது. மேலும் தனியார் துறையினர் உச்ச லாபத்தை நோக்காகக் கொண்டு செயற்படுபவர்களாக இருப்பர். எனவே நாட்டின் கைத்தொழில் வர்த்தக வளர்ச்சியின் பெரும் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டால் அவர்கள் தன்நலன் கருதிச் செயற்படுவார்களே தவிர நாட்டின் பொதுநலன் கருதி செயற்பட மாட்டார்கள் ஆனால் கூட்டுத்தாபன அமைப்பில் நாட்டின் நலன் ஒரே நோக்கமாகக் காணப்படுவதனால் அவை நாட்டின் எதிர்காலத்திற்காக உழைக்கக் கூடியதோர் அமைப்பு முறையாக காணப்படுகின்றது. எனவேதான் இலங்கையில் கூட்டுத்தாபனங்கள் உருவாக்கப்படுகின்றன.

இலங்கை போன்று வளர்ச்சியடைந்து கொண்டு வரும் நாடுகளில் முதலாளித்துவ சுரண்டலையும், முதலாளித்துவத்தின் வளர்ச்சியையும் கட்டுப்படுத்துவது அரசின் முக்கிய கருமங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. லாபத்தை ஒரே நோக்கமாகக் கொண்டு இயங்கும் தனியாரிடம் இலங்கையின் கைத்தொழில் வர்த்தக முயற்சியின் பெரும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டால் மேலும் மேலும் முதலாளித்துவத்தின் வளர்ச்சி துரிதமாகிவிடுவதுடன் அவை நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பினையும் ஏற்படுத்திவிடும். எனவே கைத்தொழில் வர்த்தகத்தின் பெரும் பொறுப்பு தனயாரிடம் ஒப்படைக்கப்படாமல் அரசு நடாத்துவதால் ஓரளவு முதலாளித்துவ சுரண்டலைக் கட்டுப்படுத்துவதற்கு வழிவகுக்கின்றது. மற்றும் ஒரு நாட்டின் கைத்தொழில், வர்த்தக வளர்ச்சியை அந்நாட்டில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விதத்தில் நடாத்திச் செல்வதும், அமைப்பதும், திட்டமிடுவதும் அவசியமானதாகும். ஒரு நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக்கட்டத்தை எடுத்துக் கொண்டால் செலாவணிப் பிரச்சினை, வேலையில்லாப் பிரச்சினை, அத்தியாவசியப் பொருட்களின் பற்றுக்குறை போன்ற பிரச்சினைகட்கு தீர்வு காண வேண்டியதும், அப்பிரச்சினைகளை மேலும் மேலும் கூட்டிச்செல்லாமல் இருப்பதற்கும் தீர்மானங்களைச் செய்ய வேண்டியது ஒரு நாட்டு அரசின் கடமையாகும். கூட்டுத்தாபன அமைப்பினூடாக அரசாங்கமே கைத்தொழில், வர்த்தக வளர்ச்சியில் பெரும் பொறுப்பை ஏற்று நடாத்துகின்றமையால் இப்பிரச்சினைகட்கு ஓரளவு தீர்வு காணக்கூடியதாகவும், இப்பிரச்சினைகட்கு தீர்வு காண்பதற்கேற்றவாறு அரசு கைத்தொழில், வர்த்தக முயற்சிகளை வழி நடாத்திச் செல்லவும் முடியும். எனவே இலங்கையைப் பொறுத்த அளவில் கூட்டுத்தாபன அமைப்பு ஓரளவு சிறப்பானதாகக் காணப்படுகின்றது.

பொருளாதார முன்னேற்றத்தில் காலடி வைத்துக் கொண்டிருக்கும் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் திட்டமிடப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டியது அவசியமானதாகத் தென்படுகிறது. கூட்டுத்தாபனங்களினூடாக அரசாங்கம் கைத்தொழில், வர்த்தக முயற்சியின் பெரும் பொறுப்பை ஏற்று நடாத்தும்போது திட்டமிட்ட அடிப்படையில் கைத்தொழில் வர்த்தக முயற்சிகளில் வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடியதாக அமைகின்றது. மேலும் கூறும்போது பிற நாட்டவரின் ஆட்சிக் காலத்தில் இலங்கை இருக்கும்போது இங்கு பெருமளவில் காணப்படும் மூலப்பொருட்களுக்கு உரிய இடம் கொடுத்து நாட்டின் கைத்தொழில் திட்டங்கட்கு அவை பயன்படுத்தப்படாமலிருந்தது. இதனால் உள்நாட்டில் காணப்பட்ட மூலப்பொருட்கள் விரயமாவதாகவும், தேங்கியிருப்பதாகவும் காணப்பட்டது. இலங்கை அரசாங்கம் கூட்டுத்தாபன அமைப்பினூடாக உள்நாட்டு மூலப் பொருட்கட்கு இடமளித்து கைத்தொழில் வர்த்தக முயற்சிகளை ஊக்கு விக்கக் கூடியதாக இருந்தது. இதன் நிமித்தமே சீமேந்துக் கைத்தொழில் காகிதக் கைத்தொழில் போன்ற வற்றை ஆரம்பித்து உள்நாட்டு மூலப் பொருட்கட்கு நாட்டின் வளர்ச்சித் திட்டங்களில் தகுந்த இடம் அளிக்கக் கூடியதாக இருக்கின்றது. மற்றும் கூட்டுத்தாபனங்களின் மூலதனக் கட்டமைப்பு பலவழிகளில் திரட்டப்பட்டதாகவும், பாரிய அளவிலும் காணப்படுவதாகவும் இருப்பதினால் கைத்தொழில் வர்த்தக பெரும் பொறுப்பை அரசாங்கம் ஏற்று நடாத்தக்கூடிய ஒரு சிறந்த அமைப்பாக இலங்கையில் கூட்டுத்தாபன அமைப்பு காணப்படுகின்றது.

இலங்கையில் காணப்படும் கைத்தொழில், வர்த்த முயற்சிகளில் கூட்டுத்தாபனங்கள் (Corporations) மட்டுமல்லாமல் திணைக்களங்களும் (Departments), சபைகளும் (Board) தகுயிட்டு வருகின்றன. திணைக்களங்களோ அல்லது சபைகளோ முழு கைத்தொழில், வர்த்தக முயற்சிகளிலும் ஈடுபடாமல் ஏன் கூட்டுத்தாபனங்களே பெருமளவில் கைத்தொழில், வர்த்தக முயற்சிகளில் பெரும்பங்கினை யாற்றி வருகின்றது என்பதனைப் பார்க்கும்போது திணைக்களங்களையும், சபைகளையும் விட சிறப்பம் சங்கள் பல கூட்டுத்தாபன அமைப்புகளில் காணப்படுவதே இதற்குக் காரணமாகும். அவற்றை மேலோட்டமாகப்பார்க்கும் போது திணைக்கள அமைப்பானது நிர்வாகத் திறமையையும் நிர்வாகக் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்து வதற்காக உருவாக்கப்பட்டதோர் வியாபார அமைப்பாகும். எனவே திணைக்கள அமைப்பினால் நாட்டின் கைத்தொழில், வர்த்தக முயற்சிகளின் பெரும் பொறுப்பை அரசின் சார்பில் மேற் கொண்டு நடாத்துவதற்கு முடியாததாகவும், தகுதியற்றவையாகவும் காணப்படுகின்றன. ஆனால் கூட்டுத்தாபன அமைப்பானது அரசின் சார்பில் கைத்தொழில், வர்த்தக முயற்சிகளின் பெரும் பொறுப்பை ஏற்று நடாத்து வதற்கு உருவாக்கப்பட்டதோர் அமைப்பாகும். எனவே கைத்தொழில், வர்த்தக நடவடிக்கைகளை அரசாங்கத்தின் சார்பில் மேற் கொண்டு நடாத்துவதற்கு கூட்டுத்தாபன அமைப்பு கூடுதலான தகுதி வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. மற்றும் திணைக்களங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தின் மூலதனமே முழுக்க முழுக்க ஈடுபடுத்தப்படுகின்றது தனியாரினதும் மூலதனப் ஈடுபடுத்தப்படுவதற்கு இலங்கையில் சட்டம் அங்கிகாரம் அளிக்கப்படவில்லை. திணைக்கள அமைப்பினூடாக அரசாங்கம் கைத்தொழில், வர்த்தக முயற்சியின் பெரும் பொறுப்பை ஏற்று நடாத்தியிருந்தால் அதன் நிதிப்பொறுப்பு கூடுதலாகக் காணப் பட்டிருக்கும். அன்றியும் வெளிநாடுகளில் கடன்பெறவும் தூண்டியிருக்கும். ஆனால் கூட்டுத்தாபன அமைப்பில் தனியார்துறை யினரும் முதலீடு செய்யலாம் என சட்டம் இடமளித்திப்பதனால் சில கூட்டுத்தாபனங் களில் தனியாரும் தங்களது மூலதனத்தை ஈடு செய்து அரசின் நிதிப் பொறுப்பைக் குறைத்துள்ளனர். எனவே கூட்டுத் தாப னங்களில் அரசின் நிதிப் பொறுப்பு குறை வாகவே காணப்படுகின்றது.

ஒரு நிறுவனத்தை எடுத்துக் கொண் டால் அங்கு காணப்படும் ஏனைய வளங்களுள் தொழிலாளர் வளமும் பிரதானதோர் வள மாகும். திணைக்களங்களில் வேலை செய்த தொழிலாளர்கள் தொழிலில் இருந்து இழைப்பாறும் போது அவர்களது பெய ருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது. இதற்காக விதவைகள், அனுதைகள் நிதிக் கும், ஓய்வூதிய நிதிக்காகவும் ஒரு குறிப் பிட்டளவு பணம் தொழிலாளர்களது சம்ப ளத்தில் இருந்து கழிக்கப்படுகின்றது. மீதிப் பணத்தை அரசாங்கமே தனது பணத்தில் இருந்து செலுத்துகின்றது. அன்றியும் தொழிலாளர்களின் ஓய்வூதியத்திற்தான் முழுநிதிப் பொறுப்பும் அரசாங்கத்தினு லேயே ஏற்கப்படுகின்றது இதனால் திணைக் களங்களில் அரசின் நிதிப் பொறுப்பு கூடு தலாகக் காணப்படுகின்றது. ஆனால் கூட் டுத்தாபனங்களில் வேலை செய்யும் தொழி லாளர்கள் தொழிலில் இருந்து இழைப்பா றும் போது அவர்களது பெயரில் சேமலாப நிதி வழங்கப்படுகின்றது. இதற்கான ஒரு பகுதிப்பணம் கூட்டுத்தாபனத்தினால் கொடுக்கப்படுகின்றது. ஒரு பகுதிப்பணம் தொழிலாளரது சம்பளத்தில் இருந்து கழிக் கப் படுகின்றது. எனவே திணைக்களங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களை விட அரச கூட்டுத்தாபனங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் மத்தியில் அரசுக்கு ஏற் படும் நிதிப் பொறுப்பு குறைவாகக் காணப் படுகின்றது.- எனவே தொழிலாளரைப் பொறுத்தவரையிலும் இலங்கைக்கு கூட் டுத்தாபன அமைப்பு சிறந்த அமைப்பாகவே காணப்படுகின்றது.

அரச கூட்டுத்தாபனங்களை எடுத்துக் கொண்டால் இயக்குனர் சபைகளில் பெரும்பான்மையான அங்கத்த வர்கள் உரிய அமைச்சினால் நியமிக்கப் படுவர்களாகவே இருப்பர். இலங்கையைப் பொறுத்தளவில் ஓரளவிற்கு அரசாங்க முயற்சிகளின் மேல் அரசு தலையிட்டு கட் டுப்பாடுகளைச் செய்ய வேண்டியுள்ளது. அரச திணைக்களங்களைப் பொறுத்தவரையில் அதன்மீது அரசின் கட்டுப்பாடு பெருமள விற்குக் காணப்படுகின்றது. எனவே திணைக் களங்கள் தங்களாகவே சுதந்திரமான தீர் மானங்களை எடுத்து துரிதமாக முயற்சியினை வழி நடாத்திச் செல்வதற்கு முடியாமல் இருக்கின்றது. ஆனால் அரச கூட்டுத்தாப னத்திற்கு கூடுதலான நிர்வாகச் சுதந்திரம் அரசினால் அளிக்கப்பட்டிருப்பதனால் இவை சுதந்திரமான தீர்மானங்களை எடுத்து துரித மாக செயற்பட கூடியதாக இருக்கின்றது.

கூட்டுத்தாபனங்கள் ஏன் இலாபத்தை அனுபவிக்க வேண்டும்.

பல சிறப்பம் சங்களைத் தன்னகத்தே கொண் இயங்கி வரும் அரச கூட்டுத் தாபனங்கள் திணைக்களங்களைப் போன்று அரசின் சார்பில் மக்களுக்கு சேவை செய் யும் ஒரே நோக்கினைக் கொண்டு செயலாற் றும் தொழிற்துறையாக இருந்தாலென்ன? என்ற வினா ஒரு புறம் எழுகின்றது. இதற்கு விடைகான வேண்டியது அவசியமாகக் காணப்படுகின்றது. கூட்டுத்தாபனங்கள் அரச முயற்சியாகச் செயற்படுகின்ற பொழு தும் அவைகள் ஓரளவிற்கேனும் இலா பத்தை அனுபவிப்பது தவிர்க்க முடியாத வையாக அமைகின்றது. கூட்டுத்தாபன அமைப்பு தனியார் துறையைப் போன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலாபத்தை ஒரே நோக்கமாகக் கொண்டு செயற்படாத பொழுதும் இலாபத்தையும் ஒரு நோக்காகக் கொண்டு செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை பலகாரணி களைக் கொண்டு அவதானிக்கலாம். இலங் கையில் கூட்டுத்தர்பன அமைப்பில் தனி யார்துறை மூலதனம் 'இடுவதற்கு' இட மளிக்கப்பட்டுள்ளது. இதன்படி சில கூட் டுத்தாபனத்தில் தனியாரின் மூலதனமும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதை அவதானிக்காலம். அதாவது கூட்டுத்தாபனங்களில் ஈடுபடுத் தப்படும் மூலதனம் முழுவதும் அரசின் சொந்த நிதியாக இருக்கமாட்டாது. கூட் டுத்தாசனங்களின் வளர்ச்சியில் உள்நாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன்களும், வெளிநாட்டு நிதி நிறுவனங் களிடமிருந்து பெறப்பட்ட கடன்களும் பெருமளவில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறு ஈடுபடுத்தப்பட்டிருக்கும் கடன் களும், அவற்றிற்கான வட்டியும் உரிய காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும். கூட்டுத்தாபனங்கள் ஓரளவிற் கேனும் இலாபத்தை அனுபவித்திருந்தாலே இவ்விடயத்தில் அரசுக்கு பெருமளவு நிதிச் சுமை ஏற்படாது இக்கடன்களையும், உரிய வட்டியையும் உரிய காலத்திற்குள் திருப் பிச் செலுத்தக் கூடியதாக இருக்கும். இலா பத்தை நோக்கமாகக் கொண்டே தனியார் அரச கூட்டுத் தாபனங்களில் தங்களது மூலதனத்தை ஈடு செய்கின்றனர். எனவே அரச கூட்டுத்தாபனங்கள் ஓரளவுக்கேனும் இலாபத்தை அனுபவித்தாலன்றி உரிய இலாபத்தை பங்குதாரர்களாகிய தனியா ருக்கு செலுத்த முடியாது. தனியாரின் மூலதனத்திற்கேற்ப இலாபப்பங்கு உரிய காலத்தில் வழங்கப்பட்டால் மேலும் அவர் களது ஈடுபாட்டையும், பல புதிய பங்கா ளர்களது ஈடுபாட்டையும் அரச கூட்டுத் தாபனங்களின் பக்கம் திருப்பிக் கொள் ளலாம். கூட்டுத்தாபன அமைப்பானது சேவை நலனைப் பெரிதும் விரும்பிச் செயற் படும் அமைப்பாக விருப்பதினால் காலத் திற்குக் காலம் அவற்றினை விஸ்தரிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இதன் நிமித்தம் அரசு கடன்களைப்பெற வேண் டியதாகவும், அதிக வட்டிக்கு தலைசாய்க்க வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. அரச கூட்டுத்தாபனங்கள் ஓரளவிற்கேனும் இலா பத்தை அனுபவித்திருக்குமானால் இலாபத் தில் ஒரு பகுதியை விஸ்தரிப்புத் திட்டத் திற்குப் பயன்படுத்தலாம் அத்துடன் துரித கெதியில் விஸ்தரிப்பினை மேற் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும்.

ஒரு தொழில் நிறுவனத்தின் வளர்ச்சி இலாபநிலமை, அவற்றின் வினைத்திறனுடன் கூடிய செயற்பாடு ஆகியவை இலாப அடிப் படையினைக் கொண்டே கணிக்கப்படுவதை அவதானிக்கலாம். தனியார்துறைத் தாப னங்களில் இலாபம் எதிர்பார்க்கப்பட்டு அனுபவிக்கப்படுவதிலேயே அவற்றின் வளர்ச்சி நிலைமையை அளக்கக் கூடியதாக வும், அவற்றின் செயற்பாட்டின் மீது கட் டுப்பாட்டுகளைக் கொண்டு வரவும், மேலும் பல திருத்தங்களைச் செய்பவும் முடிகின்றது. எனவே அரச கூட்டுத்தாபனங்களில் ஓரள விற்கேனும் இலாபம் அனுபவித்து இருந் தாலே கூட்டுத்தாபன நிர்வாகிகள் மத்தி யில் பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்தக் கூடியதாகவும், அவற்றின் மீது சில கட்டுப் பாடுகளைக் கொண்டு வரவும், அவற்றின் வளர்ச்சி நிலமையினை ஒப்பீட்டு ரீதியில் அளவிடக் கூடிய தாகவும் இருக்கும். மேலும் அரச திணைக்களங்களில் இலாபமானது எந்த அளவிலும் எதிர்பார்க்கப்படுவதே இல்லை. இதனால் இலங்கையில் காணப்படும் பெரும் பாலான அரச திணைக்களங்கள் தொடர்ந்து நட்டத்தினை அனுபவித்துக் கொண்டு வரு கின்றன. திணைக்களங்களால் ஏற்படும் நட் டத்தினை அனுபவித்துக் கொண்டு வருகின் றன. திணைக்களங்களால் ஏற்படும் நட்டத் தினை ஈடு செய்வது அரசின் பொறுப்பாகும் எனவே அரச கூட்டுத் தாபனங்கள் தனது செயற்பாடுகளில் ஓரளவிற்கேனும் இலா பத்தை அனுபவித்தாலேயே திணைக்களங்க ளால் ஏற்படும் நட்டத்தின் ஒரு பகுதியை ஈடுசெய்ய முடியும் இல்லையேல் அரசின் நிதிச்சுமை பெருமளவில் அதிகரிக்கப்பட்டு கடன்படு நிலைக்கு நாட்டைக் கொண்டு செல்லும் இந்நிலமை வளர் முகநாடு களான இலங்கைபோன்ற வற்றினைப் பெரி தும் பாதிப்பதாகக் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச கூட்டுத்தாபனங்களில் தொழில் செய்யும் தொழிலாளர்கட்கு அவர்களது சம்பளம் தவிர்ந்த பல சலுகைகள் அரசினால் அவர்கட்கு அளிக்கப்படுகின்றது. உதாரணமாக வீட்டு வசதி, இலவச சீருடை வசதி, கடன் வசதி, உபகாரப்பணம் போன்ற வற்றினைக் குறிப்பிடலாம். இவற்றுள் பெரும்பாலான தொழிலாளர்கள் எதிர்பார்ப்பது உபகாரப் பணத்தையாகும் எனவே கூட்டுத் தாபனங்கள் இலாபத்துடன் இயங்கினால்தான் மேற் கூறப்பட்ட வசதிகளைத் தொழிலாளர்கட்கு அளிக்க முடிவதுடன், உபகாரப் பணத்தையும் வழங்கி அவர்கள் மத்தியில் ஒரு துண்டுதலை ஏற்படுத்தலாம். இன்னும் அரச கூட்டுத் தாபனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் இழைப்பாறும் பொழுது அவர்கட்கு சேமலாபநிதி வழங்கப்படல் வேண்டும். தொழிலாளர்களது சேமலாப நிதிக்காக ஒவ்வொரு அரச கூட்டுத்தாபனமும் தனது சொந்த நிதியிலிருந்து பெருந் தொகையான பணத்தை ஒதுக்க வேண்டிய நிலையில் உள்ளது. கூட்டுத்தாபனங்கள் இலாபத்தை அனுபவிக்காதிருக்குமானால் அரசின் நிதிப் பொறுப்பு கூடுதலாகக் காணப்படும். ஆனால் இலங்கையில் அரச கூட்டுத்தாபனங்கள் ஓரளவுக்கேனும் இலாபத்தை அனுபவிப்பதால் தொழிலாளர்களின் சேமலாப நிதிக்கான பணத்தை அதன் மூலம் ஈடு செய்து கொள்கின்றன. மேலும் இலங்கையோர் வளர்முக நாடாக இருப்பதால் தேசிய வருமானத்தின். பெரும் பகுதி அரச நலனேம்பு செலவீனங்கட்காக செலவிடப் படுகின்றன. இதனால் பொருளாதார அபிவிருத்தித்திட்டங்கள் கட்டுப்படுத்தப் படுகின்றன. இந்நிலமை தொடர்ந்து ஏற்படக கூடாது. நாட்டின் இலவசக்கல்வி, சுகாதார சேவை, போக்கு வரத்து சேவை, மானிய உதவி போன்ற நலனேம்பு செலவீனங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் நாட்டின் முழு வருமானத்தையும் நாட்டின் வளர்ச்சித்திட்டங்களில் ஈடுபடுத்த முடியாமல் போவதால் புதிதாக உருவாக்கப்படும் பொருளாதார திட்டங்கள் அப்படியே நின்று விடுகின்றன, இயங்கிவரும் பொருளாதாரத் திட்டங்கள் அரைகுறையாக நிற்கின்றன. எனவே இலங்கையில் அரச கூட்டுத்தாபனங்கள் இலாபத்துடன் இயங்கினால் ஓரளவிற்கேனும் வளர்ந்து வரும் பொருளாதாரத்திட்டங்கள் தடைப்படாமல் மேலும் வளர்ந்து செல்வதற்கு உறு துணையாக இருக்கும். எனவே மேலோட்டமாகப் பார்கும் போது அரச கூட்டுத் தாபனங்கள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத ஓர் அமைப்பாகவும், அரச திணைக்களங்களை விட சிறப்பாகச் செயற் படக்கூடிய நிறுவன அமைப்பாகவும் காணப்படுகின்றதென அவதானிக்கலாம்.

★

அபிவிருத்தி

சரியான போஷாக்கும், சுகாதாரக் கவனிப்பும், இதே போல் சமூக அபிவிருத்தியும், பொருளாதார முன்னேற்றமும் பரஸ்பரம் தங்கியிருப்பவை ஆகும். இந்த மூன்றும் ஒருமித்து முன்னேறுவதே 'அபிவிருத்தி' என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை:

மௌன இரவுகள் விடிவதில்லை

நா. யோகராஜா
வணிகமாணி

நிதர்சன வெளிப்பாடுதான் இக்கதை. ஓரளவுக்கு இந்தப் பாத்திரங்கள் இன்னும் நம்முன் வாழ்கின்றது, வாழ முனையும். வாழாமல் தடுக்க வேண்டியது நமது தனிப்பட்ட பணி.

சரோ ! சரோ ! சரோ !..... உச்சக் குரலில் கத்திக் கொண்டு அந்த வீட்டுக்குள் இருந்து வெளிவந்தாள் அன்னம். வயதுக்கு மீறியபடி வலிந்து ஒட்டிக்கொண்ட முதுமை மேலுக்கும், கீழுக்கும் மூச்சை ஏற்றி இறக்கிக்கொண்டு இருந்தது குறுக்குக் கட்டுடன் காணப்பட்ட அவளின் கந்தல் சேலை, அவள் வாழ்வில் குறுக்கே எத்தனையோ துன்ப சோகங்கள் நிரம்பியிருப்பதை நிதர்சனப் படுத்திக் கொண்டிருந்தது. இன்னும் மெலிய முடியாதவாறு எலும்போடு தோல் முட்டியிருந்தது.

கத்திக் கூப்பிட்ட வண்ணம் நேரே கிணற்றடிக்குச் சென்றாள். அங்கு சரோ கிணற்றுத் தலையில் ஏதோ தேடிக் கொண்டிருப்பதை அவதானித்தாள். விரித்த தலைமுடி முகத்தை பரந்து மூடியிருந்தது ஏதோ அந்தசகதிப்புலத்தில் மும்முரமாகத் தேடிக்கொண்டிருந்தாள். முற்றும் முழுதாகக் கட்டப்பட்டிராத அடி சிணற்றுத் தலைமுகத்தில் சேறும், சகதியும் நிரம்பியிருந்தது. முழுக ஆயத்தமான நிலையிலிருந்த சரோ தொடர்ந்தும் ஏதோ நிலத்தினுள் கிண்டித் தேடிக்கொண்டு இருந்தாள். தான் கூப்பிட்ட சத்தத்துக்கும் ஏதும் கேளாத வளாக இருந்த மகளைப் பார்த்து ஆத்திரமடைந்தாள் அன்னம். கழுதை நாயே, மூதேவி, சனியன் மாடு மாதிரி நான் கத்திறன். உன்ரை காதிலை அது விழவில்லையோ ஆத்திரம் உச்சமடைந்தது. மீண்டும் தொடர்ந்தாள். "உதுக்குள்ளே என்ன தேடுகிறாய், ஏதோ தொலைத்துப் போட்டாய் போலிருக்கு" மகளின் தலைமயிரைப் பிடித்து இழுத்துக் கேட்டாள் அன்னம். பசிவயிறு அவளைச் சினப்படுத்தியது. நித்தியமாக பாதிப்பசி வயிறு அவளுடைய முதுசொமாக இருந்தது. சரோவின் கண்களில் இருந்து நீர் பொல பொலவென கன்னக் கரையால் வடிந்து கொண்டிருந்தது. அலைக் கூந்தலின் நெளிவுக்கு அது உவமையாகப் பாய்ந்து கொண்குருந்தது. தாயின் கைகளில் இருந்து தலைமயிரை விடுவித்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். தொடர்ந்து அழுதுகொண்டிருந்தாள். கூடுதலான பட்சம் அழுதுவிட்டுக் காரியம் சாதிப்பதே பெண்களின் கைவந்த கலை தானே. இவளும் அப்படித்தான் தாயின் ஆத்திரத்தை நினைத்துவிடவே அவள் கண்ணீர் மழையைப் பொழிந்தாள். மகளின் அழுகையில் சாதாரண நிலைக்கு வந்தாள் தாய். பின்னர் மெதுவாகக் கேட்டாள். "உங்கே உதுக்குள் என்ன தேடுகிறாய் ஏதோ தொலைத்து விட்டாய் போலிருக்கு" அழுகையில் இருந்து சற்று விடுபட்ட போதும் விம்மல் ஆறவில்லை. தன் பதிலைக் கேட்டு தாய் மீண்டும் முருக்க மரத்தில் ஏறுவாள் என்று அவளுக்குத் தெரியும். எனினும் சொல்லாமல் இருக்க முடியாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்திகையிட்ட நாடகம் அரங்கேற வேண்டுமே. அம்மா...மா ஈனக்குரலில் ''ஒரு காதுத்தோடு தொலஞ்சு போச்சுதம்மா'' தாய் தனது தொனியைக் கூட்டவும் அவள் தேம்பி அழத் தொடங்கவும் சரியாக இருந்தது. ''முழுகமுன்னம் சொன்னேன் கேட்டியா' காதுத் தோடுகளைக் கழற்றிவிட்டு முழுகச் சொன்னேன் கேட்டியா. தாய் சொல்லை நீ எப்பதான் கேட்டாய். இப்படி எத்தனை தரம் எத்தனை பொருட்களைத் தொலைத்தாய். நாலு மாதத்துக்கு முன்னம் ஒரு சங்கிலியைத் தொலைத்தாய் எங்கே எண்டு கேட்டால் காணவில்லை, வைச்ச இடத்தில் தெகலஞ்சு போச்சு என்றாய். போன மாதம் போட்டிருந்த மோதிரத்தைத் தொலைத்தாய். எங்கே எண்டு கேட்டால் காணவில்லை என்று சுலபமாய்ச் சொல்லிப் போட்டாய். நான் மாடு மாதிரி கஸ்டப்பட்டு உழைத்துச் சிறுகச் சிறுகச் சேமித்து உனக்கு நகை போட நீ ஒவ்வொன்றாகத் தொலைத்துப் போட்டு வந்து நிற்கிறாய். என்னை வாழ்க்கை பாதிப் பட்டினியாயும், முழுப் பட்டினியாயும் ஆனது. நீயாவது நல்லா இருக்க வேண்டும் படித்து நாலுபேர் மதிக்க வாழவேண்டும் என்று நான் கஸ்டப்பட நீ என்னளடாவென்றால் ஒவ்வொன்றாகத் தொலைத்துவிட்டு வந்து நிற்கிறாய். நான் என்ன செய்ய. கடவுளே நீ ஏன் இப்படி என்னைச் சோதிக்கிறாய். என்னை எடுத்துக் கொண்டு போ தெய்வமே. அவள் அழத் தொடங்கினாள். இரண்டு பேரும் மூலைக்கு மூலையாய் இருந்து அழுது கொண்டிருந்தனர். அன்னம் அழுது அழுது சகதிப் புவத்தை கைகளால்கிண்டிக் கிண்டித் தேடத்தொடங்கினாள். இப்போது சறோ தன் தேடலை விட்டுவிட்டாள். அவளுக்குத் தெரியும் அது இந்த நிலத்தினுள் தேடி எடுக்க முடியாதென. அது எங்கோ சாராயக் கடையில் இப்போது சாஸ்வதமாகி விட்டிருக்கும் என்பதும் அவளுக்குப் புரியாது.

✾

''சுரேஷ், நீங்கள் இப்படித் தாமதமாக வரலாமா? நான் எவ்வளவு நேரம் காத்துக் கொண்டிருக்கிறேன்'' நகரத்து நடுவிலுள்ள பூங்காவில் இச்சந்திப்பு ஏற்படுகின்றது. நாளாந்த நிகழ்வுக் கோலமிது. ''ரியூசன் கிளாஸ் முடித்து வர நேரமாச்சு. பஸ் கிடைக்கவில்லை. அதனால் உடனடியாக வரமுடியாது போயச்சு சறோ. பிளீஸ் எக்ஸ்சியூஸ் மீ'' ஒரு ஆண் வாயிலிருந்து ஒரு பெண்ணுக்கு இந்த மன்னிப்பு வார்த்தை கிடைத்தால் போதுமே. அங்கு சொர்க்கம் காண்பர். அவனே தெய்வம் ஆவான். ''சுரேஷ் நீங்கள் நேற்றுப் போன இன்ரர்வியூ என்னாச்சு? அந்த வேலை நிச்சயம் கிடைக்குமே'' ஆவலுடன் சறோ அவனது முகத்தை முழுமதியைப்போல் பார்த்துக்கொண்டிருந்தாள். ''அனேகமாகக் கிடைக்கும். இன்ரர்வியூ நடத்தியவர்கட்கு ஒரு பார்ட்டி வைத்தேன். நேற்று நீ கொடுத்த அந்தத் தோட்டை விற்ற காசு அதற்கே சரியாகப் போச்சு'' ஏதோ பெரிய காரியம் செய்தவன்போல் கூறினான்.

சறோவுக்கு மகிழ்ச்சி. தன் அன்பானவனுக்கு தாய்க்குப் பொய்சொல்லி - ஏமாற்றி கொடுத்த தோடு தன் எதிர்காலத்துக்குப் பயன்படப் போகிறதென மகிழ்ந்தாள். இப்படித்தான் அவ்வப்போது வீட்டில்பொருட்கள் காணாமற்போவது. இதுவரை ஒரு நல்ல பயனும்இல்லை இப்போதாவதுகிடைக்கும் என்ற நம்பிக்கை அவளுக்கு. தான் கொடுத்த பொருட்கள் சாராயக் கடையில் சங்கமித்ததை அந்தப் பெண் என்ன செய்வாள்? புழுகிப் புகழ்ந்தால் பெண்ணை மகிழச்செய்து எதையும் செய்து விடலாம். இப்படித்தான் சுரேஷ், சறோவை ஏமாற்றி வந்தான். சுரேஷ் நல்லாகக் குடிப்பான். ரியூசன் மாஸ்ரர். மாதம் உழைப்பதை உடனேயே குடித்து விடுவான். போதாதென்று கடன் வாங்கியும் காரியம் தொடர்வான். ரியூட்டரியில் படிக்கும் சறோவை அங்கு வைத்துத் தான் சுரேஷ் சந்தித்தான் அவளுக்குப் படிப்பித்தான். பாடங்கள் நன்றாக அவன் படிப்பித்தலின் மூலம் புரிந்து விட்டது. அதுவே காதலானது. அவன் நல்லவன் என்று அவளுக்கு நம்பிக்கை. வழக்கமான பெண்கள் மனம்தானே அவளுக்கும். அழகான பெண். சுகமான சூழல். அன்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலன். கனிவான பேச்சு. உறவின் இறுக்கம். நெருக்கம் கூடியது. உறவுக்கு ஒரு சின்னம் உருவாகியது.

அவள்... ஒரு மாதம்... இரு மாதம்... காணுது தவித்தாள். உணர்ந்து விட்டாள் உறவின் தவறை. நிபாயமான கலக்கம் அவளை வாட்டியது. கண்ணவனுக்கு எடுத்துச் சொன்னாள். அவன் கேட்டான். கலங்கவில்லை. சினத்தான். சில மருந்துக் கடைகளில் அவளை அடிக்கடி அச்சமயம் காண முடிந்தது. எனிலும் முயற்கி பலிக்கவில்லை. அவளின் கவலை மிகவும் வலுத்து விட்டது. ஐந்து மாதம் ஆகியது. அவன் வரவு இப்போது சற்று குறைவு. அன்று அவள் அவனைச் சந்தித்தாள். விம்மி விம்மி அழுதாள். தாயை ஏமாற்றியதை நினைத்துவருந்தினாள். தாயை ஏமாற்றிவிட விம்மியவள் இன்று தாயாகி விம்முகிறாள். "சுரேஷ் இனி ஒன்றும் செய்ய முடியாது. என்னைக் கல்யாணம் செய்யுங்கோ. என்னால் இனி இதை மறைக்க முடியாது." வழிந்த கண்ணீரைத் தட்டிவிட்டான் சுரேஷ். "இப்போ எப்படிச் செய்ய முடியும் சரோ" எனக்குத் தொழிலும் இல்லை. போதிய வருமானம் இல்லாமல் எப்படிக் குடும்பம் நடத்துவது" இப்படிச் சொன்னான் அவன். அவளுக்கு ஆத்திரமும் அழுகையும் அதிகரித்தது. சற்று உரத்த குரலில் சொன்னாள். "அப்போ என்னை என்ன செய்யச் சொல்லுறியள். நீங்கள் உழைத்து வரும்வரையும் வயித்துக்குள் பிள்ளையை மறைத்து வைத்திருக்க முடியுமா? நீங்கள் கடந்த இரண்டு வருடமாக உழைக்கிறீர்களே! அம்மாவிடம் ஏச்சு வாங்கி எவ்வளவு பொருட்களைத் தந்தேன் உங்களுக்கு. கண்டது என்ன மிச்சம். உங்களுக்கு வேலை இல்லை. எனக்கு வயித்துக்குள் பிள்ளை நீங்கள் இதற்கு வழி சொல்லாவிட்டால் நாளைக்கு என்னை உயிரோடு பார்க்க மாட்டீர்கள்." ஒரே மூச்சாகக் கூறிவிட்டாள். குறைக்கு அழுகையும் தொடங்கியது.

அவன் தீவிரமாகச் சிந்தித்தான் "சாக வேண்டிய அவசரம் என்ன. நான் உன்னைச் சாக விடுவேனா. கடைசிவரை எந்தக் கஸ்டம் வந்தாலும் உன்னைக் காப்பாற்றுவேன். அக்கறை கலந்த வார்த்தை வெளி வந்தது அவனிடமிருந்து. "அதுக்கு என்ன வழி சொல்லுங்கள் சுரேஷ். இப்போது என்னைக் கல்யாணம் செய்கின்றீர்களா" அவள் கேட்டாள். அழுகை தணிந்து இருந்தது. அவன்மீது ஒரு நம்பிக்கை ஒளி தென்பட்டது.

"இப்போது கல்யாணம் எப்படிச் செய்வது. வாழ்க்கையே கஸ்டமாகத்தான் இருக்கும். எதற்கும் இந்த ஊரைவிட்டு வேறு எங்காவது சென்று அங்கே இருப்போம்" இப்பதிலால் ஓரளவு திருப்தியடைந்தாள் சரோ. "எங்கு போவது" அவள் கோடாள். தனது நண்பனின் ஊரைச் சொல்லிவைத்தான் அவன். நாளை காலை நாம் இந்த ஊரிலிருந்து புறப்படவேண்டும். நீ அதற்குத் தயாராக வரவேண்டும். காலை ஐந்து மணி புகையிரதத்தில் செல்ல வேண்டும். எதற்கும் நான்கு மணிக்கு புகையிரத நிலையத்துக்கு வந்துவிட வேண்டும்." எனக்கூறிய சுரேஷ் "போவதற்குச் செலவுக்குப் பணம் வேண்டுமே" என்றபடி அங்கிருந்து சென்றான். அவனது நடையில் சாடையான தள்ளாட்டம் தெரிந்தது. துயரப்பாட்டில் அப்படிச் செய்கிறான் இல்லை, அவளுக்குத்தான் தற்போது தெரியுமே. அவன் போதை நாடகம். என்னவோ தொடங்கிய கதை தொடரவேண்டியது தானே.

நேரம் மாலையாகி விட்டது. வானம் இருட்டிக் கொண்டு வந்தது. அவள் வாழ்க்கையும் தான் இருட்டத் தொடங்கி விட்டது அதை அவள் உணர்ந்தாள். ஆற்றது உள்ளம் தவித்தது. வழக்கமாகச் சந்திக்கும் அந்த இடத்தை அவள் ஆழமாக நோட்டம் விட்டாள். இன்பக் கதைகட்கான களமல்லவா அது. எத்தனை கனவுகளைக் காணவைத்த சொர்க்கமாக இருந்த - இன்றைய நரகத்துக்கு இட்டுச்சென்ற இடமது. கன்னத்தில் வழிந்த நீரைத் துடைக்கக் கைக்குட்டையால் முடியவில்லை. அது ஏற்கனவே நனைந்து ஊறிப்போய் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நாட்களாக மகளிடம் உற்சாகம் இல்லை. அவள் சோபை இழந்து காணப் பட்டதைக் கண்ட தாய், "சரோ உனக்கு என்ன நடந்தது? நீ என்ன கன நாட்களாய் மூஞ்சையைத் தூக்கிக்கொண்டு திரியிறாய்" என விசாரித்தாள்.

"ஒன்றுமில்லையம்மா. உடம்பு சரியில்லை. வயித்துக்குள் கோளாறு. எல்லாம் நாளைக்கு சரியாகிவிடும். இதைக் கூறுகையில் ஒரு அழுத்தம் தெரிந்தது. இருண்டு விட்டது. அழுது அவள்முகம் வீங்கியிருந்தது. அவளுக்குஉணவு இறங்கவில்லை. அது தேவையில்லாது இருந்தது. நாளைய பொழுதை மட்டும் அவள் மனம் எண்ணிக்கொண்டிருந்தது, தனது உடுப்புக்களை ஒரு சூட்கேசினுள் அடுக்கினாள். ரியூசன் புத்தகங்கள் நிலத்தில் பரப்பிய நிலையில் இருந்தது. இனி அவை தேவையில்லை. பாடத்தை அவள் நன்றாகப் படித்தாகிவிட்டது. அதுதானே இன்று அவள் படுகின்றாள் துன்பம்.

மெதுவாக தாயின் உண்டியலை உடைத்தாள். அதில் இருந்த காசை எடுத்துக் கொண்டாள். கூடவே தனக்குப் பிடித்த அந்தப் பாதித் தோட்டையும் எடுத்துக் கொண்டாள். நேரம் இரவு பதினொரு மணியையும் தாண்டி விட்டது பின் வளவில் ஊர் நாய்கள் ஊளையிடும் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. நாய்கள் ஓயாது சத்தமிட்டால் துன்பநிகழ்வு ஏற்படுமல்லோ என ஊரார் சொல்வதை அவள் நினைத்துக் கொண்டாள். பகுத்தறிவாதிகட்கு துன்பம் சூழும்போது இவைகளில் ஒருவித நம்பிக்கை இருக்கும். அவள் அப்படிப் பகுத்தறிவாளி அல்ல. அதனால் அச்சூழல் அவளுக்கு அதிக கலக்கத்தை உண்டுபண்ணியது.

அவள் பாயில் படுத்தாள். ஆனால் உறக்கம் வரவில்லை. எப்படி அது வரும்? அது அவளிடமிருந்து விலகிவிட்டது. விலகி இரண்டு மூன்று மாதமாகி விட்டது. அதனால் மூன்று மணியளவில் படுக்கையிலிருந்து எழுந்து விட்டாள், தாய் படுத்திருந்த இடத்துக்குச் சென்றாள். அங்கே சுருண்டு படுத்திருந்தாள் அவள் தாய். கிழிந்த ஓட்டைப்பாய் நிலத்தோடுநேரடித் தொடர்பை அவளுக்கு ஏற்படித்திக்கொண்டிருந்தது. இயலாத் தன்மையில் இற்றுப்போன ஆடை அவளை மூடிக்கொண்டு இருந்தது உழைத்து உழைதுக் குறண்டிப் போன கைகள் தலையின்கீழ் அணையாக இருந்தது. அவள் உடம்பை வளைத்துக்கொண்டிருந்த வடிவம் கேள்விக் குறிபோல் இருந்தது. அந்த வடிவம் "மகளே நீ எதைச் செய்வாய், எங்கு போய் எப்படி வாழப் போகிறாய்? உன்னில் உயிர் வைத்திருக்கும் என்னை அநாதையாக விட்டுவிட்டுப் போகப்போகிறாயா? இந்த உலகில் யாரம்மா எனக்குத் துணை? உனக்காகவே நான் வாழ்கிறேன், நீ எப்படி வாழப்போகிறாய்" என்று அவளைக் கேட்பது போலிருந்தது, அவளுக்கு அழுகை வந்துவிட்டது. தாயை விட்டுவிட்டு அவள் வாழ்வது என்பதை அவளால் எண்ணிப்பார்க்க முடியாது. மௌனை அழுகை வடித்தாள். இருபது வயதிலேயே கணவனை இழந்து இவ்வளவு காலமும் ஆசையில்லாது சடமாகப் பிச்சைக்காரிபோல் வாழ்கிறாள். இதை எண்ண அவளால் அழுகையை அடக்க முடியவல்லை. தன் பிள்ளைக்காகத் தாய் தூங்குகிறாள், இவள் தன் பிள்ளைக் காக ஏங்குகிறாள். காலப் போராட்டம் தொடருவது தவிர்க்க முடியுமா? தாயை விட்டுவிட்டுப் போகாமல் இருக்கப் போகிறேன் என அவள் மனம் ஒருகணம் யோசிக்கிறது. அவப்பேரோடு தாயோடு வாழ விரும்பவில்லை அவள். சுரேஷோடு சென்று தன் வாழ்வு சிறக்காது என்று அவளுக்குத் தெரியும். என்ன செய்வது உச்சக் கட்டத்தைத் தாண்டிவிட்ட தொடர்கதை இடையில் முடிவுக்குக் கொண்டுவருவதால் பயனில்லை என அவள் உணர்வாள். பொங்கி வந்த அழுகையை அடக்கிக்கொண்டு அவள் திரும்பிப் போனாள். "சரோ, என் மகளே என் செத்த வீட்டுக்கு வருவாயே அம்மா" திரும்பியவளுக்கு அழுகை வெடித்தது. தன் மனப்பிரமை அதுவென உணர்ந்தாள். முதலில் வெளியே ஓடிக் கொல்லைப்புறத்துக்குச் சென்று அழுதாள். தாயின் நினைவு அவளை வாட்டி எடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாக நாலு மணிக்கு அந்தப் புகையிரத நிலையத்திற்கு அவள் சென்றாள். கையில் சூட்கேசுடன் அங்கு சுரேஷ் நின்றான். அவன் முகம் இறுகிப் போயிருந்தது. புகையிரத நிலைய விளக்குகள் மின்னிக்கொண்டிருந்தது. மங்கலான ஒளியை வீசிக்கொண்டிருந்தது. ஒரு ஓதுக்குப்புறத்தில் இருவரும் நின்றனர். புகையிரத நிலையத்தினுள் பெருவாரியான பிரயாணிகள் நின்றனர். ஒரு பக்கத்தில் ரிக்கட் எடுக்கும் நீண்ட வரிசை நின்றுகொண்டிருந்தது. சுரேஷ் சரோவிடம் வாங்கிய உண்டியற் பணத்தோடு ரிக்கெட் எடுக்கச் சென்றான். ரிக்கெட் எடுக்குமிடம் சரோ நிற்குமிடத்திலிருந்து பார்த்தால் தெரியாது. தன்னை யாரும் கவனித்திடுவார்களோ என்று ஒதுங்கியே இருந்தாள் சரோ. உடலை சேலையால் மூடியிருந்தாள். முஸ்லீம் பெண்களைப்போல். வழமையாக தமிழ் பெண்கள் நகைகள் இல்லாவிட்டால் அப்படி மூடுவது வழக்கம். இவள் அப்படியல்ல. ஊரார் தன்னை அறிந்து நகைக்கக் கூடாது என்பதற்காகத்தான் மூடியிருந்தாள்

புகையிரதம் இரைச்சலுடன் வந்து நின்றது. சனங்கள் முண்டி அடித்துக் கொண்டு ஏறினர். மூலைச் சீற்றைத் தேடிச் சிலர், வாலைக் குமரிகளைத் தேடி சிலர். எதுகிடைத்தாலும் போதும் என்று மீதம் பேர் சற்று வேறு அவதிப் போராட்டம் நடக்கும் புகையிரதம் வந்தவுடன். ரிக்கட் எடுக்கப் போன சுரேஷ் இன்னும் வரவில்லை. ''நிறையப் பேர் நிற்கிறார்கள் போலை. அதுதான் இன்னும் எடுக்கவில்லைப் போலை'' அவள் தன்னுள் இப்படி எண்ணிக் கொண்டாள். புகையிரத நிலையத்தில் ஆட்கள் குறையத் தொடங்கிவிட்டனர். ஆரவாரம் சற்று ஓடுங்கிவிட்டது. ''இன்னும் அவரைக் காணவில்லை'' அவள் மனத்தில் ஏக்கம் வலுத்தது. புகையிரதம் புறப்படத் தொடங்கும் ஆயத்தங்கள் நடந்தது. அவள் சற்று ரிக்கட் எடுக்கும் இடத்தை நோக்கி ஓடினாள். அங்கு ஒருவரும் இல்லை. ஒரே அதிர்ச்சி அவளுக்கு அந்த பிளாட்போம் கரையாக ஓடி ஒவ்வொரு பெட்டியாகப் பார்த்தாள். அவளுக்கு புரிந்து விட்டது. தன் வாழ்கை ஆவேசம் கொண்டாள். வழக்கமாக பெண்களின் இறுதியில் ஏற்படும் உணர்வுதான் அது. எதையும் முடிக்க உந்தும் அந்த நேர உணர்வு புகையிரதம் மெதுவாக நகர ஆரம்பித்தது. அதைவிட அவள் மனை வேகம் அதிகரித்தது. அவளும் ஓடினாள். அதுவும் ஓடியது. ஆனால் அவள் முந்திவிட்டாள். அங்கே சிவப்பாக மாறிவிட்ட தண்டவாளத்துக்கு இடையிலே ஒற்றைத் தோடு மின்னிக்கொண்டிருந்தது.

சுதந்திர துறைமுகம் Free Port

சில நாடுகளின் துறைமுகப்பகுதியொன்றில் பிறநாட்டவர்கள் வரிவிதிப்பு மேற்கொள்ளப்படாத நிலையில் பலநாட்டுப் பொருட்களையும் விற்பனை செய்யவும், கொள்வனவு செய்யவும் முடிகின்றது. இத்தகைய துறையே சுதந்திரத் துறைமுகம் என அழைக்கப்படுகின்றது. உ-ம் : சிங்கப்பூர். கொங்கொங்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments

from

Speacialist in:

Anteena fittings,

Venus Recording, Radio, Watch Works,

266, STANLEY ROAD,

JAFFNA.

VISIT TODAY FOR YOUR

REQUIREMENTS

KALYANI

Cream House

73, KASTHURIAR ROAD,

JAFFNA.

SPACE DONATED

BY

VEMAKE

2/73, Power House Road,

JAFFNA.

PHONE: 24043 & 24278

யூனிவேர்சல் ரேட்ஸ்

உங்களுக்குத் தேவையான

- காகிதாதிகள்
- எழுதுகருவிகள்
- வாழ்த்துமடல்கள்
- சாய்ப்புச்சாமான்கள்

அனைத்தையும் நியாயமான விலையில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

யூனிவேர்சல் ரேட்ஸ்

யாழ் பல்கலைக்கழக முன்பாக

திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியாதது

சிந்திக்கின்றேன்
சிறிதும் தெளிவிலை
மந்த புத்தியோ.....!
அதுவும் புரியலை.
" காதல் அன்பாம்
காமம் வெறியாம்
ஒருத்தர் ஒருத்தரை
உள்ளத்தில் ஓர்முறை
' இருத்தல் ' காதலாம்
இல்லையேல் காமமாம்
காமமின்றியே காதல்பிறக்குமாம் "
சிந்திக்கின்றேன் சிறிதும் தெளிவிலை.
எனக்கும் இருபது
அவளுக்கும் இருபது
இத்தனைக்கிடையிலே என்னுக்குள்ளே
எத்தனை ' இருத்தல் ' கள்
அனைத்தும் ஒதுங்க
இவள்தான் கிடைத்தாள்.....!
அவளுக்குள்ளும் அப்படித்தானே.....!
இருக்கும் ; இருக்கும் ;
ஏன் இருக்காது.....?
இருக்காவிட்டால் அதுதான் சரியோ....?
சிந்திக்கின்றேன் சிறிதும் தெளிவிலை.
உடலில் காய்ச்சல்
எவ்வள விருக்கும்
மூப்பத்திரண்டை அடியாய்க் கொண்ட (32° C.)
வெப்பமானியால் அளந்து முடிக்கலாம்
உளத்தில் ' இருத்தல் '
எவ்வளவிருக்கும்
அளந்தறிய ஓர் ஆயுதமிருந்தால்
அடிமட்டித்தில் ஐம்பதோ.... அறுபதோ....?
எனக்கு மட்டுமா....!
எல்லோருக்குந்தான் ;
கிடைப்பதொன்றுதான் காதலானால்
உளத்தில் ' இருப்பவை '
என்னவாயிருக்கும்..... ?
சிந்திக்கின்றேன் சிறிதும் தெளிவிலை.....!

ச. மார்க்கண்டு

பொருளியல் (சிறப்பு)

இறுதியாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசனம்

திங்கட் கிழமை இராத்திரி நேரம்
பச்சை மஞ்சணை பருக்களில் பூசி
மாலையில் அரைத்த மருதாணிக் கோலமிட்டு
பஞ்சணை புகுந்து கனவுகள் கண்டு,
துள்ளிக் குதித்து பஞ்சணை திறந்து,
ஷம்பூவைத் தேய்த்து அள்ளிக் குளித்து,
நிலைக் கண்ணாடிமுன் நிலையாய் நின்று,
மார்பு அழகினை மலையாய்க் குவித்து
அமெரிக்கன் ஜோர்ச்சற்றை அழகாய் அணிந்து
பிளாஸ்டிக் மல்லிகையை பின்னலில் சூடி,
செல்லு முன்னே சென்ரையும் தெளிந்து
விரதம் என்றே வீட்டினில் கூறி
விடியு முன்னே விரைந்து சென்று,
கோவிலின் வாசலில் கோமகன்வரவை,
கண்இமை கொட்டா காத்திடும் நங்கை,
கடவுளை வணங்க வந்தவள் அல்ல,
காதலன் தரிசனம் கண்டிட அன்றே.

எஸ். எஸ். புஸ்ப்பராஜா
வணிக மாணி
4–ம் வருடம்

புரிந்தது

செந்நிற வாவியில் சிவந்த தாமரை
செவ்விதழ் பரப்பி பூத்துச் சிரித்தது
மயக்கிடும் அழகினில் மனமதைக் கொடுத்து
மயங்கியே நானும் மலரதைப் பறிக்க
உவகை நெஞ்சில் உந்தல் கொடுக்க
ஆசை மேலிட அவசரம் தூண்டிட
பட்டென்று குதித்து கெட்டியாய் பிடித்திட
சட்டென்று அமிழ்ந்து சங்கமம் ஆகையில்
பரப்பிய மலரே பரந்தது வாவியில்
அப்போ தெரிந்தது என்றே மலர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட பயணம்

இனிவரும் நாட்களின் இரவுகள்
தூங்கா இரவுகளாய் நீண்டு கிடக்கும்.
ஒளியே புகா எந்தச் சிறையிலும்
குற்றம் புரிந்தோர் என்று கிடப்பதை
எண்ணி பெருமை கொள்ளுவோம்.
விரல்களில் ஏறிய குண்டூசிகளும்
கன்றிச் சிவந்த மேனியின் துன்பமும்
இங்கு எமக்கு உயர்வினைத் தரட்டும்.

பிறத்தல் வாழ்தல் இறத்தல்
என்ற பேடிமை ஒழிக!
ஆயிரம் இம்சைகள் மலைபோல் வரினும்
எங்கும் எங்கள் கரங்களை உயர்த்தும்
திண்ணிய நெஞ்சம்
விறைத்து நிமிரவும்,
"போ" எனத் தடைகளை
விரட்டி அடிக்கவும்
போர்க்குணம் கொண்டொரு
பாடலைப் பாடுவோம்.

புதிதாய் ஏதேனும்
செய்ய முனையவும்
இருட்டில் வாழ்ந்து
ஒளியைப் பிடிக்கவும்
நண்பன் பதித்த சுட்டின் வழியில்
நெடிய பயணம்
நீளத் தொடருவோம்

பயண வழியின் "கடுக்கல்" பரா
நெடிய பயணம்
இனிநாம் தொடர்வோம்.

ஹம்சத்வனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பல்கலைக்கழக மாணவர்களதும்
திருநெல்வேலி மக்களுடையதும் வசதிக்காக

கண்ணன் லொட்ஜ்

சைவ ஹோட்டல்

- சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சைவ சிற்றுண்டி உணவுகள்
- குளிர்பான வகைகள்
- மதிய போசனம்

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

கண்ணன் லொட்ஜ்

இராமநாதன் வீதி, (யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகாமை)
திருநெல்வோலி.

BEST WISHES FROM

BAVAN HARDWARES

Prop: ARULBAVAN

DEALERS IN HARDWARES & ELECTRICAL GOODS

16, PEOPLES MARKET.

POINT-PEDRO.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி மறப்பது நன்றன்று

- மலர் பொலிவுற ஆசிச் செய்தி வழங்கிய துணை வேந்தர், துறைத் தலைவர் அவர்கட்கும்.
- நிதிப் பிரச்சினையின்றி மலரை வெளியிடுவதற்கு விளம்பரங்களை தந்துதவிய சகல வர்த்தக ஸ்தாபனங்களிற்கும்.
- கட்டுரைகளை ஒழுங்கு படுத்தி சீர்த்திருத்தி, சிறப்பாக அமைத்து உதவிய விரிவுரையாளர்களுக்கும்.
- சஞ்சிகைக்கு கட்டுரை, கதை, கவிதை போன்ற ஆக்கங்களை தந்துதவிய விரிவுரையாளர்கள், மாணவர்களுக்கும்.
- விளம்பரங்களை திரட்டுவதில் எமக்கு நேரடியாக உதவிய சகமாணவ நண்பர்களுக்கும்.
- மலரை வெளியீட்டுக்கு நிதி உதவி காட்சி மூலம் நிதியை திரட்ட உதவிய சகல பல்கலைக் கழக மாணவர்களுக்கும்.
- மலரை கவர்ச்சியாகவும், தெளிவாகவும் அச்சிட்டு குறிப்பிட்ட காலத்தில் வெளியிட உதவிய சித்திரா அச்சக உரிமையாளர், மற்றும் ஊழியர்களுக்கும்.
- இன்னும் பலவிதத்திலும் உதவி புரிந்த அனைவருக்கும்.
- இறுதியாக எமது சஞ்சிகைக்கு விமர்சனம் செய்த விரிவுரையாளர், மாணவர்களுக்கும்.

நன்றிகள் உரித்தாகுக

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரன் ரூறிஸ்ட் இன்

(எட்வேர்ட் தங்கவடிவேல் ராஜ்குமார்)

யாழ் நகரில் சகல வசதிகளுடன்

- தங்கும் அறை வசதிகள்
- 24 மணி நேர சேவை
- குறைந்த செலவில் விசேட உணவுவகைகள்
- நிறைந்த உபசரிப்பு.

இன்றே விஜயம் செய்யுங்கள்

குமாரன் ரூறிஸ்ட் இன்

யாழ்ப்பாணம். போன்: 23753

AUTOS LIMITED

SOLE DISTRIBUTORS IN THE NORTH FOR
CARGILLS (Ceylon) LTD. & MILLERS LTD.

Sole Agents for

Kodak- Kraft & Pharmacentical products
Available at Wholesale and Retail prices at

AUTOS LTD.

190, HOSPITAL ROAD,

JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த வர்ணப்படங்களுக்கும்,
உங்கள் மங்கள வைபவங்களை வீடியோ திரைப்
படமாக கண்டுகளிக்கவும்,

யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

பாரத் ஸ்ரூடியோ

82, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 22152

மேலும் விபரங்களுக்கு:
பாரத் சென்ரர்
178, நவீன சந்தை, யாழ்ப்பாணம். போன்: 24265

சுவை! தரம்!!
குன்றுத இவைகளுடன் 10 வருடங்களுக்கு மேலாக யாழ்நகரில்
கோழி புரியாணி, நூடில்ஸ், வட்டிலப்பம்,
கிறேப், ஒறேஞ் ஜூஸ்கள்
இன்னும் பிறவகைகளுடன் நியாய விலையில் வழங்கிவரும்

ஹோட்டல் பரடைஸ்

ஸ்தாபனத்தினர் வரும் புத்தாண்டில் மேல்மாடி விசேஷ சேவையினை
பல புதிய தயாரிப்புகளுடன் ஆடம்பரமாக ஆரம்பிக்க இருக்கின்றார்
கள் என்பதனை அறியத்தருகின்றார்கள்.

உங்கள் வரவை நாடும்
HOTEL PARADISE
91, KASTURIAR ROAD, JAFFNA.

சித்திரா அச்சகம், 310, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். போன்: 23618

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org